ஆசை ஊஞ்சல்

இந்திராசௌந்தர்ராஜன்

ஆசை ஊஞ்சல்

1

''ஸ்டார்ட் கேமரா ஆக்ஷன்!''

டைரக்டரின் குரல், செட்டுக்குள் பிரவேசித்திருந்த பிரபாகரின் காது வரைக்கும் கேட்டது. அடுத்த நொடி, ஒரு அசாத்ய அமைதி. நூற்றுக்கும் மேலான மனிதர்கள் அங்கங்கே அப்படியப்படியே அமைதியானார்கள்.

கிரேன் மேல் உள்ள நாற்காலியில் தெரிந்த காமிராமேன், காட்சியை வாரிச் சுருட்டத் தொடங்கியிருந்தார்.

''கல்யாணம் எனக்கு வேண்டாம்மா...எனக்கு கல்யாணத்துலேல்லாம் நம்பிக்கை இல்லை. அது ஒரு ஜெயில் என்னை ஏன் ஜெயிலுக்கு அனுப்ப இப்படி துடிக்கறே...?'' நாயகன் பிரவீண், தன் எதிரே நிற்கும் அம்மா நடிகையைப் பார்த்துக் கேள்வி எழுப்பிக் கொண்டிருந்தான்.

சரியான சினிமா அம்மா. பட்டுப் புடவை உடுத்தி, சால்வை போர்த்தியிருந்தாள். விக் வைத்த தலைமுடியில் அங்கும் இங்குமாக நரைக்கதிர்கள்.

"அப்படிச் சொல்லாத பாபு...இந்த வீட்டுக்கு விளக்கு ஏத்த ஒருத்தி வேண்டாமா...?"–அவள் பதில் கேள்வி கேட்டாள்.

"அதுக்கு ஒரு பொண்ணு எதுக்கும்மா...? ஒரு எட்டணா தீப்பெட்டி போதுமே...!"

"போடா.. உனக்கு எதுலேயும் விளையாட்டுதான். ஒழுங்கா சொன்ன பேச்சைக் கேள்..."

"முடியாதும்மா - நான் சுதந்திரப் பறவையா இருக்க விரும்பறேன். பொண்டாட்டின்னு ஒருத்தி வந்துட்டா, அப்புறம் குழந்தைன்னு ஒண்ணு பிறக்கும்...அப்புறம், நான் உன் மேல வெச்சுருக்கற பாசம் அவங்களுக்கு ஷேர் ஆகும். நீ வருத்தப்படுவே..."

"போடா பைத்தியக்காரா...பாசம்கறது என்ன பிஸ்லேரி வாட்டர் பாட்டிலா? குடிச்சா காலியாயிடற துக்கு..! அது சமுத்ரம்டா...! எவ்வளவு பேருக்குக் கொடுத்தாலும் குறையாதுடா அது..!"

"கட்!" டைரக்டரின் குரல் கத்தரித்தது. பொசுக்கி எடுத்த விளக்குகளும் உடனே அணைந்தன.

திரும்பவும் செட்டில் சலசலப்பு.

பிரவீண், தன் நாற்காலியில் வந்து அமர்ந்தான். அம்மா நடிகையும் எதிரில் வந்துஅமர்ந்தாள். அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

"பிரமாதமா பண்ணீங்க?" ஸ்லாகித்தாள். அப்ப டியே ஒரு ஏக்கப் பெருமூச்சும் விட்டாள்.

"ஹலோ பிரவீண்..." - இடையில் புகுந்தது அங்கு நுழைந்த பிரபாகரின் குரல். திரும்பிய பிரவீணின் கண் களில் ஒரு ஆச்சரியப் பிரகாசம்.

"ஏய் பிரபா..எப்ப வந்தே?"

"நீ கல்யாணம் வேண்டாம்னு சொல்லிகிட்டிருந் தியே...அப்பவே!"

"உக்கார்...உக்கார்..."–அவன் சொன்னமறுநொடி, பக்கமாய் உட்கார்ந்திருந்த தயாரிப்பாளர் ஆறுமுகசாமி, உடனடியாக எழுந்து கொண்டு, பிரபாகருக்குத் தன் நாற்காலியைக் கொடுத்தார். அவர் நின்று கொண்டார்.

"ஆமாம்...என்ன இது சர்ப்ரைஸ் விசிட்...?"

"சும்மா உன்னைப் பார்த்துப் பேசிட்டுப் போக லாம்னுதான்..."

"சும்மாவா...நீயா?" –பிரவீண் கேட்கும் விதத்தி லேயே, பிரபாகர் அப்படி எல்லாம் வந்து பார்க்கக் கூடியவனல்ல எனும்படியான ஒரு அர்த்தம்.

பிரபாகர் அதைக் கேட்டு விஸ்தாரமாகச் சிரித்தான்.

அதற்குள் சுற்றிலும் காட்சி மாற்றத்துக்கான வேலைகள்... க்ரேன், லைட்ஸ், செட் ப்ராப்பர்ட்டீசின் இடமாற்றங்கள்.

கூட்டத்தில், இதயம் சினிமா நிருபரின் கூர்மை யான பார்வை வேறு...!

அந்த நிருபரைப் பார்த்துவிட்ட பிரவீண், அடுத்த நொடி எழுந்து கொண்டான்.

"வா...மேக்கப் ரூம்ல போய் பேசுவோம்..."

– அவனைத் தொடரத் தொடங்கினான் பிரபாகர். அம்மா நடிகை முகத்தில் இப்பொழுது ஒரு வித கவலை பரவியது.

ஐந்து வருடங்களுக்கு முன்னால், அவனுடன் ஜோடியாக நடித்தவள்.

கொத்தும் குலையுமாக, மப்பும் மந்தாரமுமாக இளம் பெண்கள் பலரும் பதினாறு வயசிலேயே நடிக்க வரவும், இருபத்தி ஒன்பது வயதிலேயே அவளுக்கு அம்மாவாகும் ஒரு கட்டாயம்.

* * *

மேக்கப் ரூம்–

ஜில்லென்ற ஏ. சி. குளிரோடு, ஏகப்பட்ட சோபாக்களோடு பிரபாகரையும் பிரவீணையும் வரவேற்றது.

"சொல்லுடா...என்ன விஷயம்?"

அதில் ஒன்றில் விழுந்தபடி தலையைக் கோதி விட்டுக் கொள்கிறான் பிரவீண்.

பிரபாகர் பதில் சொல்லாமல் மேக்கப் ரூமை ஒரு பார்வை பார்த்தான். பெரிய பெரிய நிலைக் கண்ணாடிகள், ஃபோகஸ் விளக்குகள்...லெவண்டர் வாசம்.

"ஏய் உன்னைத்தான்...என்ன விஷயம்?" – பிரபாகரைத் திரும்பவும் நிமிண்டி விட்டான் பிரவீண்.

"ஒண்ணுமில்லடா...உன்னால எனக்கு ஒரு உதவி ஆகணும்—"

"சொல்லுடா...என்ன பண்ணணும்?"

"வர்ற பதினைஞ்சாம் தேதி, நான் ஓர்க் பண்ற பேங்க்கோட சில்வர் ஜுப்ளி இயர் ஃபங்ஷன். நீதான் சீஃப் கெஸ்ட்...வரமுடியுமா உன்னால?"

"இவ்வளவுதானா...? வந்துட்டாப் போச்சு...!"

"தேங்க்ஸ்டா...ரொம்ப தேங்க்ஸ்..."

பிரபாகர் உடனே உணர்ச்சிவசப்பட்டான்.

"என்னடா நீ...இதுக்கெல்லாம் போய் தேங்க்ஸ் சொல்லிகிட்டு...! நான் இன்னிக்கு ஒரு பிரபல நடிகனா

இருக்கலாம்...அதவிடப் பெரிசுடா நம்ம ஃப்ரெண்ட்ஷிப்..."

–பிரவீணின் கண்களில் ஸ்நேகமும் பாசமும் கொப்பளித்தது.

"நீ மாறவேயில்லடா...தேங்க்ஸ்...! தேங்க்யூ ஸோ மச்..."

–நடுவில் கதவைத் திறந்து கொண்டு வந்த ஒரு உதவி இயக்குநர் மிகப்பணிவாக, "சார்! அடுத்த ஷாட் ரெடி..." என்றான்.

"போ வரேன்..."–பிரவீணின் குரலில் சற்று கடுமையான பதில்.

"அப்ப நான் புறப்படட்டுமா?" பிரபாகர் உடனே இங்கிதம் காட்டத் தொடங்கினான்.

"இருடா...நானே உனக்கு போன் பண்ணி வரச் சொல்லணும்னு இருந்தேன்...ஆமா! வீட்ல அப்பா அம்மா எல்லாம் நல்லா இருக்காங்களா?"

"எல்லாரும் நல்லா இருக்காங்கா..."

"என்னாச்சு உன் கல்யாணம்?" – பிரவீணின் கேள்வி, உடனேயே பிரபாகரைச் சிரிக்க விட்டது,

"எதுக்குடா சிரிக்கறே?"

"இல்ல...இந்தக் கேள்வியைத்தான் பத்திரிகைக்காரங்க உன்னைப் பார்த்துக் கேட்டுக்கிட்டிருக்காங்க... அதை நினைச்சேன். ஆமா...நீ என்ன பண்ணப் போறே?" –பதிலுக்கு மடக்கினான்.

"கொஞ்சம் முந்தி டயலாக் பேசினேனே—நீ கூட கேட்டியே...அதான் என் பதில்..."

"நோ—அது சினிமா டயலாக்..."

"சரி விடு...போகப் போகப் பார்த்துத் தெரிஞ்சுக்கோ..."

"இல்லடா பிரவீண்...நீ இப்படி இருக்கக்கூடாது. உன்னைப் பத்தி தினமும் ஏதாவது ஒரு செய்தி தப்பு தப்பா காதுல விழுந்துகிட்டே இருக்கு...! உனக்கு ஒரு கால் கட்டு போட்டாதான் நீ வழிக்கு வருவே..."

"இந்தப் பத்திரிகைக்காரங்க எழுதுறதெல்லாம் பாதிக்கும் மேல பொய்டா... அதை விடு..."

"அப்ப பாதி அதுல உண்மை இருக்குன்னு ஒத்துக்கறே... அப்படித்தானே?"

"இல்ல பிரபா...அந்தப் பாதிக்கும் கூட நான் காரணம் இல்ல... என் கூட நடிக்கற நடிகைங்கதான் காரணம்! இப்ப கூட நீ பார்த்தியே-என் அம்மா நடிகையை...? அவ கூட என்னை ஒரு தலைப்பட்சமா காதலிச்சவதான்..."

"கொடுமைடா... உன்னைக் கணவனா அடைய ஆசைப்பட்டவளுக்கு நீ இப்ப மகனா... ரொம்ப கொடுமை...!"

"அதான் சினிமா உலகம்...ஏதோ என் அதிர்ஷ்டம்-ஹீரோவா நான் நீடிச்சுகிட்டு இருக்கேன். இருந்தாலும் சமயத்துல எங்கேயாவது ஓடிப் போயிடலாமான்னு தோணுது "

"ஏண்டா?"

"என்ன பொழப்புடா இது..? பேசாம உன்னை மாதிரி ஒரு பேங்க் உத்யோகஸ்தனா இருந்துட்டுப் போயிருந்தா, நிம்மதியா இருந்திருக்கும். சுதந்திரமா ஒரு இடத்துல ஒண்ணுக்கடிக்கக் கூட முடிலய !"

"போடா ஃபூல்! பிரவீண்ணா தமிழ்நாடே திரும்பிப் பாக்கற ஒரு உயரத்துல இருக்கே! அது போதுமே...! யாருக்குக் கிடைக்கும் இந்தப் பேரும் புகழும்?"

"இல்லடா பிரபா... இதுல புகழை விட விளம்பரம் தான் அதிகம் இருக்குங்கறது என் அபிப்ராயம். சீக்கிரமா ரிடயர்ட் ஆயிடலாமான்னு கூடத் தோணுது..."

-பிரவீண் பேசப்பேச, பிரபாகருக்குள் ஒன்று தெளிவாகப் புரிந்தது. அவன் நிம்மதியாக இல்லை. குழப்பத்தில் இருக்கிறான்.

"உளறாதே... உனக்குன்னு ஒரு குடும்பம் இருந்தா, இப்படி எல்லாம் தோணாது... அதுக்குத்தான் கல்யாணம் பண்ணிக்கச் சொல்றேன்..."

-அழுத்தமாகச் சொன்ன பிரபாகரை, ஒரு மாதிரி பார்க்கின்றன பிரவீணின் கண்கள்.

"ஏண்டா அப்படி பாக்கறே?"

"இல்ல... நீ புரிஞ்சு பேசறியா... இல்ல... புரியாம பேசறியா?"

"இதுல புரிஞ்சும் புரியாமலும் பேச என்ன இருக்கு?"

"ஒரு நடிகனுக்கு ஒரு வீட்டை வாடகைக்கு விடவே ஆயிரம் தடவை யோசிக்கறாங்க... பொண்ணையா தூக்கிக் கொடுத்துடப் போறாங்க? அதுவும் வதந்தில தினமும் அடிபட்ற எனக்கு?"

"ஏன் உன்னை லவ் பண்ற நடிகைகளும் பெண்கள் தானே? அவங்கள்ல யாரையாவது...?"

"நோ... நோ... தயவு செய்து இந்த அபிப்ராயத்தை மட்டும் சொல்லாதே..."

"ஏண்டா... நீ பேசறதப் பார்த்தா நடிகைங்கன்னா கேவலமா தோணுதா உனக்கு..."

"சாரிடா பிரபா...உனக்கு இந்த ஃபில்ட் பத்தி சரியா தெரியாது. நான் எனக்கு மனைவியா வரப் போறவபத்தி பலகற்பனைகள் செய்து வெச்சிருக்கேன்...

அவ ஏழையாகூட இருக்கலாம். ஆனா எனக்கே எனக்குன்னு வாழறவளா இருக்கணும்... விடு அப்படி ஒரு பெண்ணை நான் பார்க்கப் போறதுமில்ல–எனக்குக் கல்யாணம்னு ஒண்ணு நடக்கப் போறதுமில்ல.''

''அதையும் பார்ப்போம்... நான் இன்னிக்கே உன் அப்பாவைப் பாக்கறேன்...''

பிரபாகர் அப்படிச் சொன்ன மறுநொடியே சிரிப்பு கீறிக் கொண்டு வர, சிரித்து விட்டு அப்படியே... ''சரி; போய்ச் சொல்லு...''–என்றான் சற்றே கலங்கிய கண்களோடு...

''ஏண்டா...அவர் உனக்குப் பெண் பார்க்கத் தயாரா இல்லையா?''

''எங்கடா... என் சம்பாத்யத்துல பெரும்பகுதியைக் குடிச்சே அழிச்சுகிட்டிருக்கார் அவர்... கண்டிக்கவோ கவலைப்படவோ அம்மாவும் இல்லை... மனுஷன் ஒரு நிதானத்துல இருந்தாதானே இதை எல்லாம் யோசிக்க...?''

பிரவீண் ரத்னச் சுருக்கமாகக் கோடி காட்டினான்

ஊரே மெச்சும் ஒரு நடிகனுக்குள் இத்தனை துயரப் பள்ளமா?'

பிரபாகருக்கு வலித்தது.

பள்ளிக் கூடத்திலிருந்து தொடர்ந்து வரும் நட்பின் பேரில், நிச்சயமாக எதையாவது செய்ய வேண்டும் என்றும் தோன்றியது. இத்தனை உயரம் போன நிலையிலும், அதைச் சாதாரணமாகக் கருதும் அந்த அடக்கத்திற்காகவாவது இவனுக்கு உதவியே தீர வேண்டும். அந்த க்ஷணத்தில் அவன் அத்தை மகள் வாசுகி கண் முன்னே தோன்றி மறைந்தாள்.

ஒரு முறை அவள் வீட்டுக்குப் போன சமயம் – அவளது கல்லூரிப் பாடப்புத்தகத்தில் பிரவீணின் புகைப்படத்தை அவள் ஒளித்து வைத்திருந்ததும், அதை பிரபாகர் பார்த்துவிட, அவள் சமாளிக்கப் பட்டபாடும் நினைவில் எழுந்தது...!

இத்தனைக்கும் வாசுகி அவனுக்கென்று, பிறந்த போதே நிச்சயிக்கப்பட்டவள். அதனாலென்ன...? ஆசைகள் வெல்லவேண்டும். பிரபாகர் ஒரு முடிவுக்கு வந்தவனாக பிரவீணைப் பார்த்தான்.

''என்னடா பார்க்கறே?''

''உன் விருப்பத்தை நான் ஈடேற்றி வைக்கறேண்டா பிரவீண்...''

''நீ பொண்ணு பாக்கப் போறியா?''

''பாத்துட்டேண்டா!''–பளிச்சென்று சொன்னான்...

2

'உதவ மறுப்பவனே நல்ல நண்பன்!'

பிரபாகர் சொன்ன நொடி, பிரவீண் அவனை ஆச்சரியமாகப் பார்த்தான்.

''என்னடா பிரபா சொல்றே...! யாருடா அந்தப் பொண்ணு?''

''அதெல்லாம் இப்ப சஸ்பென்ஸ்! பொண்ணு ரெடியா இருக்கா... நீ வந்து பார்த்துட்டு யெஸ்னு சொல்றே?''

"நான் சொல்றது இருக்கட்டும்டா...அந்தப் பொண்ணு, அந்தப் பொண்ணோட அப்பா அம்மா... இவங்க 'எஸ்' சொல்வாங்களா?"

"அதப் பத்தி உனக்கேண்டா கவலை? அது என் பொறுப்பு..."

"வேண்டாம் பிரபா...எனக்காக ரிஸ்க் எடுக்காதே... உன் கல்யாணத்தைக் கவனி..."

"நீ பேசக்கூடாது. உன்னை இப்படியே விடக் கூடாது. அது ஆபத்து, சரி; கிளம்பு...மிச்சத்த பிறகு பேசிக்கலாம்..."

பிரபாகர் கொஞ்சம் இங்கிதமாகவும் நடந்து கொண்டு, அவனை ஷூட்டிற்கும் பிடித்துத் தள்ளினான்.

பிரவீண் எழுந்து கொண்டான். சிரித்தபடி இருவரும் வெளியே வந்தனர்.

மேக்கப் அறை உள்ளே ஒரு சின்ன பிளைவுட் தடுப்பு, அதன் பின்னே, யார் கண்ணிலும் படாதபடி வந்து படுத்திருந்த அசிஸ்டெண்ட் டைரக்டர் ஒருவன், பிரவீணுக்கு பிரபாகர் பெண் பார்க்க இருப்பது பற்றி யறிந்த தகவலோடு எழுந்து அமர்ந்தான்.

அவன் மனக் கண்ணில் ஏனோ அந்த அம்மா நடிகைதான் முதலில் ஞாபகத்துக்கு வந்தாள்.

* * *

கண்ணன் கால்களை வரைந்தபடி இருந்தாள் வாசுகி. கிருஷ்ணஜெயந்தி. பட்டுப்பாவாடை, தாவணி என்கிற கலலாசார உடை இடுப்பு வரை புரளும் கூந்தல், அவள் அமர்ந்து கால்களை வரையும்போது தரையில் உரசிற்று.

அதை அடிக்கொரு தரம் எடுத்து பின்னால் விட்டுக் கொண்டாள். எத்தி எத்தி நடந்து கால்களை வரையும் போது கொலுசும் கலீரிட்டது.

உதட்டில் பிரவீண் நடித்த ஒரு படத்தின் பாடல்.

வாசல்புறம் மோட்டார் பைக்கின் சப்தம் கேட்கவே, உட்கார்ந்த நிலையில் இருந்தபடி திரும்பிப் பார்த்தாள். பிரபாகர் இறங்கிக் கொண்டிருந்தான்.

அவனைப் பார்க்கவும் கொஞ்சம் வெட்கமாகிப் போனது.

எழுந்து உள்ளோடினாள். ஓடும்போது 'பிரபாகர் அத்தான்' என்கிற குரல், அவளையும் தாண்டி முன் ஓடியது.

சுவாமி படங்களுக்குப் பூ போட்டுக் கொண்டிருந்தாள் சகுந்தலா வாசுகி வந்த வேகத்தைப் பார்த்து விட்டுத் திரும்ப, பிரபாகர் உள் நுழைந்து கொண்டிருந்தான்.

"வா பிரபா..." வாய் நிறைய வரவேற்பு சகுந்தலா விடம்.

"என்னத்தே...கிருஷ்ண ஜெயந்தியா இன்னிக்கு..?"

"ஆமாம்ப்பா...உக்காரு..."

அவன் உட்கார்ந்தான். வாசுகி தன் அறைக்குள் ஒளிந்தபடி, காதை மட்டும் திறந்திருந்தாள்.

"எங்க அத்தே மாமா...?!"

"வழக்கம்போல கேம்ப் கிளம்பிட்டார். இங்க நானும் இவளும்தான்..."

"சுந்தர் எங்கே?"

"அவனுக்கு இன்னிக்குச் செங்கல்பட்டு, காஞ்சிபுரம் கால்ஸ் பார்க்கணும்... நாளைக்குத்தான் வருவான்... என்ன சாப்பிடறே?"

"காபி கொடுங்க அத்தை..." என்றபடி வீட்டைச் சுற்றி பார்வையை விட்டான்.

அத்தை அதைப் புரிந்துகொண்டது போல," ரூம்ல' இருக்கா.. போய்ப் பேசு... நீ வரவும் உள்ற ஓடிப்போய் ஒளிஞ்சுகிட்டா..." என்று வாசுகியை சற்று வாரியும் விட்டாள்.

அந்த பதில் அவனைச் சற்று நிரடியது.

சிறு வயதிலிருந்தே ஒருவருக்காக ஒருவர் என்று சொல்லி வளர்ந்ததன் எதிரொலியா?

பிரபாகர் எழுந்து உள்ளே சென்றான்.

வாசுகி ஜன்னலோரமாக வெளியே பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள்.

"ஹலோ வாசுகி..."

திரும்பிப் பார்த்தாள்.

"என்ன இது கிராமத்துப் பொண்ணுங்க மாதிரி..."

அவள் அதைக் கேட்டுச் சிரித்தாள்.

"இந்ந பேண்ட்டும் ஷர்ட்டும் உங்களுக்கு மேட்சா இல்லை...!" என்று அவன் கேட்ட கேள்விக்கு மாறுபட்ட பதிலை அளித்தாள்.

"நம்மளைப் போலன்னு சொல்லேன்—" பிரபாகர் பேச்சில் பஞ்ச் வைத்தான்.

சற்று அதிர்ச்சி வயப்பட்டவள், "என்னத்தான் சொல்றீங்க?" என்று அந்த அதிர்ச்சி கலையாமல் கேட்டாள்.

அவன் பதில் கூறாமல், டேபிள் மேல் உள்ள புத்தகங்களை ஒவ்வொன்றாக எடுத்துப் புரட்டத் தொடங்கியிருந்தான். அதில் எதிர்பார்த்தது போலவே பிரவீணின் ஒரு மாறுபட்ட படம். அதைக் கையில் எடுத்தபடி நிமிர்ந்தவனை, மிடறு கட்டியபடி பார்த்தாள் வாசுகி.

"என்ன வாசுகி... பிரவீணை ரொம்பப் பிடிக்குமோ?"

"அது... அது... நான் அவர் ஃபேன்!"

"நான் அவன் நண்பன்... தெரியும் தானே?"

"தெரியும்... அவரை ஒரு தடவை பார்க்கணும்... கூட்டிகிட்டுப் போறீங்களா?" -மழலைக்குரலில்மிழறினாள் வாசுகி.

"ஷ்யூர்..." அவனிடம் உற்சாகமான பதில். நடுவில் காபியோடு நுழைந்தாள் சகுந்தலா.

"இந்தாப்பா..." என்றவள் வாசுகியைப் பார்க்கவும், அவள் முகத்தில் வெட்கத்தின் ரேகைகள்.

"இந்த வெட்கம் இவனைக் கல்யாணம் பண்ணி கிட்ட பிறகும் இருக்கணும்..." என்று சீண்டவும், அவள் முகத்தில் மேலும் சிகப்பு கூடிப் போனது.

பிரபாகர் உடனேயே புரை ஏற்றத்தில் சிக்கினான். அத்தையே தலையைத் தட்டி, "பார்த்துப்பா... பார்த்து..." என்று வாஞ்சை காட்டினாள்.

ஒரு மாதிரி நிதானப்பட்டவன், "ஏன் அத்தை வாசுகிக்கு நான்தான்னு முடிவே பண்ணிட்டீங்களா?" என்று சற்று விட்டேத்தியாகக் கேட்டான்.

"இது என்னப்பா கேள்வி... புதுசா கேக்கறே?"– அத்தை லேசாக வெதுவெப்பானாள்.

"இல்லத்தே... என்னைவிட நல்ல இடமும் வரலா மில்லியா?"– அவன் பொடி வைத்தான்.

"அதெல்லாம் பாக்கறதா இருந்தாதானே? நீ என்ன ஆழம் பாக்கறியா?"

"சேச்சே... என்ன அத்தை நீங்க? எனக் கென்னவோ வாசுகிக்கு நான் அத்தனை பொருத்தமில் லேன்னு தோணுது... அதனாலதான் அப்படிச் சொன் னேன்..!" என்றபடி மறுபடியும் காபியைச் சூப்பு பவனை சகுந்தலா அரண்டு போய் பார்த்தாள்.

"என்னப்பா சொல்றே ? வாசுகி எதாவது உன் கிட்ட அந்த மாதிரி சொன்னாளா... இல்லை, வேண்டா வெறுப்பா நடந்துகிட்டாளா?"

அத்தை சற்றே பதட்டத்தோடு கேட்கவும், பிரபாகரின் கைகள் பிரவீணின் படத்தைக் காட்டு கின்றன. வாசுகியின் தலை உடனே தாழ்ந்து போனது. அத்தைக்கு முள் தைத்த மாதிரியானது.

"என்னடி இது... கண்டவன் படம்லாம் எப்படிடி உங்கிட்ட?" தொண்டை கிழியக் கத்தினாள். வாசுகி மௌனத்தைத் தொடர்ந்தாள்.

"அத்தை ஏன் கத்தறீங்க...? பிரவீணை வாசுகி மட்டுமில்ல... ஆயிரக்கணக்கான பெண்கள் விரும்ப றாங்க... தெரியுமா உங்களுக்கு?"

பிரபாகர் நிதானமாக லைனுக்கு வரத் தொடங்கி னான்.

"அட சும்மா இரு பிரபா நீ வேற..! அவன் ஒரு சினிமாக்காரன் - போட்றதெல்லாம் வேஷம். அதுல மயங்கினா உருப்பட முடியுமா...? என்ன பேசறே நீ...? ஏண்டி... என்னடி இது? நல்ல நாளும் அதுவுமா இப்படி என் தலைல குண்டத் தூக்கிப் போட்றே?"

அத்தைக்கு பி.பி. எகிறத் தொடங்கியது. வாசுகி உடனே பிரபாகரைப் பார்த்தாள்.

மிக அந்தரங்கமான தனது ஆசையை, பிரபாகர் இப்படிப் பட்டவர்த்தனப்படுத்திய கோபம் கண்களில் மின்ன, அவனை முறைத்தவள், மனதுக்குள் அவனை சபிக்கத் தொடங்கினாள்.

"அத்தை... நீங்க உள்ற போங்க...! இப்ப என்ன நடந்துடுச்சுன்னு இப்படிக் கத்தறீங்க...? போங்க உள்ற... நான் பேசிக்கறேன் வாசுகிகிட்ட..."

அவன் சமாதானித்து சகுந்தலாவை சற்று வெளியில் பிடித்துத் தள்ளினான். அறைக் கதவையும் தாழிட் டான். அவளை நெருங்கினான். அவள் அவனை நெருப்பாக ஏறிட்டபடி கேட்டாள்.

"என்னத்தான்... என்னை மாட்டி உடணும்னு தீர்மானம் பண்ணித்தான் கிளம்பி வந்திருக்கீங்களா?"

"ஆமாம் வாசுகி...! உன்னை பிரவீண்கிட்ட மாட்டி விடணும்னு தீர்மானம் பண்ணித்தான் வந்திருக்கேன்...."

அவனது பதில், அவளை அடுத்த நொடி திக்கு முக்காட வைத்தது.

"என்னத்தான் சொல்றீங்க?"

"என் கேள்விக்கு நீ பதிலைச் சொல்... உனக்குப் பிரவீணைப் பிடிச்சிருக்கா?"

"இது என்ன கேள்வி...? பிடிக்காமதான் அவர் போட்டோவை வைச்சிருக்கேனா?"

"அப்ப நம்ம கல்யாணம்...?"

"அது... அது.. !"

"சும்மா சொல்... மன வாழ்க்கைக்கு பிரவீண்... மண வாழ்க்கைக்கு நான்னு முடிவு பண்ணியிருந்தி யாக்கும்?"

அந்தக் கேள்விமுன் நெடுநேரம் மௌனம் காத்து விட்டு, அரை மனதாக ஆமோதித்தாள் வாசுகி.

"அப்ப பிரவீண் உனக்குக் கிடைக்க மாட்டாங்கறது உன் எண்ணம் .. அப்படித்தானே?"

"ஆமாம் இரண்டொரு தடவை உங்க பேரைச் சொல்லிக்கிட்டு அவரைப் பார்க்கப் போனேன். உள் றையே விடலை...! ஏமாற்றத்தோட திரும்பிட்டேன்..."

"அது சரி... இப்படி மனசுல ஒருத்தன் இருக்க, ஒரு பெண் இன்னொருத்தனைக் கல்யாணம் பண்ணிக்கறது சரியா?"

"நூத்துக்குத் தொண்ணூறு பெண்கள் இன்னிக்கு அப்படித்தான் அத்தான் கல்யாணம் பண்ணிக் கிறாங்க... கல்யாணத்துக்குப் பிறகு அமைஞ்ச கணவ னைப் பொறுத்துதான் அவங்க எண்ணங்கள்ல மாறு பாடுகள் ஏற்படுது"

வாசுகி ஒரு உண்மையை வெட்ட வெளிச்சமாக்கி னாள். பிரபபகருக்குக் கொஞ்சம் வலித்தாலும் அந்த யதார்த்தத்தைத் தாங்கிக் கொண்டான்.

"தேங்க்ஸ்..." என்றான்.

"எதுக்கு?"

"உண்மை பேசினதுக்கு ..!"

"ஆமா... பிரவீண்கிட்ட என்னை மாட்டிவிடப் போறதா சொன்னீங்களே...!" வாசுகி கச்சிதமாக விஷயத்துக்கு வந்தாள். அவ்வளவு ஆசை!

"ஆமாம் வாசுகி! நேத்துதான் அவனைப் பார்த் தேன். அவன் நிலை ரொம்ப மோசம். அவனுக்குத் தேவை இப்போ உன்னைப்போல ஒரு குடும்பப் பெண் ணோட பாசமும் பரிவும்தான் .. !"

"என்னத்தான் சொல்றீங்க...? அவருக்கா கஷ்டம்?" -வாசுகி நம்பாதவளாட்டம் கேட்டாள்.

"நீ அவனுக்கிருக்கற புகழ், பணத்தை மட்டும் வெச்சு இந்தக் கேள்வியைக் கேட்கறே..! உண்மை யான பாசமும் பரிவும் இதுக்கெல்லாம் அப்பாற்பட்டது வாசுகி!"-அவன் விளக்கம் அவளுக்குக் கலக்கமளித்தது.

"என்னென்னமோ சொல்றீங்களே அத்தான் .. !" என்று எதிர்க்கேள்வி கேட்டாள்.

"அதெல்லாம் இருக்கட்டும் . உனக்குப் பிரவீணைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதம்தானே?"

-வாசுகி, தலையைக் குனிந்து கொண்டு காலால் கோலம் போட்டு சம்மதத்தைச் சொன்னாள். கூடவே, "அப்பா அம்மாதான் சம்மதிப்பாங்களான்னு தெரி யல...!" என்றாள்.

"நிச்சயமா மாட்டோம் ..!"-பதில் கதவுக்குப் பின் னால் இருந்து வந்தது. சகுந்தலாதான் சொன்னவள்.

இருவர் முகமும் வெளிறிப் போனது. பிரபாகர் போய் கதவைத் திறந்தான். பின்னாலேயே நின்று கொண் டிருந்தாள் சகுந்தலா.

"பிரபாகர்... எப்ப இருந்து இப்படி புரோக்கர் உத்யோகம் பார்க்க ஆரம்பிச்சே?"–வெடுக்கென்ற கேள்வி வேறு...

"அத்தை..."

"பேசாத ! உன்னை நான் மாப்ளையா நினைக்கறேன்...நீயோ ஒரு நடிகனை எனக்கு மாப்பிள்ளையாக்கப் பாக்கறியா?"

"நடிகன்னு கேவலமாப் பேசாதீங்க அத்தை... அவன் ரொம்ப நல்லவன்..."

"நல்லவனா இருந்தா அவன் ஏன் நடிகனா இருக்கான்...? உனக்கு வாசுகியைப் பிடிக்கலேன்னா ஒதுங்கிக்கோ...! இந்த மாதிரி இணைப்பு வேலை எல்லாம் பாக்காதே..."

"அத்த... அவளும் விரும்பறா... அதப் புரிஞ்சுக்கொங்க..."

"அதுக்குப்பேர் விருப்பம் இல்ல... மோகம். குருட்டு மோகம். நிழல் மனுஷனைக் காதலிச்சா உருப்பட்ட மாதிரிதான்...!"

"இல்ல அத்தை... பிரவீண் விஷயத்துக்கு நான் உத்தரவாதம் தரேன்..."

"இதோ பார்... இனி இதைப் பத்தி எல்லாம் பேசாதே... தினம் ஒரு பொண்ணோட அவன் கூத்தடிக்கறதா செய்தி வந்துகிட்டு இருக்கு...! நானும் பாத்துகிட்டுதான் இருக்கேன். உனக்கு நண்பனா இருந்தா உன்னோட..! கல்யாணம்ங்கறது ஆயிரம் காலத்துப் பயிர். அதை ஞாபகம் வெச்சுக்கோ... நீ கிளம்பு..."

– அத்தை படபடவென்று பொரிந்து தள்ளினாள். பிரபாகருக்குத் தப்பாக ஆரம்பித்து விட்டோமோ என்று கூடத் தோன்றியது.

தயக்கத்தோடு அத்தையை நிமிர்ந்து பார்த்தான்.

அத்தை அக்னியாக அனல் வீசினாள். வாசுகி வியர்த்து விட்டிருந்தாள்.

அவன் சோர்வோடு புறப்படக் காலெடுத்த சமயம், செல்போன் சிணுங்கியது. எடுத்து காதைக் கொடுத்தான். பிரவீண்தான் பேசினான்.

"என்ன பிரபா...? பொண்ணு ரெடியா? எனக்கு இன்னிக்கு ஷூட்டிங் கேன்சல்... இன்னிக்கேகூட பெண் பார்த்துடலாம்!"

பிரபாகருக்குள் சங்கடம் தன்னை இரண்டால் பெருக்கிக் கொண்டது.

3

'காதல் என்பது பட்டம் வாங்கிய அன்பு'

செல்ஃபோன் தாக்கத்தோடு அப்படியே தேங்கி நின்றான் பிரபா. எதிரில் சகுந்தலா, முகம் கொள்ளாத வருத்தத்தோடும் கோபத்தோடும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"டேய்...என்னடா பதிலைக் காணோம்? எனிதிங்ராங்?" போனில் பிரவீண்.

"அதெல்லாம் ஒண்ணுமில்ல பிரவீண்... நான் இப்ப ஆபீஸ் வேலையா இருக்கேன்...நானே உனக்குப் போன் பண்றேனே..."

"அது இருக்கட்டும். என் ரெஸ்ட் டயத்தை இப்ப யூஸ் பண்ணிக்க முடியுமா முடியாதா...? அதைச் சொல்லு?"

"சாரிடா...இன்னிக்கு முடியாதுன்னு நினைக்கறேன்..."

"இட்ஸ் ஓ கே எப்ப முடியும்னு சொல்...நான் அதுக்குத் தகுந்த மாதிரி வரேன். நான் இப்ப ரொம்ப சந்தோஷமா இருக்கேன்.. ஏன் தெரியுமா?"

.. ..

"பிரபா...என்ன பதிலைக் காணோம்? ஏன்னு கேட்கமாட்டியா?"

"சாரிடா...என்?"

"சீ பெண் பார்க்கறியோ இல்லையோ...எனக்காகவும் கவலைப்பட நீ இருக்கே பாரு ! அதான் சந்தோஷத்துக்குக் காரணம். ஓ. கே. பை..." செல்ஃபோன் முடங்கிக் கொண்டது.

அவர்களும் பார்த்துக் கொண்டே யிருந்நனர்.

பிரபா நடக்க ஆரம்பித்தான்.

'வேலியில் போகிற ஓணானை எடுத்து உடம்பில் விட்டுக் கொண்டு விட்டோமே?'

பிரபாவின் மனதில் தூக்கலாகக் கேள்வி.

* * *

செட்டில் ஏக பரபரப்பு...

சினிமா கம்பெனிகாரர்களுக்கென்றே தயாரிக்கப்பட்ட ஆட்காட்டி விரல் நீள சிறிய எவர்சில்வர் தம்ளர்களில், அரை பாகத்துக்கு காபி எல்லோருக்கும் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது.

கூடவே டைரக்டரும் அவரது சகாக்களும் விடும் புகையின் மண்டலாதிக்கம்.

மேக்கப்போடு அமர்ந்திருந்தான் பிரவீண்.

எதிரில் 'ஹாய்' என்றவளாக வந்தமர்ந்தாள் கலா. பதினெட்டு வயது சினிமாப் புயல். கழுத்துவரை மூடி நடிக்க ஒரு ரேட்–அதே காற்றோட்டமாகக் காட்டி நடிக்க வேண்டுமென்றால் அந்த ரேட்டை இரண்டால் பெருக்கித் தர வேண்டும்.

ரகசியமாக சிகரெட்டும் பிடிப்பவள். பேசும்போது கண்களை மூடிக் கொண்டால், ஆண் பிள்ளை பேசுவது போல் இருக்கும். அதனால் எல்லா படத்திலும் டப்பிங் வாய்ஸ்.

"என்ன சார்...கல்யாணமா?" இரண்டு வார்த்தையில் நெத்தியடியாகக் கேள்வி கேட்டவளை நிமிர்ந்து பார்த்தான் பிரவீண்.

"யார் சொன்னது கலா?"

"யார் சொன்னா என்ன சார்...? உண்மைதானே?"

"உண்மையா...இது என்ன புதுக்கதை?"

"அப்ப கிளம்பி விட்டிருக்காங்களா?"

"பின்ன... எந்தப் பத்திரிகைக்காரன் வேலை இது...?"–பிரவீணிடம் கோபம், கன்னக்கதுப்பில் முகச் சாயத்தில் தனியாகத் தெரிய ஆரம்பித்தது.

"டென்ஷனாகாதீங்க... நான்தான் சும்மா கேட்டு வெச்சேன்..." அவள் உடனே மார்பைக் குலுக்கியபடி சிரித்தாள்.

அவனும் சூழ்நிலையை உணர்ந்து, சட்டென்று கோபத்தைத் துரத்திவிட்டு கஷ்டப்பட்டு சகஜமாகத் தொடங்கினான்.

"ஆமா... கல்யாணங்கறது ஒரு நல்ல விஷயம் தானே... அதுக்கெதுக்கு இப்படி கோபம் வருது உங்களுக்கு...?"

அவள் இப்பொழுது வேறு மாதிரி ஆரம்பித்தாள்.

"கலா... வாட் டு யூ வான்ட்?" அவன் கைகளை நீட்டியபடி கேட்ட தொனியில் சரியான அழுத்தம்.

அவள் உடனே எழுந்து நின்றாள். விலகிக் கொள்ளும் பாவனையோடு முதுகை வளைத்து, அமர்ந்திருக்கும் அவனுக்கு நேராக முகத்தைக் கொண்டு சென்று, சென்ட் வாசத்தை அவன் உணரும் நிலையில், "ஐ வான்ட் யூ... தெரியல நீங்க வேணும் எனக்கு! தருவீங்களா?"-என்று ரகசியக் குரலில் கேட்டாள்.

அடுத்த நொடியே அவன் பதிலையோ... உணர்வையோ எதிர்கொள்ளத் தைரியமில்லாதவளாக அங்கிருந்து புறப்பட்டாள்.

செட்டில் பல நூறு கண்கள்.

சிலர் இதை உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவனுக்கு நெருடலாக இருந்தது.

கலா இப்படி அடிக்கடி காதல் பாஷை பேசுவது ஒன்றும் புதிதில்லை. எதிரில் சற்றுத் தள்ளி அவனது அம்மாவாக நடிக்கும் நடிகையும் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவளும் பார்த்தபடியேதான் இருந்தாள்.

"ரைட்... ஷாட் ரெடி..." எங்கிருந்தோ டைரக்டர் குரல் கேட்கத் தொடங்கியது.

பிரவீண் தன்னை மறந்து, போட்ட வேஷத்திற்கான பாத்திரமாக மாறத் தொடங்கினான்.

வெளியே கலாவை ஒரு இளைஞன் இப்பொழுது ஆக்ரமித்திருந்தான்.

"என்ன கலா... கேட்டியா?"

"உம்.."

"என்ன சொன்னான்?"

"நக்கீரனா மாறத் தெரிஞ்சான்! ஓடி வந்துட்டேன்..."

"பாத்து— ஏமாந்துடப் போறே?"

"ஏமாறணும்னு இருந்தா ஏமாந்துதானே தீரணும்..."

"ஸோ... அவன் உன்னைக் கொஞ்சம்கூட பொருட்படுத்தலை... அப்படித்தானே?"

அவள் மௌனம் ஆமோதித்தது.

"அவனை வளைக்கறது ஒண்ணும் அவ்வளவு சுலபமில்லை... அது எலும்புத் துண்டுக்கு ஆசைப்படாத விசித்திரமான நாய்...!"

"அதனாலதான் இந்த நாய்க்கும் அந்த நாய் மேல காதல்...!"

"ஜெயிக்கமாட்டோம்னு தெரிஞ்சும் முட்டிக்கிட்டே இருக்கியே...?"

"இல்ல சிவா... நான் ஜெயிச்சுடுவேன்... எனக்கு நம்பிக்கை இருக்கு..."

"பார்ப்போம்... சரி, புறப்படு..." அந்த நடிகை ஒயிலாக, அந்த சிவா என்னும் ஜீன்ஸ் பேண்ட் இளைஞனுடன் தொடர்ந்து நடந்து காரில் ஏறப்போனாள்.

ஓடிவந்தார் ஒரு நிருபர்.

"குட் மார்னிங் மேடம்..."

"என்ன பேட்டியா?"

"அதான் பல தடவை கொடுத்துட்டீங்களே... எதாவது ஸ்கூப் நியூஸ்?"

அவள் உடனே ஒரு சிலவிநாடி நின்று தாடையைத் தடவிவிட்டு, "எந்த மாதிரி வேணும்?" என்று கேட்டாள்.

"சூடா, பரபரப்பா...!"

"சரி உங்கள நம்பி சொல்றேன்... வெளிய சொல்லிடாதீங்க பிரவீண் என்னை லவ் பண்றார்..."

"அதான் பாத்துட்டுப் போக வந்தீங்களா?"

"ஆமாம்னு வெச்சுக்குங்களேன்..."

அவள் பதிலோடு காரில் ஏறிக்கொண்டாள். புதிய அந்த சாண்ட்ரோ, ஒரு சின்ன பம்முதலோடு சீறி ஆரம்பித்தது.

காருக்குள்...

"வெளிய சொல்லாதீங்கன்னு சொல்லிட்டு, பத்திரிகைக்காரன் கிட்ட போய் சொல்ற பார் "

சிவா எனும் அந்த இளைஞன் செல்லமாகக் கோபிக்க, அவள் சிரித்தாள். பின் சொன்னாள்.

"அப்பதானே நாளைக்கே அதை அவங்க எழுது வாங்க !"

"அது தெரியும்... அதைப் படிச்சுட்டு பிரவீண் போன் போட்டு, அவனையும் உன்னையும் காச்சப் போறான்... தேவையா உனக்கு?"

"உனக்குப் புத்தியே இல்லை சிவா..." என்றவள், "ஆமா... செட்டியார் செக் தந்துட்டாரா?" என்று அடுத்த கேள்விக்கு வந்தாள்.

"அது எப்படி...? நீ போகணும்... பாக்கணும்... சிரிக்கணும்–எவ்வளவு வேலை இருக்கு...!"

"இந்த எஞ்ஜினியர் ஒருத்தன்... பணம் பணம்னு பிடுங்கி எடுக்கறான்... சரி; செட்டியாருக்கு போன் போட்டு ஹோட்டல் ரூமுக்கு வரச்சொல்லு..." என்றாள்.

அவனிடம் முறைப்போடு சம்மதம்.

* * *

பேங்க்கில் வேலை பிடுங்கி எடுத்துக் கொண்டிருந்தது. லட்ச லட்சமாக பணக்கட்டுகள்.

எண்ணுவதும் கொடுப்பதுமாக பிரபாகரின் கரங்கள் ஓடியாடிக் கொண்டிருக்கும்போது "பிரபா... போன்..." என்றது ஒரு குரல்.

அக்கவுண்டண்ட் டேபிளில், ரிசீவர் பிரபாவுக்காகப் பிரிந்து கிடந்தது.

ஐநூறு ரூபாய் கட்டு ஒன்றின் ஸ்டாப்ளர் பின்னைப் பிரித்துக் கொண்டிருந்தவன், அப்படியே போட்டுவிட்டு, கவுண்டரையும் மூடிவிட்டு, போய் காதைக் கொடுத்தபோது வாசுகிதான் பேசினாள்.

"அத்தான்.. நான் வாசுகி..."

"என்ன வாசுகி...?"

"நேத்து அம்மா அப்படிப் பேசிட்டாங்களேன்னு வருத்தமா...?"

"அது சரி... அது பத்திப் பேச இந்த நேரம்தான் உனக்குக் கிடைச்சுதா? நாலு நாள் லீவுக்குப் பிறகு கவுண்டர் திறந்துருக்கேன். சரியான கூட்டம்... சுருக்கமா சொல்லி முடி..."

"உங்களோட பேசணும் அத்தான்... சாயங்காலமா சந்திக்கலாமா?"

"சரி .."

'சரின்னா எங்க வரட்டும்? அஞ்சு மணிக்கு பேங்குக்கே வந்துடட்டுமா?"

"சரி வா..."–ரிசீவரை வைத்துவிட்டுத் திரும்பினான். கவுண்டரில் கிளம்பும்போது வைத்துவிட்டுப் போயிருந்த ஐநூறு ரூபாய் கட்டு ஒன்று காணாமல் போயிருந்தது!

4

'அன்போடு இரு கொஞ்சம் வம்போடும் இரு!'

பிரபாகருக்கு ஒரு க்ஷணம் நெஞ்சையடைத்தது. பார்வை நாலாபுறமும் துழாவியது, அந்த ஐநூறு ரூபாய் கட்டைப் பார்க்க முடியவில்லை.

சார்த்திய கவுண்டர் கதவில் தாழ்ப்பாள் போடப்படாமல் இருந்தது.

கவுண்டருக்கு அப்பால், 'எப்பொழுது பணம் தருவாய்' என்கிற பார்வையோடு பல முகங்கள்.

இவர்களில் எவராவது 'திருவிளையாடல்' புரிந்து விட்டார்களா? கிட்டத்தட்ட ஐம்பதாயிரம் ரூபாய் பணம்!

பிரபாகர் திணறலில் பெருகினான்.

"ஆமா... யாராவது நான் இல்லாதப்ப வந்தாங்களா?"

"இல்லையே சார்..."

"இங்க ஒரு ஐநூறு ரூபா கட்டு வெச்சிருந்தேனே.. ?"

"எங்களுக்குத் தெரிஞ்சு நீங்கதான் எழுந்து போனீங்க... திரும்ப வந்திருக்கீங்க..."

நடுவில் கிளியரன்ஸ் வித்ட்ராயல்களை, ஒரு அட்டெண்டர் கொண்டு வந்து போட்டார்.

"சார் டயமாகிக்கிட்டே இருக்கு... கூட்டம் கூடிகிட்டு இருக்குதுல்ல" ஒருவர் காதைக் கடித்தார்.

பதட்டத்தோடு வித்ட்ராயல்களை க்ளியர் செய்ய ஆரம்பித்தான் பிரபாகர்.

அப்படியே கவுன்ட்டரை குளோஸ் செய்துவிட்டு, மெயின் கேட்டையும் அடைத்துவிட்டு, ஒரு பரிசோதனையைச் செய்து பார்க்கும் எண்ணம் ஏனோ தோன்றவேயில்லை.

இரண்டு மணிக்கு கவுண்டரை குளோஸ் செய்துவிட்டு, பேலன்ஸை க்ராஸ் செக் செய்தபோது, நாற்பத்தி எட்டாயிரம் ரூபாய் பில்லைக் காட்டியது.

மயக்கம் மண்டைக்குள் பூமராங்போல் சுழன்றபடி வரத் தொடங்கிற்று.

விஷயம் தெரிந்து மேனேஜர் வந்து, காட்டுக்கும் மேட்டுக்கும் கேட்கும்படி கத்தினார்.

"என்ன பிரபாகர்.. அப்பவே கவுண்ட்டரை குளோஸ் பண்ணிட்டு மெயின் கேட்டைப் பூட்றதுக்கென்ன ? தும்பைதான் விட்டுட்டீங்க... வாலைக்கூட பிடிக்கலைன்னா என்ன அர்த்தம்?"

"சார் சார்... எனக்கு அப்ப இருந்த ப்ரஷர்ல தோணலை..."

"இந்தக் கதை எல்லாம் சொல்லாதீங்க... நீங்க என்ன அனுபவமில்லாதவரா? இல்ல, கேஷியர் வேலை தான் என்ன அல்வா கிண்டற சமாச்சாரமா? அது பூதத்துக்கே காவல் இருக்கற விஷயம்கறது உங்களுக்குத் தெரியாதா?

இந்த ரிஸ்க்குக்காகத்தானே பேங்க் எம்ப்ளாயீஸ்க்கு நல்ல சம்பளமே தராங்க .. அப்பவும் கோட்டை விட்டா எப்படி...?"

– நன்றாக வெல்லப்பாகு காய்ச்சுவதுபோல காய்ச்சி விட்டு, இறுதியாக 'ஒரு வாரத்தில் பணத்தை ஒப்பிடைத்து, கணக்கை நேர் செய்யுங்கள்' என்றபோது வேறு பதில் சொல்லவே முடியவில்லை.

– யாராவது இப்பொழுது, 'உனக்கென்னப்பா பேங்க் உத்யோகம்' என்று மாச்சரியப்பட்டால், அப்படியே மார்பைப் பிளந்து, ரத்தத்தைக் குடித்துவிடலாம் என்கிற மாதிரி அவனுக்குள் ஆவேசம் பிளிறிற்று.

தனியாகப் போய் ரெஸ்ட் ரூமில் மேஜைமேல் விழுந்தான். கொண்டு வந்திருந்த சாப்பாடு, பைக்குள்ளேயே முடங்கிக் கிடந்தது. சாப்பிடவே தோன்றவில்லை. சகாக்கள் ஆளாளுக்கு ஆறுதல் சொன்னார்கள்.

இன்றைக்குப் பணம் எடுத்துச் சென்றவர்களைப் பட்டியலிட்டு அவர்களை விசாரிக்கலாம் என்றார்கள். போலீசிலும் சொல்லி வைக்கலாம் என்றனர் சிலர். அப்படியே மணி ஐந்தையும் தொட்டது.

எதுவுமே பலன் தரப் போவதில்லை என்று அவர்களுக்குத் தெரியும். அதிர்ஷ்டம் இருந்தால் அது திரும்பக் கிடைக்கலாம். இல்லாவிட்டால் இன்றைய

கணக்கில் 48,000 ரூபாயை தர்மம் செய்ததாக நினைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

பிரபாகர் அப்படித்தான் நினைத்தான். அப்படியே பணத்திற்கு என்ன செய்யலாம் என்றும் யோசித்த போது, எதிரில் 'அத்தான்' என்றபடி வந்து நின்றாள் வாசுகி.

அவளைப் பார்த்த பிறகுதான் அவள் போன் செய்து வரப் போவதாகச் சொன்னதே ஞாபகத்திற்கு வந்தது.

கூடவே, 'உனக்காக எழுந்து வரப்போய், எனக்கு இன்று 48000 ரூபாய் தெண்டம்' என்றும் கோபம் மூக்கைச் சிலுப்பிற்று.

"என்னத்தான்... ஏன் டல்லா இருக்கீங்க?"– பேச்சை ஆரம்பித்தாள் வாசுகி.

"அதெல்லாம் இருக்கட்டும்... என்ன விஷயமா பாக்க வந்தே...? அதைச் சொல்லு..."

"....."

– அவள் மௌனமாக நின்றாள்.

அவனுக்கு எரிச்சலாக வந்தது. "இப்படி மௌனமா நிக்கத்தான் வந்தியா?" – சற்று சீற்றத்தோடு கேட்டான்.

"இல்லத்தான் இன்னிக்கு அப்பாவும் அம்மாவும் என் கல்யாணம் பத்திப் பேசினாங்க..."

"அதுக்கென்ன இப்போ?"

"முதல்ல உங்கள மாப்பிள்ளையா நினைச்சவங்க, அன்னிக்கு நீங்களே உங்க நண்பருக்கு என்னைப் பெண் பார்த்ததால மாறிட்டாங்கபோல இருக்கு..."

"என்ன...பிரவீணுக்கே உன்னைக் கட்டி வைக்கறதா முடிவு செய்துட்டாங்களா?"

"இல்ல .. அப்பா புதுசா ஒரு இடம் பார்த்துப் பேசி, இப்ப அவங்க என்னை வந்து பாக்கப் போறாங்க...!"

– வாசுகி சொல்லவும், பிரபாகருக்கு கொஞ்சம் சுருக்கென்றது.

'இன்றைக்கு விழித்த முகமே சரியில்லையோ?'

கேள்வியும் சலிப்பும் பிரண்டு படுத்தன.

அவள் தொடர்ந்தாள்:

"அவங்க யாருக்கு என்னைப் பார்த்தாலும் சரி... இனி நான் கட்டிகிட்டா பிரவீணைத்தான் கட்டிப்பேன்... அதுக்கு வாய்ப்பு இல்லேன்னா..."

– அவள் முடிக்காமல் அவனை சற்று தீர்க்கமுடன் பார்த்தாள்–'மிச்சத்தை மகனே நீயே புரிந்து கொள்' என்கிறாற்போல். அவன் யூகத்துக்கு விட்டுவிட்டு அங்கிருந்து புறப்பட்டாள்.

"ஏய் நில்லு... எதுல வந்தே?"

"டவுன் பஸ்ல..."

"இரு... கொண்டுகிட்டு வந்து விட்றேன் .."

"வேண்டாம், நான் போய்க்கறேன்..." – அவள் அவனை சாதாரணமாக மறுத்துவிட்டு, படிகளில் இறங்கி மறைந்தே விட்டாள்.

– வெளியே வந்தான் பிரபாகர்.

–ஒரு பாரத்துக்கு இரண்டு பாரம் ஏறிய நெஞ்சோடு, தன் டு வீலரைக் கிளப்பப் போகும்போது, செல்ஃபோன் சிணுங்கியது. காதைக் கொடுக்கவும் பிரவீண் பேசினான்.

"பிரபா..."

"என்ன பிரவீண்...?"

"சும்மாதான் போன் பண்ணினேன். ட்யூட்டி ஓவரா?"

"உம்... இப்பதான் வெளிய வந்தேன்..."

"கொஞ்சம் வாயேன் வீட்டுக்கு ."

– அந்த அழைப்பு பிரபாகருக்குள் சங்கடத்தை உருவாக்கிற்று. போனால் நிச்சயம் கல்யாணம் பற்றிப் பேச்செடுப்பான். அத்தை எதிர்த்தது வரை பேச வேண்டிருக்கும்.

"என்னடா பதிலைக் காணோம்...? வர்றியா இல்லையா?"

"வ... வரேன்..."

–தவறுதலாக மனதிற்கு எதிரான ஒரு பதிலாக உதடு சொல்லிவிட்டது. அதற்காகவும் வருத்தம் கொண்டது மனது.

ஒரே குழப்பமாக இருந்தது. ஒரு பக்கம்–ஆசை ஆசையாக நண்பன். மறுபக்கம்-அதற்குச் சளைக்காதபடி அத்தை மகள். ஆனால் பெற்றோர்களோ நேர் எதிர் திசையில்... ஊடே வெட்டு விழுந்துவிட்ட ஒரு 48000 ரூபாய்!

தீவிர சிந்தனையோடு டூ வீலரை, பிரவீண் வீடு நோக்கிச் செலுத்த ஆரம்பித்தான்.

உள்ளே கேட்டுவிட்டுத்தான் வழியை விட்டான் கூர்க்கா.

"வாடா..." – பால்கனியில் நின்றபடி பிரவீணிடம் வரவேற்பு.

லுங்கி, பனியன் என்று மிக கேஷுவலாகத் தெரிந்தான். கிட்டே நெருங்கியபோதுதான் முகத்திலும் உடம்பிலும் அங்கங்கே சின்னச் சின்ன கொப்புளங்கள் பார்வையில் பட்டன.

"என்னடா இதெல்லாம்?"

"அம்மையாம். ஆச்சரியமாயிருக்குல்ல...?"

–பிரவீண் சொல்லவும் சற்று திகைப்பாகத்தான் இருந்தது.

"எல்லா ஷூட்டிங்கும் கேன்சல் பிரபா... இனி இது குணமாகறவரை வீட்டு வாசம்தான். நடுநடுவுல காய்ச்சல் வருது. வேப்பிலைத் தண்ணிலதான் குளிக்கணுமாமே... என்னென்னவோ சொல்றாங்க... எனக்கு ஒரு ஹெல்ப் பண்ணேன்..."

"என்னடா?"

"உன் அம்மாவைக் கொஞ்சம் கொண்டுகிட்டு வந்துவிடேன். எனக்கும் கொஞ்சம் தெம்பா இருக்கும்..."

சொல்லும்போதே அவன் அப்பா சற்று தள்ளாடலோடு தாண்டிப் போனார். முகத்தில் கொனட்டலான புன்னகை.

"என்னால இந்த ஆளோட ஓடியாட முடியலைடா பிரபா... விஷ ஊசி போட்டுக் கொன்னுட்டா என்னன்னுகூட நினைக்கறேன்... தெரியுமா?"

பிரபாகருக்கு அவன் நிலை, அந்த சொற்ப நிமிஷங்களில் புரிந்து போனது.

"ஆமா... என்னமோ பொண்ணு ரெடியா இருக்கா... நீ தயாரா இரு'ன்னு சொல்லிட்டுப் போனியே... என்னடா ஆச்சு?"

பிரவீணின் நியாயமான அந்தக்கேள்வி, பிரபாகரின் நாவாக் கட்டையைப் பற்றித் தூக்கிற்று.

இவனுக்கு என்ன பதிலைச் சொல்வது என்பதில் சூழப்பமும் தயக்கமும் அரும்பும்போது, அவனது கார் டிரைவர் உள்ளே பரபரப்போடு ஓடி வந்தான்.

"ஐயா... இந்தக் கொடுமையைப் பார்த்தீங்களா...?" என்றபடி அன்றைய மாலை தினசரியை நீட்டினான். அதில் பிரவீணைப் பற்றிய ஒரு அபத்தமான செய்தி.

'பிரவீண்-கலா காதல்' என்று கொட்டை எழுத்தில் மின்னியது செய்தி.

"புல்ஷிட்...!"- பேப்பரை விட்டெறிந்தவன், மறுநொடி அந்தப் பத்திரிகை ஆசிரியருக்குத்தான் போன் போட்டான். கத்த ஆரம்பித்தான்.

"யாருய்யா சொன்னது? எனக்கும் அவளுக்கும் காதல்னு... நான் சொன்னேனா...?"

"நீங்க சொல்லலேன்னா என்ன சார்...? மேடம் தான் சொன்னாங்களே..."

"யார்... கலாவா?"

"ஆமாங்க சார்... ஏன் சார் உண்மை இல்லையா?"

"மண்ணாங்கட்டி! இனி இந்த மாதிரி செய்தியெல்லாம் போட்றதுக்கு முந்தி, எனக்குப் போன் பண்ணிக்கேளுங்க சார்... அவ கதை விட்டுக்கிட்டுத் திரியறா... அவளை கல்யாணம் பண்ணிக்கற அளவுக்கு நான் ஒண்ணும் தரம் கெட்டுப் போயிடலை..."

பிரவீணிடம் வார்த்தைகள் தோட்டா போல் பறந்தன. அடுத்து கலாவையே பிடித்தான்.

"கலா... என்ன நீ? நான் உன்ன எப்ப லவ் பண்றதா சொன்னேன்?"

"நீ சொல்லணுமா பிரவீண்... சொன்னாதானா?"

"இடியட்... இப்படி இனிமே நடந்துகிட்டே, நான் மனுஷனா இருக்கமாட்டேன்..."

"என்ன செய்வே?"

"கொலைக்குக்கூட அஞ்ச மாட்டேன்..."

"உன் கையால சாக நான் கொடுத்து வெச்சிருக்கணுமே பிரவீண்...!"

கலா சளைக்காமல் பதில் சொன்னாள்.

அவனுக்குள் பீறிட்ட கோபம், செல்ஃபோனையே வீசி எறியச் செய்தது.

அதிர்ச்சி வசப்பட்டு அப்படியே விக்கித்துப் போய் விட்டான் பிரபாகர்.

"பிரபா... யார்டா அந்தப் பொண்ணு. சொல்லுடா... இப்பவே அவ கழுத்துல தாலி கட்றேன். பாத்தியா என் நிலையை? என் நிலைமை தெரியாம விளையாட்றாங்கடா...! பிளான் பண்ணி இப்படி கழுத்தறுத்தா, எனக்கு யார்டா பொண்ணு கொடுப்பா...? நீயே சொல்லுடா..." அம்மை முகத்தோடு பிரவீண் விசும்பி அழும்போது, பார்க்க பரிதாபமாக இருந்தது.

5

'அதிர்ஷ்டம் தபாலில்...
துரதிர்ஷ்டம் தந்தியில்...'

பிரவீணின் அழுகை, ஒரு அமிலம் போல பிரபாகர் மனதைக் கரைக்கத் தொடங்கியது.

"பிரவீண் கவலைப்படாதடா...நான் உரிய ஏற்பாடு பண்றேன்..." - தேறுதலாகப் பேச ஆரம்பித்தான்.

–பிரவீண் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

"சாரிடா பிரபா...நான் கொஞ்சம் உணர்ச்சிவசப் பட்டுட்டேன். வந்ததுல இருந்து என்ன சாப்பிட் றேன்னுகூட கேக்கல பார்..."

செயற்கையான சௌஜன்யத்துக்கு வந்தான் பிரவீண்.

"சாப்பிட்றதா பெரிசு... இந்த விநாடி எனக்கு உன் கல்யாணம்தான் பெரிசு. ஆமா...ஏன் அந்த நடிகை உன்னை இப்படி டார்ச்சர் பண்றா?"

பிரபாகரின் கேள்வி, பிரவீணை கயிற்றால் கட்டி யதுபோல கட்டுகிறது. மார்பிரண்டும் நீர்த்தலையணை போல் விம்முகின்றன. அதோடு உதடுகள் பிரிகின்றன.

"உனக்கு ஆக்டர் ஜோதிநாத்தை தெரியும்தானே?"

"என்னடா கேள்வி இது...? நீயும் அவரும்தானே இப்ப ஃபில்டுல அடுத்த எம். ஜி. ஆர்., சிவாஜி..."

"இந்த விவகாரத்துக்குப் பின்னால அவன் இருக்கான் பிரபா..."

"என்னடா சொல்றே?"

"ஆமாண்டா...கலா அவனோட கையாள். இந்த ஃபீல்டுல நடிக்க வர்றதுக்கு முன்னால, மும்பைல கால் கேர்ளா தொழில் பண்ணிக்கிட்டிருந்தவ அவ...! எல்லா விதமான வித்தையும் தெரிஞ்சவ! மந்திரியில இருந்து எம். பி., எம். எல். ஏ. எல்லாரையும் படுக்கையில சாய்க்கறவ...!

என்னைக் குழப்பி, என் இமேஜைக் கெடுத்து, தொழில்ல எனக்கு இருக்கற கான்சன்ட்ரேஷனை ஸ்பாயில் பண்ணி என்னை ஃபீல்ட் அவுட் ஆக்கணும் கறது ஜோதியோட திட்டம். அதுக்குப் பயன்பட்டு கிட்டு இருக்கா அவ..."–பிரவீண், விவரிக்கவும், பிரபாகருக்குத் தேள் கொட்டுப்பட்ட மாதிரி இருந்தது.

"நிஜமா...?" – என்று கேட்டான் அப்பாவியாக...

"ஆமாண்டா...நான்கூட இதெல்லாம் வெறும் கற்பனையா இருக்கும்னு நினைச்சேன்...ஆனா போகப் போகத்தான் எல்லாம் புரிஞ்சுது.

தொடர்ந்து நான் இப்படியே இருந்தா, எனக்கு அது எல்லா விதத்துலையும் ஆபத்துடா பிரபா..."

பிரவீண் குரல் கமறியது. பரிதாபம் பல மடங்கு தெரிந்தது.

"ஆனா நான் கோழை இல்லடா...! இந்த சுழல்ல இருந்து மீண்டு காட்டுவேன். அவங்க எதுக்க வாழ்ந்து காட்டுவேன். தொடர்ந்து மூணு தடவை நேஷனல் அவார்ட் எனக்குக் கிடைக்க இருந்து மிஸ் ஆனது.

இந்த வருஷம் அதை எப்படியாவது அடையணும்னு நினைச்சிருக்கேன். இதுக்கெல்லாம் என்னைப் பாத்

துக்க புத்திசாலியா ஒருத்தி வந்துட்டா போதும்... பாத்தியா இப்ப என்னை? கோடிகோடியா பேங்க்குல இருந்து என்னடா புண்ணியம்? ஒரு பக்கெட் வென்னீர் வெச்சுக் கொடுக்க வீட்ல சரியான ஆள் இல்லை..."

மீண்டும் அவன் கண்களில் கண்ணீரின் சேர்க்கை. ஊடே பிரபாகரின் செல்ஃபோனில் செல்லச் சிணுங்கல்.

"யெஸ்... பிரபாகர் ஹியர்..."

மறுமுனையில் பேங்க் மேனேஜர் பேசினார்.

"பிரபா... நான் மேனேஜர் பேசறேன். நீ மிஸ் பண்ண பணம் சம்பந்தமா உனக்கு ஒரு வாரம் டயம் கொடுத்துருந்தேன் இல்லியா?"

"ஆமாம் சார்..."

"ஐ ஆம் சாரி... இப்பதான் பாம்பே ஹெட் ஆபீஸ்ல இருந்து போன் வந்தது... நாளைக்கு நம்ப சீஃப் ஆடிட்டர் ஜெனரல் வெரிஃபிகேஷனுக்கு வர்றாராம். ஆன் தட் டைம் 48000 குறைஞ்சிருக்குங்கறது தெரிய வந்தா, அது உன் பிரமோஷனைப் பாதிக்கலாம். எப்படி யாவது நாளைக்கே கட்ட முடியுமா உன்னால...?"

"நாளைக்கா சார்...?"

"யெஸ்... என்னை என்ன பண்ணச் சொல்றே? இங்க சூழ்நிலை அந்த மாதிரி..."

"சார் ஒரு நாள் அவகாசம்கூட இல்லாத நிலைல நான் 48000 ரூபாய்க்கு எங்க சார் போவேன்?"

"இதோ பார் பிரபா... நான் உன் நல்லதுக்குத்தான் இப்ப போன் பண்ணிச் சொல்றேன்...எப்படியாவது சமாளிப்பா... இல்லேன்னா, இது பெரிய பிளாக் மார்க்கா தங்கிடும். அப்புறம் உன் பிரமோஷன்தான் பாதிக்கும்... ஆமா...உன்கிட்ட ஒண்ணு கேக்கணும்னு..."

"என்ன சார்?

"உனக்குத்தான் ஆக்டர் பிரவீண் நல்ல பழக்க மாச்சே? அவர்கிட்ட இல்லாத பணமா?"

– செல்ஃபோனில் மேனேஜர் எழுப்பிய கேள்விக்குப் பதில் சொல்லாமல், நிமிர்ந்து பிரவீணைப் பார்த்தான் பிரபாகர்.

"என்னடா... என்ன பிராப்ளம்?"

"ஒண்ணுமில்ல... சார்... ஐ வில் ட்ரை சார்! முடிய லேன்னா பிரமோஷன் போகட்டும்... வேலைகூட போகட்டும்... ஆனா நான் ஃப்ரெண்ட்ஷிப்பைப் பயன் படுத்தி எதையும் செய்யமாட்டேன். ஐ கான்ட்... நீங்க போனை வெச்சுடுங்க ..."

–செல்லை அணைத்து, பாக்கெட்டில் போட்டுக் கொண்டான். பலிகோழி போல தலையையும் சிலிர்ப்பிக் கொண்டான்.

"பிரபா... என்னடா பிராப்ளம்? போன்ல யார் உன் மேனேஜரா...?"

"ஆமாம் பிரவீண்! அதை விடு...உன் விஷயத்துக்கு வருவோம். நான் உன்கிட்ட சில விஷயங்கள். ஓபனா பேச விரும்பறேன்..."

"பேங்க்ல உனக்கு என்ன பிராப்ளம்...? அதை முதல்ல சொல்லு "

"அது ஒண்ணுமில்லடா... இப்ப நான் உன் கல் யாணம் பத்திப் பேசப் போறேன். நான் உனக்குப் பெண் பார்த்து வெச்சிருக்கறதா சொன்னது – என் அத்தை மகளைத்தான்... அவளுக்கு நீன்னா உயிர்! அது தெரிஞ்சுதான் அன்னிக்கு அப்படிச் சொல்லிட்டுப் போனேன்.

ஆனா, அத்தையும் மாமாவும் உன் பேச்செடுத்த உடனேயே அலறிட்டாங்க -- அது மட்டுமில்ல... இப்ப கூட அவளுக்கு வேற இடத்துல மாப்ளை பார்க்கறதா தகவல்... இதைக்கூட என் அத்தை மக வாசுகியே வந்து சொல்லிட்டுப் போனா.

கூடவே, 'நான் கல்யாணம்னு ஒண்ணு பண்ணி கிட்டா பிரவீணைத்தான் பண்ணிப்பேன். இல்லேன் னா'ன்னு சஸ்பென்ஸ் வெச்சுட்டுப் போயிருக்கா...

அதனாலதான் நான் உன்னை காண்டாக்ட் பண்ணலை... இதுதான் இப்போதைய நிலை. இனி என்ன பண்ணலாம்? நீயே சொல்..." பிரபாகர், தன் துன்பத்தை துளிகூடக் காட்டாமல் மூடியபடி பேசியதில் பிரவீணிடம் பலத்த ஆச்சரியம்!

"ஆமா... அவ உன் முறைப் பெண்ணா?" கேட் டான்.

"ஆமாம்! இப்ப முறைச்சுட்டுப் போயிருக்கற பொண்ணுகூட..."

"எனக்காக நீ விட்டுத் தர்றியாக்கும்..."

"இல்லடா... அவ மனசுல நான் இல்லை... நீதான் இருக்கே... ஆசையும் ஆசையும் சேரட்டுமேன்னு நினைச்சேன் --"

"உன் அத்தை மாமாக்கு என் பேர்ல அவ்வளவு வெறுப்பா?"

"இல்லியா பின்னே... இன்னிக்கு வேற இப்படி நியூஸ் வந்திருக்கு -- பாத்துட்டு 'நல்லவேளை தப்பிச் சோம்'னுல்ல நினைப்பாங்க..."

"சரி; நீயே சொல்லு...? என்ன பண்ணலாம்...?"

"துணிஞ்சு அவ கழுத்துல தாலியக் கட்டிடு... பின்னால எல்லாம் சரியாயிடலாமில்லியா?"

"அந்தப் பொண்ணு சம்மதிப்பாளா?"

"தயாரா இருக்காங்கறேன்... நீ வேற..."

"ஒருவேளை – கல்யாணத்துக்குப் பிறகும் உன் அத்தை–மாமா மாறலேன்னா...?"

"நஷ்டம் அவங்களுக்குத்தான். வாசுகி மேஜர் ஆனவ... ஒண்ணும் பிராப்ளம் வராதுடா... இப்ப நீ இருக்கற நிலைல ஒரு ரிஸ்க் எடுத்தாதான் லைஃப்... தெரிஞ்சுக்கோ..."

"அதுக்கு முந்தி நான் அந்தப் பெண்ணை ஒரு பார்வை பாத்துக்கறேனே..."

"நிச்சயமா..."

"எப்போ?"

"நாளைக்கு...?"

"..... ..."

"அவகிட்ட பேசிட்டு வீட்டுக்கே கூட்டிகிட்டு வரேன்... என்ன?"

"தேங்க்ஸ்டா..."

பிரபாகர் புறப்பட்டான்.

அவன் பைக் நகர்ந்த சப்தம் கரைந்த மறுநொடியே பிரவீணின் செல்போன், பிரபாகரின் பேங்க் மேனேஜரைத்தான் பிடித்தது.

"ஹலோ சார்... ஹவ் ஆர் யூ சார்...? என்ன சார் இது...! நீங்களா பேசறீங்க... என்னால நம்பவே முடியலையே! என்ன சார் விஷயம்?"

"பிரபாகருக்கு என்ன சார் பிராப்ளம்?"

"அதுவா சார்... இன்னிக்கு கேஷ் செக்ஷன்ல பிரபாகர் கொஞ்சம் கேர்லெஸ்ஸா இருந்துட்டார்போல ஒரு 48000 ரூபா மிஸ்ஸாயிடிச்சு... அவ்வளவும் 500ரூபாய் நோட்டு!

ரொம்ப டெடிகேடிவ் ஆன சர்வன்ட்தான்! அத்தை பொண்ணு போன் பண்ணினதால நகர்ந்திருக்கார். நடுவுல யாரோ கை வெச்சுட்டாங்க !"

"ஐ.சீ... நீங்க என்ன முடிவு செய்திருக்கீங்க?"

"நான் பிரபாகர்கிட்டேயே சொன்னேனே... அவர் அதை உடனடியா எப்படியாவது கட்டிட்றதுதான் நல்லது. ஈவன்–உங்க பேரைச் சொல்லி உங்ககிட்டகூட உதவி கேக்கச் சொல்லியிருந்தேன்... கேட்டிருப்பாரே ?"

"ஆங்... யெஸ், யெஸ்... கேட்டான். நான் அந்தப் பணத்தை நாளைக்கே கட்டிட்றேன்... அவனுக்கு எந்தக் கெட்ட பேரும் வந்துடக்கூடாது... அதான் எனக்கு வேணும்..."

"ரொம்ப சந்தோஷம் சார்... இவ்வளவு உயரத்துக்குப் போன பிறகும் நீங்க நண்பர்களை மறக்காம, அவங்களுக்கு உதவி செய்யறது ரொம்பப் பெரிய விஷயம் சார்... வெரி கைண்ட் ஆஃப் யூ..."

"பை த பை... நான் பணம் கட்டின விஷயம் பிரபாகருக்குத் தெரிய வேண்டாம்..."

"ஏன் சார்...?"

"வேண்டாம்னா விட்ருங்களேன்... 'அந்தப் பணம் காணாமப் போகலை... திரும்பக் கிடைச்சிடுச்சு'ன்னு சொல்லி சமாளிச்சுடுங்க... ப்ளீஸ்..."

"ஓ... வெரி கிரேட் சார் உங்க தாட்! ரியலி வெரி கிரேட். நான் பாத்துக்கறேன் சார்... டோன்ட் ஓர்ரி..."

மேனேஜர் மறுமுனையில் முடித்துக் கொள்ள, இந்தப் பக்கத்தில் செல்லை முடக்கியவன், ஒரு க்ஷணம் பிரபாகர் நினைப்பில் பெருமிதப்பட்டான்.

'பணம் பணம்' என்று தன்னைச் சுற்றும் கழுகுகள் நடுவில், தனக்காகக் கூடுகட்டும் ஒரு புறாவாக அவன் தெரிந்ததில் பிரவீண் கண்களில் பனிப்பு!

கட்டட வேலைகள் ஜரூராக நடந்து கொண்டிருந்தது. கலாவின் கார் வந்து நிற்கவும், எல்லோர் கவனமும் அவள் பக்கம் திரும்பியது.

கண்களைக் கொத்துவதுபோல் ஸ்லீவ்ஸெஸ் ஃப்ராக் போட்டிருந்தாள். இழுத்துத் தள்ளி நிறுத்திய மார்பு, வெட்கமின்மைக்கு இலக்கணம் எழுதிற்று.

ஒயிலாக நடந்து வந்தாள். எஞ்ஜினியர் தோப்புக் கரணமே போட்டு வழிந்தார்.

"எவ்வளவு நாள் ஆகும் முடிய?" அவளிடம் கேள்வி.

"எப்படியும் சிக்ஸ்ட்டி டேஸ் ஆகும் மேடம்..."

"பட்ஜெட்டைக் கூட்டிக்கிட்டே போறீங்களே...?"

"என்னங்க பண்றது மேடம்... சிமெண்ட் விலை போன மாசம் 155 இன்னிக்கு 200-க்கே இல்லைங்கறான்..."

"ஓ.கே.. ஓ.கே... எனக்கு ஃபினிஷிங்லாம் பிரமாதமா வரணும்..."

"கட்டாயம் வரும் மேடம்... டோன்ட் ஒர்ரி... எப்படியும் ஒரு அஞ்சு லட்சத்துக்கு கேஷ் ரெடி பண்ணினாதான் ஃபர்ஸ்ட் ப்ளோர் போக முடியும் மேடம்..."

எஞ்ஜினியர் வழிய-எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும்போது நடுவில் அவளைக் கூப்பிட்டது செல்.. போன்.

காதை கொடுத்தாள்.

மெயின் ஹீரோ ஜோதிநாத் பாய்ந்தான்.

"என்னடா.... என்ன ஆச்சு பிரவீண் விஷயம்?"

"அவனுக்கு இப்போ அம்மை போட்ருக்குப்பா... கிட்டத்தட்ட ஒரு மாசத்துக்கு ஷூட்டிங் பக்கம் வர முடியாது. ஒரு மாசத்துக்குக் கவலை இல்லைன்னு வெச்சுக்கலாம் ஜோதி"

"அப்ப அதுக்கு அப்புறம் கவலைப்பட்டா உனக்கு ஓ.கே வா? ஸ்டுப்பிட்..."

"என்ன பண்ணணும்கறே?"

"இந்த அம்மை அவன் உயிரைக் கொண்டு போயிடணும். அதுக்கு என்ன பண்ணணுமோ, அதைப் பண்ணு..."

"சரி; நான் கேட்டுருந்தேனே அஞ்சு லட்சம்..."

"நீ கெட்டிக்காரி கலா! எனக்காக உன்கிட்ட ஒரு முடி அசைஞ்சாலும் அதுக்கும் ஒரு விலை வெச்சு காசைக் கறந்துட்றே...'

"ஆமா! நீங்கள்லாம் பெரிய புத்தர் பரம்பரை! சேவை செய்து ஜீவனம் பண்ணிகிட்டிருக்கீங்க பாரு...!"

"கோவிச்சுக்காதே-பணம் வந்து சேரும்-எனக்குக் காரியம் கச்சிதமா முடியணும்..."

"முடியும்... அம்மையோட அவன் கதை முடியும்... கவலைப்படாதே.." ஓரமாக ஒதுங்கிப் பேசியவள், ஒரு நிர்மானத்தோடு திரும்பினாள்.

எதிரில் எஞ்ஜினியர்.

"பணம் நாளைக்கு வந்துடும்யா ..."

அவளிடம் புன்னகையோடு பளிச்சென்ற பதில்!

6

எஞ்ஜினியர் அதற்காக தன் முப்பத்திரண்டை காட்டிச் சிரித்தார்.

"இந்த ஏரியாவுலையே நம்ம பங்களாதான் மேடம் பாத்தா கண்ணை பறிக்கப் போவுது..."

– அவள் அதைக் கேட்டுச் சிரித்தாள். மனதுக்குள் மிதந்தபடி திரும்ப காரில் சென்று ஏறினாள்.

என்ஜினியர் கார் வளைந்து திரும்புவது வரை கூட ஓடி வர புழுதியைப் பிரட்டிப் போட்டுவிட்டு புறப் பட்டது அந்த கார்.

உள்ளே கலாவின் மனதில் பிரவீணை எப்படி கவிழ்க்கப் போகிறோம் என்பது பற்றிய கவலை... இல்லையில்லை திட்டம்... திட்டம்...!

பேங்குக்குள் நுழையும் பிரபாகர் நேராக இருக் கைக்கு போகுமுன் அட்டெண்டென்ஸ் ரிஜிஸ்தரில் கை யெழுத்துப் போட்டுவிட்டு மேனேஜர் அறை பக்கம் எட்டிப் பார்த்தான்.

இதற்குள் சிலர் பார்த்துவிட்டு நெருங்கி வந்து பேசத் தொடங்கினர்.

"பிரபா பயங்கர லக்குய்யா உனக்கு?"

"லக்கா ... எனக்கா? என்ன சொல்றீங்க .."

"ஆமாம் ... நீ நேத்து தொலைச்சியே 48000 .."

"அதுக்கென்ன... அதான் என்னை கவுத் துடிச்சே ."

"அட நீ வேற... நீ மிஸ் பண்ண அந்த பணம் கிடைச்சிடுச்சுய்யா..."

"பணம் கிடைச்சிடுச்சா... என்ன ராமசாமி சொல்றே?"

"ஆமாம்யா... கேஷ் செக்ஷன் டிராயர்லையே இருந்ததாமே... நீ சரியா கவனிக்கலையா என்ன?"

– பிரபாகருக்கு இன்ப அதிர்ச்சியாக இருந்தது. நேற்று கேஷ் செக்ஷனையே அரிசிச்சாக்காக நினைத்து தலைகீழாக உதறியபோது கண்ணில் படாத பணம் மேனேஜர் கண்ணில் மட்டும் எப்படி பட்டிருக்க முடி யும்?

கேள்வி கண்களில் மின்ன அவர் முன் சென்றான்.

"வாங்க பிரபாகர் யூ ஆர் லக்கி. பணம் கிடைச் சிடுச்சு தெரியுமா?"

"என்ன சார் இது மாயா ஜாலமா இருக்கு நேத்து என் கண்ணுல படாத பணம் இன்னிக்கு உங்க கண்ணுக் குப் பட்ருக்குன்னா..."

– மேனேஜர் அவனை நிமிர்ந்து பார்த்தார். அவன் நம்பவில்லை என்பது நன்றாகத் தெரிந்தது.

"உட்காருங்க பிரபாகர்..." – என்றார் நிதானமாக.

அவன் அவர் எதிரில் உள்ள நாற்காலியில் அமர்ந் தான்.

"என்ன பிரபாகர், நம்ப முடியலையா?"

"ஆமாம் சார்... பிரவீண் ஹெல்ப் பண்ணியிருக்கணும்னு நினைக்கறேன். ஆம் ஐ கரெக்ட்..."

"யு ஆர் ரைட்... பிரவீண் தானாதான் பேசினார். இந்த உதவி பற்றி உங்களுக்குத் தெரிய வேண்டாம்னும் சொன்னார். அதனாலதான்..."

"வேண்டாம் சார்... அந்த பணத்தைத் திருப்பிக் கொடுத்துடுங்க. நட்புக்கு நடுவுல பணத்தை நுழைச்சு அதை நான் கெடுத்துக்க விரும்பலை"

"ஒரு கோணத்துல நீங்க சொல்றதும் வாஸ்தவம் தான். அதே சமயம் நட்புதான் இந்த மாதிரி ஆபத்தான சமயங்கள்ளையும் காப்பாத்த முடியும். அதத் தெரிஞ்சுக்கோங்க..."

–அவன் அவரை ஏறிட்டான்.

"இந்த உதவியை நீங்க ஏத்துக்கறதுல தப்பு இல்ல பிரபாகர். அத புரிஞ்சுக்குங்க... அநாவசியமான தாழ்வு மனப்பான்மை எதுக்கு உங்களுக்கு?"

– அவர் மடக்கிக் காட்டினார். அவனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

எதுவும் பேசாமல் எழுந்து சீட்டுக்கு வந்தான்.

மனதில் பிரவீண் விசுவரூபமெடுத்து விட்டிருந்தான்.

வேறு எதையுமே நினைக்க முடியவில்லை. வேலையும் ஓடவில்லை. லீவைப் போட்டுவிட்டு வீட்டுக்குப் போகலாம் போல் தோன்றியது.

அப்படியே உன் அம்மாவைக் கொஞ்சம் அனுப்பி வைய்யேன் என்று பிரவீண் சொன்னது ஞாபகத்தில் வந்தது.

அம்மை வந்த உடம்போடு இப்போது என்ன பாடு பட்டுக் கொண்டிருக்கின்றானோ?

மனது கனத்துப் போனது –

லீவ் லெட்டரை நீட்டிவிட்டுக் கிளம்பினான்.

வீடு!

வாசலில் வேப்பமரம்–நிழல் புரளும் இடத்தில் பிரபாகரின் அம்மா மனோரஞ்சிதம் மிளகாய் வத்தல் உலர்த்திக் கொண்டிருந்தாள்.

நடுவில் இடையிட்டு நின்றது ஆட்டோ ஒன்று. உள்ளிருந்து இறங்கிக் கொண்டிருந்தனர் வாசுகியின் அப்பாவும் அம்மாவும்...

"வாங்க வாங்க..." – மனோரஞ்சிதத்திடம் வாய் நிறைய வரவேற்பு. அவர்கள் முகத்திலோ இறுக்கம். இருவரும் உள் நுழைந்து ஹாலில் அமர வாசுகியின் தாய் சகுந்தலா கேட்டாள்.

"ஆமாம் அண்ணன் எங்க?"

"கோயிலுக்குப் போயிருக்காரு – என்ன சகுந்தலா இது திடீர்னு ஒரு போன் கூட பண்ணாம வந்துருக்கே. மாப்ளையும் வந்துருக்காரு. என்ன சாப்பிடறீங்க?"

"இருக்கட்டும் அண்ணி. வேலை தலைக்கு மேல இருக்கு. போய்தான் கவனிக்கணும். அண்ணி அப்புறமா ஒரு முக்கிய விஷயம்..."

– சொல்லிக் கொண்டே சகுந்தலா ஹேண்ட் பேக்கில் இருந்து குங்குமச் சிமிழும், அட்சதையையும் வெளியில் எடுத்தாள். மனோரஞ்சிதம் பார்வை அதைப் பார்த்துவிட்டு அதிகம் விரிந்தது.

"என்ன சகுந்தலா என்ன விசேஷம்?"

"ஒண்ணுமில்ல அண்ணி வாசுகிக்கு இன்னிக்கு சாயந்தரமா நிச்சயதார்த்தம்..."

"நிச்சயமா .. என்னடி சொல்றே?"

"ஆமாண்ணி .. பிரபாகர்தான் கழுத்தறுத்துட்டானே?"

– சகுந்தலா சொல்லும்போதே கண்களில் நீர்க்கூடு.

"என்ன சொல்றே நீ... குண்டத் தூக்கி போட்றியே சகுந்தலா ."

"உக்காந்து விவரமா பேச நேரமில்ல அண்ணி. சுருக்கமாகச் சொல்றேன். பிரபா எங்களை ஏமாத்திடுச்சு. அதோட சினிமாக்கார ஃப்ரெண்டு பிரவீணுக்கு வாசுகியை நாங்க கட்டிக் கொடுக்கணுமாம். கேட்டுச்சு.

கிளியை வளத்து பூனை கைல கொடுக்க நாங்க என்ன கேனையா, கிறுக்கா? முடியாதுன்னுட்டோம்.

விட்டா வாசுகி எங்க பிரபா பேச்ச கேட்டு தப்பு தண்டா பண்ணிடுவாளோன்னு பயமாவேற போயிடுச்சு. அதான் வேக வேகமா வரன் பாத்துருக்கோம்..."

– சகுந்தலா புடவை முந்தியைத் திருகியபடியே சொல்லி முடிக்கவும் மனோரஞ்சிதம் முகத்தில ஈயாடவில்லை.

"வரேன் அண்ணி... அண்ணன் வந்தா சொல்லிடுங்க. நீங்க கொஞ்சம் முன்னாலையே வந்தீங்கன்னா நல்லாருக்கும்..."

- சுரத்தில்லாத குரலில் சகுந்தலா பேசி விட்டுக் கிளம்பினாள். உடன் வந்த அவள் கணவர் சுந்தரமூர்த்தியிடம் பேச்சேயில்லை.

இருவரும், விக்கித்து சிலைபோல அமர்ந்துவிட்ட மனோரஞ்சிதத்தின் பதிலைக் கூட பொருட்படுத்தாமல் கிளம்பினர்.

வாசல் வரை போன சகுந்தலா திரும்பி வந்தாள்.

"அண்ணி .. இதை நான் முந்தியே ஒரு போன்ல கூட சொல்லியிருக்கலாம். சொன்னா நீங்க பிரபாகிட்ட மல்லுக்கு நின்னுருப்பீங்க. அதுக்குப் பிறகு பிரபா ஒரு வேளை வாசுகியை கட்டிக்க சம்மதிச்சாலும் அது கல்யாணமா இருக்காது. சுட்ட மண்ணு ஒட்டாதுங்கறது தெரிஞ்சதுதானே?

அதனாலதான் நான் சொல்லலை. தப்பா எடுத்துக்காதீங்க..."

– சகுந்தலா ஒரு தன்னிலை விளக்கம் தந்துவிட்டு திரும்பச் சென்று ஆட்டோவில் ஏறிக்கொண்டாள்.

மனோரஞ்சிதம் சிலைபோல பார்த்தபடி இருக்க ஆட்டோ அந்த பக்கம் போன மறுநொடியே இந்த பக்கமாக பிரபாகரின் பைக் பிரவேசித்தது.

இறங்கி வருபவன் அம்மாவைப் பார்த்து சற்று நிரடி நின்றான்.

"அம்மா..."

"என்னடா... வேலைக்குப் போகலையா?"

"லீவ் போட்டுட்டேம்மா... ஒரு முக்கிய விஷயம்..."

–அவன் ஒரு மாதிரிமென்று விழுங்க மனோரஞ்சிதம் பார்வை அவனை ஊடுருவ,

"பிரவீண் தெரியுமில்லியாம்மா உனக்கு..."

"....."

"அவனுக்கு அம்மை போட்டுருக்கும்மா. பாக்க ரொம்ப கண்றாவியாவும் இருக்கும்மா... டேய் உங்கம் மாவை கொஞ்சம் அனுப்பித்தர்றியா? இங்க ஒரு வென்னீர் வெச்சுத்தரகூட ஆளில்லைடான்னான். எனக்கு என்னவோ மாதிரி ஆயிடுச்சு..."

"....."

"என்னம்மா பேசமாட்டேங்கறீங்க... கிளம்புங் கம்மா... உங்களைப் பார்த்தா அவன் ரொம்ப சந்தோஷப் படுவான்..."

"அப்படியா?" முதல் தடவையாக மனோரஞ்சிதம் வாயைத் திறந்தாள். ஊடே உள்ளே அலறியது தொலை பேசி.

"அநேகமாக அவனாத்தான் இருக்கணும்..."– என்றபடி ஓடிப்போய் ரிசீவரை எடுத்தான்.

அந்தப் பக்கத்தில் வாசுகி.

"அத்தான்..." என்றாள் விசும்பும் குரலில்.

"என்ன வாசுகி..."

"அத்தான் காப்பாத்துங்க அத்தான்.... இங்க அப்பா அம்மா வேற இடம் பாத்துட்டாங்க. இன்னிக்கு சாயங்காலமா நிச்சயதார்த்தம்!"

அவனுக்கு நெஞ்சைக் கரித்தது.

"நீங்கதான் எனக்கு உதவி பண்ணனும். நீங்க மட்டும் உதவி பண்ணாட்டி நான் நிச்சயமா தூக்குல தொங்கிடுவேன்."

வாசுகி அவனுக்குள் பிரளயத்தை உருவாக்கிவிட்டு ரிசீவரை மறுமுனையில் வைக்க எதிரில் அம்மா வாயைத் திறந்தாள்.

"பிரபாகர்... வாசுகியை உனக்குன்னு இன்னிக்கு இல்லடா பொறந்தப்பவே முடிவு பண்ணிட்டோம். நீ அந்த பிரவீணுக்கு அவளை பொண்ணு கேட்டுருக் கியே... உனக்கு எப்படிடா மனசு வந்துச்சு இப்படி செய்ய?"

ஒரு பக்கம் வழியைக் காட்டு என்னும் பெண்... மறுபக்கம் இது நியாயமா என்று கேட்கும் அம்மா...

பிரபாகருக்கு தலையைச் சுழற்றியது.

7

அம்மா மனோரஞ்சிதத்தைக் கலக்கத்தோடு பார்த் தான் பிரபாகர்.

"என்ன பிரபா... பேசு... இப்படி என்னைப் பார்த்தா என்னடா அர்த்தம்?"

"அம்மா..."–மிடறு கட்டியது அவன் குரல்.

"உம் சொல்லு. என்ன தயக்கம்–வாசுகியை ஏன் வேண்டாம்னு முடிவு செய்தே? எதுக்காக அந்த நடிக னுக்கு அவளை முடிவு செய்தே...?"

"அம்மா... எனக்கு வாசுகி-வாசுகிக்கு நான்னு நீங்க முடிவு செய்திருக்கலாம்... ஆனால் வாசுகிக்கு என்னை விட பிரவீண் மேலதாம்மா காதல்... அது தெரியுமா உனக்கு?"

"என்னடா உளர்றே...?" –மனோரஞ்சிதம் கத்தி னாள்.

"உளறலைம்மா... உண்மையைச் சொன்னேன்..."

"அப்படின்னா அவங்க ரெண்டு பேரும் காதலிக்கிறாங்களா? எப்போ இருந்து...!"

"ரெண்டு பேரும் காதலிக்கலைம்மா... வாசுகி அவனை மனசார விரும்பறா... அதை நானும் உணர்ந்தேன்..."

"புரியும்படி சொல்லு... வாசுகி, பிரவீண்கற மனிதனை அவனோடு பழகிப் புரிஞ்சு காதலிச்சாளா... இல்லை அவன் சினிமாக்களைப் பார்த்துட்டு மயங்கிப் போய் காதலிச்சாளா?"

"சினிமாக்களைப் பாத்துதான்மா "

"போடா முட்டாள். அதுக்குப்பேர் காதலா... அது மயக்கம்டா "

"உண்மைதாம்மா... அதேசமயம் இது நல்ல காதலா மாறவும் நிறைய வாய்ப்பு இருக்கு..."

"எந்த நிலையிலும் ஒரு சினிமாக்காரன் மேல இருக்கற மயக்கம் காதலாக முடியாது... அதைத் தெரிஞ்சுக்கோ..."

"அம்மா... இப்படி பிடிவாதமா பேசினா எப்படிம்மா? பிரவீண்கிட்டேயும் இதைப்பத்தி பேசினேன். அவன் வாசுகியைக் கல்யாணம் பண்ணிக்கத் தயாரா இருக்கான்..."

"அவன் இருக்கலாம். அவனுக்கென்ன... புத்தி நமக்குத்தான் இருக்கணும்..."

"அம்மா... பிரவீண் ரொம்ப நல்லவன். கல்யாணம்னு ஒண்ணு ஆகாததால அவன் எவ்வளவு கஷ்டப் பட்றான் தெரியுமா வாழ்க்கைல...?"

"அது அவன் தலையெழுத்து. எனக்கு நீ பதில் சொல்லு... நீ செய்தது சரியா..."

"நிச்சயம் சரிம்மா! என் மனசாட்சிக்குத் தெரியும்- நான் செய்தது சரியா தப்பான்னு..."

வார்த்தைக்கு வார்த்தை வளர்ந்துகொண்டே போன அந்தப் பேச்சு, மனோரஞ்சிதத்துக்குச் சலிப்பையும் வெறுப்பையும் தந்தது.

சோர்ந்துபோய் முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டு கூடத்து சோபாவில் போய் அமர்ந்தாள்.

"அம்மா..." தாஜா செய்யும் நோக்கோடு அவளை நெருங்கினான்.

"என்கிட்ட எதுவும் பேசாத பிரபாகர்... நீ என்னை ஏமாத்திட்டே..."

"அம்மா... நான் யாரையும் ஏமாத்தலை... யாரும் ஏமாந்துடக் கூடாதுன்னும் நினைக்கிறேன்...!"

"டேய்... நான் இப்ப சொல்றேண்டா... நீ தேவை இல்லாம அந்தப் பிரவீணுக்காக கவலைப் பட்றே... நீதான் ஏமாறப் போறே..."

"இல்லம்மா... என் பேச்சக் கொஞ்சம் கேளும்மா... பிரவீண் ரொம்ப நல்லவன்ம்மா. உன்கிட்ட நான் கூட ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லாம மறைச்சிட்டேன். இப்ப சொல்றேன்.

நேத்து பேங்க்ல நான் கேஷ் கவுண்டர்ல 48000 ரூபாயைத் தொலைச்சிட்டேன். அதை எனக்குக் கூடத் தெரியாம பேங்குக்குக் கட்டி, காப்பாத்தினது பிரவீண்தாம்மா..."

அவன் சொன்ன மறுநொடி, மனோரஞ்சிதம் அவனை அதிகபட்ச அதிர்ச்சியோடு பார்த்தாள்...

"என்னது... 48000 ரூபாயைத்தொலைச்சிட்டியா?"

"ஆமாம்மா.... நம்பும்மா... அவன்தான்மா அதைக் கட்டி என் வேலையையும் மானத்தையும் காப்பாத்தினான்—"-அவன் சொன்ன பிறகு சில நொடிப்போது வரை மனோ ரஞ்சிதம் எதுவும் பேசவில்லை. எதையோ தீவிரமாக யோசித்தவள், பிறகு ஒரு முடிவோடு வாய் திறந்தாள்.

"பிரபா... உன்னை எனக்குத் தெரியும். நீ பணத்தைத் தொலைக்கற ஆள் கிடையாது. உன் நண்பன் மேல் எனக்குக் கரிசனம் வரணும்கறதுக்காக இல்லாத பொய் எல்லாம் சொல்லாதே... இன்னொரு தடவை அந்த பிரவீண் பத்தியும் என்கிட்டே பேசாதே."

என்று பொரிந்து தள்ளிவிட்டு எழுந்து உள்ளே போனாள்.

பிரபாகர் தலையில் கையை வைத்துக் கொண்டான்.

பிள்ளையார் பிடிக்க இப்படியா குரங்காக முடியும்?

வாசுகியின் வீடே தலைகீழாக உருமாறிக் கொண்டிருந்தது.

அப்பா, அம்மா, அண்ணன் என்று ஆளுக்கு ஒரு வேலை பார்த்துக் கொண்டிருந்தனர்.

சிலைபோல் அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் வாசுகி.

மனம் முழுக்க நெருப்பு.

அடிக்கொரு முறை, அவள்மேல் பார்வையைப் பதித்தபடி இருந்தான் அவள் அண்ணன்.

'டேய்... அவமேல ஒரு கண் இருக்கட்டும். அவ பித்துக்குளித்தனமா எதையாவது பண்ணிக்கப் போறா...'-என்று அம்மாவும் அப்பாவும் எச்சரித்ததன் எதிரொலி அது.

அவள் பார்வை நடுநடுவே டெலிபோன் பக்கம் சென்றது.

பிரபாகரிடமிருந்து எதாவது நல்ல செய்தியைக் கொண்டு வராதா அது என்று ஏங்கிற்று மனது.

ஓரமாகக் கிடந்தது அன்றைய தினசரி.

எடுத்துப் புரட்டிய போது ஒரு மூலையில் பிரவீண் பற்றிய செய்தி. அவன் அம்மை வந்து படுத்த படுக்கையில் கிடப்பதாக விலாவாரியாக எழுதியிருந்தார்கள்.

வாசுகிக்குப் பதைத்தது.

தனது கனவு நாயகனுக்கு இப்படி ஒரு துன்பமா? நிலைகொள்ளாமல் தவிக்கத் தொடங்கினாள்.

மாலை வரப்போகிற மாப்பிள்ளையின் புகைப்படம் டேபிள் மேல் கிடந்தது.

எடுத்துப் பார்த்தாள்.

ஒரு மாதிரி இருந்தான். கொஞ்சம் கோணல் மூக்கு. நிறைய வயதாகி விட்ட மாதிரி ஒரு தோற்றம். நெற்றிக்கு இரு பக்கத்துக்கும் மேல் வழுக்கை நெடுந்தூரம் ஏறியிருந்தது. பார்க்கவே பிடிக்கவில்லை. பிரவீண் எங்கே, இவன் எங்கே?

அவள் எழுந்து எட்டிப் பார்த்தாள்.

அண்ணன் பாத்ரூம் போயிருந்தான். அப்பா தோட்டத்திலும், அம்மா சமையல் கட்டிலும் இருந்தனர்.

'விடு ஜூட்' என்றது புத்தி.

அடுத்த நொடியே செருப்பை மாட்டிக் கொண்டு, பிரவீணையே நேரில் பார்க்கப் புறப்பட்டு விட்டாள்.

பிரபாகர் வரவும், மெயின் கேட்டைத் திறந்து வழி விட்டான் கூர்க்கா. பைக்கை ஸ்டாண்ட் போட்டு நிறுத்திவிட்டு, சோர்வுடன் உள்ளே பிரவேசித்தான்

வீடே வெறிச்சோடிக் காணப்பட்டது.

பிரவீண் அவனது ஏ.சி. அறையில்தான் இருக்க வேண்டும்.

அறையை நோக்கிச் சென்றபோது எதிர்ப்பட்டார் அவன் அப்பா. தேவையே இல்லாமல் பிரபாகரைப் பார்த்து நிறைய சிரித்தார்.

கோபமாக வந்தது அவனுக்கு. முறைத்தான்.

"நீ பிரபாகர் இல்லே..."

"ஆமாம்... நல்லவேளை–ஞாபகமாவது இருக்கே?"

"என்ன தம்பி அப்படிச் சொல்லிட்டே... நான் இப்ப தண்ணி சாப்ட்ருக்கேன்னு நினைக்கறியா நீ? நோ... நெவர்... சத்யமா இல்லை..."

– அவர் உளறினார். குழறினார்.

அப்போது புதிதாக ஒருபெண், கையில் ஒரு பாத்திரத்துடன் அவர்களைத் தாண்டிக் கொண்டு போனாள்.

பிரபாகர் பார்வை அவளை ஆச்சரியமுடன் பார்த்தது. 'யார்' என்ற கேள்வி நெற்றியில் எறும்பாய் ஊரியது.

அவரைத் தொடர்ந்து கேர் செய்யாமல் பிரவீண் அறைக்குப் போனான்.

அதற்குள் அந்தப் பெண் அறைக்குள் புகுந்து கொண்டு கதவைத் தாழிட்டுக் கொண்டு விட்டாள்.

'யார் அது... புதிதாக?'

"பிரவீண்..." - வெளியில் இருந்து குரல் கொடுத்தான். உள்ளே பதிலேதும் இல்லை.

"பிரவீண்..."-பலமாகக் கத்திப் பார்த்தான்.

அதைத் தொடர்ந்து உள்ளே போன அந்தப் பெண் கதவைத் திறந்து கொண்டு, கழுத்தை மட்டும் வெளியே காட்டியபடி பிரபாகரைப் பார்த்தாள்.

"பிரவீண் இல்ல...?"

"சார் தூங்கறார்...!"

"நீங்க?"

"நான் அவரோட கேர் டேக்கர் "

"கேர் டேக்கரா... காலைலகூட வந்தேனே... ஒண்ணும் சொல்லலையே..."

"ஓ. கே. உங்களுக்கு என்ன வேணும்?"

"நான் பிரவீணைப் பார்க்கணும்..."

"அதான் தூங்கறார்னு சொன்னேன்ல..."

"எழுப்புங்க... பிரபாகர் வந்துருக்கேன்னு சொல்லுங்க..."

"சாரி... மூணு மணி நேரத்துக்கு அவரை யாரும் தொந்தரவு பண்ணக் கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்கார்..."

அந்தப் பெண் ஒரு எந்திரம்போல உணர்ச்சியே இல்லாமல் பேசினாள்.

அவனால் அதற்குமேல் அவளை நிர்ப்பந்திக்க முடியவில்லை. அவள் தொடர்ந்து கதவைத் திரும்ப சாத்திக் கொண்டாள்.

'என்ன இது...? எல்லாம் புதிராக இருக்கிறதே?'

குழப்பம் கேள்வியாய் திரும்ப நெற்றியில் ஊயது.

மெதுவாக வெளியே வந்தான். பைக் அருகே போய் அதை உதைத்துக் கிளப்பிக் கொண்டு மெயின் கேட்டைத் தொட்டபோது... எதிரில் வாசுகி!

''வாசுகீஈஈஈ...''

''அத்தான்...''

''எங்க இங்க?''

''அவரைப் பார்க்கத்தான்...''

''எப்... எப்படி... தனியாவா வந்தே?''

''ஆமா... வீட்டை விட்டு வந்துட்டேன்...''

''முட்டாள்... என்ன தைரியம் உனக்கு?''

''நீங்க என்ன சொன்னாலும் சரி... ஆமாம் -- அவர் இருக்காரா? அவருக்கு அம்மை போட்டுருக்காமே... பேப்பர்ல பார்த்தேன். வாங்க என்னை அறிமுகப்படுத்தி வைங்க. அவரை இனி நான் பார்த்துக்கறேன்...''

''மண்ணாங்கட்டி... நீ முதல்ல வண்டில ஏறு...''

''எங்க அத்தான்?''

''ஏறுங்கறேன்...''

அவன் அதட்ட, அவள் ஏறினாள்.

அவன் பைக்கை அவள் வீடு நோக்கிச் செலுத்தத் தயாரானபோது, கலாவின் கார் அந்த பங்களா வாசலை ஒட்டியிருந்தது.

அவளும் இறங்கி ஒயிலாக உள்ளே செல்ல ஆரம்பித்தாள்.

போகும்போது பைக்கில் அமர்ந்திருக்கும் வாசுகியையும், பிரபாகரையும் பார்த்தபடியே

பிரபாகரும் அவளைப் பார்த்துக் கொண்டே வண்டியைக் கிளப்ப, அது சீறியது.

கலா உள்ளே செல்லவும், காத்திருந்த மாதிரி அந்தப் பெண் வெளிப்பட்டாள். புன்னகையோடு வரவேற்றாள்.

''எப்படி இருக்கார் ஐய்யா...''

''மருந்துன்னு சொல்லி போட்ட போதை மருந்து, மனுஷனைச் சாய்ச்சிடுச்சு மேடம்...''

''உன்னை ஒண்ணும் சந்தேகப்படலையே --?''

''டாக்டரோடையும், டைரக்டர் மாதவராவோடையும் வந்ததால அவருக்கு எந்தச் சந்தேகமும் வரலை... இருந்தாலும், எனக்கு கேர் டேக்கரெல்லாம் வேண்டாம். 'என்னைப் பார்க்க ஒரு அம்மா வரப்போறாங்க'ன்னு சொன்னாரு --''

''ஒரு அம்மாவா . யார் அது?''

''யாரோ இவரோட ஃபிரெண்டோட அம்மாவாம்...''

''வெளில இப்ப ஒருத்தனை ஒரு பெண்ணோட பாத்தேன்... அவனா...''

''ஐ திங்க் ஸோ --''

''ஓ.கே. கேர்ஃபுல்லா பாத்துக்கோ... காரியம் கெட்டுச்சு, தொலைஞ்சே நீ...''

''பாத்துக்கறேன் மேடம்... டோன்ட் ஒர்ரி...''

''இன்னிக்கு மாத்திரையைக் கொடுத்துட்டியா...''

"கொடுத்துட்டேன்.."

அவள் ஆமோதிக்க, இருவரும் அவனது அறைக்குச் சென்றனர். பிரவீண் ஆழமான போதைத் தூக்கத்தில் கிடந்தான்.

அவனைப் பார்க்கும் கலாவின் உதடுகள் பிரிந்தன.

"இந்தத் தூக்கம் இவனுக்கு நிரந்தரமாயிடணும்!"

8

கலாவின் அந்த முத்தாய்ப்பை ரசித்தாள் உடன் இருக்கும் அந்தப் பெண். கலாவைப் போலவே மும்மை விடுதியில் விபசாரச் சகதியில் சிக்கிக் கிடந்தவள், கலா மீண்டபோது அவளையும் சேர்த்து மீட்டாள்.

அந்த நன்றியும் விசுவாசமும் இன்று கலா சொல்வதை எல்லாம் அவள் கேட்கும்படி செய்து விட்டது.

கலா வெளியில் வந்தாள். பிரவீணின் வீட்டை மொத்தமாக ஒரு பார்வை பார்த்தாள். தான் கட்டிக் கொண்டிருக்கும் வீட்டோடு ஒரு ஒப்புமானமும் செய்து பார்த்தாள்.

பெரிய வீடுதான்... கூட்டிக் கழித்தால் தாராளமாக ஐம்பது லட்சம் போகும். அங்கங்கே வித்தியாசமான கலைப்பொருட்கள். அவளையே வெறித்துப் பார்க்கும் சில வேலைக்காரர்கள்.

பார்த்தபடியே வெளியே வந்தாள். கூடவே வந்தாள் அந்தப் புதிய பி.ஏ.!

"ராதா... ஜாக்கிரதை நான் சொன்னது ஞாபகம் இருக்கட்டும்..." என்றாள் கலா.

"மேடம்... அந்த மாத்திரை நிச்சயமா ஒரு மாசத்துல இவனைக் கொன்னுடுமா?"–திருப்பிக் கேட்டாள் ராதா என்னும் அந்த கேர் டேக்கர் பி.ஏ.

"சந்தேகமா உனக்கு...? அவன் செத்த பிறகு நீயே தெரிஞ்சிப்பே..."

சொல்லிவிட்டு அலட்சியமாக காரில் ஏறிக் கிளப்பவும், அது ஒரு குலுங்கு குலுங்கிவிட்டு சீறத் தொடங்கியது.

மெயின் கேட்டை அது தாண்டிய நொடி, கேட்டை ஒட்டி ஓரமாக நின்று கொண்டிருக்கும் வாசுகியும், பிரபாகரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

பிரபாகர் ஏராளமாகக் கலங்கியிருந்தான்.

"அத்தான்... அவ பேசினது காதுல விழுந்துச்சா?"

"அதான் வாசுகி நானும் கலங்கி நிக்கறேன்... பொம்பளையா இவ இல்லை ராட்சஸியா?"

"நல்லவேளை... நாம் சந்தேகப்பட்டு நின்னது நல்லதாப்போச்சு..."

வாசுகி சுயமாகப் பாராட்டிக்கொள்ள, பிரபாகர் தீவிரமாக யோசிக்கத் தொடங்கினான்.

"என்னத்தான் யோசனை...? அவரை எப்படிக் காப்பாத்தறதுன்னா?"

"ஆமாம் வாசுகி... பிரவீணை இப்படியே விட்டுட்டுப் போனா நான் துளியும் நன்றி இல்லாதவனாயிடுவேன்..."

"சரி; என்ன பண்ணப் போறீங்க?"

"அதான் தெரியலை... ஒரு பக்கம் உனக்கு வீட்ல நெருக்கடி. இங்க இவனுக்கோ அதைவிடப் பெரிய நெருக்கடி! கடவுள் என்னை ஏன் இப்படி சோதிக்கறார்?"

"ஏன் இதை சோதனையா நினைக்கறீங்க...? வாய்ப்பா நினைங்யுகளேன்..." வாசுகி வயதுக்கு மீறிய மெச்சூரிட்டியோடு புதிய கோணம் காட்டிப் பேசினாள்.

"வாய்ப்பா... எப்படி?"

"அத்தான்... எனக்கும் அவருக்கும்தான் இப்ப கல்யாணம் நடக்கணும். அப்பதான் நான் அவரை இந்தக் கழுகுங்ககிட்ட இருந்து காப்பாத்த முடியும். இதை நான் வெறும் ஆசையோட சொல்லலை. ஒரு நல்ல கலைஞனைக் காப்பாத்தணும்கற ஆத்மார்த்தமான விருப்பமாவும் சொல்றேன்..."

"பிரவீண் கலைஞன் மட்டுமில்ல வாசுகி... அவன் ஒரு நல்ல மனுஷனும் கூட..."

"இப்படி நீங்க சொல்றது எனக்கு சந்தோஷமா இருக்கு... நான் ஒரு நடிகரை மட்டும் காதலிக்கல... நிஜமாலுமே நிஜ வாழ்க்கையிலேயும் ஹீரோவான ஒருத்தரைத்தான் காதலிச்சிருக்கேன்..."

"அப்ப சரி வா... எது வந்தாலும் சரி; இனியும் இதை விடக்கூடாது... கமான்..."

இருவரும் திரும்பவும் அந்த பங்களாவினுள் நுழைந்தார்கள்.

ராதா என்னும் அந்தப் புதிய வில்லி இருவரையும் பார்த்துத் திடுக்கிட்டாள்.

"ஆமா! நீங்க இன்னும் போகலையா?"

"நாங்க போறதுக்கா வரலை..."-பிரபாகர் காட்டமாகச் சொன்னான்.

"அப்படின்னா...?"

"பிரவீண் முழிக்கட்டும். பார்த்துட்டுப்போறோம்..."

"அவர் யாரையும் ஒரு வாரத்துக்குப் பார்க்கமாட்டார். பார்க்கவும் கூடாது..."

"ஏய்ய்..."-பிரபாகரிடம் குரல் சீறியது. அவள் அதைக்கண்டு ஆச்சரியம், அதிர்ச்சி, பயம் என்று எல்லாமுமானாள்.

"என்ன மிஸ்டர்... மிரட்டறீங்க...?"-விடாமல் சமாளிக்கப் பார்த்தாள்.

"கொலையேகூட பண்ணிடுவேன். உள்ள நுழைஞ்சு சில மணி நேரம்கூட ஆகலை... என்கிட்டையே உன் வேலையைக் காட்றியா?"

"என்ன என்னென்னவோ சொல்றீங்க?"

"இதோ பார்... நான் பிரவீணோட உயிர் நண்பன். எனக்குத் தெரியாம அவன் முதுகுகூட சொறிஞ்சுக்க மாட்டான்! உன்னை பி.ஏ. வா அப்பாய்ன்ட் பண்ணியிருக்கறதா கதையா விட்றே?"

பிரபாகரின் கேள்வியும், அவனது முகபாவங்களும் அவளை நிஜமாலுமே மிரட்டியது.

"போடி வெளிய..." பிரபாகர் அவளுக்குத் திடீரென்று வாசலைக் காட்டத் தொடங்கினான்.

அவள் திக்கல் திணறலில் பெருக, "இப்ப போகப் போறியா இல்லியா?"-அவனது உரத்த சத்தமுள்ள கேள்வி, பிரவீண் அப்பாவை அவரது அறையில் இருந்து எட்டிப் பார்க்கச் செய்தது.

"சார்... இங்க பாருங்க சார்... இவர் என்னை வெளிய போடிங்கறார்..."-அவள் அவரைத் துணைக்கு அழைத்தாள்.

"என்ன பிரபாகர் சத்தம்?"-அரை போதையில் வாய் குழறக் கேட்டார் அப்பா.

"சார்... யார் சார் இந்தப் பொண்ணு...? பிரவீணுக்கு பி.ஏங்கறா... அவனைப் பார்க்க முடியாதுங்கறா..? இங்க என்ன நடக்குது? நீங்கள்லாம் எதுக்கு இருக்கீங்க...?"

அவனது சப்தம் அவரையே கூட நடுங்கச் செய்தது. திருதிருவென்று முழித்தார்.

நடுவில் அவள் ஓடிப்போய் டெலிபோனை எடுத்தாள். கலாவுக்கு டயல் செய்யத் தொடங்கினாள்.

பிரபாகர் பார்த்துவிட்டு, பாய்ந்து சென்று டெலிபோனை கட்செய்தான். ரிசீவரையும் அவளிடத்திலிருந்து பிடுங்கினான்.

இதுதான் சமயம் என்று வாசுகி, பிரவீணின் அறைக்குப் போய், அவன் முகத்தில் தண்ணீரைத் தெளித்து எழுப்ப ஆரம்பித்தாள்.

ஆசை ஆசையாக திரையிலும், புகைப்படத்திலும் பார்த்த உருவம் இன்று அவள் எதிரில் மயங்கிய நிலையில்..!

வாசுகிக்கு ஒரு வினாடி கனவாகவும், ஒரு வினாடி நிஜமாகவும் மாறி மாறிப் பரவசத்தைக் தந்தது.

பிரவீணும் கஷ்டப்பட்டு கண்களைத் திறந்தான்.

வாசுகியை எதிரில் பார்த்து சற்றுத் தடுமாறினான்.

'யார் இது..?' கேள்வியோடு எழுந்து அமர்ந்தான்.

கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டான். காதில் அறைக்கு வெளியே பிரபாகர் கத்துவது கேட்டது.

வாசுகியை மிரள மிரளப் பார்த்தபடி வெளியேயும் வந்தான்.

அவன் வந்து திற்பதைப் பார்த்து, அந்த பி. ஏ. என்று சொல்லிக்கொண்டு நிற்கும் எமனும் அதிர்ந்து போனது.

பிரபாகர், பிரவீணைப் பார்த்த நொடி ஓடி முன்னால் வந்தான்.

'பிரவீண்...யார்டா இவ...? முதல்லே வெளியே அனுப்புடா..."

"என்ன பிரபா...எதுக்கு இவ்வளவு டெம்ட் ஆகறே...? இவளை டைரக்டர் மாதவராவ்தான் என்னைப் பாத்துக்கறதுக்காக கொண்டு வந்து சேர்ந்தார்..."

"சரி; அவர் சேர்த்ததாவே இருக்கட்டும். இனி இவ தயவு தேவையில்லை. உன்னைப் பாதுகாக்க வாசுகி வந்துட்டா...இவளை முதல்ல வெளிய அனுப்பு...இவ உன்னைப் பாத்துக்க வரலை, கொலை செய்ய வந்துருக்கா "

பிரபாகர் அந்த உண்மையைச் சொல்லவும், ஒரு நொடி அந்தப் பெண் உலுங்கினாள்.

கண்களில் பயத்தையும் பதட்டத்தையும் டன் கணக்கில் காட்டினாள்.

"பாத்தியா முழிக்கிறத...! இவ அந்தக் கவர்ச்சிக்காரி கலாவோட ஆள். அவளும் இவளும் பேசிக்கிட்டிருந்ததைக் கேட்டுத்தான் வெளியே போன நான் திரும்பவும் உள்ளேயே வந்தேன். முதல்ல இந்த சதிகாரியை வெளியே அனுப்பு..."

கலா-வந்தாள் இவளோடும் பேசினாள் என்பது பிரவீணுக்குத் தெரிய வந்த க்ஷணமே அவன் கண்களில் விறுவிறுவென்று செம்மை பரவ ஆரம்பித்தது.

"சார்...இவர் ஏதேதோ சொல்றார் சார்...கலா மேடம் உங்களை நலன் விசாரிக்கத்தான் வந்தாங்க... இவர் வேணும்னே என்னென்னவோ சொல்றார்..."

அவள் முடிந்த மட்டும் நடிக்கப் பார்த்தாள்.

"பிரவீன்...அதெல்லாம் விடு...இவ எதாவது மாத்திரை தந்து நீ சாப்ட்டியா?"

"ஆமாம் அத சாப்டதுல இருந்தே ரொம்ப ட்ரௌசியா ஃபீல் பண்ணினேன். மயக்கமா வந்தது..."

"இப்ப எங்க அது?" அது கேட்கும்முன், வாசுகி மிச்ச மாத்திரைகள் உள்ள ஒரு பாட்டிலை உள்ளே ஓடிப் போய் எடுத்து வந்தாள்.

மூவரின் கவனமும் அந்த மாத்திரைகள் மேல் போகத் தொடங்கிய சமயம், அந்தப் பெண் இனியும் பருப்பு வேகாது என்பதுபோல நழுவத் தொடங்கினாள்.

மூவரும் மாத்திரையை விட்டுப் பார்வையை விலக்கியபோது அவளைக் காணவில்லை!

வாசுகியின் வீடே திமிலோகப்பட்டுக் கொண்டிருந்தது. சகுந்தலா, ஒரு ஓரமாகப் போய் கோமாவில் விழுந்தவள்போல் படுத்து விட்டாள்.

அண்ணன் சுந்தர் தலையில் கை வைத்துக்கொண்டு விட்டான்.

அப்பா ராமலிங்கமோ குட்டி போட்ட பூனை...!

'இப்படி தலைல கல்லத் தூக்கிப் போட்டுட்டாளே...' என்று நடுநடுவே புலம்பல்.

"போறேன்...இப்பவே போறேன்...எங்க போயிருப்பா...அந்த சினிமாக்காரன் வீட்டுக்குத்தானே?"

"இருடா...மாப்ளை வீட்ல இருந்து வந்து நிப்பாங்களே அவங்கள எப்படி சமாளிக்கறது...?"

"போங்கப்பா...முதல்ல அவங்களுக்கு போன் போட்டு, 'வரவேண்டாம்...வாசுகிக்கு உடம்பு சரியில்லல'ன்னு சொல்லுங்க...மத்ததைப் பிறகு யோசிப்போம்..."

அவர்கள் ஆளாளுக்குத் தீர்மானங்களை வாசிக்கும் போது, மனோரஞ்சிதம் உள்ளே நுழைந்து கொண்டிருந்தாள்.

அவளைப் பார்க்கவும் சகுந்தலாவிற்குக் கோபமும் துக்கமும் பிரண்டு கொண்டு வந்தது. மூவரும், வந்து நிற்பவளை வெறித்தார்கள்.

"என்ன...அப்படிப் பார்க்கறீங்க...என்னாச்சு?"

"என்ன ஆகணும்...? எதெல்லாம் நடக்கக் கூடாதோ, அதெல்லாம் நடந்துடிச்சு அண்ணி..." அழுகை பொங்கியது சகுந்தலாவிடம்.

"என்ன சகுந்தலா சொல்றே?"

"அந்த...அம்மா சொல்றது இருக்கட்டும். வாசுகி உங்க வீட்டுக்கு வந்தாளா?" சுந்தர் இடை வெட்டினான்.

"இல்லையேப்பா..."

"சரி, பிரபாகர் எங்க...?"

"அவன் வேலைக்குப் போனவன், லீவ் போட்டுட்டுத் திரும்பி வந்தான். நான் இந்தக் கல்யாண விஷயமா கொஞ்சம் சத்தம் போட்டேன். மனசு கேட்காம வெளிய போனான்...ஏம்ப்பா...எதுக்குக் கேக்கறே?"

"உங்க மருமக வீட்டை விட்டே போய்ட்டா... அதான் கேக்கறேன்..."

"என்னது... வீட்டை விட்டுப் போய்ட்டாளா?"

– மனோரஞ்சிதத்துக்குத் தூக்கி அடித்தது.

"ஆமாம்– ஒடிப்போற அளவுக்கு அந்த நடிகன் மேல அவளுக்கு ஆசை இருந்துருக்கு... பிரபாகரும் அதை நல்லா ஊதி விட்ருக்கான்... பிரபாகர் இப்படி செய்வான்னு நான் கொஞ்சம்கூட நினைக்கல அத்தை..."

– சுந்தர் கரைமீன் போலத் துள்ளினான்.

"சரி... நின்னு பேசிகிட்டேயிருந்தா மானம் போயிடும் .. மாப்ளை வீட்டுக்காரங்க வேற வந்து, அவங்க எதுக்க வேற சந்தி சிரிக்கணுமா? நான் இப்பவே அந்த நடிகன் வீட்டுக்குப் போறேன். அங்க மட்டும் அவளைப் பார்த்தேன் – ஒரே சீவுதான்..."

சுந்தர் கொக்கரிப்போடு சட்டையை மாட்டிக் கொண்டு வாசலை நோக்கிச் சென்றபோது, 'அவசிய மில்லை' என்பதுபோல பிரவீணின் காரே அங்கே தேங்கி நின்றது.

உள்ளிருந்து பிரபாகரோடு, மாலையும் கழுத்துமாக வாசுகியும் பிரவீணும் இறங்கினார்கள்!

9

பிரவீணையும் வாசுகியையும் கல்யாணக் கோலத்தில் பார்த்த அத்தனை பேருக்குமே அதிர்ச்சி நெற்றியில் வெட்டியது.

சுந்தர் ஒரு ஓரமாகப் போய் அப்படியே உட்கார்ந்து விட்டான்.

பிரவீணையும் வாசுகியையும் ஒட்டி சாதுப்பூனை போல் நிற்கும் பிரபாகர், மெல்ல அவர்களைக் கடந்து முன் வந்தான்.

வாசுகியின் அப்பா–அம்மா எதிரே போய் நின்றான்

இதற்குள் எப்படித்தான் வீதிக்கு மூக்கில் வியர்த்ததோ? அந்த வீட்டு வாசலை ஒரு பெருங்கூட்டம் அப்படியே வந்து வளைத்து நின்று கொண்டது.

பிரவீணைப் பார்த்து சிலர் இன்ப அதிர்ச்சியில் திக்குமுக்காடிப் போயினர்.

"அத்தே... மாமா... அவங்கள உள்ற கூப்டுங்க .. என்ன நடந்ததுன்னு நான் விவரமா சொல்றேன்..."

– பிரபாகரின் பேச்சு அவர்கள் காதில் விழுந்தது போலவே தெரியவில்லை.

கூட்டம் இப்பொழுது நெருக்கியடிக்கத் தொடங்கியது. பிரபாகரின் அம்மா மனோரஞ்சிதம் கொஞ்சம் சுயநினைவு கண்டு முன்னால் வந்தாள்.

"பிரபா... என்னடா இது ? இப்படி எங்க எல்லார் தலைலயும் கல்லத் தூக்கிப் போட்டுட்டியேடா..." – விசும்பி வெடித்தாள்.

"அம்மா – முதல்ல அவங்கள உள்ற கூப்பிடுங்க... தெருவே வேடிக்கை பார்க்குது பாருங்க... எல்லாத்தையும் உள்ற போய் பேசிக்கலாம். மாமா .. அத்த... அவங்கள உள்ற கூப்டுங்க..."

பிரபாகர் ஆன மட்டும் பெரிதாகக் குரலெடுத்துக் கத்திப் பார்த்தான்.

அதைத் தொடர்ந்து சகுந்தலா கதாரித்து நிமிர்ந்தாள்.

தயக்கத்தோடும் படபடப்போடும் நிற்கும் பிரவீணையும், வாசுகியையும் கலங்கிய கண்களோடு ஏறிட்டாள். பார்வை கணவன் பக்கமாகவும் திரும்பியது.

நிறைய அவர் வியர்த்து, ஹார்ட் அட்டாக்கைச் சமீபித்ததுபோல் தெரிந்தது.

கூட்டம் சலசலவென்று பிரவாகிக்கத் தொடங்கியது.

வினாடிகள் யுக பாரம் காட்டி, பிரபாகர் நெஞ்சை அழுத்தத் தொடங்கிற்று.

'இந்த உலகில் நடக்காததையோ, இந்த சமூகம் பார்க்காததையோ இவர்கள் செய்துவிடவில்லையே...? கொஞ்சம் சுயமாகச் செயல்பட்டு விட்டார்கள்... அதற்காக இப்படியா பெரியவர்கள் நெஞ்சைக் கையில் பிடித்துக் கொள்வது...'

– பிரபாகர் நினைவுகளில் மூழ்கிவிட்டு, மீண்டும் அது கலைய கத்தினான்.

"அத்த... மாமா... கூப்பிடுங்கன்னு சொல்றேன்ல... வெளிய பாருங்க. எல்லாரும் வேடிக்கை பார்க்கறதை ..! உள்ற கூப்டுங்க... டேய் சுந்தர்... நீயாவது கூப்பிடுடா... நீ இந்தக் காலத்து ஆள்-உனக்குக் கூடவா இவங்கள மாதிரி ஈகோ... கூப்பிட்றா!"

–பிரபாகரின் சப்தத்தைத் தொடர்ந்து, சுந்தர் ஸ்தம்பிப்பிலிருந்து எழுந்து அவனை நோக்கி வந்தான், பிரபாகரின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை...

அடுத்த நொடி பிரபாகரின் காதில் வண்டுகள் புகுந்து ரீங்கரிப்பதுபோல் ஒரு பிரமை...

பிரவீணுக்கு அடுத்த நொடியே பொறுமை போய் விட்டது. கலங்கி நிற்கும் பிரபாகரின் தோளில் கை

போட்டு, வாசுகியையும் மறு கரத்தால் பிடித்து இழுத்துக் கொண்டு காரை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

கூட்டம் ஆரவாரித்தது.

"சார்... இது ஷூட்டிங் கல்யாணமில்லையே?" என்று ஒரு குரல் இடைவெட்டியது. பிரவீண் குரல் வந்த திக்கைப் பார்த்துச் சொன்னான்.

"இல்ல... இது நிஜக் கல்யாணம். பெரியவங்கதான் ஆசிர்வாதம் பண்ண மறுக்கறாங்க... என் ரசிகர்களான நீங்களாவது ஆசீர்வாதம் பண்ணுங்க...!"

அவன் அப்படிச் சொன்ன மறுநொடியே படபடவென கைதட்டல். பல கைகள் அவன் முன் வெறியோடு நீண்டுகுலுக்க முயன்றன. முடிந்தவரை அவனும் குலுக்கிவிட்டு காரில் ஏறினான்.

அது வந்த நோக்கம் ஈடேறாமலே திரும்பி ஓடத் தொடங்கியது.

வீடு கொள்ளாதபடி பத்திரிகையாளர்கள், டி.வி. ரிப்போர்ட்டர்கள். கூர்க்கா திணறிக் கொண்டிருந்தான். வீட்டின் வேலைக்காரர்கள் பரிதவித்துக் கொண்டிருந்தனர்.

பிரவீணின் கார் வழுக்கியபடி முன் வந்து நிற்க, மொத்த கூட்டமும் காரை ஆக்ரமிக்க ஆரம்பித்தது.

கதவைத் திறந்து கொண்டு இறங்குவதே பெரும் பாடாக இருந்தது பிரவீணுக்கு.

ஃப்ளாஷ்கள் மின்னித் தெறிக்கின்றன.

"என்ன சார் இது... இங்க கல்யாணத்த இப்படி சர்ப்ரைஸா முடிச்சிட்டீங்க?"

"அம்ம போட்டுருக்குன்னு சொன்னாங்க.... அதுல கல்யாணமா?"

"பொண்ணு வீட்ல உங்கள சேர்க்கலையாமே சார்! இது காதல் கல்யாணமா சார்...?"

– கேள்விகள் அணிவகுத்து நின்றன. பிரவீண் எந்த பதிலும் சொல்லாமல் நின்றான்.

உடம்பு நெருப்பாக இருந்தது. படுக்கையில் கிடக்க வேண்டியவன், இப்படி கல்யாணம் கார்த்திகை என்று மாறினால்...?

தலையைச் சுழற்றிக் கொண்டு வந்தது மயக்கம். பிரபாகர் அதைப் புரிந்து கொண்டு முன் வந்து பேசுவதற்குள் பிரவீணுக்கு மயக்கம் வந்தே விட்டது.

கீழே விழ இருந்தவனை வாசுகி தாங்கிப் பிடித்துக் கொண்டாள். மொத்த கூட்டமும் ஒரு விநாடி உலுக்கப்பட்ட புளியமரம்போல் ஆயிற்று.

மயங்கிக் கீழே விழுந்ததையும் ஒரு போட்டோகிராபர் வாரிச் சுருட்டினார். ஒரு நடிகன் என்பவன் யானை மாதிரி. அவன் கண்கள் திறந்திருந்தாலும் அது காட்சி. மூடிக்கிடந்தாலும் அது காட்சி.

வாசுகிக்கு எரிச்சலும், அழுகையும் பீறிட்டது.

பிரபாகருடன் அவனைத் தூக்கிக் கொண்டு உள்ளே சென்றாள். அவனது அறை வாசல் வரை பத்திரிகையாளர் கூட்டமும் பின்னாலேயே சென்றது.

அவர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை.

"தயவுசெஞ்சு எல்லாரும் வெளியே போங்க..."

–பிரபாகர் பெரிதாக அலறினான்.

சப்தம் அவர்களில் சிலரைத்தான் வெளியேற்றியது. பலர் அதைக் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை.

அந்த நிலையிலும் ஒரு டி. வி. ரிப்போர்ட்டர் மைக்கை அவன் முன் நீட்டி, "நீங்கதான் நடிகர் பிரவீணோட உயிர் நண்பரா?" என்று கேட்டார்.

"மண்ணாங்கட்டி... கொஞ்சம் அறையை விட்டு வெளியே போறீங்களா?" –திரும்ப அலறினான் பிரபா.

அதையும் அந்த நிருபர் பதிவு செய்து கொண்டார்.

அங்கேயே தனது செய்தியாளர் பேசுவதை, அந்தச் சூழ்நிலையின் பரபரப்பான பின்புலத்தோடு பதிவு செய்யத் தொடங்கினார்.

"நான் 'Five star TV'யின் ரிப்போர்ட்டர் விக்ரம் பேசுகிறேன். சுப்ரீம் இமேஜ் ஸ்டார் பிரவீணின் வீட்டில் இருந்தபடி பேசுகிறேன். பிரவீண் மயக்கமாகி விட்டார். அவரது திடீர் திருமணத்திற்குப் பின்னால் நிறைய மர்மங்களும், ஆச்சரியங்களும் ஒளிந்து கொண்டிருக்கின்றன.

பெண் வீட்டார் இந்தத் திருமணத்தை ஒத்துக் கொள்ளவில்லை என்று தெரிகிறது. பிரவீணை கைப்பிடித்திருக்கும் வாசுகி என்னும் பெண் ஒரு நடுத்தட்டுக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று தெரிகிறது. பார்க்க அழகாக –பிரவீணுக்குப் பொருத்தமாகத்தான் தெரிகின்றார்..."

– அந்தச் செய்தியாளர் பிரவீணின் வீட்டின் மையத்தில் நின்றபடி பேச, சுற்றிலும் மற்ற பத்திரிகையாளர்களும் போட்டோகிராபர்களும் அல்லாடிக் கொண்டிருக்க, காட்சி சூடும் சுவையுமாக பதிவாகிக் கொண்டிருந்தது.

ஒருவழியாக வாசுகி அனைவரையும் வெளியேற்றி விட்டு, அறைக்கதவைப் பூட்டித் தாழிட்டாள்.

அப்படியே கதவின் பின்னால் நின்றபடி பெரு மூச்சும் விட்டாள்.

ஹாலில் பிரபாகர் கெஞ்சிக் கொண்டிருப்பது காதில் விழுந்தது.

ப்ளிஸ்... எல்லாரும் நான் சொல்றதைக் கேளுங்க... என்னதான் நாமெல்லாம் இப்ப டி.வி. யுகத்துல வாழ்ந்து கிட்டிருந்தாலும் இது டூ மச்!

பிரவீண் திருமணம் ஒரு தவிர்க்க முடியாத சூழ் நிலைல நடந்து முடிஞ்சிடிச்சு.

எல்லாத்தைப் பற்றியும் விவரமா அவரே உங்க கிட்ட கூடிய சீக்கிரமா ஒரு பிரஸ் மீட்ல பேசுவார். அதுவரை தயவு செய்து தொந்தரவு பண்ணாம போய்ட்டு வாங்க...ப்ளீஸ்... ப்ளீஸ்...''

அவன் குரல் அவளது மனதை நிரடியது. ஒரு நடிகனைக் கைப்பிடித்தால் இப்படி எல்லாம் கூடவா மீடியாக்கள் மிரட்டிப் பார்க்கும்?

அந்தப் புதிய அனுபவம் அவளுக்கு மிகப்பெரிய அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் அளித்துக் கொண் டிருந்தது.

கூடவே அப்பாவும் அம்மாவும் தங்களைத் துளியும் அங்கீகரிக்காத அந்தக் கசப்பும் சேர்ந்து கொண்டது.

எல்லாவற்றுக்கும் மேலாகப் படுக்கையில், மயக்கத் தில் பிரவீண். அதாவது அவள் கணவன்!

அவளால் அழுகையை அடக்க முடியவில்லை.

'கார் வந்து தேங்கி நிற்கிறது.

பிரவீணும், வாசுகியும் இறங்குகின்றனர். காமிரா மின்னல்கள். நிருபர்களின் கேள்விகள்... நடுவில் பிரபாகரின் அலறல்...''

எதிரில் டி.வி. யில் ஓடிக் கொண்டிருந்த காட்சியைப் பார்த்துப் பார்த்து சிவக்கத் தொடங்கி இருந்தாள் கலா.

கைக்கெட்டும் தொலைவில் செல்லுலார் போன் சிணுங்கியபடியே இருந்தது. எடுத்து காதைக் கொடுக் கத் துணிவே வரவில்லை.

'என்ன பொம்பள நீ— கோட்டை உட்டுட்டியே'— என்றுதான் ஆரம்பிப்பான். நேரில் வந்தால் இடுப்பி லேயே மிதித்தாலும் மிதிப்பான்.

அருகிலேயே அரண்ட நிலையில் ராதா என்னும் அந்த துரத்தப்பட்ட கேர் டேக்கர் பி.ஏ.

டி.வி. யின் காட்சியை டேப்பிலும் பதிவு செய்து கொண்டிருந்தாள்.

''மேடம் '' - பவ்யமாகக் கூப்பிட்டுப் பார்த்தாள். கலாவிடம் பதிலில்லை.

''போகட்டும் விடுங்க மேடம்...இதுக்காக வருத்தப் பட்டு என்ன ஆகப்போகுது...?'' –சமாதானமாகப் பேச் செடுத்தும் பார்த்தாள்.

முறைப்போடு ஒரு கழுகைப் போல அவள் பக்கம் திரும்பினாள் கலா.

''என்ன சொன்னே...? போகட்டும்னு விட்டுட் றதா...?'' –கேள்வியில் நெருப்பின் ஜ்வாலை.

அந்தப் பெண் அப்படியே நடுங்கிப் போனாள்.

''இதை அப்படி எல்லாம் விட்டுட முடியாதுடி... நான் விட்டாலும் என்னை அந்தப் பெரிய நடிகன் விட மாட்டான். இதென்ன நாலணா எட்டணா விஷயமா...? அவ்வளவும் பல கோடி சமாச்சாரங்கள்...பிரவீணோட இன்னிக்கு மார்க்கெட் வேல்யூ என்ன தெரியுமா?''

– கேள்வியோடு டி.வி. யை ஆஃப் செய்தாள்.

"கிட்டத்தட்ட முப்பது கோடி அவன் கைல ஆறு படங்கள். அவ்வளவும் பெரிய பட்ஜெட். அதெல்லாம் வெளில வந்தா அவன் இமேஜ் எங்கையோ போயிடும்...! வரப்போற எலெக்ஷன்ல அவன் ஒரு டிசைடிங் ஃபேக்டர் ஆயிருவான்...இவனை ஒழிக்கற வகைல என் சம்பளமே பல லட்சங்கள் ராதா.

அவ்வளவையும் நான் இப்ப திருப்பித் தந்தாகணும். அதுக்கெல்லாம் நான் எங்கே போவேன். எல்லாம்தான் என் வீட்டுக்கல்லாவும் மண்ணாவும் மாறிடிச்சே...?"

–கோபத்தோடு அவளது இயலாமையும் சேர்ந்து கொண்டது.

முதன் முதலாக ஒருவனால் கற்பை இழந்து மும்பை சந்தையில் நிற்க நேர்ந்தபோது கூட இந்த அளவு வருத்தமும் கலக்கமும் அவளுக்கு ஏற்பட்டதில்லை.

"அப்ப என்ன மேடம் பண்ணப் போறீங்க?"– ராதா காற்றுக் குரலில் கேட்டபோது வயிற்றைப் பிரட்டியது கலாவுக்கு தலையையும் சுழற்றியது.

அடிவயிற்றில் கைகளைப் பற்றினாள்.

'ஐய்யய்யோ' என்றது மனது. எல்லாம் சில நொடிகள்தான்.

உடனேயே புதிதாக ஒரு பிடி கிடைத்து விட்டது போல ஒரு தெம்பு.

"பிரவீண் நீ என்கிட்ட இருந்து தப்பவே முடியாது..." – என்றவள், "ராதா, டாக்டருக்கு உடனே போன் போடு..." என்றாள் வேகமாக...

"ஏன் மேடம்... உடம்புக்கு எதாவது?"

"ஆமாண்டி.. நான் தாயாகப் போறேன்னு நினைக்கிறேன்..." என்றாள்!

10

கோடம்பாக்கம்.

கோடிகள் புரளும் சென்னையின் சுக்ரமேட்டுப் பகுதி. நொடிந்து விட்டதாகக் கருதப்படும் பெட்டிக் கடையில்கூட சிகரெட் வியாபாரம் மட்டுமே பல நூறுகளுக்கு நடக்குமிடம்.

இங்கே எங்கே பார்த்தாலும் பிரவீணுக்கு நடந்த கல்யாணம்தான் பேச்சாக இருந்தது.

சினிமாக்காரர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் நகம் வெட்டிக் கொண்டாலும் அதைச் செய்தி என்று ஆக்குவது பத்திரிகைகள் தானே?

பிரவீண் திருமணத்தை மட்டும் விட்டு வைப்பார்களா?

அதிலும் பிரபலமான ஒரு நாளிதழின் ரிப்போர்ட்டரான சாலமன், பிரவீண் தொடர்பான கல்யாணச் செதியை வேறு மாதிரி தர, அலையோ அலை என்று அலைந்து கொண்டிருந்தான். நாற்பதிலேயே வழுக்கை விழுந்து விட்டது. அதில் உஷ்ணம் தெறிக்க அலைய வேண்டி உள்ளது.

முன்பெல்லாம் செய்தியைத் தந்தால் போதும். இப்போது அந்த வேலையை டி.வி.க்கள் மிக விஷுவலாகச் செய்து விடுவதால், பத்திரிகைகள் அந்தச் செய்தியின் மறுபக்கம் பற்றியும், அதிலுள்ள உண்மை, பொய்களை எல்லாம் பார்த்தாக வேண்டியிருக்கிறது.

டி.வி.யால் முடியாததை முடித்துத் தரவேண்டும்.

அப்பொழுதுதான் வாசகன் படிப்பான்.

எப்படி?

சாலமன் மேற்கு மாம்பலத்தில் உள்ள வாசுகியின் வீட்டு முன்னால் நின்று, அதை ஒரு புகைப்படம் எடுத்துக் கொண்டுவிட்டு நேரே உள்ளே நுழைந்தான்.

சுந்தர் தடுத்தான்.

"யார் நீங்க?"

"நான் டெய்லி ரிப்போர்ட்டர் சாலமன்... நடிகர் பிரவீண் கல்யாணம் சம்பந்தமா பேட்டி எடுக்க வந்துருக்கேன்..."

"தயவுசெய்து வெளிய போயிருங்க... நாங்க எந்த ஒரு விஷயத்தையும் சொல்ற நிலைல இல்ல.."

"அப்ப ரொம்ப வருத்தத்துல மனசு ஒடிஞ்சு போய் இருக்கீங்கன்னு எடுத்துக்கலாமா?"

"ஆமாம்! நீங்க கிளம்புங்க..."

"ஒரே ஒரு கேள்வி... பிரவீண் பெரிய சூப்பர் நடிகர்... அவரை ஒத்துக்கறதுல உங்களுக்கென்ன சங்கடம்?"

"நீங்க கிளம்பறீங்களா?"–சுந்தர் சுந்தர் சத்தமிட, சாலமன் சுந்தரை ஒரு மாதிரிப் பார்த்தபடியே திரும்பத் தொடங்கினான்.

திரும்பும்போது அவனை-அவனது ஆவேசமான கோலத்தை ஒரு க்ளிக்!

சுந்தருக்குள் கோபம் மேலும் கூடிப் பெருகத் தொடங்கியது.

"சார்... தேசத்துல எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கு... தெருவுல நாலு நாளா தண்ணி வரலை...

நாய்த் தொல்லை வேற...! இதை எல்லாம் எழுதுங்க ஒரு நடிகனோட மச்சினன்கிட்டலாம் வந்து கேள்வி கேக்கறத விடுங்க..."

திரும்பிப் போகும் சாலமன் காதில் விழும்படி கத்தினான்.

சாலமனுக்கு என்னவோ போல் ஆயிற்று. அக்கம் பக்கம் எல்லாம்கூட கவனித்தனர். ஒரு டி.வி.எஸ். 50 தான் அவனது வாகனம்.

அதைத் திருப்பிக் கிளப்பிக்கொண்டு சவாரிக்க ஆரம்பித்தான். எதிரே முட்டுவதுபோல் வந்து நின்றது ஒரு மாருதி.

உள்ளிருந்து ஒருவன் சாலமனைப் பார்த்துச் சிரித்தபடியே கொக்குபோல் தலையை வெளியே காட்டத் தொடங்கினான்.

"ஏய் ராம்ஷேகர்..."

"வா சாலமா... உனக்காக எங்கல்லாம் அலைஞ்சிட்டிருக்கேன் தெரியுமா?"

"என்னய்யா விஷயம்?"

"விஷயமா...? நாளைக்குத்தான்யா உன் பத்திரிகை தமிழ்நாட்டிலேயே அதிக விலைக்கு விக்கப்போகுது...!"

"என்ன ராம்... எதுனா அதிரடி நியூஸா?"

"ஆமாம்...! என்னை ஃபாலோ பண்ணி வா... கலா மேடம் உன்னைப் பாக்கணும்னாங்க.."

"கலா மேடமா? யாருப்பா அது?"

"இதானோ வேணாங்கறது... அட நம்ம கால் நூக்கி கலாப்பா... ஸ்டாரு...!"

"ஓ... அவளா.. வரேன்...கிளம்பு நீ..."

சாலமன் சொல்ல, அந்த மாருதி திரும்பி ஓடத் தொடங்கியது. சாலமன் பின் தொடர ஆரம்பித்தான்!

சகுந்தலா முகம் நிறையத்தான் வீங்கிப் போய் விட்டிருந்தது. நினைவு தெரிந்து அவள் அழுததில்லை. அழவும் அவள் கணவர் விட்டதில்லை. சேர்த்து வைத்து அழ வைத்திருந்தாள் வாசுகி.

"நடந்தது நடந்து போச்சுன்னு அடுத்து நடக்க வேண்டியதப் பாருங்க மதனி..."–நடந்தது கேள்விப் பட்டு, வீடு தேடி வந்துவிட்ட உறவுகளிடமிருந்து ஆறுதல் வார்த்தைகள் வர ஆரம்பிக்கின்றன.

"இப்படி கல்லத் தூக்கிப் போட்டுட்டுப் போய்ட் டாளே..."

"அத ஏன் கல்லுன்னு நினைக்கறீங்க? உங்க சிரமத்தை அவ குறைச்சிட்டதா எடுத்துக்குங் களேன்..."

"அவன் என்ன சாதியோ... குலமோ... கோத் திரமோ?"

"இப்பல்லாம் சாதியை அரசியல் கட்சித் தலைவ ருங்கதான் கட்டிகிட்டு மாறடிக்கறாங்க... மெட்ராஸ் மாதிரி சிட்டில யார் யாரை வேணும்னாலும் கட்டிக்கற நிலை வந்துடுச்சு சகுந்தலா! இதை பெரிசுபடுத்தாதே..."

"மாமா... என்ன நீங்க... அத்ததான் புரியாமப் பேசறாங்கன்னா நீங்களுமா? பிரவீண் ஒண்ணும் லேசுப் பட்ட ஆள் இல்லை...! நாளைக்கே ஒரு அரசியல் கட்சி ஆரம்பிச்சா அஞ்சாறு எம்பிங்க அவருக்கு உறுதி! அப்படி ஒரு செல்வாக்கு. போய் சமாதானப்படுத்தி பொண்ணையும் மாப்ளையையும் கூட்டிக்கிட்டு வாங்க..."

வாசுகி வீட்டிற்கு வந்திருந்த உறவினர்கள் பெரும் பாலோர் நடந்து விட்ட திருமணத்தை ஆதரிக்க விரும்பு வது அவர்கள் பேச்சில் பளிச்சென்று தெரிந்தது.

வாசுகியின் தந்தை ஒரு முடிவோடு மகனைப் பார்த் தார். அவன் உறவினர்கள் சொல்வது வாஸ்தவம்தான் என்கிற மாதிரி அப்பாவைப் பார்த்தான்.

"ஆமாம்ப்பா...! நம்ப உறவுக்காரங்களே இதை எல்லாம் சாதாரணமா எடுத்துக்கும்போது, நாம பிகு பண்ணிக்கறது நல்லவிதமா படலை..." என்றான்.

"என்னா பெரிய சாதி... குலம்... கோத்ரம்? எல் லாரும் எல்லா வேலையும் பாக்க ஆரம்பிச்சுட்டோம். எங்க இருக்குது அதெல்லாம்...? கல்யாணத்துல பையன் ஒழுக்கமானவனான்னுதான் பாக்கணும்... அது இருந்தா போதும்..."

ஒரு அனுபவஸ்தர் ஒப்புக் கொள்ளும்படியாக ஒரு கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்க, சுந்தர் சகுந்தலா வைத் தனியே அழைத்துக் கொண்டு ஓதுங்கினான்.

"அம்மா... எல்லார் பேசினதையும் கேட்டீங்க தானே?"

"உம்..."

"அழுவாதீங்க... அதால ஆகப் போறது ஒண்ணு மில்ல... மனச ஆறுதல் படுத்திக்குங்க... நாம அழுவற தாலையோ, கை கழுவி விட்டுட்டதாலையோ வாசுகி நம்ம பொண்ணு இல்லைன்னு யாரும் சொல்லிடப் போறதில்ல... எங்க போனாலும் இன்னார் மகள்னுதான் சொல்வாங்க.

நான் போய் வாசுகியையும் அந்த ஆளையும் பார்த்து வீட்டுக்குக் கூட்டிக்கிட்டு வந்துடறேன். இங்க

வந்த பிறகு, மாப்பிள்ளைகிட்ட நீ என்ன சொல்ல நினைக்கறியோ சொல்லிக்க... என்ன?''

''ஆமாம் சகுந்தலா...! வர்றவங்க போறவங்களுக்கு நம்மளால பதில் சொல்ல முடியலை... நடந்ததை நாம ஒத்துக்கிட்டா விஷயம் சின்னதாயிடும்! இல்லாட்டி பெரிசாகிகிட்டே போய் நம்மள தூங்க விடாம செய்துடும்... மாப்ளைக்கு வேற அம்மை போட்டு அவஸ்தைல இருக்கார். அவரை நாம இப்ப புறக்கணிக்கறதும் சரியில்ல...''

சகுந்தலா கணவரை ஒரு பார்வை பார்த்துவிட்டு விழிநீரைத் துடைத்துக் கொண்டாள். சம்மதம் என்கிறாற் போல சுந்தரைப் பார்த்தாள்.

அவன் அடுத்த நிமிடமே வாசுகி பிரவீணைச் சந்திக்க காலெடுத்தான். அதுவரை எதுவும் பேசாமல் ஒதுங்கியிருந்த பிரபாகரின் அம்மா மனோரஞ்சிதம், சுந்தர் புறப்படுவதைப் பார்த்து அவனருகே வந்தாள்.

''சுந்தர்...நானும் உன்கூட வரேன்...பிரவீண் என்னையும் பார்க்கணும்னானாம்..வரட்டுமா?''

சுந்தருக்கு மனோரஞ்சிதம் உடன் வருவதும் உசிதமாகத்தான் தோன்றியது.

''சரி அத்த!'' என்றான் அடுத்த நொடியே...

ஆட்டோவில் போகும் வழியிலேயே கண்ணில் பட்டது அன்றைய மாலைத் தாளின் தலைப்புச் செய்தி. எதார்த்தமாகக் கவனித்த சுந்தரை அது ஒரு மிரட்டு மிரட்டியது.

''நடிகை கலா கர்ப்பம்.''

பிரபல நடிகர் பிரவீண் மீது குற்றச்சாட்டு!''

ஆட்டோவை ஓரம் கட்டி நிறுத்தி விட்டு, ஓடிப் போய் பேப்பரை வாங்கினவனுக்கு நிறையவே வியர்த்தது.

செய்தியை வேகவேகமாக பார்க்க ஆரம்பித்தான்.

'கவர்ச்சி நடிகை கலா, இன்று கண்ணீர் மல்க நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார்.

நடிகர் பிரவீண் தன்னை திருமணம் செய்து கொள்வதாகக் கூறி ஏமாற்றி விட்டதாகவும், அவர் மேல் வழக்கு தொடுக்கப் போவதாகவும் இன்று நிருபர்களிடையே கண்ணீரோடு கூறிய கலா, தன் வயிற்றில் வளரும் அவரது கருவே அதற்கான சாட்சியாகும் என்றார்.

பல வருடங்களாக தனக்கும் பிரவீணுக்கும் தொடர்பு இருந்தது. திருமணம் பற்றிப் பேச்செடுத்த போதெல்லாம் தள்ளிப் போட்டவர், இன்று ஒரு அப்பாவிப் பெண்ணை ஏமாற்றித் திருமணம் செய்து கொண்டிருக்கிறார். அந்தத் திருமணம் சட்டப்படி செல்லாது என்று கூறிய கலா, இதைத் தான் சும்மா விடப்போவதில்லை என்றும் கூறினார்.

இதைப் பற்றிக் கருத்தறிய பிரவீணை நமது நிருபர் தொடர்பு கொள்ள முயன்றார். ஆனால் அவர் உடல் நிலை சரியில்லாத நிலையில் அவரைத் தொடர்பு கொள்ள முடியவில்லை.

செய்தியைப் படித்த சுந்தருக்கு லேசாக மயக்கமே வந்தது.

''என்ன சுந்தர்...எதுக்கு ஆட்டோவை நிறுத்தினே...? பேப்பர்ல என்ன போட்டிருக்கு?'' கூட வந்திருக்கும் மனோரஞ்சிதம் கேட்கவும், சுந்தர் பேப்பரை அவள் கைகளில் திணித்துப் படிக்கச் சொன்னான்.

படித்தவளுக்கு சரசரவென்று கண்ணீர் பீறிட்டது.

"என்னடா இதெல்லாம்...? ஆழம் தெரியாம வாசுகி காலை விட்டுட்டாளா?"

"அவ எங்க விட்டா? எல்லாம் உங்க மகன் பண்ணின வேலை...!"

"பிரபாவா...அவனுக்கு ஒருத்தரைக் கொடுக்கவே தெரியாது சுந்தர்..."

"அப்ப இதுக்கு என்ன சொல்றீங்க?"

"பத்திரிகை செய்திதானேப்பா...! பொய்யாகூட இருக்கலாம் இல்லியா...? வா...போய் நேர்லையே கேட்போம்..."

"கேட்போம் அத்த—அப்படியே திருப்தியான பதில் கிடைக்கலன்னா, ஒண்ணு வாசுகி நம்மோட வந்துடணும். இல்லை, அங்கேயே அவளை நாம தலை முழுகிடணும்..."

செய்தியின் பாதிப்போடு சுந்தர் திரும்பவும் ஆட்டோவில் ஏறினான். அது மீண்டும் புறப்பட்டது!

பேப்பரைப் பார்த்து ஸ்பிம்பித்துப் போயிருந்தான் பிரபாகர். வீடு கொள்ளாத சினிமா கூட்டத்துக்கு நடுவில் பேப்பர் செய்தி பற்றிய காரசாரமான சலசலப்பு.

செய்தி, வாசுகியையும் பிரவீணையும் இன்னும் போய்ச் சேர்ந்திருக்கவில்லை. படுக்கையில் அனலாய் உடம்பு கொதித்தபடி இருக்கப் படுத்திருப்பவனுக்கு அருகிலேயே உட்கார்ந்திருந்தாள் வாசுகி. நலம் விரும்பிகளை பிரபாகர்தான் சமாளித்துக் கொண்டிருந்தான். ஊடே இப்படி பாணம்!

விஷம் கொடுத்து ஆளையே கொல்ல முயற்சி செய்தவள், அது முறியடிக்கப்பட்டதால் போட்ட அடுத்த பாணம் – அவன் முற்றிலும் எதிர்பாராதது.

'இதற்குப் பதில் சொல்லாமல் மௌனம் சாதிப்பது உண்மை என்று ஒப்புக்கொள்வது போல் ஆகி விடுமே...?'

பிரபாகர் மனதுக்குள் கேள்விகள் ஓடும்போது, வெளியே சுந்தரும்; மனோரஞ்சிதமும் வந்த ஆட்டோவின் தேக்கம்!

11

சுந்தரும் மனோரஞ்சிதமும் பிரவீணின் வீட்டிற்குள் வேகமாக உள்ளே நுழைந்தனர். வாயிலில் கூர்க்கா கையை நீட்டித் தடுத்தான்.

"யாரும் உள்ள போகக்கூடாது சாப்..." என்றான்.

"யோவ்... நான் பிரவீணோட மச்சான்யா...போய்ச் சொல்லு..."-சுந்தர் குரலில் கனல் பறந்தது.

மனோரஞ்சிதம் அவன் கையைப் பற்றி, "பதட்டப்படாதே..." என்றாள்.

"எப்படி அத்த பதட்டப்படாம இருக்க முடியும்? என்ன பேசறீங்க நீங்க...?" - அவன் கேட்டுக் கொண்டிருக்கும்போதே பிரபாகர் ஓடி வந்தான்.

"அம்மா நீயா... வாம்மா...வா சுந்தர்... வா... வா..." – அவர்கள் இருவர் கரங்களையும் பிடித்து இழுத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

பத்திரிகையாளர்கள் திரும்பி இருவரையும் பார்த்தார்கள். தவறுதலாக-வாசுகியின் அம்மாவோ என்று நினைத்துக் கொண்டு. ப்ளாஷை வீசி காமிராவில் வாரிச் சுருட்டினார்கள்.

மனோரஞ்சிதம் இப்பொழுதுதான் முதல் தடவையாக பிரவீண் வீட்டுக்கு வருகிறாள்.

பிரம்மாண்ட வீட்டமைப்பும், பத்திரிகையாளர் கூட்டமும் அவளைத் திக்குமுக்காட வைத்தது.

நடுவில் அந்தப் பிரமிப்பில்இருந்து விடுபட்டு, சுந்தர் பிரபாகரிடம் கேட்டான்.

"எங்க பிரபாகர் பிரவீண்?"

"மெல்லப் பேசு சுந்தர்... பிரவீணுக்கு இப்போ கடுமையான காய்ச்சல். அறையில் படுக்கைல இருக்கான்..."

"ஆமா! பேப்பர்ல என்ன அப்படி வந்துருக்கு?"

"உள்ற வா... விளக்கமா சொல்றேன்...

– கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஒரு அறைக்குள் சென்றான்.

சுந்தரை உட்காரச் சொல்ல, அவன் மறுத்துவிட்டு, "விஷயத்தைச் சொல்..." என்று பதிலுக்குச் சீற, சுந்தர் பத்திரிகைச் செய்தியால் பெரிதாகப் பாதிக்கப்பட்டிருப்பதை பிரபாகரால் துல்லியமாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

"சுந்தர், அந்தச் செய்தி சுத்தப் பொய். பிரவீணுக்கும் அதுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாதுடா..." – சமாதானம் ஆரம்பமானது.

"எப்படி நம்பறது?"

"அந்தக் கலா ஒரு கால்கேர்ள். அவ ஸ்டேட்மெண்டைப் போய் ."

"ஸ்டேட்மெண்ட் இல்ல...! வயித்துல குழந்தைங்கற பலமான சாட்சியோட சொல்லியிருக்கா..."

"அது யாரால வந்ததோ...? அவ பொய் சொல்றான்னு சொல்றேன்ல..."

"எதுக்கு அப்படிச் சொல்றா?"

"பிரவீண் இமேஜைக் கெடுக்கணும். அரசியல்ல செல்வாக்கு வளராமத் தடுக்கணும். அடுத்தடுத்த சிலிமால பிரவீண் கான்சன்ட்ரேஷனை இழக்கணும்னு அவளுக்கு ஒரு பெரிய நோக்கமே இருக்கு...!"

"அப்ப பிரவீண் இந்தப் பிரச்சினைக்கு என்ன பதில் சொல்லப் போறான்...?"

"அவ சொல்றது பொய்யின்னுதான். இன்ஃபாக்ட்– இந்த நிமிஷம்வரை பத்திரிகைச் செய்தி பிரவீணுக்குத் தெரியாது. உடம்பு சரியாகறவரை தெரிய வேண்டாம்னு பாக்கறேன்..." – பிரபாகரின் பதில் சுந்தரைக் கொஞ்சம் சமாதானப் படுத்தியிருந்தது.

மனோரஞ்சிதம் மெல்லிய குரலில், "இப்ப பிரவீண் எங்கே?" என்று கேட்டாள்.

"வாங்க... அவன் அறைக்குப் போவோம்..." – மூவரும் அந்த அறையை விட்டுவெளியில் வந்தனர்.

பத்திரிகையாளர்கள் - கூட்டம் குறைந்திருந்தது.

இன்றைக்குப் பருப்பு வேகாது என்பது தெரிந்து விட்டதால் நழுவியிருந்தனர்.

சிலர் கலாவைப் பிடித்துக் கலாய்க்கப் போய்க் கொண்டிருந்தனர்.

மனோரஞ்சிதமும், சுந்தரும் தங்கள் வீட்டிற்குத் திரும்பியபோது இருட்டி விட்டிருந்தது.

அவன் அப்பாவும் அம்மாவும் வேகமாக முன் வந்தார்கள்.

"என்னடா சுந்தர் ஆச்சு?"

"எல்லாம் பொய்யாம்ப்பா..." -ஒரு வரியில் பதில் சொல்லிவிட்டு, உள்ளே போய் கதவைத் தாழிட்டுக் கொண்டான் அவன்.

"அண்ணி...என்ன நடந்துச்சு?" -அவர்கள் மனோரஞ்சிதம் பக்கம் திரும்பினார்கள்.

"ஆமா... நீங்க பேப்பர் பாத்தீங்களா?"

"பேப்பர் மட்டுமா...? டி.வி. நியூஸ், ரேடியோ எல்லாத்துலயும் அந்த கன்றாவியைக் கேட்டோம்..."

"அது பொய்யாத்தான்மா இருக்கணும்...பாவம் பிரவீண்...அனல்ல வாடின வாழை இலையாட்டம் கிடக்கிறான். அவன்கிட்ட இந்தச் சிக்கல் பத்திப் பேச முடியலை...'!

"அண்ணி... ரொம்பப் பயமா இருக்கு அண்ணி... பட்ட இடத்துலேயே படுதே அண்ணி..."

"தைரியமா இரு... ரெண்டுநாள் போகட்டும். முதல்ல அந்தப் பிள்ளை குணமாகணும். அப்புறம்தான் மத்த பேச்செல்லாமும்...! நான் போய் பக்கத்துல இருந்து கவனிச்சுக்கலாம்னு நினைக்கறேன்..."

-மனோரஞ்சிதம் ஒரு முடிவுடன் பேசினாள்.

சகுந்தலாவும் அவள் கணவரும் மிடறு விழுங்கினார்கள். தெருவில் போவோர் வருவோர் எல்லாம் தங்கள் வீட்டையே பார்த்தபடி பேசிச் செல்வதால் நெருடல் வேறு!

"சரி அண்ணி; நானும் வரேன்..." -சகுந்தலா மனோரஞ்சிதத்துடன் ஒட்டிக் கொண்டாள்.

இருவரும் புறப்பட்டு வெளியில் வந்தனர். கார் காத்துக் கொண்டிருந்தது. ஆச்சரியமாக இருந்தது.

இருவரும் ஏறிக்கொள்ள, புறப்பட்டது அது. வீதியே பார்த்துக் கொண்டுமிருந்தது! சகுந்தலாவுக்கு அந்தப் புதிய அனுபவம் கூச்சத்தையும், உள்ளுக்குள் குமுறலையும் பெருக்கிற்று.

மனோரஞ்சிதம் தோள்மேல் சாய்ந்து கொண்டு விசும்பத் தொடங்கினாள்.

சோகச் சித்திரம் போலப் படுத்திருந்தாள் கலா.

ராதா உள்ளே வந்தாள்.

"மேடம்... நிறைய பத்திரிகைக்காரங்க வந்துருக்காங்க!" என்று ஆரம்பித்தாள்.

"வேற யாரெல்லாம் வந்துருக்காங்க...?"

"கொண்டையா வந்துருக்கார்..."

- அந்தப் பேரைக் கேட்ட மாத்திரத்தில் அவளுக்குத் தூக்கிப் போட்டது.

"பாக்க ரொம்ப கோபமா இருக்காரு..."

"போடி...போய் முதல்ல உள்ற வரச் சொல்... பத்திரிகைக்காரங்கள அப்புறமா பாத்துக்கலாம்..."

-அவள் அப்படிச் சொன்ன அடுத்த அறுபதாவது நொடியில், ஜீன்ஸ் பேண்ட்-டி-ஷர்ட்டும், நீண்ட குடுமியுமாய், ரேபான் கிளாஸோடு ஒருவன் உள்ளே நுழைந்தான்.

அவனைப் பார்க்கவும் கலாவிற்குப் பேச்சே வர மறுத்தது.

உள்ளே நுழைந்தவன், முதல் காரியமாக அறையைப் பூட்டினான். அவனாகப் போய் அறைக்குள் கிடந்த சோபா ஒன்றில் உட்கார்ந்தான்.

கால்மேல் கால் போட்டுக் கொண்டான்.

அவனோடு பேசாமல், செல்லை எடுத்து வேறு யாரோடோ பேசத் தொடங்கினான்.

பார்த்துக் கொண்டேயிருந்தவளுக்குக் கழுத்தெல்லாம் வியர்வை.

அவன் பேச்சில் மர்மமான போக்கு...!

"கலா வீட்ல இருந்துதான் பேசறேன் தலைவா..." என்றதில் அவன் யாரோடு பேசுகிறான் என்பது புரிந்து போனது.

"அவ இப்ப படுத்துகிட்டிருக்கா...எல்லாம் ட்ராமா தான் !"

"....."

"சரி தலைவரே...சரி...சரி...!"

–செல்லை முடக்கிவிட்டு அவன் நிமிர்ந்தான். கலா மிரண்டுபோயிருந்தாள்.

அவன் சிரித்தான்: "பெரிய மூளைக்காரின்னு சொல்லிக்கறே... ஆனா சுத்தமா உனக்கு அறிவே இல்லடி..."

"இல்ல கொண்டய்யா... சில விஷயங்கள நான் எதிர்பார்க்கல...! அதான்..."

"புடலங்கா... ஆமா-நிஜமாலுமே கன்சீவ் ஆகியிருக்கியா?"

"ஆமா..."

"உண்மைல யார் காரணம்?"

"....."

"சும்மா சொல்லு... யாரு...?"

"நீ... நீதான்!"

"நானா?"–அவன் புருவம் அரிவாளாகியது. சில விநாடிகள் அவன் முகம் கோணல்களுக்கும் இடம் கொடுத்தது.

"அப்ப என் குழந்தைக்குத்தான் பிரவீணை அப்பான்னு சொல்லியிருக்கியா?"

"எனக்கு வேற வழி தெரியலை...!"

"சரி... ஜீன் டெஸ்ட் பண்ணா உண்மை தெரிஞ்சுடுமே... அப்ப என்ன பண்ணுவே?"

"அப்ப... அப்ப..."

"அதையெல்லாம் நீ யோசிக்கவேயில்லை... அப்படித்தானே?"

"....."

"பணம் கொடுக்கும்போது பெரிசா வாங்கிக்க மட்டும் தெரியுது! அதுல ஒரு நோட்டு குறைஞ்சாலும் கணக்கா கேக்கவும் தெரியுது! அதை பேங்க்ல போட்டா கூட ஆபத்துன்னு, வீடு-வாசல்னு போட்டு அசையாச் சொத்தா மாத்தவும் தெரியுது ! ஆனா சொல்ற பொய்யை மாட்டிக்காதபடி சொல்லணும்னு தெரியல...! அப்படித்தானே?"

"அது... அது..."

"எது...? இப்ப நீ சொன்னது பொய்னு பிரவீண் நிரூபிச்சிட்டா, அவன் இமேஜ் இன்னும் எங்கையோ போயிடும்... அனுதாபம் வேற சேர்ந்திடும்.

அரசியல்வாதிங்க போட்ற ஐந்தாண்டுத் திட்டம் மாதிரி பாத்துப் பாத்து யோசிச்சு பிளான் பண்ணி உனக்குச் சொல்லிக் கொடுத்தாலும் கடைசில சொதப்பிட்றே!

தலைவரும் சரி; சூப்பர் கிங்கும் சரி–இப்ப உன்மேல நெருப்பா இருக்காங்க...! நான்தான் சமாதானப்படுத்திட்டு வந்துருக்கேன் தெரியுமா?"

அவள் இமைகள் உடனேபடபடவென்று துடித்தன.

"பத்திரிகைக்காரங்க வேற... நீ சொல்றதையும் போட்றாங்க... அவன் சொல்றதையும் போட்றாங்க! கடைசில மாட்னா நீ மட்டுமில்ல; ஒரு கூட்டமே கம்பி எண்ணணும்... தெரியுந்தானே?"

"தெ... தெரியும்... நான் மாட்ட மாட்டேன் கொண்டையா... என்னை நம்பு..."

"நம்பித்தானே தீரணும். இதோ பார்... எங்களுக்குப் பிரச்சினைல இருந்து வெளிய வர பல வழி இருக்கு... அதுல முதல் வழி–உன்னைக் கொன்னு, நீ தற்கொலை செய்துகிட்டேன்னு ஊரை நம்ப வைக்கறது!

உன் தற்கொலைக்குக் காரணம் பிரவீண்னு நாங்க சொல்லிட்டு, ஒரு ரகளையே பண்ணிட்டு தாண்டிப் போயிடுவோம்... ஆனா உன் கதியை நினைச்சுப் பார்..."

"ஐயய்யோ... எ... என்னைக் கொன்னுடாதீங்க..."

"சேச்சே... உடனே நடுங்கிறியே..? நீ தொடர்ந்து தப்பு பண்ணினா எப்படி விஷயம் போகும்னு கோடு காட்டினேன். அவவளவுதான்! ஆமா! எப்படி இந்த விஷயம் ஃபெயிலியராச்சு?"

கலா மெல்லிய குரலில் சொன்னாள்.

"பிரபாகரால!"

12

காற்றுக் குரலில் 'பிரபாகர்' என்று அவள் சொன்னதைக் கேட்டு அவன் முகத்தில் சுருக்கங்கள் விழுந்தன.

"யார் இவன்?"–என்றான் புதிதாகப் பற்ற வைத்த சிகரெட் புகையோடு!

"பிரவீணோட காலேஜ் ஸ்நேகிதனாம்...!"

"அவன்தான் இப்ப பிரவீணுக்கு பி.ஏ.வா?"

"இல்ல... அதுக்கும் மேல...!"

"அப்ப அவன்தான் பிரவீண் கல்யாணத்துக்கும் ஏற்பாடு செய்தவனா?"

"ஆமா...! நான் பிரவீணைப் பாக்கப் போயிருந்தப்ப வந்திருந்தாங்க... யாரோன்னுதான் நினைச்சேன். ஆனா இவ்வளவு தூரத்துக்குக் கொண்டு போவாங்கன்னு தெரியாது...!"

கலா திக்கித் திக்கி இன்னமும் தன்னிடம் அச்சம், மடம் எல்லாம் மிச்சம் உண்டு என்கிற மாதிரி பேசிவிட்டு, மூக்கை உறிஞ்சினாள்.

அவன் குத்தும் விழிகளோடு அதைப் பார்த்துவிட்டு எழுந்து நின்றான்.

'கொண்டையா' என்றால் சினிமாக்காரர்களுக்கு நன்றாகத் தெரியும். தாதாவோடும் சேர்த்தி இல்லை... மாமாவோடும் சேர்த்தி இல்லை!

யார் முன்னணி நடிகரோ, அவருக்கு ஜால்ராவாகி கோடம்பாக்கத்தைச் சுற்றி வருவதுதான் பிரதான வேலை! கைவசம் நிறைய பெண்கள் உண்டு! அரசியல் வாதிகளுக்கு அவர்களை சப்ளை செய்து சந்தோஷப் படுத்துவதில் பயங்கரக் கில்லாடி!

இதனால் அரசியல்வாதிகளிடத்திலும் காரியம் சாதிக்கத் தெரிந்தவன்.

ஒரு பிரபல அரசியல் கட்சி, தன் கட்சிக்கென பிரவீணை வளைத்துப் போட, ரகசியமாக கொண்டையாவைத்தான் பாலமாகப் பயன்படுத்திப் பார்த்தது.

பிரவீண் பிடிகொடுக்கவில்லை. 'நான் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு என்னை வரையறுத்துக் கொள்ளத் தயாரில்லை' என்று கூறிவிட்டான்.

'சரி... இவனுக்குப் போட்டியாக உள்ள ஜோதிநாத்தையாவது வளைத்துப் பிடி' என்றார்கள் அவர்கள்.

ஜோதிநாத் வசமாக அகப்பட்டான். அந்தக் கட்சிக்கென தேர்தல் பிரசாரம் எல்லாம் செய்தான். ஆனால் அந்தக் கட்சி அதனால் பெரிய பலனை அடைந்து, ஆட்சியைப் பிடித்து விடவில்லை.

அதன்பின் ஜோதிநாத்தையும் அந்தக் கட்சி பிரதானமாக நினைக்கவில்லை. அப்படியே கைகழுவி விட்டது. ஜோதி, கட்சி தன்னை ராஜ்யசபா எம்.பி. ஆக்கும் என்றெல்லாம் கனவு கண்டான். ஆனால் அது பிரவீணை ஆக்கிப் பார்க்க ஆசைப்படுவதாக அவனுக்குத் தெரிய வந்தது.

ஏற்கெனவே பிரவீண், வசூலில் ஜோதிநாத்தின் படங்களைக் குப்புறக் கவ்வ வைத்து விட்டான். இப்போது அரசியலிலும் முந்துவான்போலத் தெரியவே, ஜோதிநாத்துக்குள் பொறாமைத் தீ எரிந்ததாம். பிரவீண் மார்க்கெட்டை ஒழித்து, இமேஜைச் சின்னாபின்னப் படுத்தி விட்டுத்தான் நிமிர்வது என்று ஜோதி சபதமே செய்திருக்கிறானாம்!

இதெல்லாம் பத்திரிகை ஊகங்கள்.

இதே பத்திரிகைகள்தான் கொண்டையாவையும் ஒரு துஷ்ட சக்தியாகச் சித்தரித்திருக்கின்றன. 'ஆமை புகுந்த வீடும், இவன் புகுந்த வீடும் உருப்படாது' என்றும் எழுதியுள்ளன.

எல்லாம் கொண்டையாவிற்கும் தெரியும்.

பூர்வீகம் ஆந்திரா! மசூலிப்பட்டினம் பக்கமாக ஏதோ ஒரு கிராமம். ஊரைவிட்டு ஓடி வந்த கேஸ்! சில

திருட்டு மற்றும் மோசடி வழக்குகளில் கைதாகி, கம்பி எண்ணிய அனுபவமும் உண்டு.

எல்லாவற்றையும் தனக்கான தைரியத் தகுதிகளாக மாற்றிக்கொண்டு விட்டவன்.

எப்பொழுதுமே தர்ம நியாயங்களில் திருட்டுப் பயல்களிடம்தான் அதிக ஈடுபாட்டைப் பார்க்க முடியும்.

சினிமாவில்கூட வில்லன், கையாட்கள் துரோகம் செய்துவிட்டால் உடனேயே சுட்டு விடுவான். அதே வில்லன், விசுவாசிகளை உல்லாசிகளாய் வைத்திருப்பான்.

இரண்டுக்குமே கைமேல் பலன் தந்துவிடும் தர்மப் பிரபுக்கள் அவர்கள்தான்!

சமூகத்துத் தர்ம நியாயங்கள் மட்டும் சிரமப்பட்டுத்தான் தங்களுக்கான நல்லதையோ கெட்டதையோ பலனாகப் பெறும்!

கொண்டையா சினிமா வில்லன் ரகம்.

அதனால்தான் எழுந்து நிற்பதிலும், கலாவை வெறிப்பதிலும் அவளைக் கேள்வி கேட்பதிலும் வசனம் பேசினான்.

அப்படியே கதவைத் திறந்து வெளியேயும் எட்டிப் பார்த்தான். சில தெரிந்த பத்திரிகையாளர்கள் தலை தெரிந்தது.

கலா அவனையே மௌனமாக வெறித்துக் கொண்டிருந்தாள். அவன் திரும்பி, திரும்பவும் அவளிடம் வந்தான்.

"வெளிய பத்திரிகைக்காரங்க வந்திருக்காங்க... நான் அவங்க பாக்காதபடிதான் உன்னைப் பாக்க வந்துருக்கேன்— என்னை இப்ப அவங்க பார்த்தா

கண்டபடி எழுதுவாங்க...! ஆகையால நான் இங்கையே இருக்கேன். நீ போய் அவங்களப் பாத்து அழுது, டிராமா போட்டுட்டு வா...! அந்தப் பிரபாகரை என்ன பண்றதுங்கறதைப் பத்தி நான் யோசிக்கறேன்...''

அவன் தீர்மானத்துக்கு அவள் வேகமாகத் தலையை அசைத்தாள். அருகில் கிடந்த சால்வை ஒன்றை எடுத்துத் தன்மேல் போர்த்திக் கொண்டாள்.

'ஷாட் ரெடி' என்று டைரக்டர் சொல்லவும் நடிக்கத் தயாராகிற மாதிரி தயாராகி, வெளியில் செல்லத் தொடங்கினாள். கொண்டையய்யா பிரபாகரை உத்தேசித்து தாடையை வருடத் தொடங்கினான்.

பிரபல தயாரிப்பாளர் விஸ்வநாத ரெட்லி, இயக்குநர் சந்திரகுமாரராஜா, பத்திரிகை ஆசிரியர் பாண்டுரங்கன் என்று ஒரு கூட்டமே பிரவீணைப் பார்க்க வந்திருந்தது.

பிரவீணும் அவர்களைப் பார்த்து,

கல்யாண வாழ்த்துக்களோடு, அவர்கள் சொன்ன எச்சரிக்கைக் கருத்துக்களையும் அசை போட்டபடி அவர்களுக்கு நன்றி கூறினான்.

இவர்கள் பிரவீணின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியவர்கள். இவனை ஓரளவு ரத்தமும் சதையுமாகப் புரிந்தவர்களும்கூட...! ஜோதிநாத்தையும், கலாவையும் பற்றியும் தெரிந்தவர்கள்.

''தைரியமா இரு பிரவீண்... நாங்க இருக்கோம்... எதுக்கும் கவலைப்படாதே...'' என்று வார்த்தைக்கு வார்த்தை இவர்கள் சொன்னதைக் கேட்டு பிரவீணை விட அதிக சந்தோஷப்பட்டவள் வாசுகிதான். அருகிலேயே இருக்கும் பிரபாகருக்கும் அது தெம்பாக இருந்தது.

சகுந்தலாவும், மனோரஞ்சிதமும் கூட பிரவீணைப் பார்த்துச் சற்று நிம்மதி வசப்பட்டார்கள்.

இந்த நேரத்தில்தான் அந்த அரசியல் தலைவரும் தொலைபேசியில் பிரவீணைத் தொடர்பு கொண்டு பேசினார்.

''என்ன பிரவீண்... என்ன இதெல்லாம்?''

''எல்லாம் என் கெட்ட நேரம் சார்...''

''அப்படிச் சொல்லக் கூடாது... நாங்கள்லாம் எதுக்கு இருக்கோம்? அந்தக் கலாவை ஒரு வழி பண்ணிட்றோம். நீங்க மட்டும் ஒரு வார்த்தை சொல்லுங்க...''

''இல்ல சார்... அதை நானே பாத்துக்கறேன்... நீங்க இதை எல்லாம் நம்பாமப் பேசினதே எனக்குப் போதும். நன்றி...'' என்று உடனேயே ரிசீவரை வைத்து இணைப்பைக் கத்தரித்துக் கொண்டான்.

வெளியே ரசிகர்கள் சளம்பும் சப்தம்.

தமிழ்நாட்டில் மொத்தமாக நாலாயிரத்துக்கும்மேல் பிரவீணுக்கென்று மன்றங்கள். அவர்களில் வெறும் பத்து சதவிகிதம் பேர் நேரில் வந்தாலே வீதி தாங்காது.

கூடுதலாகவே வந்திருப்பார்கள் போலத் தோன்றியது.

பிரவீணின் பத்திரிகைகளில் வந்த படங்களைத் தாங்கள் வந்த வாகனங்களில் ஒட்டிக்கொண்டும், அவன் போலவே வேடமிட்டுக் கொண்டும் ஓடி வந்திருந்தார்கள்.

''கார்கில் யுத்தத்துக்குப் போக வேண்டும்- வர முடியுமா இளைஞர்களே' என்று கேட்டிருந்தால் இத்

தனை வேகத்தோடும் ஆர்ப்பாட்டத்தோடும் வந்திருப்பார்களா?''

கூட்டத்தில் மாட்டிக் கொண்டு, வீதியைத் தாண்ட முடியாத ஒரு பொதுஜனம், பலர் காதுபடச் சலித்துக் கொண்டார். இதனால் பலரது நக்கீரப் பார்வையில் பட்டு, படாத பாடும் பட்டார்!

உதடு இப்படிச் சலித்துக் கொண்டாலும், அவரது பார்வையும் அந்தக் கூட்டத்தில் பிரவீணைப் பார்க்க முடியுமா என்றுதான் அலைந்தது.

போலீஸ் எல்லாம் வந்து இறங்கியிருந்தது.

நல்லவேளை–மூங்கில் தடுப்பு கட்டி, 'வரிசையில் வாருங்கள்' என்று சொல்லவில்லை.

பிரவீண் அவனது பங்களா பால்கனி முன்னால் வாசுகியோடு நின்று கையை ஆட்டிக் கொண்டிருந்தான். பின்னாலேயே பிரபாகரோடு மனோரஞ்சிதமும் சகுந்தலாவும் நின்று கொண்டிருந்தார்கள்.

சகுந்தலாவிற்குச் கூட்டத்தைப் பார்க்க பரவசமான பரவசமாக இருந்தது.

'ஒரு பத்துப் பேரை நம்மால் சேர்க்க முடியாதே ? அடேயப்பா...! இந்த சினிமாவிற்குத்தான் எத்தனை சக்தி ? நம் மாப்பிள்ளையின் பேரில்தான் எல்லோருக்கும் எத்தனை அன்பு...?''

பிரமிப்பு கண்களில் வழிய, மனோரஞ்சிதத்தைத் திரும்பித் திரும்பிப் பார்த்தாள்.

''பிரவீண், போதும்... போய் கொஞ்சம் ரெஸ்ட் எடு உடம்புக்கு ஆகாதுப்பா...'' என்று மனோரஞ்சிதம் நடுநடுவே அவன் உடல் நிலையை ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தாள்.

பிரவீண் உற்சாகமாக இருந்தான்.

இத்தனை பேர் தனக்குத் துணை இருக்கும்போது தன்னை யாரால் என்ன செய்துவிட முடியும் என்கிற தைரியமும் உள்ளுக்குள் உருவாகி விட்டிருந்தது. இயல்பு தானே?

கூட்டத்தில் விதவிதமான கோஷங்கள்...

கைகாரி கலாவே மன்னிப்பு கேள்!

மாயக்காரி கலாவே மன்னிப்பு கேள்!

கலையுலகின் மகாத்மா பிரவீண் வாழ்க!

கலையுலகின் எவரெஸ்ட் பிரவீண் வாழ்க.

அ... இந்தப் படை போதுமா?

இன்னும் கொஞ்சம் வேணுமா?

அ... கும்தலக்கடி கும்மாவா?

குருமகான் பிரவீணுன்னா சும்மாவா?

உரக்க கோஷமிட்டுக்கொண்டு,

கட்டம் கட்டி நின்று ஆட்டம் போட்டுக் கொண்டு விசிலடித்துக் கொண்டு வீதியே திமிலோகப் பட்டுக் கொண்டிருந்தது.

விஷயம் ஜோதிதாத்துக்கு போனபோது. செட்டில் பேக்கப்பில் நகம் கடித்துக் கொண்டிருந்தான்.

''தலைவர்...நாம போட்ட பாணம் எதுவுமே ஒர்க் அவுட் ஆகாது போலத் தெரியுது. கலா சொன்னால்லாம் யாரும் நம்ப மாட்டாங்கன்னு நான் அப்பவே சொன்னேன். கேக்கல நீங்க...! 'கைகாரி கலாவே – மன்னிப்பு கேள்'னு ஒரே கோஷம்...!''

''ஆமாம்...இப்ப நீங்க வாழ்த்துச் சொல்லப் போகிறீர்கள், கலாவைத் தூண்டிவிட்டது நீங்கதான்னும் எழுத ஆரம்பிச்சுடுவாங்க...''

''கட்சித் தலைவர்கூட இதான் சாக்குன்னு அனுதாபப்பட்டு மாதிரி பட்டு, உதவி வேணுமா'ன்னு

கேக்கறாரு...! அவனோட இமேஜ் மலை தலைவா! அதை கலா மாதிரி சின்ன உளியாலல்லாம் ஒண்ணும் பண்ண முடியாது. அதுக்கெல்லாம் பவர்ஃபுல் டைனமைட் லெவலுக்கு ஆளுங்க வேணும்...''

–ஜோதிநாத்தின் சகாக்கள் சுற்றி அமர்ந்துகொண்டு அவனைக் கலாய்த்துக் கொண்டிருக்க, ஜோதி ஒரு முடிவோடு எழுந்தான்.

ஷாட் ரெடி சொல்லிப் பார்த்த அசிஸ்டெண்ட் டைரக்டரைக் கூப்பிட்டு, 'பேக்அப்' என்றான்.

''சார்...ர்...ர்'' என்று அவன் உதட்டைக் கடித்ததைப் பற்றிக் கவலையே படாமல் பிரவீணைப் பார்க்கப் புறப்பட்டான்.

ஜோதி வேறு மாதிரி யோசிக்கத் தொடங்கிவிட்டதை அவனது ஜால்ராக்களும் புரிந்துகொண் அவனோடு காரில் தொற்றிக்கொள்ள, அது வேகமாக பிரவீண் வீட்டைக் குறி வைத்துச் சீறத் தொடங்கியது.

காருக்குள் ஜோதி ஒரே ஒரு வார்த்தை மட்டும் சொன்னான்.

''பிரவீணுக்கான டைனமைட்டை எப்படி வைக்கறேன்னு போகப் போகப் பார்க்கப் போறீங்கடா!''

13

''சகுந்தலா கவ்விய பயத்தோடு, சன்னமான குரலில் கமறல்களுடன் கேட்டாள்.''

பிரவீண் பங்களா முன் தேங்கிய ஜோதிநாத்தின் காரைப் பார்த்து எல்லோருமே வியக்கிறார்கள்.

ஒரு பெரிய மலர்க்கொத்தும் கையுமாக, நிலைய ஜால்ராக்கள் புடை சூழ ஜோதி, பங்களா நோக்கிப் பிரவேசம் செய்யத் தொடங்கினான்.

ஜோதி வருவதைப் பார்த்து பிரபாகரே விக்கித்துப் போனான். படுக்கப் போய்விட்ட பிரவீணும் எழுந்து வெளியே வந்தான்.

இருவரும் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிக் கொண்டனர்.

அப்போது பிரவீணின் உடம்பு அனலாய்க் கொதித்தது.

''என்ன பிரவீண்...இப்படிக் கொதிக்குது....''–ஜோதியிடம் பயங்கர கரிசனம்.

''பரவால்ல...வராதவர் வந்துருக்கீங்க...காபி, டீ... என்ன சாப்பிட்றீங்க?''

''என்ன - காபி, டீ கொடுத்து நழுவிடலாம்னு பாக்கறீங்களா...? கல்யாணச் சாப்பாடு போடணும்...!''

–ஜோதி உரிமை எடுத்துப் பேச, கூட்டம் ரசிக்கிறது. வியக்கிறது. ஆர்ப்பரிக்கிறது.

பத்திரிகைக்காரர்கள் கேமிராவில் அவர்கள் இருவரையும் வாரிச் சுருட்டுகின்றனர்.

''நிச்சயம் எல்லாருக்கும் ஒரு பெரிய விருந்தே வைக்கப்போறேன்...! கொஞ்சம் உடம்பு தேறட்டும்னு பாக்கறேன்...?''

''ஆமாமா...! முதல்ல அதைக் கவனியுங்க...போங்க போய் படுங்க ..எல்லாத்தையும் பிறகு பார்த்துக்கலாம் .. இப்பவே சொல்லிட்டேன். உடம்பு குணமான உடனே நீங்க போட்ற கல்யாணச் சாப்பாடு–அப்புறம்! முதல்ல என் வீட்டுக்குத்தான் விருந்துக்கு வரிங்க...''

–முகத்தை ஒரு மாதிரி வைத்துக்கொண்டு ஜோதி சொல்லும்போது, 'சினிமாவில்கூட இப்படி நடிக்க மாட்டேன் என்கிறானே?' என்ற கேள்விபை பலரால் தவிர்க்க முடியவில்லை!

"அதுக்கென்ன ஜோதி...வந்துட்டாப் போச்சு...!"

"டென்டேடிவா சொன்னா எப்படியா...? கட்டாயம் வரேன்னு சொல்லுங்க...!"

"ஷ்யூர்..."

"குட்...! ஓ.கே...நீங்க போய் படுங்க...நான் கிளம்பறேன்..." – ஜோதி கிராப் தலையைக் கோதி விட்டுக் கொண்டு திரும்ப, பிரபாகர் கண்ணில் பட்டான்.

உடனேயே பிரவீண், பிரபாகரை ஜோதிக்கு அறிமுகம் செய்ய முன்வந்தான்.

"ஜோதி...இவன் என்உயிர் நண்பன்!பேர்பிரபாகர் ! நான் கண்ணுன்னா இவன் கூலிங்கிளாஸ்...!"

"வெரி கிளாட் மிஸ்டர் பிரபாகர். பிரவீணை ஜாக்கிரதையா பார்த்துக்குங்க..." –ஜோதிநாத்தின் கைகள், பிரபாகரின் கைகளை ஒருவித அழுத்தத்துடன் பற்றிக் குலுக்கின.

பார்வை துளையிடுவதுபோல ஊடுருவிற்று. உள்மனது, 'உன்னாலதான் என் குறிகள் தவறியதா?" என்றும் கேட்டுக் கொண்டது. ஆனால் முகம், நேர் – எதிர்திசையில் வியந்தும், சிரித்தும் போலித்தனத்தைக் காட்டி முடித்தது.

பிரபாகரிடமும் பெரிதாக உணர்ச்சிகளில்லை.

சம்பிரதாயச் சிரிப்பு சிரித்தான். வாசல்வரை போய் வழியனுப்பியும் வைத்தான்.

திரும்பவும் உள்ளே நுழைந்த அவனை, அத்தை சகுந்தலாவும், அம்மா மனோரஞ்சிதமும் ஒரு மாதிரி பார்த்தனர்.

குறிப்பாக –அத்தையின் பார்வையில் ஒரு மாதிரியான சோகம் தெரிந்தது.

எல்லோரும் வெளியேற்றப்பட்ட சற்றே அமைதியான சூழ்நிலை. வாசுகி, பிரவீணோடு அறைக்குள் இருந்தாள்.

சகுந்தலா, பிரபாகரை நெருங்கி வந்து, அவன் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

"பிரபா...நான் உன்னை ஏதாவது தவறா பேசியிருந்தா மன்னிச்சிடு...!" –பேச்சை ஆரம்பித்தாள்.

"ஐய்யோ... என்ன அத்தை... எதுக்கிந்த பெரிய வார்த்தை எல்லாம்...!"

"இல்லப்பா...உனக்கு நிஜமாலுமே பெரிய மனசு! அதனாலதான் உனக்குன்னு நாங்க நினைச்ச வாசுகியை, நீ அவ மனசறிஞ்சு உன் நண்பனுக்கு விட்டுக் கொடுத்து, அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை கிடைக்க வழி செஞ்சுருக்கே...!"

"நான் ஒரு உதவியும் செய்யல அத்தை...அவங்க விரும்பினாங்க...கடவுள் சேர்த்து வெச்சிருக்கார்...!"

"ரொம்ப பயந்து போனேன்... நல்ல வேளை! மாப்பிள்ளைத் தம்பியைப் பக்கத்துல இருந்து பார்க்கும் போதுதான் தெரியுது... அது எவ்வளவு நல்ல பிள்ளைன்னு...!"

–சகுந்தலா இலேசாக உருகினாள். பிரபாகர் அதைக் கேட்டுச் சிரித்தான்.

"சரி அத்தை! போய் கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க.. இங்க வந்ததுல இருந்து நீங்க ஒரு மணி நேரம்கூட உக்காரலை...!"

"நான் ரெஸ்ட் எடுக்கறது இருக்கட்டும்... நீ போய் முதல்ல ரெஸ்ட் எடு... உன்னைப் பார்த்தாதான் புயல்ல பறந்தவன்போல இருக்கே...!"

அதைக் கேட்டு அவன் சிரித்தான்.

மனோரஞ்சிதம் மகனை நெருங்கி உருக்கமாகப் பார்த்தாள். பின், "பிரபா... நான் வீட்டுக்குப் புறப்படறேன். நீ மெல்ல வா என்ன?" -என்றாள்.

"எனக்கும் இனி என்னம்மா வேலை... பேங்குக்கு லீவ்கூட சொல்லலை.... நானும் வரேன் -இருங்க..." -

சகுந்தலாவுக்குக் கொஞ்சம் வலித்தது.

"என்ன பிரபா... கிளம்பிட்டியா?" -என்று பாய்ந்து வந்தாள்.

"ஆமாம் அத்தை...! அதான் பிரவீணைப் பாத்துக்க நீங்க, வாசுகில்லாம் வந்துட்டீங்கல்ல...!"

"அதுக்காக...? எல்லாம் நான் சொல்றப்ப போய்க்கலாம்! திருவிழாக் கூட்டம்போல வந்து போய்க்கிட்டிருக்கிறவங்ககிட்ட என்னை மாட்டி விடப் பாக்கறியா?"

"ஐய்யோ.. இல்ல அத்தை...! நான்தான் சொன்னேனே - பேங்க்ல லீவ் கூட சொல்லலைன்னு..!"

"எல்லாம் இங்க இருந்தே போன் பண்ணிச் சொல்லு.."

-சகுந்தலா மடக்கிக் கட்டினாள்.

-அவர்கள் பேச்சு பிரவீண் காதிலும் விழுந்ததோ-என்னவோ? எழுந்து வந்தான். புதிய வேட்டி-சட்டையில் கலைந்த தலைமுடியோடு ஒரு தினுசாகப் பார்த்தான்.

எதுவும் பேசாமல் தொலைபேசியை நெருங்கித் தொடவன், மறுமுனையில் பிரபாகரின் பேங்க் மேனேஜரைத்தான் பிடித்தான்.

"சார்... நான் பிரவீண் பேசறேன்..."

"கங்க்ராஜ்லேஷன்ஸ் மிஸ்டர் பிரவீண்...!"

"தேங்க்யூ சார்...! ஒரு சின்ன ரிக்வெஸ்ட்?"

"என்ன...சொல்லுங்க?"

"பிரபாகரைக் கொஞ்சம் ரிலீவ் பண்ணிடுங்களேன்.. அவன்தான் இனிமே என்னோட பி.ஏ., பாடிகாட், காட்ஃபாதர் எல்லாம் -"

"அப்படியா... ரொம்ப சந்தோஷம்! அவரை ஒரு ரெசிகனேஷன் மட்டும் பாஸ் பண்ணச் சொல்லிடுங்களேன் .!"

"நிச்சயமா சார்...!"

"ஒரு நல்ல ஓர்க்கரை நாங்க இழக்கறோம். இருந்தாலும், அவர் உங்ககிட்ட வந்து உங்க எதிர்காலத்துக்குத் துணையாகப் போறதை நினைச்சு ரொம்பவும் சந்தோஷப்பட்றோம்...ஆல் த பெஸ்ட்...!"

-மேனேஜர் போனை முடக்க, பிரவீண் திரும்பினான்.

மனோரஞ்சிதமும், பிரபாகரும் கிட்டத்தட்ட வெலவெலத்துப் போயிருந்தனர்.

"என்ன பிரவீண் இது...நான் குருவிடா... என் தலைல போய் பனங்காயை வைக்கறியே...!"

–பிரபாகரிடம் நா தழுதழுத்தது.

"நீ குருவி இல்ல பிரபாகர்...நான்தான் குருவி! என் சுயநலத்துக்காக உன் எதிர்காலத்தை நான் திசை திருப்பறதா நினைச்சுடாதே...எனக்கு யாரும் இல்லடா...! ஒரு வாசுகி மட்டும் போதாது...எனக்கு நீயும் வேணும்! அம்மா... நான் சொல்றதுல ஒண்ணும் தப்பில்லையே...!"

–அவன் பார்வை மனோரஞ்சிதம் பக்கமும் திரும்பியது.

"ஏம்ப்பா... உன் அப்பாதான் சரியில்லை... வேற உறவுகளோ, நம்பிக்கையானவங்களோ யாருமே இல்லையா என்ன?" – அவள் மிடறு விழுங்கியபடி கேட்டாள்.

"இருக்காங்கம்மா...ஒரு பெரிய கூட்டமே இருக்கு! ஆனா அவங்கள நான் சேர்க்கறதில்ல...அவங்களுக்கு என் பணமும் புகழும்தான் குறி! என் மனசறிஞ்சு நடந்துக்க யாருமே இல்லம்மா அதான் உண்மை..."

–அவன் சொல்லும்போதே கண்களில் நீர் சேர்ந்து, கன்னத்தில் தடம் புரண்டது.

நடுவில் அவன் கருத்தை ஆமோதிக்கிறமாதிரி, பிரவீணின் அப்பா பாத்ரூம் போய்விட்டுத் தள்ளாடியபடி தன் அறை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்.

"பார்த்தீங்களா... நான் சம்பாதிக்கறதுக்கு முந்தி வரை இவர் இப்படி இருந்ததேயில்லை. மிதமிஞ்சி வந்த பணமும் புகழும் – இவருக்கும் எனக்கும் நடுவுல பெரிய சுவரையே எழுப்பிடிச்சு...குடிக்காம அவரால ஒரு நாள் – ஒரு பொழுது இருக்க முடியாது.

ரெண்டுநாளா எவ்வளவு சம்பவங்கள் நடந்துருக்கு? எதாவது அவருக்குத் தெரியுமா? தெரிஞ்சுக்க கொஞ்ச

ஏதாவது அவருக்கு விருப்பமாச்சும் இருந்துச்சா...? பாக்க மாதிரிங்கதானே?"

– அவனது கேள்வியின் நியாயம் அவர்களைக் கட்டிப் போட்டபோது, தொலைபேசி சப்தித்தது. பிரபாகர்தான் போய் எடுத்தான்.

மறுமுனையில் கரகரப்பாக ஒரு குரல்.

"மிஸ்டர் பிரவீண் இருக்காரா?"

"நீங்க யாரு?"

"நான் வக்கீல் வாதிராஜ் பேசறேன். நடிகை கலா விவகாரம் சம்பந்தமா கொஞ்சம் பிரவீண்கிட்ட பேசணும்..."

"என்ன விஷயமா இருந்தாலும் நீங்க என்கிட்ட பேசலாம்..!"

"கலா பிரவீண் மேல வழக்குத் தொடுக்க விரும்பறாங்க இந்த விவகாரம் கோர்ட்டுக்குப் போனா, அதனால கால நேரம்தான் விரயமாகும் மிஸ்டர் பிரவீண் கலாவை ஏத்துகிட்டா, யாருக்கும் பிரச்சினை இல்லை! நான் சமாதானமாப் போயிட்றது நல்லதுன்னு நினைக்கறேன்..."

"அவதான் ஒரு பொய்யைச் சொல்லித் தப்பா நடந்துக்கறான்னா, அதுக்கு நீங்க வக்காலத்தா மிஸ்டர் வக்கீல்...?"

"பொய், மெய் எல்லாம் ஜீன்டெஸ்ட்டுன்னு ஒண்ணு நடந்தா தெரிஞ்சிடும் மிஸ்டர்... அவ்வளவு தூரம் போக நினைக்கறீங்களா நீங்க?"

"எங்களுக்கு மடியில கனம் இல்ல சார். நாங்க எதுக்குப் பயப்படணும்? நீங்க சொல்ற ஜீன் டெஸ்ட் நடக்கணும்... அப்பதான் உலகத்துக்கும் உண்மை தெரிய

வரும். நாங்க உலகத்துக்கு உண்மையைத் தெரிய வைக்க விரும்பறோம். இந்த சமாதானப் பேச்சை எல்லாம் தயவுசெய்து தூக்கிப் போட்டுட்டு அதுக்கு ஏற்பாடு செய்யறீங்களா?''

– பிரபாகரின் பேச்சில் கனல் பறந்தது. போனை முடக்கிவிட்டுத் திரும்பியவன் முகத்திலும் சலன ரேகைகள்.

''என்ன பிரபா...? கலாவோட வக்கீல் பேசினானா?'' – பிரவீண் ஈன சுரத்தில் கேட்டான்.

''ஆமாம் பிரவீண். ஜீன் டெஸ்ட் – அது இதுன்னு மிரட்டினான். 'முதல்ல அதுக்கு ஏற்பாடு செய்'னு சொல்லிட்டேன் நான் சொன்னது சரிதானேடா?''

– பிரபாகர், பிரவீணைப் பார்த்துக் கேட்டபோது, பிரவீண் முகத்தில் சுரத்தில்லை.

''என்ன பிரவீண்... உனக்கு அதுல சம்மதமில்லையா?''

''அப்படி இல்ல பிரபா... கலா ஒரு காலைச் சுத்தின பாம்பு. இதுல நாம ஜெயிச்சாலும், இன்னொண்ணுல கடிப்பா! அதை நினைச்சுப் பாத்தேன். அதான்...''

''அதையும் பாத்துடுவோம் பிரவீண் நீ கவலைப் படாதே – போ! போய் ரெஸ்ட் எடு-ப்ளீஸ்! நாங்க எல்லாரும் இருக்கோம்ல...''

–பிரபாகர் தைரியம் தந்தான். வாசுகியைப் பார்த்தான். அவளும் கலங்கிப் போயிருந்தாள்.

பிரவீணைக் கைப்பிடித்து, படுப்பதற்காக அழைத்துச் செல்லத் தொடங்கினாள்.

மனோரஞ்சிதமும் சகுந்தலாவும் பிரபாகரைப்பார்த்து வெறித்தனர்.

''பிரபா...! அந்த வக்கீல் வேற என்ன சொன்னான்?''

– சகுந்தலா, கவ்விய பயத்தோடு, சன்னமான குரலில் கமறல்களுடன் கேட்டாள்.

''பயப்படதீங்க அத்தை... வி.ஐ.பி.க்கள் வாழ்க்கைல இதெல்லாம் சகஜம். நான் பாத்துக்கறேன்...'' – அவன் குரலில் உறுதி தொனித்தபோது, பிரவீண் பங்களா முகப்பில் போலீஸ் ஜீப் ஒன்றின் சீற்றமான தேக்கம்!

14

ஜீப்பிலிருந்து இன்ஸ்பெக்டர் ஒருவர் இறங்கினார். கூடவே இரண்டு கான்ஸ்டபிள்கள்.

கைதிபோல் ஒருவனை விலங்கு போட்டு உடன் அழைத்து வந்திருந்தார்கள்.

அத்தனை பேரோடும் வேகமாக உள்ளே நுழைகிறார் இன்ஸ்பெக்டர்.

'ஐய்யய்யோ...இதென்ன விபரீதம்?'

– வாட்ச்மேன் முகத்தில் பூச்சி பறந்தது.

இன்டர்காமில் முந்திக் கொண்டு செய்தியைச் சொல்லப் பார்த்தான். பலனில்லை. இன்ஸ்பெக்டர் உள்ளே நுழைந்துவிட்டார்.

ஹாலில் இருந்த பிரபாகரும் பிரவீணும்–இன்ஸ்பெக்டரைப் பார்த்து முகத்தில் வியப்பைத் தேக்கிக்

கொள்ள-சகுந்தலாவும் மனோரஞ்சிதமும் விக்கித்துப் போகின்றனர்.

பிரபாகர் சுதாரிப்போடு முன் வந்தான்.

"என்ன சார்— என்ன விஷயம்?"

இன்ஸ்பெக்டர் அவனைத் தவிர்த்துவிட்டு, பிரவீணைப் பார்த்தார்.

"மிஸ்டர் பிரவீண்... ஒரு முக்கியமான என்கொயரிக்காக நான் இப்ப வந்துருக்கேன்...!" என்றுதான் பேச்சையே ஆரம்பித்தார்.

தடுமாற்றத்தோடு முன் வந்த பிரவீண், அவரை உட்காரக்கூடச் சொல்லாமல் பதட்டத்தோடு பார்த்தான்.

"இந்த நபரை உங்களுக்குத் தெரியுமா?"-இன்ஸ்பெக்டர், தான் விலங்கிட்டு அழைத்து வந்த நபரைக் காட்டி கடுமையான குரலில் கேட்டார்.

"இவரையா...? தெரியாதே..! ஏன் சார்... என்ன விஷயம்?"

"இவர் போதை மருந்து வெச்சிருந்து கைது செய்யப்பட்டிருக்கார்..! இவரை விசாரிச்சதுல, நீங்கதான் இவர்கிட்ட போதை மருந்து கேட்டதாகவும், உங்களுக்கு அதை சப்ளை பண்ணிட்டு வரும்போது எங்க கிட்ட மாட்டிகிட்டதாகவும் சொல்றார். உங்க வீட்டைக் கொஞ்சம் நாங்க சோதனை போடணுமே..!"

– சர்வசாதாரணமாக ஒரு குண்டைப் போட்டுவிட்டு, அந்த அழகிய பங்களாவின் எல்லா பாகங்களையும் ஒரு பார்வை பார்த்தார்.

"என்னது.. போதை மருந்தை நான் இவர்கிட்ட வாங்கினேனா...? என்ன இன்ஸ்பெக்டர் இது அநியாயம்...?" –பிரவீண் அலறினான்.

உடம்பின் உஷ்ணத்தோடு, மனதில் பீறிட்ட திடீர் உஷ்ணம் போட்டியிட்டது.

"ஐ ஆம் சாரி மிஸ்டர் பிரவீண்... நீங்களா உண்மையை ஒத்துக்கிட்டா உங்களுக்கு நல்லது. நாங்க சோதனை போட்டு போதை மருந்தைக் கண்டுபிடிச்சா அப்புறம் ரொம்ப அசிங்கமாயிடும்...!"

– இன்ஸ்பெக்டரின் குரலில், முடுக்கிவிடப்பட்ட ஒருவித செயற்கையான வேகம் நன்கு தெரிந்தது.

பிரவீண் மயங்காத குறையாக ஹாலின் சோபாவில் பொத்தென்று விழுந்தான். வாசுகி கலக்கத்தோடு தெருங்கி வந்து நின்று கொண்டு போலீஸாரைப் பார்த்தாள்.

அந்த விலங்கிடப்பட்டவன் சாதுப் பூனைபோல முகத்தை வைத்துக்கொண்டு, பதிலுக்கு அவர்களைப் பார்த்தான்.

"இன்ஸ்பெக்டர் சார்...இது அநியாயம்... எவனோ-எதையோ சொன்னான்கறதுக்காக நீங்க இப்படி நடந்துக்கறதும் பேசறதும் நல்லா இல்லை.. பிரவீண் ஒரு கௌரவமான நடிகன்..."

– பிரபாகர் சீறிக்கொண்டு முன் வந்தான்.

"அது சோதனையில் தெரிய வேண்டிய விஷயம் மிஸ்டர்...!" இன்ஸ்பெக்டர் பதில் சீற்றத்தைக் காட்டினார்.

சகுந்தலாவும், மனோரஞ்சிதமும் என்ன பேசுவது என்றே தெரியாமல் முழித்தனர்.

"என்னைக் கடமையைச் செய்ய விடுங்க...உங்க பேர்ல எந்தத் தப்பும் இல்வேன்னா அது எங்க சோதனையில் தெரிஞ்சு போகட்டும். ஏன் வறட்டுத் தவளை மாதிரி கத்தறீங்க...!"

இன்ஸ்பெக்டர் 'சோதனை செய்யாமல் போகமாட்டேன்' என்கிற தொனிக்கு மாறினார்.

பிரபாகருக்கும் புரிந்து போயிற்று ..

இது சதியின் அடுத்த கட்டம்...இப்படி எல்லாம் சம்பவங்கள், பிரவீண் நடித்த படங்களில்தான் வந்திருக்கிறது. அதெல்லாம் கற்பனை. ஆனால் நிஜமோ என்று நினைக்க வைத்தார் அந்த இன்ஸ்பெக்டர்.

''பிரபா... விடு...அவங்க தேடட்டும்...'' பிரவீண் தலையை உதறியபடி சொன்னான்.

அடுத்த நொடியே போலீஸார் அந்த பங்களாவைச் சலிக்கத் தொடங்கிவிட்டனர்.

இப்படி எல்லாம் நடக்கப் போகிறது என்று எப்படித் தான் தெரிந்ததோ சில பத்திரிகையாளர்களுக்கு?

பிரவீண் பங்களா முகப்பில் பறந்து வந்திருந்தார்கள்.

எட்டிப் பார்த்த பிரபாகருக்கு நெஞ்சையடைத்தது.

வாசுகி கரகரவென்று அழ ஆரம்பித்தாள். சகுந்தலா அவளைத் தாங்கிக் கொண்டாள்.

மனோரஞ்சிதம் பிரபாகரிடம் ''என்னடா பிரபா இதெல்லாம்...?'' என்றாள்.

''பொறும்மா...இது பிரவீணுக்கு வேண்டாதவங்க பண்ற வேலை...'' என்ற அவன் எதிரில் போலீஸ் அந்த மொத்த பங்களாவையும் சல்லடையிட்டுத் தேடிக் கொண்டிருந்தது.

ஒரு அறையில் பிரவீணின் அப்பா முழு போதையில் படுத்திருந்தார். அவரை நெருங்கிய ஒரு போலீஸ்காரர், அந்த அறையை மட்டுமே ஒரு பார்வை பார்த்துவிட்டு வெளியே வந்தார்.

சலிப்பில் பிரவீணின் அறைதான் பாடாய்ப்பட்டது.

கிட்டத்தட்ட மூன்று மணி நேரம். எதுவுமே அகப்படவில்லை.

அந்த இன்ஸ்பெக்டர் அந்தக் கை விலங்கு மனிதனைப் பார்த்துக் கத்தினார்.

''யோவ்... எங்கையா...எதுவும் காணுமேய்யா... எங்களைத் திசை திரும்பலாம்னு நினைக்கறியா?''

அவன் மிடறு விழுங்கினான்.

''இல்ல சார்...இந்த ரூம்ல வெச்சுதான் கைல கொடுத்தேன். கால்கிலோ பிரவுன் சுகர் சார்...!'' என்றான்.

''காணுமேய்யா...! மிஸ்டர் பிரவீண்...உண்மையச் சொல்லுங்க...எங்க பிரவுன் சுகர்?'' இன்ஸ்பெக்டர் திரும்பிப் பாய்ந்தார்.

நடுவில் பிரபாகர், வக்கீலுக்குப் போன் செய்யத் தொடங்கினான்.

''சார்...கொஞ்சம் சீக்கிரமா வாங்க...போலீஸ்காரங்க வந்து அசிங்கப்படுத்திட்டிருக்காங்க...'' என்றான்.

போதை மருந்து கிடைக்காத ஆச்சரியத்திலும்... அதிர்ச்சியிலும், இன்ஸ்பெக்டரிடம் சுருதி குறைந்திருந்தது. வக்கீல் வரப்போவது வேறு டென்ஷனைக் கூட்டியது.

பிரபாகர் அவரைக் கோபத்துடன் முறைத்தான்.

''இதெல்லாம் சிலரோட சதின்னு எங்களுக்கு நல்லா தெரியும் இன்ஸ்பெக்டர் ..இதை நான் சும்மா விடப் போறதில்லை...''

"சாரி மிஸ்டர்...போதை மருந்து விஷயத்துல டிபார்ட்மென்ட் ரொம்ப ஸ்ட்ரிக்டா இருந்தாகணும்னு மேல் மட்டத்துல இருந்து உத்தரவு... அதனாலதான் இந்த நபர் கம்ப்ளைண்டுக்கு மதிப்புக் கொடுத்து வந்தோம்."

– அவர் பேச்சில் இப்போது சுருதி குறைந்து, பதட்டம் தெரிந்தது.

"சரி, இப்ப இல்லைன்னுதான் தெரிஞ்சு போச்சுல்ல.. இப்ப என்ன சொல்றீங்க?"

"வெரி சாரி...! இவன் ராங் இன்ஃபர்மேஷன் கொடுத்துருக்கணும், வெரி வெரி சாரி...நாங்க கிளம்பறோம்...!" அவர் தழுவப் பார்த்தார்.

"இருங்க...நாளைக்கே இன்னொருத்தன் எதாவது சொல்வான் உடனே கூட்டமா வந்து இப்படி சோதனைங்கற பேர்ல டார்ச்சர் தரமாட்டீங்கங்கறதுக்கு என்ன உத்தரவாதம்?"

– நடுவில் தொலைபேசி சப்தம் பிரவீணைக் கூப்பிட்டது.

மறுமுனையில் சினிமாவின் ஒரு முக்கியப் புள்ளி பேசினார்.

"என்ன பிரவீண்...எதாவது பிரச்சினையா?" உள்ளே நடப்பதை லைவ் டெலிகாஸ்டில் டி.வி. யில் பார்த்தவர்போலக் கேட்டார்.

"ஆமாம் சார்...யாரோ என்னவோ சொன்னான்கறதுக்காக போலீஸ்காரங்க வந்து சோதனைங்கற பேர்ல டார்ச்சர் பண்றாங்க..!"

"அப்படியா...நான் இப்பவே நமக்குத் தெரிஞ்ச மினிஸ்டர்கிட்ட பேசறேன். கவலைப்படாதீங்க..."

– அவர் தைரியம் தருவதுபோல ஒரு வலை பின்னினார்.

"அவசியமில்ல சார்...! நான் எந்தத் தப்பும் பண்ணலை! போலீஸும் சாரி சொல்லிடுச்சு..."

"அப்படியா?"

"ஆமாம் சார்...!"

"இப்ப போலீஸ் அங்க இருக்கா...?"

"இருக்காங்க..."

"அவங்ககிட்ட கொஞ்சம் ரிசீவரைத் தாங்க..."

– பிரவீண் உடனே ரிசீவரை இன்ஸ்பெக்டரை அழைத்துத் தந்தான். வாங்கிக் காதைக் கொடுத்தவர் முகத்தில் சொல்ல முடியாத அளவு கசங்கல்கள்.

"யெஸ் சார்...யெஸ் சார்..." என்று பல தடவை சொல்லிவிட்டு ரிசீவரை வைத்தார். பின் பிரவீணை ஏறிட்டார்.

"வெரி வெரி சாரி மிஸ்டர் பிரவீண்..." என்றார் பதினுக்கு, பிரவீண் பதில் சொல்லத் தோன்றாமல் அவரை முறைத்தான்.

"இனி இந்த மாதிரி நடக்காது...நாங்க வரோம்..." அவர் புறப்பட்டார்.

வெளியில் பத்திரிகையாளர்கள் அவரை வளைத்துக் கட்டினர்.

"என்ன சார் பிராப்ளம்...?"

"ஒண்ணுமில்லை..."

"ஏதோ போதை மருந்து சமாச்சாரம். நீங்க பிரவீனைக் கைது செய்யப் போறதா தகவல் வந்ததே...?"

"இல்ல...எல்லாம் பொய்..."

–இன்ஸ்பெக்டருக்கு அவர்களிடமிருந்து தப்பித்தால் போதும் என்று தோன்றியது.

இருந்தும் கை விலங்கிடப்பட்ட மனிதனோடு ஜீப்பில் ஏறும்போது வளைத்துக் கட்டி புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள்.

உள்ளே ..

தலையை நிமிர்த்த முடியாதபடி தொங்கப் போட்டிருந்தான் பிரவீண். பிரபாகர் நெருங்கி வந்து ஆறுதலாக தோளைத் தொட்டான்.

"பிரவீண்" பிரபா உதடு நிமிர்ந்து கேவியது.

"தம்பி...என்னப்பா இப்படி எல்லாம் நடக்குது... இதெல்லாம் யாரோட வேலை?" –சகுந்தலாவும் சேர்ந்து கேவினாள்.

"அத்தை...இதெல்லாமே அந்தப் போட்டி நடிகன் வேலை. பிரவீணை ஒழிக்க எல்லாவிதத்துலையும் அவன் முயற்சி செய்யறான். இங்க வந்துட்டுப் போனதெல்லாம் நாடகம்..."

"அது சரிப்பா...! எந்த நம்பிக்கைல அவங்க சோதனை போட வீட்டுக்கு வந்தாங்க?"

"ஏதோ தப்பு நடந்துருக்கு ..கொஞ்சம் முந்தி கூட்டமா பலர் வந்தப்போ, அதுல ஒருத்தன் பிரவீண் ரூம்ல பிரவுன் சுகர் பொட்டலத்தை ஒளிச்சு வெச்சிருக்கணும். அதை நம்பித்தான் இந்த இன்ஸ்பெக்டரும் வந்திருக்கணும்..!"

"அத எப்படிப்பா அவ்வளவு உறுதியா சொல்றே?"

"ஆமாம்...! கூட்டிக் கழிச்சுப் பார்த்தா அப்படித்தான் தெரியுது... இங்க போலீஸ் இருக்கும்போதே ஒரு

சி.ஐ.பி. போன் பண்ணி பிரச்சினையான்னு கேக்கறாங்ன்னா என்ன அர்த்தம்?"

"அப்ப இது திட்டமிட்ட சதியா...? அது சரி; அவர் எதுக்குக் கேக்கணும்?"

"திட்டமிட்டபடி வேலை நடக்குதான்னு தெரிஞ்சிக்கப் பாத்துருக்கார் அந்த நபர். இல்லேன்னவுடனே பல்டி அடிச்சு உதவி செய்யற மாதிரி பாவ்லா பண்ணியிருக்கார்..."

"உன் கணக்குப்படி பார்த்தா, பிரவீண் ரூம்ல பிரவுன் சுகர் இருந்துருக்கணுமே...? வீடு பூரா தேடியும் கிடைக்கலியே...?

"அதான் எனக்கும் புரியல..." பிரபாகர் நகத்தைக் கடிக்கும்போது, பிரவீணின் அப்பா படுத்திருக்கும் அறையில் ஏதோ சப்தம் கேட்டது.

எட்டிப் பார்த்தபோது, அவர் பிரவுன் சுகர் பொட்டலத்தைக் கைகள் நடுங்கப் பிரித்துக் கொண்டிருந்தார்!

"மைகாட்!"–நெஞ்சையடைத்தது பிரபாகருக்கு.

ஓடிப்போய் அவரிடமிருந்து பொட்டலத்தைப் பிடுங்கிப் பார்த்தான். அவரும் அவனை ஒரு மாதிரிப் பார்த்தார்.

"சார்... இது எப்படி உங்ககைல?"–அலறினான்.

"பிரவீண் ரூம்ல ஒரு இடத்துல இருத்துச்சு. என்னவோ ஏதோன்னு பார்த்தேன். பிரவுன் சுகர். ஒசைப்படாம எடுத்துக்கிட்டு வந்துட்டேன். ஆமா... பிரவீணுக்கு எத்தனை நாளா இந்தப் பழக்கம்?"

அவர் முகத்தை ஒரு மாதிரி வைத்துக் கொண்டு கேட்ட விதத்தில் துளிகூட லஜ்ஜையே இல்லை.

"ஆமா... இங்க போலீஸ் செக் பண்ணலியா?"

"பண்ணாங்களே— நான் இடுப்புலல்ல மறைச்சு வெச்சுக்கிட்டுப் படுத்திருந்தேன்...."

பிரபாகர் அடுத்த நொடி அவரைப் பார்த்துக் கை கூப்பினான்.

"நீங்க இப்படி குடிகாரரா இருக்கீங்களேன்னு நான் ரொம்ப வருத்தப்பட்டதுண்டு. ஆனா இப்ப அதுக்காக சந்தோஷப்படறேன். ரொம்ப நன்றி சார்..!"— என்றவன் பொட்டலத்தோடு வெளியில் வர, சகுந்தலாவும் மனோரஞ்சிதமும் அவனைச் சூழ்ந்து கொண்டனர்.

வாசுகியும் பிரவீணும்கூட நெருங்கி வந்தனர்.

பிரபாகர் பொட்டலமும் கையுமாகப் பேசினான்.

"பிரவீண்— இந்த தடவை உன் அப்பாவால தப்பிச்சுட்டே...! கடவுளுக்கு முதல்ல நன்றி சொல்லு... அதே சமயம், இனியும் நீ சுதாரிக்கலேன்னா ரொம்ப ஆபத்துடா...! உன் எதிரிகள் ரொம்பக் கொடுமையானவங்க.."

பிரபாகர் அந்த நடிகனுக்காக அப்படிச் சொன்ன போது—அதை ஆமோதிப்பதுபோல தொலைபேசி சப்தித்தது.

பிரபாகர் ஓடிப்போய் எடுத்தபோது மறுமுனையில் ஒரு எச்சரிக்கைக் குரல்.

"இந்தத் தடவை பிரவீண் தப்பலாம். ஆனா அடுத்த தடவை தப்பவே முடியாது!"

பிரபாகருக்கு அடுத்த க்ஷணமே நெஞ்சைக் கரித்தது.

15

எச்சரிக்கைக் குரல் அத்தோடு முடிந்து போனது.

பிரபாகரும் தொலைபேசியை முடக்கிவிட்டுத் திரும்பினான். அடிக்கு மேல் அடி! இருந்த போதிலும் முகத்தில் காட்டிக் கொள்ளவில்லை.

"யார் பிரபா?"—பிரவீணிடம் இருந்து கேள்வி பாய்ந்தது.

"யாரோ ரசிகராம்... நீ பரிபூரண குணமாக ஷவிஸ் சொன்னார்" — சமாளிப்பு க்ஷணத்தில் வசப்பட்டது. பிரவீண் பெருமூச்செரிந்தான்.

"என்னடா உலகம் இது... ஒரு பக்கம் வாழ்த்து— மறுபக்கம் அழிக்க முயற்சி..."—விரக்திச் சிரிப்பும் அரும்பியது.

சகுந்தலாவும், மனோரஞ்சிதமும் என்ன பேசுவது என்று தெரியாதபடி உட்கார்ந்திருந்தனர்.

"என்னங்க..." பிரவீண் குரல் அவர்களைத் திருப்பியது.

"நடக்கறத எல்லாம்பார்த்து உங்களுக்குக் கலக்கமா இருக்கா?" மிடறு விழுங்கியபடி கேட்டான்.

அவர்கள் வரையில் மௌனம் தொடர்ந்தது.

"இவ்வளவும் நான் பேர் சொல்ற ஒரு நடிகனா இருக்கறதாலதான். வேணும்னா நான் வாசுகிக்காக நடிக்கறதையேகூட நிறுத்திக்கிறேன்..."

அவன் சொன்ன மறுநொடி, வாசுகி சிருட்டென்று நிமிர்ந்து பார்த்தாள்.

'உன்னை எதை வைத்து நேசித்தேனோ-அதை யேவா எனக்காகத் துறக்கிறேன் என்கிறாய்?''-அவள் கண்களில் கேள்வியும் அதிர்ச்சியும் கலந்து ஓடியது.

''டேய்... என்னடா ஃபூல் மாதிரி பேசறே...?'' யாராவது மூட்டைப் பூச்சிக்குப்பயந்துகிட்டு கட்டிலைக் கொளுத்துவாங்களா?''-பிரபாகர் கோபித்தான்.

அப்படியே அந்த போதை மருந்துப் பொட்டலங்களை டாய்லெட் ஃப்ளெஷ் அவுட்டில் கொட்டி, தண்ணீரையும் பாய்ச்சிவிட்டுத் திரும்பி வந்தான்.

எல்லோருமே இறுக்கமாக அமர்ந்திருந்தார்கள்.

''வாசுகி... அவனைக் கூட்டிக்கிட்டு போ... போய் முதல்ல ரெஸ்ட் எடு. எது வந்தாலும் சரி; நீங்க வெளியே வரக்கூடாது நான் பார்த்துக்கறேன்...'' பிரபாகர் குரலில் தீர்மானம் தொனித்தது.

வாசுகி, பிரவீணை அழைத்துக் கொண்டு அறைக்குச் சென்று, கதவையும் தாழிட்டுக் கொண்டாள்.

அடுத்த நொடியே தொலைபேசி ரிசீவரை எடுத்துக் கீழே வைத்தவன், வெளியே சென்று வாட்ச்மேனைப் பார்த்து சீரியஸாக, 'யாரையும் உள்ளே விடாதே' என்று எச்சரித்துவிட்டுத் திரும்பினான்.

ஹாலில் அமர்ந்திருந்த மனோரஞ்சிதத்தையும் சகுந்தலாவையும் அழைத்துக் கொண்டு மாடிக்குப் போனான்.

ரெட் டைல்ஸ் பாவிய வழவழப்பான தரை... பெரிய டிஷ் ஆண்டனாகொண்ட மேடை... ஓரமாக சின்டெக்ஸ் வாட்டர் டேங்க்... ஊடே வகிட்டைப் பிரித்தபடி வீசும் காற்று. ''இங்க எதுக்குடா கூட்டிக்கிட்டு வந்தே?''

மனோரஞ்சிதம் பேச்சை ஆரம்பித்தாள்.

''காரணமாகத்தான்மா...'' சொன்னபடி கேட்டுக்கு வெளியே பார்த்தான். சில ரசிக முகங்களும், வாட்ச்மேன் விரட்டலும் தெரிந்தது.

''என்ன காரணம்?''

''அத்தே... நான் வாசுகியைப் பிடிச்சு, ஒரு பிரச்சினைக்குரிய நபர்கிட்ட மாட்டிவிட்டுட்டதா ஃபீல் பண்றீங்களா?''

சகுந்தலா அந்தக் கேள்வியைக் கேட்டு அதிர்ந்தாள்.

''இதைக் கேக்கவா இங்க கூட்டிக்கிட்டு வந்தே?''

''நீங்க நினைக்கறதப் பேசுங்க அத்தை...''

''நடந்து முடிஞ்சதைப் பத்தி என்னப்பா பேசறது... இனி நடக்கப் போறதைப் பேசு...!''

''அததான் சொல்லப் போறேன். பிரவீணுக்கு இப்ப அம்மை போட்ருக்கலேன்னா, நிச்சயமா அவங்க ரெண்டு பேரையும் ஸ்விட்சர்லாந்துக்கு அனுப்பியிருப்பேன். இப்ப அவங்க ரெண்டு பேரும் இங்க இருக்கறதே தப்பு. ஆனா வேற வழி இல்லை...''

''இது தெரிஞ்ச விஷயம்... நீ வேற எதையோ கேக்க நினைக்கறே... அதைக் கேளு...!''

''பிரவீண் ரொம்ப நல்லவன். அவன் பணமும் புகழும்தான் இவ்வளவு சிக்கலுக்கும் காரணம். இதை அவன் உதறிட்டா பிரச்சினைகளும் நீங்கிடும். உதறாமப் போராடினா முதலமைச்சராகவே ஆக வாய்ப்பிருக்கு...! நான் அவன் அந்த அளவு உயரணும்னு ஆசைப்படறேன். நீங்க?''

பிரபாகர், ரத்தினச் சுருக்கமாகச் சொல்லிக் கேட்ட விதத்தில் ஊசியின் கூர்மை!

மனோரஞ்சிதமும் சகுந்தலாவும் ஒரு க்ஷணம் எந்த பதிலைக் கூறுவது என்பது தெரியாத திகைப்பிற்கே போய் விட்டனர். பின் சுதாரிக்கத் தொடங்கினர்.

"இதோ பாருப்பா... என் மாப்ளை முதலமைச்சர் ஆகணும்ங்கறதுல்லாம் என் விருப்பமில்லை. அவங்க சந்தோஷமா இருந்தா–அதுவே போதும். இந்தப் போராட்டமெல்லாம் வேணடாம்ப்பா...!" - சகுந்தலா கசிந்தாள். மனோரஞ்சிதம் மகனை வெறித்தாள்.

"என்னம்மா... நீ என்ன சொல்றே?"

"நான் சொல்ல என்னடா இருக்கு...? பொண்ணைக் கொடுத்துருக்கறது உங்க அத்தை... அவ சொல்லட்டும்..."

"அதான் சொல்லிட்டேனே... சம்பாதிச்சது போதும்... நடிப்புக்கு முழுக்குப் போடச் சொல்லு... சம்பாதிச்சதை வெச்சு எதாவது தொழில் செய்யட்டும். நடிகனா இருக்கும்போதே கண்டபடி பிரச்சினைங்க வருது... முதலமைச்சரானா இன்னும் கூடத்தானே செய்யும்?;'

- சகுந்தலா யதார்த்தமாகப் பேசினாள். அவளது ஆசையில் பயம் இருந்ததால், அதில் ஒரு ஒழுங்கும் இருந்தது. பிரபாகர் அதைக் கேட்டுச் சிரித்தான்.

"அத்தே – ஒரு இந்திய நாட்டு சராசரிப்பொண்ணா தான் பேசறீங்களே தவிர, யோசிச்சுப் பேச மாட்டேங்கிறீங்களே...?"–அவனது அடுத்த கேள்வி அவளைக் கொத்தியது.

"சரி; என் மாப்ளை முதலமைச்சரானா எனக்கும் சந்தோஷம்னே வை...! இப்ப இதை என்கிட்ட கேக்கற தோட நோக்கம்?"

"அப்படி வாங்க...! நாளைக்கே பிரவீண் ஒரு அரசியல் கட்சியில சேர்ந்தாலோ, இல்ல–அவனே புதுக் கட்சி ஆரம்பிச்சாலோ – இப்ப இருக்கறதைவிடப் பல மடங்கு எதிர்ப்புவரும். அப்பல்லாம் நீங்க பயப்படவோ–கவலைப்படவோ கூடாது. வாசுகியோட இருந்து, அவளுக்கும் உங்க மாப்ளைக்கும் தைரியம் தரணும்... தருவீங்களா?"

– பிரபாகர் பேசும் விதத்தைப் பார்த்தால், அவன் ஏதோ ஒரு முடிவுக்கு வந்துவிட்டதுபோலத் தோன்றியது.

"புதுக்கட்சி... இல்லேன்னா ஒரு அரசியல் கட்சியில மாப்ளை சேரப் போறாரா...? உன்கிட்ட சொன்னாரா?"

"என்கிட்ட சொல்லலை... நான்தான் சொல்லப் போறேன் அப்படி...!"

"உன் ஆசைக்கு அப்ப அவர் இணங்கணுமா?"

"இது ஆசை இல்ல அத்தை... இது ஒருவித லட்சியம். பிரவீண் – ஒண்ணு இந்த லட்சியத்தை நோக்கி நடக்கணும். இல்லேன்னா - இருக்கற இடமே தெரியாதமடி தலைமறைவாயிடணும். அப்பதான் அவன் உயிரோடையே இருக்க முடியும்...!"

"என்னப்பா... என்னென்னமோ சொல்றே?"

"ஆமா அத்தை..பெரிய ஆளா ஆயிட்டாலே இந்தத் தலைவலிகளைத் தவிர்க்க முடியாது. அதுவும் இந்தியா இப்ப இருக்கற நிலைல, பாப்புலாரிட்டியை சுலபமா தரக்கூடிய மீடியால யார் இருந்தாலும் அவங்க இதைச் சந்திச்சே தீரணும்...!;'

"வேற வழியே இல்லையா?"

"நான்தான்சொன்னேனே... ஓடி ஒளியறதுன்னு..."

–மொட்டை மாடியில் குளிர்க்காற்று வீசிக் கொண்டிருந்தது. ஆனால் பிரபாகர் சொல்லும் விஷயங்களில் அனல் அடித்தது.

"நாம இங்கு இருந்து பேசறத விடு... மாப்ளை என்ன நினைக்கறார்னு தெரியணுமே?"

–சகுந்தலா கொஞ்சம் இறங்கி வந்தாள்.

"நாம பக்கபலமா இருப்போம்னா அவன் எதைச் சொன்னாலும் கேப்பான்..."

"சரி... இப்ப அந்தப்பொண்ணோட பிரச்சினையை எப்படித் தீர்க்கப் போறீங்க?"

"எந்தப் பொண்ணோட பிரச்சினைய அத்தை...?"

"இதான்பா... 'கலா'ங்கற நடிகை தன் குழந்தைக்குத் தகப்பன் என் மாப்ளைன்னு சொன்னதை!',

"அதான் ஜீன் டெஸ்ட்டுன்னு ஒண்ணு இருக்கே... மரபணு சோதனை. அதுல அவ சாயம் வெளுத்துட்டுப் போகுது...!"

"அந்தச் சோதனைல எந்தத் தப்பும் வந்துடாதே?"

"பார்த்தீங்களா... பயப்பட்றீங்களே...! இதுக்குத் தான் அப்பவே சொன்னேன். உறுதியா நிக்கணும்னு!"

"சரிப்பா...நான் உறுதியா நிக்கறேன். உன் மாமா, என் பிள்ளை எல்லாரும் சேர்ந்து துணை நிக்கறோம். என் மாப்ளையை எதிர்க்கறவங்க ஓடி ஒளியணும். என்ன பண்ணணுமோ பண்ணு...!"

–சகுந்தலா உச்சபட்சமாக அந்த உறுதியைத் தந்த போது தொலைவில் கோவில் மணியடித்தது.

பிரபாகர் சிலிர்த்துப் போனான். அந்தச் சிலிர்ப்பு குறையாதபடிக்குக் கீழே இறங்கி வந்தான். பிரபல பத்திரிகை ஒன்றுக்கு போன் செய்தான்.

'பிரவீண் அரசியலில் குதிக்கப் போகிறார். எந்தக் கட்சியில், எப்பொழுது சேருவார் என்பது பின்னர் அறிவிக்கப்படும்' – என்று எழுதி வைத்ததைப் படித்தது போலச் சொல்லிவிட்டு போனை முடக்கினான்.

முதல் காயை நகர்த்தியாகி விட்டது. இனி இது தன் வேலையைக் காட்டும்!

அடுத்து நடக்கப் போவதைக் கவனிக்கத் தொடங்கினான். அந்தச் செய்தியைச் சொல்லி முடித்த பத்தாவது நிமிடம், ஒரு பிராந்தியக் கட்சித் தலைவர் முந்திக் கொண்டு போன் செய்து கேட்டார்.

"தம்பி நம்ப கட்சியிலதான் சேரணும். இது எங்க ஆசை..."

"பார்க்கலாம்..."

"தம்பீகிட்ட சொல்லுங்க... மினிஸ்ட்ரி ஃபார்ம் பண்ணா விரும்பற இலாகால மந்திரியா போட்றோம்..."

"சொல்றேன்..."

அந்தப் பேச்சு அத்துடன் முடிந்தது. அடுத்த அரைமணியிலேயே டெல்லியில் இருந்தே போன்...!

"எங்க கட்சியிலதான் அவர் சேருவார்னு நினைக்கறோம். அட்வான்ஸ் வாழ்த்துக்கள்...!" என்றார் ஒரு கட்சியின் செயலாளர்.

நடுவில் டி.வி. செய்தியிலும் பிரபாகர் சொன்னது ஒளிபரப்பாயிற்று.

செய்தி, ஜோதிநாத்தை ஒரு கலக்கு கலக்கி விட்டிருந்தது. அவன் சார்ந்திருக்கும் கட்சித் தலைவரே கூட,

பிரவீண் தங்கள் கட்சியில் சேரக்கூடும் என்கிற நம்பிக்கையில் இருப்பது தெரிந்தபோது, ஆடிப்போய் விட்டான்.

'அவன் தன் முடிவை அறிவிக்கும் வரையில் இப்போது எல்லோரும் அவனுக்கு நண்பர்கள். இந்த நிலையில், ஜீன் டெஸ்ட் நடந்தால் டாக்டர்களைக் கைக்குள் போட்டுக் கொண்டு எதையும் செய்ய முடியாதே...?''

ஜோதிநாத்தின் சிந்தனை, பிரபாகர் வசமாக நகர்த்திய ஒரு மூவில் ஆட்டம் கண்டு, அவனை பாட்டில் பாட்டிலாக பீர் குடிக்க வைத்து விட்டது.

இடையில் கொண்டையய்யா வந்தான்.

''வாத்யாரே...பிரவீண் சினிமால மட்டுமில்ல; ரியல் லைஃப்லயும் நல்லாவே ஆக்ட் கொடுக்கறான்பா! என்னமா செக் வெச்சுட்டான் பார்த்தியா?''

–பீர் குடித்தபடியே அவன் கேட்டவிதம் எரிச்சலைத் தந்தது.

''இதைச் சொல்லத்தான் வந்தியாக்கும்...?''

''இப்ப என்ன பண்ணணும்கறே?''

''அவன் வசமா மாட்டணும். மானம் போற மாதிரி மாட்டணும்...!'' –கண்கள் சிவக்க ஜோதிநாத் கத்தியதைப் பார்க்கவும், கொண்டையய்யாவுக்கே கதி கலங்கிப் போனது.

''ஒரு வழி இருக்கு..ரொம்ப கச்சடாத்தனமான வழி–பரவால்லன்னா சொல்றேன்...'' –கொண்டையய்யா பீடிகை போட, ''சொல்லு..'' என்று அலறினான் ஜோதிநாத். ஊடே செல்லில் யாரோ கூப்பிட்டார்.

''சார்... பிரவீண் பண்ண அறிவிப்பால, அவரோட கரண்ட் பிக்சரோட மார்க்கெட் ரேட் கிர்றுன்னு ஏறிடிச்சு...! ஒரு மாசமா லேப்ல ஸ்லோ பிராசஸ்ல இருந்

நதை, புரொட்யூசர் புத்திசாலித்தனமா யூஸ் பண்ணிகிட்டார்...''

''அது எப்படியா அவன் எந்தக் கட்சியில சேர்றான்னே தெரியாத நிலைல மார்க்கெட் ஏறும்?''

''ஒவ்வொரு கட்சிக்காரங்களும் தங்களோட கட்சியிலதான் சேருவார்னு நினைப்பாங்க... அதுவே 15 நாளைக் காப்பாத்திடுமே...''

''புல்ஷிட்!''–செல்லை முடக்கி விட்டு, கொண்டையய்யாவுக்குக் காதைக் கொடுக்கவும், கொண்டையய்யா சொல்லி முடித்தான்.

ஜோதிநாத் முகத்தில் ஈயாட்டமில்லை! ஸ்தம்பிப்பு...!

16

அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தான் பிரவீண்! முகத்தில் அங்கங்கே முத்து முத்தாக அம்மைப் பொட்டுகள்... தலைமுடி கலைந்து முன் விழுந்து, அது ஒரு தனி அழகாகத் தெரிந்தது.

பக்கமாக நாற்காலியில் அமர்ந்தபடி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் வாசுகி. அறைக்குள் இதமான குளிர். ஆனால் மனதில் வெப்பம்...

இந்த மனது ஒரு புதிர்க் கொட்டாரம்.

எப்பொழுது – எதை எப்படி நினைக்கும் என்று சொல்லவே முடியாது.

வாசுகிக்குள்ளும் அவளது கல்லூரி கால நினைவுகள் முந்தி முந்தி முகம் காட்டுகின்றன.

ஆண்கள்தான் கட் அடித்துவிட்டு சினிமாவிற்குச் செல்ல வேண்டுமா என்ன? பெண்களும் போகலாம் என்று சக தோழிகளுடன் பிரவீண் படம் பார்க்கப் புறப்பட்ட சுதந்திர தினம் ஞாபகத்தில் முதல் டிக்கெட் எடுக்கிறது.

அப்படிப்போன போது, அதில் ஒரு பெரிய தொழிலதிபரின் மகளும் இருந்தாள். இடைவேளையின்போது, எனக்குக் கல்யாணம்னு ஒண்ணு நடந்தா அது பிரவீணோடதான் என்று அவள் திருவாய் மலர்ந்திருந்தாள்...

அவள் முயற்சித்திருந்தால் நடந்திருக்கும் அவள் அப்பாவிற்கு அப்படி ஒரு சக்தி.

'எங்கப்பாதான் இந்தப் படத்துக்கே ஃபைனான்ஸ் பண்ணினவர். நாளைக்கே அவர் ஒரு படம் பிரவீணை வெச்சு எடுக்கலாம். அப்ப நான் பிரவீணைக் கவிழ்க்காம விடமாட்டேன்' - என்றபடியே கோன் ஐஸை வாங்கி அதை நக்கியது, எதனாலோ இப்பொழுது வாசுகியின் மனதில் இழையோடுகிறது.

அவள் மட்டுமா?

வாசுகியறிய, பல பெண்கள் பிரவீண் புகைப்படத்தை ஜாக்கெட்டுக்குள் வைத்திருந்தார்கள்.

இவர்களில் சாவித்திரி என்பவள் வித்தியாசமானவள்.

'போயும் போயும் ஒரு நடிகனுக்காகப் போய் காயறீங்களே' என்று அவள் எதன் பேரில் சொன்னாளோ தெரியவில்லை. அதற்காக அவளைக் கொத்துப் பரோட்டாவாகக் கொத்தி எடுத்து கொடுமையும் நடந்து முடிந்தது.

அப்போதெல்லாம், 'பிரவீண் எங்கே? நாம் எங்கே?' என்றுதானே இந்த மனது நினைத்தது...

கூடவே எத்தனை அபத்தமான எண்ணங்கள்?

'இவர்கள் பாலில் குளிப்பார்கள், பன்னீரில் கை கழுவுவார்கள், மலர்ப் படுக்கையில்தான் படுப்பார்கள்' என்று எத்தனை அபத்தமான எண்ணங்கள்...?

பிச்சைக்காரனுக்குக்கூட நூறு ரூபாய் நோட்டைத் தானம் போடுமளவு கூடை கூடையாகப்பணம் என்றும்; ஒரு வேளை உடுத்திய துணியை மறுவேளை கட்டமாட்டார்கள் என்றும்கூட நினைத்தோமே ?

இன்றைய உண்மை நிலை என்ன?

பக்கத்தில்...

மிக மிகப் பக்கத்தில் அதுவும் அவனது உயிரில் பாதியாகக் கலந்து விட்ட மனைவியாகவே ஆகி, சமீபத்தில் அமர்ந்து பார்க்கும் போதுதானே எல்லாமே வெறும் மாய நினைப்பென்பது தெரிகிறது.

பிரவீண் மனைவியாகிவிட்டால் ரசிகர்களுக்கு அண்ணியாகவும், முதுகு சொறிந்து கொள்வதைக்கூட அவர்கள் ரசனையோடு ஒரு அதிசய விஷயமாகக் கருதுவார்கள் என்று நம்பியதும் நினைத்ததும்...?

ச்சே! எத்தனை பெரிய இமாலய அபத்தம் இது!

'இவனுக்கும் பிரபாகருக்கும் பெரிதாக என்ன வித்தியாசம் இருக்கிறது?'

வாசுகி பிரவீணை ஊன்றிப் பார்த்தபடியே கேள்விகளுக்குள் விழுகிறாள்...

'இந்த அம்மை பூத்த முகத்தையா நாம் கற்பனை செய்து பார்த்தோம்? பிரச்சினைக்குரிய இப்படிப்பட்ட சூழ்நிலைகளை எல்லாம் கற்பனையிலாவது நினைத்துப் பார்த்திருப்போமா?

அடேயப்பா! எத்தனை எதிரிகள்...எத்தனை எதிரிகள்? இதெல்லாம் எதில் போய் முடியும்...?'

அமைதியான அடைக்கப்பட்ட அந்த அறையில் அவளுக்குள் கேள்விகள்...கேள்விகள்...கேள்விகள்....

'இவன் முதல்வராக ஆவானா?

பிரபாகர் சொல்கிற மாதிரி அந்தத் திசை நோக்கிப் பயணிப்பதுதான் புத்திசாலித்தனமா? அதில் இவன் சிக்கல்கள் தீர்ந்து விடுமா?' கன்னத்தில் கை பதித்தபடி, ஆழ்ந்து உறங்கும் கணவனையே பார்த்துக் கொண்டு அவள் அமர்ந்திருக்க, அந்த நள்ளிரவில் கடிகாரக்குருவி மூன்று மணிக்கான சப்தத்தை 'குக்கூவ் குக்கூவ்... குக்கூவ்' என்று மூன்று முறை போட்டதில் அவன் புரண்டு படுத்தான்.

அப்படிப் படுக்கையில் கையும் மாறி கட்டிலுக்கு வெளியில் விழுந்தது. அதைத் தொட்டுத் தூக்கி படுக்கை மேல் வைத்தாள்.

அதன் எதிரொலியோ - இல்லை தற்செயலாகவோ அவனுக்கு முழிப்பு தட்டிற்று. கண் விழித்துப் பார்த்தான். கொட்டக் கொட்டப் பார்த்தபடி அமர்ந்திருக்கும் வாசுகி ஒரு மெழுகுச் சிலையாகக் கண்ணுக்குத் தெரிந்தாள்.

"வாசுகி...நீ இன்னுமா தூங்கலை?"-கேள்வியோடு கைகளை ஊன்றிக்கொண்டு அவன் எழுந்து அமர, அவள் அதற்கு இறுக்கமான மௌனத்தைப் பதிலாக வைத்தாள்.

"என்னம்மா உன்னைத்தான்..."?

"தூக்கம் வரலிங்க..."

"என்ன வாசுகி : என் நிலையை நினைச்சுக் கவலப் பட்றியா?"-தன் கைகளால் அவள் கரங்களை இழுத்துப் பிடித்தான்.

" ....."

"பேசும்மா...நான்லாம் நீங்க இருக்கற தைரியத்துல தான் இருக்கேன்..."

"இல்ல...பிரபா அத்தான் ஏதோ அரசியல் கட்சில சேர்றது-முதல் அமைச்சர் பதவி வரை போறதுன்னு புதுசா ஏதேதோ சொல்லிகிட்டிருந்தார்..."

"அவன் ஒருத்தன்-முதல் அமைச்சர் பதவி என்ன தேங்காயா...இல்ல மாங்காயா-ஏறிப் பறிச்சுக்க...? அது அவன் ஆசை! அவ்ளோதான்..."

"அப்ப நீங்க என்ன பண்ணப் போறீங்க?"

"பாப்போம்...முதல்ல நான் இந்த அம்மையில இருந்து விடுபடணும்...அப்புறமா அந்தக் கலா பிரச்சினை...எல்லாம் சரியாகட்டும்...!"

"அந்தக் கலாவுக்கு நீங்கன்னா ரொம்ப இஷ்டமா?"

பிரவீண் வாசுகியை உடனே ஊன்றிப் பார்த்தான். ஒரு சராசரிப் பெண்ணாக அவள் கேட்கிறாளா இல்லை விபரமறிந்து கேட்கிறாளா என்பது தெரியாதபடி ஒரு மாதிரி பார்த்தாள் அவள். நள்ளிரவின் நிச்சலனம் மிக உதவிக் கொண்டிருந்தது...

"நீ இந்தக் கேள்வில என்ன தெரிஞ்சுக்க விரும்பறே?"

" இல்ல...ஒரு பொண்ணு, தன் குழந்தைக்கே தகப்பன் நீங்கன்னு சொல்ற அளவுக்குப் போறான்னா ?"

"அது உண்மையாகூட இருக்கலாம்னு ஒரு பயம் உனக்கு வந்துடிச்சு-அப்படித்தானே?"

"ஐய்யோ...நான் அப்படிச் சொல்லலை. அவ எந்த தைரியத்துல அப்படிச் சொல்றான்னுதான்..?"

"எல்லாம் ஜோதியோட வேலை...கூடவே-இப் போதைய ஆளும் கட்சியோட ஆசீர்வாத பலம். இதெல் லாம் உனக்குத் தெரியாத புதிய விஷயமா வாசுகி...?"

"இல்லீங்க...இதுக்கு நிவாரணம் நீங்க அரசியல்ல குதிக்கறதுனால கிடைச்சுடுமா? அதான் என் கேள்வி?"

"கிடைக்கும்னு பிரபா கணக்குப் போட்றான். ஆனா எனக்குத் தயக்கமா இருக்கு..."

"ஏன்?"

"நடிகன்றவன் மக்களுக்கு நல்லா அறிமுகமான ஒருத்தன். அவ்வளவுதான்! மற்றபடி அவனுக்கும் ஒரு என்ஜினியருக்கும், ஒரு வியாபாரிக்கும், ஒரு டாக்டருக்கும் பெரிய வித்தியாசமில்ல!

நான் நடிகனா இல்லாம, என்ஜினியராவோ வியாபாரியாவோ இருந்தா அரசியல்ல குதிக்க விரும்பு வேனா? குதிச்சாலும் எடுபடுமா?எடுபடாது இல்லியா?"

"ஏன் அப்படிச் சொல்றீங்க...டீக்கடை நடத்தின வங்க எல்லாம் இன்னிக்கு எம்.எல்.ஏ.வா இல்லையா? எம்.பி.யா இல்லையா? மந்திரிகளா ஆனதில்லையா?"

"நீ ஜெயிச்ச ஒரு சிலரைச் சொல்றே...ஜெயிக்காத லட்சம் பேர் இருக்காங்க...எப்பவும் விதி விலக்குகளை உதாரணமா எடுத்துக்கறது ஆபத்தானது...!"

"அப்படின்ன...?"

"அரசியல்ங்கறது சாதாரண ஒண்ணு கிடையாது வாசுகி. அதை சிலர் சாக்கடைங்கறாங்க...சிலர் அதை மிகப் பெரிய சேவை அமைப்பா பாக்கறாங்க. பலர் அதைச் சம்பாதிக்கக் கிடைக்கற வாய்ப்பாவும் நினைக்கறாங்க. ஆனா என் வரைல அது ஒரு இரும்புக் கோட்டை. அதுல நுழையறதே முதல்ல ரொம்பக் கஷ்டம். நுழைஞ்சிட்டா இடம் பிடிக்கறது அதைவிடக் கஷ்டம்! இடம் பிடிச்சுட்டா அதைத் தக்க வெச்சுக்கறது அதையும் விட கஷ்டம்."

"அப்ப அந்தக் கஷ்டங்களுக்குப் பயப்பட்றீங்களா?"

"இப்ப நான் படாத கஷ்டமா? அப்படி இல்லை... இந்தக் கஷ்டங்களுக்கு நடுவுல ஜனங்களுக்குச் சேவை செய்வதுன்னு ஒண்ணு இருக்கு. அதுதான் அரசியல்ல ரொம்ப முக்கியமான விஷயம். அந்தச் சேவையை ஒரு அரசியல்வாதியா-இப்ப இருக்கற அமைப்புல செய்ய முடியும்னு எனக்குத் தோணலை..."

"அப்ப இப்ப யாருமே சேவையே செய்யலையா?"

– வாசுகியைப் பார்த்து அந்த நள்ளிரவில் சிரித்தான் பிரவீண். பின், "நீ யாரையாவது ஒருத்தரைச் சொல்லேன் " – என்றான்.

"நீங்க சொல்றதைப் பார்த்தா யாருமே சேவை செய்யலைங்கற மாதிரி தெரியுதே...?" –அவள் காலைக் கட்டிக் கொண்டு குளிர்கிற பாவனையோடு திருப்பிக் கேட்டாள்.

போய் ஏசியையும் அணைத்து விட்டு வந்தாள்...

"அப்ப ஆட்சி கவுந்துட்டா எல்லாமே ஸ்தம்பிச்சு, நாம கஷ்டப்படுவோம்னு சொல்ல வரியா?"

– அவளுக்கு அவன் எங்கே வருகிறான் என்று தெரியவில்லை. அவனிடம் திரும்பவும் சிரிப்பு.

"நீங்க என்ன கேக்கறீங்க?"

"இல்லை... இப்ப அரசியல்வாதிகளோட சேவையாலயும், செயலாலையும்தான் நாம வாழ்ந்துகிட்டிருக்கோமான்னு கேட்டேன்..."

"அதுவும் ஒரு காரணமில்லையா?"

"இல்லவே இல்லை வாசுகி...! கவர்னர் ஆட்சி வந்துட்டா எல்லாம் மூழ்கிப் போயிடுதா என்ன? சொல்லப் போனா-அப்பதான் நல்லா ஆட்சி நடக்கறதா பலரும் சொல்றாங்க.

அரசாங்கங்கள் எப்பவும் அதிகாரிகளாலதான் நடத்தப்பட்டுகிட்டிருக்கு. அவங்களை ஆட்டிப் படைக்கறவங்கதான் அரசியல்ல இருக்காங்க...! அவங்க விலகிட்டா அதிகாரிகள் சுதந்திரமா செயல்பட்றாங்க.

சேவைங்கறது ஆட்டிப் படைக்கறதுல இல்லை -- ஆத்மாவைத் தொட்றதுலதான் இருக்குன்னு நான் நினைக்கறேன்...'!

"அப்படின்னா .. காந்தி, நேரு, காமராஜ் இவங்கள்லாம் ?"

"இவங்க காலம் வேற - இப்போதைய காலம் வேற! இப்போ பலருக்கும் அரசியல்ங்கறது சம்பாதிக்கக் கிடைக்கற ஒரு சந்தர்ப்பம். சிலருக்குத்தான் அது சேவை அமைப்பு.

பலர் கை ஓங்கியிருக்கற ஒரு இடத்துல சிலரால என்ன பண்ண முடியும்?"

"அந்தப் பலரை அடக்கி அவங்களையும் சேவைக்குத் தயார் படுத்தக் கூடாதா?"

"அப்படிச் செய்ய ஆசைப்பட்டுத்தான் இப்போதைய எல்லா தலைவர்களுமே அரசியலுக்கு வந்தாங்க... ஆனா அவங்க செய்தாங்களா... முடிஞ்சுதாங்கறது மில்லியன் டாலர் கேள்வி...!"

"அப்போ இதுக்கு வழிதான் என்ன?"

"சிலர் புரட்சியைத் தீர்வா சொல்றாங்க .. சிலர் சர்வாதிகாரத்தைத் தீர்வா சொல்றாங்க. நான் அது ஜனங்க கைலதான் இருக்குன்னு நம்பறேன் ..."

"அந்த ஜனங்க நீங்க சொன்னா கேட்கமாட்டாங்களா?"

"திருவள்ளுவரும், அவ்வைக் கிழவியும், புறநானூறும், அகநானூறும், நாலடியாரும், நான்மணிக்கடிகையும் சொல்லியே கேக்கலை... நான் சொல்றதையா கேக்கப் போறாங்க ..!"

"சொல்ற விதத்துல கோளாறு இருக்கலாம் இல்லியா?"

"ஒரு பேச்சுக்கு அதை ஒப்புக்கிட்டாலும் சொல்றதைக் கேக்கறதுல மட்டும் மாற்றங்கள் வந்துடாது ..."

"பின்னே?"

"எல்லாத்துக்கும் பின்னே செயல்னு ஒண்ணு இருக்கு...அதை சுயநலமில்லாம செய்யணும்"

"இப்படிப் பேசிக்கிட்டே போனா பேசிக்கிட்டே இருக்கலாம்... ஒரு வட்டத்துல பயணம் செய்யற மாதிரி அது. அதுலதான் முடிவும் இல்லை - ஆரம்பமும் இல்லை ..!"

"உண்மைதான். எது இருக்கோ இல்லியோ-ஏனால இந்த ஜனங்களை நல்லவிதமா மாத்திக் காட்ட முடியும்ங்கற நம்பிக்கை ரொம்ப ரொம்ப முக்கியம். அது எனக்கு இல்லை வாசுகி ."

"இதை நீங்க வெளிய சொன்னா, உங்களை ஜனங்களே வெறுப்பாங்களே ?"

"நான் அவங்களை வெறுக்கும் போது-அவங்க என்னை வெறுக்கட்டுமே-தப்பென்ன?"

"வெறுத்தா பிரிவுதான் அதிகமாகும். இது உங்க சினிமா வாழ்க்கையையும் பாதிக்குமே?"

"நான் இந்த வாழ்க்கையையும் சேர்த்தே வெறுக்கறேன் வாசுகி...!"

"என்னங்க சொல்றீங்க?"

"புரியலியா...? நான் சினிமாவை விட்டு விலகிடப் போறேன். இந்த ஜனங்க தொடர்பும் வேண்டாம்...! கைல இருக்கற படம் முடியட்டும். இந்தக் கலாகத்திக்கா பிரச்சினையும் தீரட்டும். நாம அந்தமானுக்கோ-நிக்கோபாருக்கோ போய், ஒரு தோட்டமும் வயலுமான இடத்துல செட்டிலாவோம். அங்க நிறைய வாயில்லா ஜீவன்களை நாம வளர்க்கணும். நிறைய மரம்-செடி-கொடியையும் வளர்க்கணும்.

அதெல்லாம் எப்பவும் முட்டாள்தனமா நடந்துக்கவே நடந்துக்காது. என்னைப் பார்த்து எனக்காக

ஜேயும் போடாது. என்னை எதிர்த்துச் சண்டையும் போடாது...''

–பிரவீண் நள்ளிரவில் காட்டிய அந்தப் புதிய சிந்தனை வாசுகியைக் குழப்பத் தொடங்கியது.

'தேசமே வரப்போகிறது என்று நினைத்துக் கொண்டிருந்தால் இவன் எனன தீவு–மரம்–மிருகம் என்கிறான்?'

17

கேள்விகள் வாசுகியைத் தாலாட்ட, அவள் பிரவீணைத் தொடர்ந்து வெறித்தாள்.

''என்ன வாசுகி... என்ன அப்படிப் பாக்கறே?''

''ப்ச்ச்ச்...'' – அவள் உதட்டில் ஒன்றுமில்லை என்னும் சப்தம்.

''உன் அபிப்பிராயமென்ன வாசுகி....?''

''சொல்லத் தெரியலீங்க...',

''சொல்லத் தெரியலையா— இல்லை–நான் நடிகனா நீடிக்கணும்னு விரும்பறியா?''

''அது இருக்கட்டும்— இவ்வளவு கஷ்டப்பட்டு மேலே வந்துட்டு, இதை விட்டு விலகிக்கறேன்னு சொல்ல எப்படி உங்களால முடியுது?''

– வாசுகி பேச்சைத் திசை திருப்புவதுபோல கேட்ட கேள்விக்கு, பிரவீண் வறட்டுச் சிரிப்பு சிரித்தான்.

''நான் நடிகனாக ஆசைப்பட்டு இந்தத் துறைக்கு வரலை வாசுகி... அது தெரியுமா உனக்கு?''

– தாடையை ஒரு மாதிரி சாய்த்துக்கொண்டு அவன் கேட்ட விதத்தில், ஒருவித ஏமாற்றம் முகத்தில் தெரிந்தது.

வாசுகி பதில் கூறாமல் அவனைப் பார்த்தாள்.

அவன் தொடர்த்தான்.

''எனக்குப் பெரிய சினிமா பாடலாசிரியரா ஆகணும் கறதுதான் ஆசை...எம்.ஜி.ஆர். படப் பாடல்கள்தான் எனக்கு இன்ஸ்பிரேஷன். 'எங்கே போய்விடும் காலம்? அது என்னையும் வாழவைக்கும்' பாட்டைக் கேட்டுட்டுத்தான் மெட்ராஸ் வந்தேன்.

'ஏன் என்ற கேள்வி கேட்காமல் வாழ்க்கை இல்லை'ன்னு அவர் பாடினபடியே பலர்கிட்டேயும் கேள்வி கேட்க நான் தவறலை. ஆனா நான் கேட்ட கேள்விக்கு அவங்க பதில் சொல்லலை...கேட்ட விதமும் எக்ஸ்பிரஷனும் நல்லா இருக்குன்னு சொன்னாங்க... பாட்டு எழுத சான்ஸ் கேட்ட எனக்கு, நடிக்க சான்ஸ் கிடைச்சிச்சு...மறுக்க முடியல மறுத்தா வயிறு காயுமே?...

அவன் பேச்சை நிறுத்தினான். வியர்க்கத் தொடங்கியிருந்தது. வழக்கத்திற்கும் அதிகமான அம்மைக் கொப்பளங்கள் திடும்மென்று எழும்பியது போலக்கூடத் தோன்றியது.

பக்கத்தில் கிடந்த போர்வையாலேயே துடைத்து விட்டுக் கொண்டான். பார்த்துக் கொண்டே அமர்ந்திருந்தாள் வாசுகி.

''என்ன வாசுகி...இன்பமா கழிய வேண்டிய ராத்திரிகள்ல இப்படி பழைய கதையைப் பேசி போரடிக்கிறேனா?''

''ப்ச்ச்ச்...''–அவள் உதட்டைச் சுழித்தாள். ஆமோதிக்கிறாளா–மறுக்கிறாளா என்பது தெரியாதபடி

"யாருக்குமே அவங்க விரும்பறது கிடைக்கறதே யில்லை...ஜுவாலஜி படிச்சவன் க்ளார்க் ஆகறான். காமர்ஸ் படிச்சவன் ரெப்ரெசன்டேடிவ் ஆகறான். வேலை மட்டுமா...? வாழ்க்கையிலுமே யாருக்கு அவங்க ஆசைப்பட்டது கிடைச்சிருக்கு...? சொல்லு பார்ப் போம்?" அவன் அர்த்த புஷ்டியோடு பேசியதில் அவளுக்குள் ஒரு சின்ன நெருடல்.

"இல்லீங்க...எனக்கு நீங்க கிடைச்சிருக்கறது என் ஆசைப்படி நடந்த ஒண்ணுதான்! ஆனா உங்களுக்கு நான் கிடைச்சது வேணும்னா உங்க ஆசைப்படி இல்லாம இருக்கலாம்...!" என்றாள்.

"இல்ல வாசுகி...! என் வரைல எனக்குக் கிடைச்ச பொக்கிஷம். நம் விஷயம் ஒரு விதிவிலக்கு...அதனால தான் என் மனசு இந்த வாழ்க்கையைப் பெரிசா நினைக்குது. எனக்குப் பிடிக்காத சினிமா வாழ்வை விட்டு விலகவும் நினைக்குது...!"

சொன்னபடியே எழுந்து பாத்ரூம் போனான். போன இடத்தில் கண்ணாடியில் முகத்தைப் பார்த்த போது சற்று பகீர் என்றது.

'என்ன இது–நாளுக்கு நாள் விகாரம் கூடிக் கொண்டே போகிறது போல் தெரிகிறதே ..?'

கேள்வி கொத்தத் தொடங்கியது.

விடிந்து விட்டது.

கேட்டுக்கு வெளியில் நான்கைந்து கார்கள். புரொடக்ஷன் மேனேஜர்கள் வந்து தேங்கியிருந்தார்கள். கஷ்டப்பட்டு வாட்ச்மேனிடம் சண்டை போட்டு, உள்ளே வந்து பிரபாகரைச் சந்தித்தார்கள்.

"சார்...நான் ஆர். ஆர். கம்பைன்ஸ்ல இருந்து வரேன். சாரோட கால்ஷீட் தொடர்பா பேசணும்..." என்று பேச்சை ஆரம்பித்தார்கள்.

"யாரா இருத்தாலும் இப்ப அவர் கால்ஷீட் கிடைக் காது...அவர் உடம்பும் மனசும் இருக்கற நிலை தெரியும்தானே?"–பிரபாகர் இதமாகத்தான் கேட்டான்.

"சார்..எங்க நிலையையும் நீங்க கொஞ்சம் யோசிச்சுப் பாக்கணும்.. கோடிக்கணக்குல பணத்தை இன்வெஸ்ட் பண்ணிட்டு உக்காந்துருக்கோம் சார் நாங்க...!"

"சரி; என்ன பண்ணலாம்...நீங்களே சொல்லுங்க.."

"அவரால எப்ப கால்ஷீட் கொடுக்க முடியும்? அதை நீங்க முதல்ல சொல்லுங்க....?"

"நிச்சயமா இருபது நாளாவது ஆகும்..."

"இருபது நாள் கழிச்சு அவங்களுக்கு கால்ஷீட் கொடுப்பாரு...எங்களுக்கு?" குறுக்கில் இனனொரு புரொடக்ஷன் மேனேஜர் தலையை நீட்டினார்.

"ஒவ்வொருத்தருக்காதானே தர முடியும்?"

"சார்..." எங்களோட படம் கிட்டத்தட்ட முடிஞ் சிட்ட நிலை...பிரவீண் சார் நடிக்க வேண்டிய ஒரே ஒரு சீன்தான் பாக்கி இருக்கு. முடிச்சுக் கொடுத்துட்டா தமிழ் வருஷப் பிறப்புக்குப் படத்தை ரிலீஸ் பண்ணிடு வோம் சார்.."

ஆளாளுக்குத் தங்கள் தேவையை உத்தேசித்துப் பேசிக் கொண்டிருக்க, ஊடே தன் அறையில் இருந்து மெல்ல வெளியே வந்தான் பிரவீண்.

அவனைப் பார்த்த நொடியில் அவர்கள் எல்லோர் முகத்திலும் பலத்த அதிர்ச்சி.

முகத்தில் அந்த அளவுக்கு அம்மைக் கொப்புளங்களின் ஆக்ரமிப்பு.

"சார்ர்ர்..."-அவர்கள் குரலில் அதிர்ச்சி தெரிந்தது.

"என்ன சாமுவேல்...என்ன கணேஷ்-கால்ஷீட் கேட்டு வந்துருக்கீங்களா?"-கேட்டபடியே முன்னால் வந்தான்.

"சார்...என்ன சார் இது...ரொம்ப பலமாவே அம்மை தாக்கியிருக்கே சார்..."

"அதுக்கும் என் முகம் ரொம்பப் பிடிச்சிருக்கு போல -அதுதான் வந்துருக்கு..."-சொல்லிக் கொண்டே சோபாவில் அமர்ந்தான்.

"எவ்வளவோ தடுப்பூசிகள்லாம் வந்தும் இப்படி வருதுன்னா ?"

"எனக்கு எங்க வீட்ல போடாம விட்டுருக்கலாம் இல்லியா ?"

"ஓ.கே. சார். நீங்க போய் ரெஸ்ட் எடுத்துக்குங்க...!"

"சார்...சரியான உடனே ராத்திரியில்ல பகலில்ல... எப்பவேணாலும் உங்களுக்கு கால்ஷீட் கொடுத்துச் சரி பண்ணிட்றேன்..."

பிரவீண் சொல்லும்போதே, அதில் அவன் கடமை உணர்ச்சி நன்கு தெரிந்தது.

அப்போது எப்படி உள்ளே வந்தான் என்றே தெரியாதபடி ஒரு பத்திரிகை நிருபர், கையில் கேமராவுடன் உள்ளே நுழைந்திருந்தான்.

பிரவீணைப் பார்த்துவிட்டு மிரட்சியை நன்றாகவே விழிகளில் காண்பித்தான்.

"வா டேவிட்..."என்று பிரவீண் அழைப்பதிலிருந்து அவன் பிரவீணுக்கு அதிகப் பரிச்சயம் என்பது தெரிந்தது.

புரொடக்ஷன் மேனேஜர்கள் இங்கிதமாக நழுவத் தொடங்க, டேவிட் என்னும் அந்தப் பத்திரிகையாளன் பிரவீணை ஒரு மாதிரி பார்த்தான்.

"என்ன டேவிட் அப்படிப் பாக்கறே?"

"ஒண்ணுமில்ல சார்...என்ன சார் இது கோரம்?"

பதில் சொல்லாமல் வறட்டுச் சிரிப்பு சிரித்தான் பிரவீண். அப்படியே பிரபாகர் பக்கம் திரும்பி, "பிரபா.., இவன் பேர் டேவிட். என்னோட பரம ரசிகன். நான் தான் ஒரு பத்திரிகை நிருபரா சேர்த்து விட்டேன்...!" என்றான்.

பிரபா ஆமோதிப்போடு டேவிட்டைப் பார்க்கும் போது, டேவிட்டின் கைகள் காமிராவை ஷூட் செய்வதற்குத் தயார்படுத்திக் கொண்டிருந்தன. பிரபாகருக்குச் சற்று பகீர் என்று இருந்தது.

"மிஸ்டர் டேவிட்...போட்டோவா எடுக்கப் போறீங்க?"

"ஆமாம்..."

"நோ...இந்த நிலைல படம் எடுக்கக்கூடாது... வேண்டாம்...!" பிராபகர் குரலில் கண்டிப்பும் பதட்டமும் பெருக்கெடுத்தது.

"இல்ல டேவிட்...நீ எடு..." பிரவீண் பிரபாகரை ஆச்சரியப் படுத்தினான்.

"பிரவீண்...என்ன இது...உன் முகம் இப்ப இருக்கற நிலைல போட்டோ எடுக்கச் சொல்றியே...?"

"பரவால்ல...எடுக்கட்டும். அப்படியே உனக்கு ஒரு ஸ்கூப் நியூஸ் டேவிட்..."

என்ன சார்...?"

"என் கைல இப்ப நாலு படம் இருக்கு...! அஞ்சு படத்துக்கு அட்வான்ஸ் வாங்கியிருக்கேன்...அதை எல்

லாம் திருப்பிக் கொடுத்துடப் போறேன். நாலு படத்தை முடிச்சுக் கொடுத்துட்ட பின்னால் நான் படங்கள்ல நடிக்கப் போறதில்ல...''

''சார்ர்ர்ர்...''

''என்ன சார்... இது ஒண்ணும் அவசரப்பட்டு எடுத்த முடிவு இல்ல... ஆற, அமர உட்கார்ந்து எடுத்த முடிவு...!''

''அப்ப முழு மூச்சா அரசியல்ல ஈடுபடப் போறீங்களா?''

''இல்ல... நடிப்பே பிடிக்கலைன்னு சொல்லும்போது அரசியல் மட்டும் எதுக்கு?''

''ஐய்யோ... நீங்க எங்க கட்சிலதான் சேருவீங்கன்னு ஒவ்வொரு கட்சிக்காரங்களும் நினைச்சுகிட்டிருக்காங்க... நீங்க இப்ப போய் இப்படிச் சொன்னா எப்படி சார்...?''

''இல்ல... இதுதான் என் இறுதியான முடிவு ..''

''அப்ப நேத்து நீங்க அரசியல் கட்சியில சேரப் போறதா சொன்னது...?''

''அது ஒரு அவசரப்பட்டு எடுத்த முடிவுன்னு வெச்சுக்கோயேன்...!'' – பிரவீண் பார்வை பதிலோடு பிரபாகர் பக்கம் திரும்பியது.

பிரபாகருக்குள் பூச்சி பறந்தது.

''பிரவீண் – என்ன இது...? மிஸ்டர் டேவிட்- பிரவீண் நடிப்பார்... அரசியல்லயும் ஈடுபடுவார். அவர் சும்மா உங்க ரீ ஆக்ஷனைச் சோதிச்சுப் பார்க்கறார்...''

– பிரபாகர் வேகமாகச் சமாளிக்கப் பார்த்தான்.

''இல்ல டேவிட்... நான் சோதிச்சுல்லாம் பார்க்கலை... போதும் எனக்கு இந்த வாழ்க்கை. நான் இப்பச் சொல்றதுதான் உறுதியான முடிவு...''

''ஏய் பிரவீண்...உளறாதே...இதனால என்னென்ன விபரீதம் ஏற்படும் தெரியுமா?''

''என்னடா... என்ன நடக்கும்? ஒண்ணும் நடக்காது. என் எதிரிகள் அப்பாடான்னு பெருமூச்சு விடுவாங்க... அந்தக் கலாகூட நான் இப்படி ஒரு முடிவுக்கு வரமாட்டேன்னு நினைச்சுத்தான் தன்னையே பணயம் வெச்சு என்னைக் கவிழ்க்கப் பார்த்துருக்கா... அவளும் வருத்தப்படுவா...! மொத்தத்துல எல்லாம் நல்ல விதமா தான் நடக்கும். நீ வாயை மூடு –''

–பிரவீண் அதட்டலாகப்பேசும் போது, டெலிபோன் மணி பிரபாகரைக் கூப்பிட்டது.

போய் காதில் எடுத்தவன் காதில் ஒரு வித்தியாசமான செய்தி...

''மிஸ்டர் பிரபாகர்... உங்க நண்பரை விட்றுங்க... நீங்க நடிக்கறீங்களா?''

- அதிர்ந்து போனான் பிரபாகர்.

18

அதிர்ச்சி கலையாதபடி பிரபாகர் பதிலுக்குக் கேட்டான் : ''யார் சார் நீங்க...?''

''ஒரு படாதிபதிதான்... பிரவீணை நம்பி பணத்தைப் போட்டுட்டு, அதை எடுக்க முடியாமத் திணறிக்கிட்டு இருக்கேன். என் புரொடக்ஷன் மேனேஜர் இப்பதான் வந்து சொன்னார். அவரால இனி படம் பண்ண முடியும்னு எனக்குத் தோணலை...''

"ஏன் அப்படி சொல்றீங்க...? உங்களுக்குத்தான் பிரவீண் நடிச்சுக் கொடுக்கறேன்னு சொல்றானே?"

"அவர் சொல்லலாம்... ஆனா அந்த முகம்-திரும்பிப் பழைய முகமா எங்களுக்குக் கிடைக்குமாங்கறது சந்தேகம் மிஸ்டர் பிரபாகர். அதனாலதான் உங்களைக் கேட்டேன். உங்களைக் கேட்டதுக்கும் ஒரு காரணம் இருக்கு..."

"என்ன காரணம்?"

"உங்க நண்பருக்காக நீங்க எந்தத் தியாகத்தையும் செய்யக் கூடியவர்னு கேள்விப்பட்டேன்... அப்படிப்பட்ட நீங்க எங்களுக்கு அதிக சம்பளமில்லாம நடிச்சுக் கொடுத்து ஒத்துழைக்க முடியும். அதோட—அதுக்கான முகவெட்டும், எல்லா தகுதிகளும்கூட உங்ககிட்ட இருக்கறதா நாங்க நம்பறோம்..."

"நீங்க நம்பலாம்... ஆனா என் நண்பனுக்கு இதைவிட ஒரு பெரிய துரோகத்தை நான் செய்யவே முடியாது. அதோட – நடிக்கறதுல எனக்கு விருப்பமிருக்கணும்ங்கறது ரொம்ப முக்கியம். சுத்தமா எனக்கு அந்த எண்ணம் கிடையாது. தயவு செய்து இனிமே அபத்தமா இப்படி என்கிட்ட எதையும் பேசிடாதீங்க... இதுவே கடைசியா இருக்கட்டும்..."

– போனை வைத்து விட்டுத் திரும்பினவனை, பிரவீணும் – ரிப்போர்டர் டேவிட்டும் பாதி புரிந்தும், மீதி புரியாமலும் பார்த்தனர்.

"என்ன பிரபாகர்?"

"ஒண்ணுமில்லடா... இடியட் – அந்த ஆள் என்ன மனசுல நினைச்சுகிட்டிருக்கான்னு தெரியல... நான்சென்ஸ்!"

– பிரபாகர் குரலில் கடுமை தெறித்தது.

"யார் பேசினாங்க...? என்ன விஷயம்?"

"யாரோ உன்னோட புரொட்யூசராம். உன்னால இனி நடிக்க முடியாதாம் சாரி...மிஸ்டர் டேவிட்...நீங்க கொஞ்சம் கிளம்பறீங்களாம்"

- பிரபாகர் பேச்சைப் பாதியில் கத்தரித்துக்கொண்டு டேவிட்டைப் பார்த்தான்.

டேவிட் பார்வை பிரவீணை ஊடுருவியது. பின் அரைமனதாக எழுந்து நின்றான். கிளம்பும் ஆயத்தம் தெரிந்தது. பிரவீணிடமும் மறுப்பில்லை.

"மிஸ்டர் டேவிட்... உங்களக் கெஞ்சிக் கேட்டுக்கறேன். இங்க நடந்த விஷயங்கள் எதையும் வெச்சு, எந்த சேதியும் போட்டுடாதீங்க ..

பிரவீண் இந்த நிமிஷம் தமிழ் நாட்டோட நம்பர் ஒன் நடிகன். அது எல்லா காலத்துலேயும் தொடரணும்... தொடரும். அதுதான் எல்லாருக்கும் நல்லது. ப்ளீஸ்ஸ்..."

"என் ஆசையும் அதுதான் சார். கவலைப்படாதீங்க... என் மூலமா ஒரு சின்ன விஷயம் கூட வெளில போகாது. சாரைச்சமாதானப்படுத்தி அவரைத் தொடரச் செய்யுங்க. முறையான திசையில அவர் போனா நிச்சயம் அவர் இந்த ஸ்டேட்டுக்கு முதல்வர் ஆயிடுவார். அதுல எனக்குச் சந்தேகமில்ல. நான் வரேன்..."

– டேவிட், தான் ஒருநல்ல நம்பிக்கையான மனிதன் என்கிற மாதிரி பேசிவிட்டுப் புறப்பட்டான். பிரவீண் பார்த்துக் கொண்டே நின்றான். வாசுகியும் அவள் அம்மாவும், பிரபாகரின் அம்மா மனோரஞ்சிதமும் மெல்ல ஹாலில் வந்து கூடி நிற்கத் தொடங்கினர்.

"என்ன பிரபா நடக்குது...? தம்பி நடிக்கப் போற தில்லேன்னு சொன்னிச்சாமே...?" - சகுந்தலா நிதானமாகக் கேட்டாள்.

"ஆமாம் அத்தை...திடீர்னு குட்டையைக் குழப்பறான்...எல்லாம் கூடிவரும்போது தாழியைப் போட்டு உடைக்கற மாதிரி இருக்கு இவன் பண்ற வேலை..."

-கோபமாக பிரவீணைப் பேசியபடியே பார்த்தான். பிரவீண் உதட்டில் ஒருவித சிரிப்பு. பார்வை அப்படியே வாசுகி பக்கமும் திரும்பியது. அவள் வாடிப் போயிருந்தாள்.

"என்ன தம்பி இதெல்லாம்?" - மனோரஞ்சிதம் இடையிட்டாள்.

"ஆமாம்மா நான் நடிக்கறதுக்கு ஒரு முடிவு கட்டிடப் போறேன். எனக்குப் பிடிக்கலம்மா..."

"மண்ணாங்கட்டி. பிடிக்கலையாம் பிடிக்கலை... என்னடா ஆச்சு உனக்கு? வரிசையா பிரச்சினை வரவும் பயந்துட்டியா? அதான் எல்லோரும் சேர்ந்து உன் பக்கம் நிக்கறோம்ல?"

"நான் நடிகனா நீடிச்சாதான் நிப்பீங்களா?"

"அப்படி இல்லடா பிரவீண்...இப்ப நீ இப்படிச் சொன்னா அதுக்கு எவ்வளவு தப்பான அர்த்தம் கற்பிப்பாங்க தெரியுமா?"

"அதுக்காக நான் என் சுயவிருப்பங்களை நிராகரிக்கணுமா? நான் ஓரளவு சம்பாதிச்சுட்டேன். இது போதும் எனக்கு...

உன் பேச்சுக் கேட்டு என்னால அரசியல்ல எல்லாம் ஈடுபட முடியாது. அதுல நுழைஞ்சு என்னைத் தற்காத்துக்கற சுயநலம் எனக்கு வேண்டாம்..."

"சுவர் இருந்தாதான் சித்திரம் தீட்ட முடியும். நீ நல்லா இருந்தாதான் நினைச்ச லட்சியங்களை அடைய முடியும். எதிர்ப்புகளையும் ஜெயிக்க முடியும்..."

"ஒரு மண்ணும் வேண்டாம் பிரபாகர்...நான் விலகறேன்னு உறுதியா சொல்லிட்டா போதும்.. எல்லாம் தன்னால அடங்கிடும்..."

-பிரவீண் தன் முடிவில் உறுதியைக் காட்டவும், வாசுகி அவனை முதன்முறையாக சற்று வெறுப்புடன் பார்த்தாள்.

"என்ன வாசுகி...நீ என்ன நினைக்கறே சொல்லு..."

- அவன் கேட்கக் கேட்க, பதில் கூறாமல் அங்கிருந்து நழுவத் தொடங்கினாள். பிரபாகருக்கு அவள் என்ன நினைக்கிறாள் என்பது புரிந்து போயிற்று.

"டேய் அவ நீ தொடர்ந்து நடிக்கணும்னு விரும்பறாடா... அதனாலதான் நீ விடாப்பிடியா... பேசும் போது, எப்படி எதிர்ப்புக் காட்டறதுன்னு தெரியாம விலகிப் போறா..." என்று எடுத்துக் கொடுத்தான்.

சகுந்தலாவும், மனோரஞ்சிதமும் இந்நிலையில் என்ன பேசுவது என்று தெரியாமல் குழம்பும்போது பிரவீண் எழுந்தான்.

"இதோ பார்...எனக்கு நீ செய்யப் போற உதவியே என்னை நிர்பந்திக்காம இருக்கறதுதான். நீ நடிகனா இருந்து சில சுக-துக்கங்களை அனுபவிச்சுப் பார்த்தாதான் உனக்குத் தெரியும்... நான் வரேன்..." -பிரவீண் சொல்லி விட்டுப் போகும் வேகத்தில், அவனை இனி மாற்றவே முடியாது என்னும் அழுத்தம் தொனித்தது.

"அம்மா...அத்தே...நீங்க என்ன சொல்றீங்க...?"

"அந்தத் தம்பி விருப்பப்படியே விட்றுப்பா. அதுவும் ஒரு வகைல நல்லதாதான் எனக்குப் படுது..."

"அத்தே... நீங்க...?"

"நான் சொல்ல என்ன இருக்கு? மாப்ள முடிவை உன் மாமாவும் என் பையனும்கூட ஒத்துப்பாங்கன்னு தான் நினைக்கறேன்...'

–அடுத்த நொடியே வாசுகியைத் தேடிப் போனான். அவள் படுக்கையில் குப்புறப்படுத்திருந்தாள்.

"வாசுகி.,."

படுத்த திலையில் திரும்பிப் பார்த்தாள்.

"நீ என்ன சொல்றே வாசுகி?"

"சினிமாலதான் அத்தான் இவர் வீரர். நிஜ வாழ்க்கைல பயங்கரக் கோழையா இருக்கார். இப்படி இருப்பார்னு நான் துளிகூட எதிர்பார்க்கலை.. "

"சரியா சொன்னே...! இப்ப எல்லாமே உன் கைலதான் இருக்கு. பிரவீண் எண்ணம் மட்டும் இப்ப வெளிய தெரிஞ்சிச்சு –அவ்வளவுதான்! நீதான் இப்ப அவனை மாத்தணும். உன்னாலதான் அது முடியும்..."

– பிரபாகரிடம் உணர்ச்சிகள் கொப்பளித்தது. வாசுகி ஆமோதிக்கற விதமாக எழுந்து, அவன் அறை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

வயிற்றைப் பிரட்டியதில் வாந்தி எடுத்துக் கொண்டிருந்தாள் கலா. முகமெல்லாம் வெளிறிப் போய், பார்க்கவே ஒரு மாதிரி இருந்தாள்.

திரும்ப வந்து நாற்காலியில் அமர்ந்தபோது, என்ஜினியர் எதிரில் வந்து நின்றார். அவள் அவரை ஏறிட்டாள்.

"மேடம்...கொடுத்த பணத்துக்கு எல்லா ஒர்க்கையும் முடிச்சிட்டோம்... மேற்கொண்டு..."

-அவர் இழுக்கவும், பக்கமாக இருந்த கார்ட் லெஸ்ஸை எடுத்துத் தட்டினாள்.

மறுமுனையில் ஜோதிநாத் அகப்பட்டான்.

"நான் கலா பேசறேன்..."

"என்ன விஷயம்?"

"கொஞ்சம் பணம் வேணும்?"

"ஏன்–வீடு கட்டப் பணம் போதலையா...?"

"... ..."

"என்ன... பேச்சக் காணோம். வாங்கின காசுக்குக் காரியத்தைக் கச்சிதமா முடிச்சிட்டே பாரு... அதான் அடுத்து கேக்கறே "

"வார்த்தை இருக்குன்னு கொட்டிடாதீங்க... இந்த நொடி நான் உங்க சொல்படிதான் நடந்துகிட்டு இருக்கேன்."

"அதனால எனக்கென்ன லாபம்? நீ எட்டடி பாஞ்சா, அந்தப் பிரவீண் பதினாறடில்ல பாஞ்சிருக்கான்!"

"அதுக்கு நான் என்ன பண்ணட்டும்?"

"மூடிகிட்டு சும்மா இரு... உனக்கெல்லாம் வீடுதான் ஒரு குறை!"

ஜோதி, முகத்தில் அறைந்த மாதிரி ரிசீவரை வைத்தான்.

கலாவுக்கு அதிகபட்சமாக வலியெடுத்தது. அத்தோடு என்ஜினியரைப் பார்த்தாள்.

"இன்னும் எவ்வளவு தேவைப்படும்?"

"சுமாரா ஒரு ஒண்ணரை லட்சம் ஆகும்மா...!"

"இந்த சுமாரா கதை எல்லாம் வேண்டாம். கரெக்டா சொல்லுங்க..."

"ஒண்ணரை போதும்மா... நீங்க கிரகப் பிரவேசம் பண்ணிடலாம்..."

"சரி; நாளைக்கு வாங்க... தரேன்!"

என்ஜினியரைக் கத்தரித்துவிட்டு, திரும்ப கார்ட்லெஸ்ஸை எடுத்தாள். கொண்டையய்யாவைப் பிடித்தாள்.

"கொண்டையய்யா... நான் கலா பேசறேன்..."

"என்ன கலா... பேச்சே ஒரு மாதிரி அதிகாரமா இருக்கு..."

"ஆமாம்... எனக்கு இப்பக் கொஞ்சம் பணம் வேணும்..."

"அதுக்கு எதுக்கு என்னைக் கூப்பிட்றே... நான் உன்னை மாதிரி கூலிக்கு மாரடிக்கற பார்ட்டிங்கறது தெரியாதா உனக்கு?"

"தெரிஞ்சுதான் சொல்றேன்... எனக்கு என் வீடு ரொம்ப முக்கியம். பணம் கட்டாயம் வேணும். நான் இப்ப இருக்கற நிலைல என்னால யாரோடையும் படுக்க முடியாது... அதனால உங்களுக்குத்தான் ஆபத்து..."

"சரி; என்ன பண்ணணும்கறே?"

"ஜோதிகிட்ட கேட்டேன். அவர் பிரவீண் மேல இருக்கற வெறுப்பைத் தேவையில்லாம என் மேல காட்டறாரு... நீ என்ன செய்வியோ தெரியாது . பணம் வரலைன்னா நான் போய் அபார்ஷன் பண்ணிக்குவேன்... அப்புறம் உங்க இஷ்டம்..."

"ஓஹோ... அவ்வளவு தைரியமா உனக்கு! அப்புறம் உன்னால இந்த கோடம்பாக்கம் பக்கம் நடமாட முடியுமா?"

அந்தப் பதில் அவளை நன்றாகவே கட்டிப் போட்டது. மிரண்டு போய் ரிசீவரை வைத்தாள். குழப்பம் கூடு கட்டத் தொடங்கியது.

19

குறுக்கும் நெடுக்குமாக நடக்க ஆரம்பித்தாள் கலா. வெளியே இருந்து மேள தாள சப்தம் கேட்டது.

ஜன்னல் கர்ட்டனை விலக்கி விட்டு வெளியே பார்த்தாள்.

ஒரு கல்யாண ஊர்வலம் போய்க் கொண்டிருந்தது. அலங்கரிக்கப்பட்ட காரில், மாப்பிள்ளையும் பெண்ணும் தெரிந்தார்கள். உறவுக்காரர்கள் சுற்றிலும் புடைசூழ, மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது ஊர்வலம்.

அந்தக் காட்சி அவளை என்னவோ செய்தது.

இப்படி ஒரு காட்சிக்கெல்லாம் தன் வாழ்க்கையில் இடமே இல்லை என்னும் உண்மை உடனேயே கசக்கத் தொடங்கியது.

என்னதான் வேசிப் பெண்ணாக இருந்தாலும் ஆசை பொதுவாயிற்றே? அது அவ்வப்போது இப்படி மனதில் ஏக்க நெருப்பை மூட்டி, 'நீ யார் தெரியுமா?' என்று கேட்டு, மனதைச் சுடும்போது தன்னெஞ்சே அல்லவா சுடுகிறது?

சோர்ந்து போய் உட்கார்ந்தாள். வாயில் மசக்கைக் கசப்பு-மனதில் வாழ்க்கைக் கசப்பு... எப்படியும் வாழலாம் என்று நினைக்கும்போது இருந்த தைரியமும் திடமும் இப்பொழுது வெண்ணெயை உருக்கி எடுத்த நெய்யாக ஆகிவிட்டது போலத் தோன்றியது.

ஊஹூம்... இதெல்லாம் பொல்லாத நினைப்பு...

இப்படி எல்லாம் நினைக்கப் போய்த்தான் பல நடிகைகள் வெறுத்துப் போய் தற்கொலைக்குத் தாவுகிறார்கள்.

கூடாது... கூடவே கூடாது... எத்தனை எதிர்ப்பு வந்தாலும் சோர்ந்து மட்டும் போய்விடக் கூடாது. வாழத்தான் வாழ்க்கை!' க்ஷணத்தில் நினைவுகளைப் பட்டிக்குள் ஆடுகளை அடைப்பது போல் அடைத்து மனப்பட்டியையும் பூட்டினாள். திரும்பவும் கொண்டையாவுக்குப் போன் செய்தாள்.

"என்ன கலா... இப்ப எந்த குண்டைத் தூக்கிப் போட்டு மிரட்டப் போறே?" அவன் கெக்கலிப்போடு கேட்டான்.

"நீ இப்படிக் கேட்டுட்டா நான் மிரண்டு போய்டுவேனா கொண்டையா?"-கலாவிடம் பதில் கேள்வி.

"என்ன திமிரா பேசறே?"

"திமிராவா...? தைரியமாவும்னு சொல்லுவேன். உங்களை எல்லாம் அணு அணுவா புரிஞ்சு வெச்சுருக்கறவ இந்தக் கலா... தெரியும்தானே?"

"அதுக்கென்ன இப்போ...?"

"அதுக்கென்னவா...? ரெட் லைட் ஏரியாவுல இருந்து வந்தவதானே... இஷ்டத்துக்கு ஆட்டி வைக்கலாம்னு நினைச்சா பருப்பு வேகாது கொண்டையா! பணம் கேட்டா, 'கொடுக்கறேன். இல்லை கொடுக்க முடியாது'ன்னு சொல்லணும். அதை விட்டுட்டு, 'நீ என்ன கிழிச்சே? உனக்கு வீடுதான் ஒரு குறையா'ன்னுல்லாம் திருப்பிக் கேட்டா என்ன அர்த்தம்?"

"என்ன அர்த்தமா? மூடிகிட்டு, சொல்ற பேச்சக் கேளுன்னு அர்த்தம்... புரியலை?"

"உன் பேச்ச நான் எதுக்குடா கேட்கணும்? நான் என்ன உன் அடிமையா?"

"என்ன கலா... சாகறதுன்னு முடிவு பண்ணிட்டியா? உன் புத்தி ஏன் இப்படிப் போகுது?"

"அது சரியாத்தான் போய்கிட்டிருக்கு கொண்டையா... உங்களுக்கு என்னோட அருமை தெரியல... ரொம்பக் கேவலமா நினைக்கறீங்க. நான் கேவலமானவதான்! ஆனா அதை பிரவீண் மாதிரி ஒரு நல்ல மனுஷன் சொல்லணும். உன்னை மாதிரி கேடு கெட்டவன் சொல்லக்கூடாது. ஞாபகம் வெச்சுக்கோ"

"என்ன... தண்ணியடிச்சிருக்கியா?"

"இப்பதாண்டா தெளிவா பேசிகிட்டிருக்கேன். இப்பச் சொல்றேன். உங்களால என்னை என்ன பண்ண முடியும்னு பாக்கறேன். எந்தப் பிரவீணைக் கவிழ்த்து கேவலப்படுத்தணும்னு நினைச்சீங்களோ அந்தப் பிரவீணைப் பார்த்து மன்னிப்பு கேட்கப் போறேன்.

அது மட்டுமல்ல; அரசியல் பிரவேசம் பண்ணப் போற அந்த நபருக்கு இனி நான்தான் பாடிகாட். நீங்க உங்க சாமர்த்தியத்தைக் காட்டுங்க. நான் என் சாமர்த்தியத்தை காட்றேன்... ரெண்டுல ஒண்ணு பாத்துடுவோம். அதுக்கு முந்தி ஒரு விஷயம் இருக்கு... அது என் வயித்துல வளர்ற உன் கரு. அதை இன்னிக்கே போய் கலைச்சிட்டு மறு வேலை பாப்பேன்.

இனி! இந்தக் கோடம்பாக்கம் பக்கம் நீ நடமாட்டியா இல்லை நான் நடமாடறேனான்னு பார்த்துடுவோம்...!"

கலா ரிசீவரை வைத்துவிட்டு நிமிர்ந்தாள். எதிரில் ராதா.

அவள் முகத்தில், கலாவின் முடிவைப் பாராட்டும் ஒருவித புன்னகை ஒட்டிக் கொண்டிருந்தது.

"என்ன ராதா...?"

"எப்படி மேடம் இப்படி ஒரு தைரியம் வந்தது உங்களுக்கு?"

"புழுதான் ராதா பூச்சியா மாறுது... பூதான் காயாகுது. அது சரி; என் முடிவுல உனக்கு ஆட்சேபணை இல்லையே...?"

"இல்ல மேடம்... பணத்துக்காக வில்லத்தனம் பண்றதவிட குணத்துக்காகப் பண்றதுல ஒருவித நிம்மதி இருக்கு. நாமெல்லாம்தான் ஏற்கெனவே செத்தவங்களாச்சே? உணர்ச்சியுள்ள பிணங்கள்தானே நாம்?"

ராதா ஒரு புதிய கவிதையே எழுதினாள்.

"உண்மைதான்...! ஒரு வகைல பார்த்தா—ஒரு பொண்ணு மோசமானவளா மாறக் காரணமே நமக்கு நேர்ந்த மாதிரியான கசப்பான அனுபவங்கள்தான். இனி நல்ல வாழ்க்கையே இல்லைன்னு நினைச்சதால தான் நான் கன்னா பின்னான்னு நடந்துகிட்டேன்! இனி கன்னாபின்னான்னு நடந்துக்காம, நல்லவிதமா நடந்துப்போம்.

இந்தக் கொண்டையா மாதிரி ஆட்களை ஓட ஓட விரட்டுவோம்!"

அவள் பேச்சில் புதிய தெம்பு. முகத்திலும் ஒருவித பிரகாசம்.

"ஆமாம்...பிரவீண் நீங்க மன்னிப்புக் கேட்டா மன்னிப்பாரா?"—ராதா முக்கியமான அந்தக் கேள்வியைக் கேட்டாள்.

"எனக்குப் பிரவீணை நல்லா தெரியும் ராதா... நிச்சயம் மன்னிப்பார் அவர்..."

"சரி மன்னிப்பார்...ஆனா ஏதோ பாடிகாடா அவர் கூடவே இருக்கறதால்லாம்...?"

"அது என் ஆசை. நடந்தா சந்தோஷப்படுவேன். நடக்கலேன்னா கவலைப்படமாட்டேன். சரி; கிளம்பு..."

"எங்க மேடம்?"

"உம்...ஒரு நல்ல டாக்டரைப் பார்க்கத்தான்..."

—கலா எழுந்து நின்ற தோரணையே—அவள் தன் புதிய முடிவில் உறுதியோடு இருப்பதை உணர்த்தியது.

எழுந்து உடை மாற்றிக்கொண்டு வாசலுக்கு வந்த போது, புயலாட்டம் வந்து நின்றது ஜோதிநாத்தின் ஒபல் ஆஸ்ட்ரா.

உள்ளிருந்து மிடுக்காய் வெளியில் வந்தான் ஜோதி. செட்டில் நடித்துக் கொண்டிருந்த நிலையில் புறப்பட்டு வந்திருக்கிறான் என்பது, விக் வைத்த தலையையும், ரோஸ் பவுடர் முகத்தையும் பார்த்தபோது தெரிந்து போயிற்று.

அவனைப் பார்க்கவும் பம்மினாள் கலா. முதலில் இயல்பான பயம் வந்து அமுக்கிற்று. பின் சீறிக்கொண்டு தைரியம் துளிர்க்க ஆரம்பித்தது.

"என்ன கலா...எங்க கிளம்பிட்டே?"—ஜோதி கேட்டுக்கொண்டே வீட்டுக்குள் போனான்.

ஆனால் அவளும் ராதாவும் வாசலிலேயே நின்று கொண்டிருந்தனர்.

"என்ன வெளியே நிக்கறே...வா உள்ற...?"—அவள் வீட்டிற்குள் அவளை அழைத்தான்.

அவள் உள்ளே போகாமல் வாசலிலேயே நின்றாள். இமைக்காமல் அவனை வெறிக்கவும் செய்தாள்.

"ஏய்...வா உள்ற—நீ கேட்ட பணத்தைக் கொண்டு வந்துருக்கேன்..." - சொன்னபடியே பாக்கெட்டில் கையை விட்டு, கட்டுக்களை எடுத்தும் காட்டினான்.

அவளது மௌனமும் வெறிப்பும் தொடர்ந்தது.

அவனுக்கும் அதற்கு மேல் பேசப் பிடிக்கவில்லை.

வெளியே வந்தான். அவள் கையைப் பிடித்தான். தரதரவென்று இழுத்துக் கொண்டு உள்ளே போனான். சினிமா போலவே அவளை அதீத ஆவேசத்தோடு இழுத்து, உள்ளே நடுக்கூடத்தில் பிடித்துத் தள்ளினான்.

உள்வயிறு அழுந்த தரைமேல் பரவி விழுந்தவள், அப்படியே சுருண்டாள்.

அவன் அலறத் தொடங்கினான்.

"பூச்சாண்டியா காட்றே...? உன்னை மாதிரி எத்தனை பேரைப் பார்த்துருப்பேன்...?"

சுருண்ட நிலையில் அவளது கண்கள் அவளைத் தகிப்போடு பார்க்கத் தொடங்கின. அவனோடு சிலர் வந்திருந்தார்கள். அவர்கள் உள்ளே வந்து நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்து கொண்டார்கள்.

"இந்தக் கழுதை எங்கேயும் போயிடக்கூடாது. கவனமா பார்த்துக்குங்க...எதுவா இருந்தாலும் அப்பப்ப செல்ஃபோன்ல காண்டாக்டும் பண்ணிக்குங்க" என்றபடியே வெளியேறி காரில் ஏறிக்கொள்ள, அது அவள் கண்களை விட்டு மறைந்து போயிற்று.

ராதா, கலாவை நெருங்கிச் சென்று தொட்டுத் தூக்கினாள் எழுந்திருக்கக் கூட முடியவில்லை.

உலர்ந்த உதட்டோடு, "பாத்ரூம் போகணும்..." என்றாள்.

உள்ளே போய்விட்டு, கிட்டத்தட்ட அரை மணி நேரம் கழித்துத்தான் வெளியில் வந்தாள்.

வெளியில் தடியர்கள் கதவை உடைக்க வேண்டியது தான் என்று நினைக்கும்போது, கதவு திறந்து கொண்டது. தள்ளாடியபடி வெளியே வந்தவள். ராதாவைக் கூப்பிட்டு காதோரமாகச் சொன்னாள்.

"ராதா...கரு கலைஞ்சிடிச்சு. ஆனா இது அந்த ஜோதிக்கு மட்டும் தெரியக்கூடாது...!"

"ஏன் மேடம்?"

"அவன் என்னைப் பிடிச்சு வெச்சுருக்கறதே இதுக்காகத்தான். எது எப்படியோ...டாக்டர்கிட்ட போய் சித்ரவதை அனுபவிக்காம இந்த மட்டுலையும் ஆனதே?"

–பதிலோடு அவள் பார்வை அந்த தடியர்கள் பக்கம் போயிற்று.

"மேடம்... எப்படி இவங்கள சமாளிக்கப் போறோம்?"

"நீ போய் பிரவீணைப் பார்த்துச் சொல்றியா—" நிச்சயமா எதாவது உதவி செய்வார்..."

"இப்பவே கிளம்பறேன்..." அவள் புறப்படக் காலெடுத்தாள். தடியர்கள் இடைமறித்துக் கேட்டனர்.

"எங்க போறே?"

"என் வீட்டுக்கு—"

"வீட்டுக்குல்லாம் அப்புறம் போய்க்கலாம். உள்ள உட்கார்..." – முரட்டுக் குரலோடு சொல்லியபடி, டெலிபோன் வயரையும் முதல் காரியமாகப்போய் அறுத்துப் போட்டனர்.

கலாவும் ராதாவும் எதுவும் பேசாமல் போய் சோபாவில் அமர்ந்து கொண்டார்கள்.

தீவிரமாக யோசிக்கத் தொடங்கினார்கள்.

முற்றிலும் எதிர்பாராத நிலையில் அந்த அரசியல் தலைவரின் கார், பிரவீண் முன் ஒரு பெரிய பட்டாளத்துடன் தேங்கி நின்றது.

'ஜே' போடும் கோஷம் உள்வரை கேட்டது. சகுந்தலாவோடு அவள் கணவரும் சேர்ந்து எட்டிப் பார்த்தனர். பிரபல அரசியல் தலைவர் – பளிச்சென்று

அடையாளம் தெரியவே, இருவரும் முதல் காரியமாகப் பெரிதாக கைகளைத் தூக்கிக் கும்பிடு போட்டனர்.

ஏதோ வேலையாக இருந்த பிரபாகரும்–பேனாவும் கையுமாக நிமிர்ந்து பார்த்துவிட்டு ஓடி வந்தான்.

வந்தவரையும் வரவேற்று, ஹாலில் அமர்த்தி உபசரிக்கத் தொடங்கினான்.

"தம்பி இல்லையா..."

"இருக்காரு .. ஆனா வெளிய வரக்கூடாது . "

"ஏன்?"

"அது வந்து... அம்மை அந்த அளவு பழுத்துருக்கு. காய்ச்சல் வேற...!"

"அப்படியா? மகமாயி .. நல்ல வேளை! இது தெரிஞ்சுதான் சமயபுரம் போய் பிரசாதம் எடுத்துகிட்டு வந்தேன். நல்லதா போச்சு... எங்க தம்பி... அதுங்கைலயே கொடுக்கறேன்..."

– தலைவர் எழுந்து, அவன் இருக்கும் இடத்தை அவரே கண்டுபிடித்துவிடும் வேகத்தையும், ஆவலையும் காட்டினார்.

பிரபாகர் தயங்கிவிட்டு, அவரை மட்டும் அழைத்துக் கொண்டு அவனைக் காணச் சென்றான்.

கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்த தலைவர், பிரவீணைப் பார்த்து மிரண்டு போனார்!

20

பிரவீண் முகத்தில் அம்மை முத்துக்கள் செர்ரிப் பழமாட்டம் பழுத்திருந்தது. முகத்தையே மூடி மறைத்து

மிருந்தது. தலைவர், கன்னத்தில் போட்டுக் கொள்ளாத குறை.

"என்ன தம்பி இது... ஆத்தா உங்க மேல இப்படி ஏறிக் கிடக்கறாளே?" என்றபடி அவன் அருகில், பிரபாகர் இழுத்துப் போட்ட நாற்காலியில் அமர்ந்தார்.

பிரவீண் எதுவும் பேசாமல் மலங்க மலங்க அவரைப் பார்த்தான். என்ன பேசுவது?

"நான் இந்த அம்மை சமாச்சாரமெல்லாம் நாட்டைவிட்டு ஒழிஞ்சிடிச்சுன்னு நினைச்சுகிட்டிருக்கேன். ஆனா உங்களப் பாக்கைல அப்படி இல்லைன்னு நல்லா தெரியுது...!"–என்றவர் பிரசாதத்தை அவன் எதிரில் நீட்டினார்.

பிரவீணும் அதை வாங்கிக் கொள்ளக் ணகளை நீட்டினான். கையெல்லாம் கூட அம்மைக் கொப்புளங்கள்.

"சர்தான்... ஆத்தா ரொம்ப உக்ரமாத்தான் குடியேறிட்டா!" என்றார் உடனே...

அதற்கு மேல் அதற்கு ஒரு பதிலையோ – இல்லை, வேறு விஷயங்களோ பேசக் கூடிய சூழ்நிலையா அது?

பிரபாகர் தொடர்ந்து மௌனித்தான். முள்மேல் இருப்பது போலவும் உணர்ந்தான்.

தலைவர் முகத்திலும் தான் வந்த பேச்சை எப்படி ஆரம்பிப்பது என்னும் தயக்கம்... அது கூட சில நொடிகள்தான் அவருக்குப் போக்கு காட்டியது.

"சரி தம்பி... நான் வந்ததும் நல்லதாப் போச்சு... பிரசாதம் தர முடிஞ்சிச்சு... கவலப்படாதீங்க .. எல்லாம் சரியாயிடும். நல்லா குணமான பின்னால வந்து பாக்கறேன்... நல்லா இருக்கணும்...!"

– பேசியபடி எழுந்தார் தலைவர்.

குங்குமப் பொட்டும் விபூதிக் கீற்றுமாக கையில் மஞ்சள் நீர் செம்புடன் உள்ளே நுழைந்து கொண்டிருந்தாள் வாசுகி.

தலைவர் பார்வை அவளை ஏறிட்டது.

"பாப்பாதான் தம்பி சம்சாரமோ?"–கேள்விக்குப் பதிலாக, பிரபாகர் தலை பலமாக ஆட, வாசுகி சொம்பைக் கீழே வைத்து விட்டுக் கை கூப்பினாள்.

"நல்லாரும்மா... நல்லாரு ... எல்லாரும் சந்தோஷமான நிலைல ஒரு புருஷனைக் கைப்பிடிப்பாங்க...நீதான் தம்பியோட உடல்நிலை பத்தித் தெரிஞ்சும் துணிச்சலா கை பிடிச்சிருக்கே...உன்னை ரொம்பப் பாராட்டறேன்..."

தலைவர் பேச்சில், அவர் பிரவீண் பற்றி அவன் திருமணம் பற்றி சப் ஜாடாகத் தெரிந்து கொண்டுதான் வந்திருக்கிறார் என்பது தெரிந்து போயிற்று.

தலைவர் கருத்துக்குப் பதில் கருத்தை யாராவது கூறினால்தானே பேச்சு வளரும்?

எல்லோரும் மௌனம் காத்தார்கள்.

அவருக்கும் நிரடியது. புறப்பட்டார். வாயிலுக்கு வந்து காரில் ஏறினார். தொற்றிக் கொண்டார்கள் உடன் வந்த அடிப்பொடிகள்.

கார் கிளம்பியது...அது கியர் மாற்றும்போது தலைவர் சிரம் குனிந்து-வழியனுப்ப வந்த பிரபாகரைப் பார்த்துத் திரும்ப ஒரு கும்பிடு போட்டார்.

பின் சகாக்களைப் பார்த்தார். முகத்தில் சுரத்தில்லை. "என்ன தலைவரே...அண்ணன் எப்படி இருக்காரு?"

"ப்ச்ச்ச்..." தலைவர் உதட்டில் பல்லிபோல் சப்தம்.

"என்ன தலைவரே...அண்ணன் பிடி கொடுக்கலையா?"

"அது இல்லவே...உன் அண்ணன் இனி ஸ்டாரா நீடிப்பானாங்கறதே சந்தேகம்..! அதான் யோசிக்கறேன்..."

"என்ன சொல்றீங்க?" –முன்சீட் செயலாளர் அதிக பட்ச அதிர்ச்சி காட்டினார்.

"பெரியம்மை சும்மா வாரித்தள்ளியிருக்கு...முகமே தெரியல..! அவவளவுதான் - இனி அந்தப் பழைய முகத்தப் பார்க்க முடியும்னு எனக்குத் தோணலை..."

"அடப் போங்கண்ணே–நீங்க வேற...! எதுக்கு இருக்கு பிளாஸ்டிக் சர்ஜரி?, சொத்தை சொள்ளைய எல்லாம் சரிபண்ணத்தானே?"

–ஒருவரின் பதிலுக்குத் தலைவரின் முகம் ஆச்சரிய உணர்ச்சியைக் காட்டிற்று.

"அப்படிங்கறியா?"

"அட ஆமாம் தலைவரே...! ஒரு நடை அமெரிக்கா போய்ட்டு வந்தா போதும். அங்க மூஞ்சியையே மாத்தறாங்க இது என்ன?"

"அப்ப நான் இப்பப் பாத்தது வீண் போகாதுன்னுதான் தோணுது!"

–தலைவர் சற்றுத் தெம்புக்கு வந்தார். பின்னால் சீறித் தொடர்ந்து கொண்டிருந்தன கோஷ்டிகளின் கார்கள்.

இயக்குநர் ராஜாராம் வந்திருந்தார். பிரவீணை இண்டஸ்ட்ரீக்கு அறிமுகப்படுத்தியவர். பிரவீணைப் பார்த்துவிட்டு வெளியே வந்தவர், பிரபாகரைத்தான் தனியே அழைத்தார்.

"சொல்லுங்க சார்..."

"என்ன தம்பி..பிரவீண் நடிக்கப் போறதில்லைன்னு முடிவு பண்ணிட்டானேமே...? அப்படியா?"

–ராஜாராம் மிக ரகசியம் என்று கருதிய ஒரு கேள்வியைச் சாதாரணமாகக் கேட்டார்.

"அப்படி எல்லலாம் இல்லையே சார்..." –பிரபாகர் வேகமாக மறுத்தான்.

ராஜாராம் சிரித்தார்.

"தம்பி இந்த லைனுக்குப் புதுசு. அதான் மூடத் தெரியல உங்களுக்கு...! ஆனா விஷயம் இண்டஸ்ட்ரி பூரா பரவிடுச்சு – தெரியுமா உங்களுக்கு...?"

"எப்படி... எப்படி சார்?" பிரபாகர் மிடறு கட்டினான்.

"எப்படியா... இப்ப நாம ரெண்டு பேரும் இங்க ஒதுங்கி நின்னு பேசறத அப்படியே பக்கத்துல உக்காந்து கேட்ட மாதிரி எழுத ஆள் இருக்கு–தெரியுமா உங்களுக்கு?"

–பிரபாகர் வெளிறிப் போனான்.

"பிரவீணோட போட்டோகூட நாளைக்குப் பேப்பர்ல கலர்ப்படமாவே வரப்போகுதுன்னு நினைக்கறேன்!"

– ராஜாராம் அதிர்ச்சிகளைத் தொடர்ந்தார்.

"சாரர்ர்..."

"பதட்டப்படாதே... இந்த மாதிரி நேரத்துலதான் ரொம்ப எச்சரிக்கையாவும், பக்குவமாவும் நடந்துக்கணும். பிரவீணுக்கும் அது நல்லாத் தெரியும். ஆனா–தெரிஞ்சும் நடந்துக்கலேன்னா அவன் நிஜமாவே நடிக்கறதில்லைன்னு முடிவு செய்துட்டான்னுதான் நான் நினைக்கறேன்..."

– ராஜாராம் இடைவெளி விட்டார்.

"சார்... அது ஒரு தப்பான முடிவு. நான் எப்படியும் அதை மாத்திடுவேன்..."

"மாத்தினாலும் பிரயோஜனம் இல்ல தம்பி... பிரவீண் மாதிரி நடிகனுக்கு இமேஜ் ரொம்ப முக்கியம். இந்த இண்டஸ்ட்ரி சம்பளம் கொடுக்கறது இமேஜுக்குத்தான்...! அவனோட கேரக்டருக்கோ, திறமைக்கோ கிடையாது!"

"என்ன சார் நீங்க... எத்தனை பேர் இந்த மாதிரி சொல்லிட்டு திரும்ப மறுத்துருக்காங்க... அப்படி இதை எடுத்துக்க முடியாதா?"

"ஆனா பிரவீண் மறுக்கணுமே?"

"நான் மறுக்க வைக்கறேன்..."

"அவனோட ஸ்டேட்மென்ட் என்ன தெரியுமா?"

"என்ன சார்?"

"என் முடிவு இறுதியானது. இதை யாரும் மாத்த முடியாது. மாத்த முடியும்னு யாராவது சொன்னா நம்பாதீங்க'ன்னு சொல்லியிருக்கான் அவன்...!"

"எப்போ... எப்ப சார்..."

"நீயே போய் கேள்..."

பிரபாகர் முகம் வெளிறிப் போய், அதில் வியர்வை கசியத் தொடங்கியது.

"என்ன தம்பி தயங்கறே... அவன்தான் போன் பண்ணி எல்லாருக்கும் சொல்லியிருக்கான். அவனுக்கு இஷ்டமில்லை. எனக்கு அவனை நல்லாத் தெரியும். அவன் ஒரு முடிவு எடுத்துட்டா எடுத்ததுதான். ஒரு வகைல இந்த இன்டஸ்ட்ரில அவன் தாமரை இலை தண்ணீர் மாதிரிதான் இது நாள் வரை இருந்தான்.

அடுக்கடுக்கா நடந்த சம்பவங்கள் அவனை ரொம்பப் பாதிச்சிடிச்சுன்னு நினைக்கறேன். அதான் போதுண்டா சாமின்னு பின் வாங்கறான்!

ஒரு கோணத்துல பார்த்தா இதுகூட நல்ல முடிவு தான். நான் உன்னை இப்ப எதுக்குக் கூப்பிட்டேன் தெரியுமா?''

ராஜாராம் பிடிகை போட்டு, கேள்வியில் வந்து நின்றார், பிரபாகர் பார்வையே 'எதற்கு' என்று கேட்காமல் கேட்டது.

''அவன் முடிவை மாற்ற நீ எந்த முயற்சியும் செய்யாதே அவனுக்கு நிழல் யுத்தம் பிடிக்கல... கல்யாணம் செய்துகிட்ட பெண்ணோட நிம்மதியா இருக்க விரும்பறான்! ஆகையால அவனை நீ கம்ப்பல் பண்ணாதே... போகட்டும் விட்டுடு...!''

ராஜாராம், பிரபாகரிடம் அதிசயமாக சமரசம் பேசினார்.

''சார் இவன் இப்படிப் பண்ணுவான்னு தெரிஞ்சிருந்தா நான் வேலைய விட்றுப்பேனா .. இது பெரிய கோழைத்தனம் சார்...! என்னதான் இது ஒரு நல்ல முடிவா இருந்தாலும் இதை பிரவீண் இப்ப எடுக்கக் கூடாது சார்...''

''நீ என்ன சொன்னாலும் அவன் கேட்கப் போறது கிடையாது. அவன் முடிவெடுத்துட்டான். விட்டுடு... உங்க பிரச்சினை எல்லாமும்கூட உங்களை விட்டுடும்—''

ராஜாராம் ஒருவித உறுதியோடு பேசிவிட்டு வெளியே வரும்போது, வெளியில் ராதா நின்று கொண்டிருந்தாள்.

அவர் பார்வை அவளை ஊடுருவிவிட்டு, பின் விலகிக் கொண்டது. பிரபாகரும் அவளைப் பார்த்தான். அதிர்ச்சியைக் காட்டினான்.

''சார்... உங்களோட கொஞ்சம் தனியா பேசணும்...''

''நீ அந்தக் கலாவோட கூட்டாளி தானே?''

''ஆமாம் சார்... மேடம்தான் அனுப்பினாங்க...''

''எதுக்கு அனுப்பினா? அதான் எல்லாம் முடிஞ்சு போச்சே... பிரபாகர் இனி நடிக்கப் போறதில்ல. அவன் நடிப்புக்கே முழுக்குப் போடப் போறான். இந்த ஊரை விட்டேவும் போகப் போறான். போய்ச் சொல்லு—உன் மேடத்துகிட்ட! போ...!''—பிரபாகர் வாசலில் நின்று தன்னிலை மறந்து பேசியது, பலர் காதுகளிலும் விழுந்தது.

ராதா என்ன நினைத்தாளோ... சட்டென்று பிரபாகரின் கைகளை இறுகப் பிடித்து, அவனைத் தரதரவென்று இழுத்துக்கொண்டு ஒரு ஓரமாகச் சென்றவள், ''சார்... பிரவீண் சார் இப்படிச் சொல்வார்னு எங்களுக்கு முந்தியே தெரியும். அவர் ஆசைப்பட்டுச் சொல்லலை. அவர் அப்படிச் சொன்னதுக்குப் பின்னால வேற ஒரு காரணம் இருக்கு...''

ராதா, பிரபாகரை ஸ்தம்பிக்க வைத்துவிட்டு அவனை ஏறிட்டான்.

''என்ன காரணம் அது?'' பிரபாகரும் கேட்டான்.

''ஜஹாங்கீர் பாபா!''

ஒரு பெயரை மட்டும் சொல்லி நிறுத்தினாள் அவள்.

21

'ஜஹாங்கீர் பாபா' என்கிற அந்தப் பெயர் பிரபாகருக்குப் புதிது. அதனால் பெரிதாக அவனுக்கு அதிர்ச்சி ஏற்படவில்லை. ஆனால் சொன்ன நொடிப் போதிலேயே ராதா தன் முகத்தில் பயம் கலந்த அதிர்ச்சியைப் பரப்பிக் காட்டினாள்.

"என்னங்க நீங்க... பாபா பத்திக் கேள்விப்பட்டதில்லையா?"

அவளது அடுத்த கேள்வி அவனை இடித்தது.

"யார் பாபா...? என்ன இது புதுக் குழப்பம்...?"

"இங்க நின்னு பேச வேண்டாம். உள்ள போய் பேசுவோமே... ?"

"ஏய்... நீ ஏதும் கலாட்டா பண்ணமாட்டியே...?"

"ரொம்பத் தப்பா புரிஞ்சுகிட்டிருக்கீங்க பிரபாகர்... கலா மேடம் அடிப்படைல ரொம்ப நல்லவங்க... அவங்களே இப்ப பயங்கர இக்கட்டுலதான் இருக்காங்க "

ராதா நடந்தபடியே பதில் தந்தாள். அவளை சில வேலைக்காரர்கள் ஒருமாதிரி பார்த்தார்கள்

ஹாலில் மனோரஞ்சிதமும், சகுந்தலாவும் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களும் அவளைப் பார்த்துவிட்டு, 'யார் இந்தப் புதிய பெண்?' என்கிற கேள்வியில் விழ, பிரபாகர் அவர்கள் அவ்வளவு பேரையும் கடந்து, ஒரு அறைக்கு அவளை அழைத்துச் சென்றான்.

முதல் காரியமாகக் கதவைத் தாழிட்டான்.

"உம் சொல்லு... என்ன விஷயம்?"

"சொல்றேன்... மேடம் இப்ப ஜோதியோட கஸ்டடில இருக்காங்க... வீட்டுக்குள்ளேயே ரவுடிங்க... நான் ரொம்ப சாமர்த்தியமா வெளியே வந்தேன். என்னை அவங்க இங்க பாத்தா அவ்வளவுதான் . !"

"உங்க பிரச்சினையை எல்லாம் எதுக்கு என்கிட்ட சொல்றே? பாபா யார்...? அவருக்கும் பிரவீணுக்கும் என்ன சம்பந்தம்...?"

"சொல்றேன் சார்... ஒவ்வொண்ணாதானே நான் சொல்ல முடியும். ஆக்சுவலா கலா மேடத்தை யூஸ் பண்ணி பிரவீண் மேல பழி போட ஏற்பாடு செஞ்சது ஜோதிநாத்தான். மேடமும் பணத்துக்கு ஆசைப்பட்டு சரின்னுட்டாங்க... ஆனா இப்ப கருவும் கலைஞ்சு போச்சு... அவங்க கெட்ட எண்ணமும் மாறிடுச்சு . !"

"என்ன சொல்றே? என் நண்பன் அவங்களத் தொடக்கூட இல்லை. எங்க இருந்து வரும் கரு...?"

"ஆமா... அதுதான் ஒரு விஷயமாக்கும். மேடம் கன்சீவாக வேற ஒருத்தன் காரணம். அது தெரிஞ்சுதான் இப்படி ஒரு பிளான் பண்ணினாங்க... நல்லவேளை– இப்ப எல்லாமே மாறிப்போச்சு... இந்த பிளானுக்கெல்லாம் பின்னால இருக்கறது ஜோதி மட்டுமில்ல... பாபாவும்தான்..."

"பாபா... பாபா... பாபா... யார் இந்த பாபா? இவர் எதுக்கு பிரவீணை கண்ட்ரோல் பண்ணணும்?"

"பாபாவப் பத்தி ஃபீல்டுல எல்லாருக்குமே நல்லா தெரியும். பாபா இருக்கறது மும்பைல... ஆனா டோட்டல் சினி ஃபீல்டையே அண்டர் கிரவுண்ட் வேலைகளால தன் கன்ட்ரோல்ல வெச்சிருக்கறவர் அவர்...!

மும்பைல ஒரு பாடகர் கொல்லப்பட்டதுக்கும், திருவனந்தபுரத்துல ஒரு காமெடி ஆக்டர் கால் போனதுக்கும், கர்நாடகாவுல ஒரு ப்ரொட்யூசர் தற்கொலை செய்துகிட்டதுக்கும் பாபாதான் காரணம்.

பாபா ஒரு சர்வதேச தீவிரவாதி. இவன் ஒருத்தரைக் குறிவெச்சுட்டா அவ்வளவுதான்..!''

''சரி; இப்ப அவன் எப்படி பிரவீணை கண்ட்ரோல் பண்ணினான்?''

''இதை பிரவீண்கிட்டேயே கேளுங்க.. சொல்வார். அவர் என்ன சொல்றாரோ அதை நாம கேட்கணும்... கேட்கலைன்னா நினைச்சுப் பார்க்க முடியாத விபரீதம் லாம் ஏற்படும்!''

''என்னம்மா புதுப்புது குண்டா தூக்கிப் போட்றே... நான் ஏற்கெனவே குழப்பத்துல இருக்கேன். என்னை மேலும் குழப்பறியே...?''

''குழப்பல... தெளிய வைக்க வந்துருக்கேன்–அதுவும் உயிரைக்கையில பிடிச்சுகிட்டு...! சுருக்கமா சொல்லிடறேன்–கலா மேடம் பிரவீண் மேல பழி போட்டுட்டு, அதுக்கான பணத்தை ஜோதிகிட்ட கேட்டப்போ, ஜோதி தராம கேலி பண்ணினார். அதுலதான் மேடம் ரொம்ப கூடாகிட்டாங்க...

நம்பளால காரியம் சாதிக்கற ஒருத்தன் நம்மையே கனம் பார்க்கறானேன்னு கவலைப்பட்டாங்க.. சாதாரணமா ஃபீல்டுல யாருக்காவது எதாவது பிரச்சினைன்னா, யாருக்கும் தெரியாம பாபாவைப் பார்ப்பாங்க.

அந்த மாதிரி இந்த சிக்கல்லையும் பாபாவைப் பார்த்து ஜோதியை ஒரு வழி பண்ணலாம்–அப்படியே பிரவீண்கிட்டேயும் மன்னிப்பு கேட்டுக்கலாம்னு நினைச்சுதான் நாங்க வெளிய புறப்பட்டோம்

ஆனா எங்களோட மன மாற்றத்தைத் தெரிஞ்சுகிட்ட ஜோதி, தன் ஆட்களோட வந்து எங்களை வீட்டோட சிறை வெச்சுட்டான். அப்ப கலாவைக் கீழே பிடிச்சுத் தள்ளினதுலதான் அவங்க கர்ப்பம் கலைஞ்சது. ஆனா இந்த விஷயம் இன்னும் ஜோதிக்கோ -மற்றவங்களுக்கோ தெரியாது. தெரிய வேண்டாம்ன்னுட்டாங்க.

நடுவுல நான் வெளிய வந்து பாபாவுக்கு போன் பண்ணினேன். பாபாவோட நேர்ல பேச முடியல... ஆனா அவரோட பி.ஏ. பேசினான்.

அப்பதான் தெரிஞ்சது–ஜோதி எங்களுக்கு முன்னாலயே பாபாகிட்ட போய் அவர்கிட்ட பொறுப்பை ஒப்படைச்சுட்டான்.

கலா மேடம் சொன்ன பழி...அதையும் தாண்டி பல சிக்கல்கள் இருந்து, அதுல எல்லாம் ஒருக்கால் பிரவீண் அரசியல்வாதிகளால தப்பிச்சாலும், பாபாவோட மிரட்டல் முன்னால மண்டியிட்டுத்தான் தீரணும் கறது ஜோதியோட ஏற்பாடு! கடைசில அதன்படிதான் நடந்துருக்கு!''

–ராதாவின் விளக்கம் பிரபாகரின் நெற்றியில் நரம்பு புடைக்க ஓடியது.

''அதனாலதான் நான் அவ்வளவு சொல்லியும் பிரவீண் 'நான் விலகறேன்–விலகறேன்'னு சொல்றானா?''

''ஆமா...நீங்க அவர் அரசியல் கட்சில சேரப் போறதா சொல்லி ஜோதிக்கு செக் வெச்சீங்க...ஜோதி பதிலுக்கு, சினிமாவை விட்டே விலகப் போறதா பாபா மூலமா பிரவீணையே சொல்ல வெச்சுட்டார்...!''

''இந்த பாபா அவ்வளவு மோசமானவனா?''

"ஆமாம்...பெரிய பெரிய வி.ஐ.பி.க்களே சலாம் போட்ற ஒரு இன்டர்நேஷனல் பர்சனாலிடி இந்த ஜஹாங்கீர் பாபா...!"

"ஹும்...இவனுக்குப் பயந்தா பிரவீண் இப்படி நடந்துக்கறான்...?"

"அவனுக்குப் பயந்தான்னு சாதாரணமா எடை போட்டுடாதீங்க...ஃபீல்டுல சிலர்கிட்ட பேசிப்பாருங்க தெரியும்..."

"சரி; நான் இனி பாத்துக்கறேன். எனிவே-உன் இன்ஃபர்மேஷனுக்கெல்லாம் ரொம்ப நன்றி...!"

"நன்றியைவிட முக்கிய விஷயம் நீங்க கலாவைக் காப்பாத்தறதுதான்...!"

"நான் இங்க பிரவீணைக் காப்பாத்துவேனா-இல்லை-அங்க அவளைக் காப்பாத்துவேனா...?"

"இரண்டு பேரையும் காப்பாத்தித்தான் தீரணும். இந்த சவால்ல ஜெயிச்சாதான் பிரவீண் நிஜ ஹீரோ... இல்ல-சத்யமா அவர் ஒரு ஜீரோ...!"

-ராதா கோபத்திலும் ஆவேசத்திலும் முகம் சிவக்கக் கூறினாள். முன் மார்பின் மேல் ரோஸ்பவுடர் பந்தல் போட்டிருந்தது. அறை வெளிச்சத்தில் அது செவ்வானம் போல மின்னலிட்டது!

பிரபாகர் நகத்தைக் கடிக்கத் தொடங்கினான்.

நெடுநேரம் கழித்து, "சரி; நீ கிளம்பு...உங்க வீட்டை போலீஸ் ரெய்ட் பண்ணும். அதுவும் ரொம்ப சாமர்த்தியமா.. அதுக்கு நான் பொறுப்பு!" என்றான்.

"எப்படி ? போலீசுக்குப் போனா அவங்க கேஸ் எடுக்கணும் - ஜோதிக்கும் பாபாக்கும் எதிரா நடக்கத் துணிவாங்களான்னு பாத்துக்குங்க..." - எச்சரித்தாள் அந்த முதிர் தேவதை.

"நான் பாத்துக்கறேன்...நீ கிளம்பு..."

அவனது நம்பிக்கையான வார்த்தைகளை ஏற்றுக் கொண்டு வெளியில் வந்தாள்.

கூடத்தில் சகுந்தலாவும், மனோரஞ்சிதமும் பார்த்த படியே இருந்தனர். போதாதற்கு, மாமா வேறு வந்திருந் தார். கூடவே மாமன் மகனும்...

அவள் வெளியேறவும், கேள்வி ஆரம்பித்தது.

"யாருப்பா அது?"

"கலாவோட பி.ஏ..."

"யார்...அந்தக் கவர்ச்சி நடிகை கலாவோட ஆளா இவ...!"

"ஆமா...இங்க எங்க வந்தா?..."

"காரணத்தோடதான்! இதுக்கு மேல இப்ப எதையும் கேக்காதீங்க! ஆமா...பிரவீண் என்ன பண்றான்...?"

"நல்லா தூங்கறான்பா...பிரபா...இவ எதுக்கு வந்தா...? திரும்ப எதாவது பிரச்சினையா.... சொல்லுடா..."

"பிரச்சினைதான்...பணம், காசு, பேரு, புகழ் இருந் தாலே பிரச்சினைதான்..."

"டேய்...புரியும்படியா சொல்லுடா..."

"சொல்றேன். சொல்றேன்..." - முனங்கியபடியே பிரவீண் இருக்கும் அறைக்குச் சென்றான்.

பிரவீண் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான் தலையணைக்குக் கீழே அவனது செல்ஃபோன். அது இப்போது மெல்ல அமட்டியது.

சப்தம் பிரவீணை எழுப்பிற்று. எழுந்து பிரபாகரைப் பார்த்தபடியே காது கொடுத்தான். அவன் முகத்தில்

அம்மைக் கலக்கத்தையும் தாண்டிய பீதி ஒன்று காட்டுக் குதிரையாக ஓடிற்று.

''சரி...சரி... வேண்டாம்... வேண்டாம். நான் வார்த்தை மாற மாட்டேன்...யாரையும் எதுவும் செய்துடாதீங்க...ப்ளீஸ்...ப்ளீஸ்...!''

யாரோடு இப்படிக் கொஞ்சுகிறான் என்பது தெரியாதபடி பேசிவிட்டு, பிரவீண்-பிரபாகரை ஏறிட, பிரபாகரிடம் கொத்துவதுபோல கேள்வி.

''யார் பிரவீண்... ஜஹாங்கீர் பாபாவா?''

-அடுத்த நொடி பிரவீண் முகத்தில் குத்து விழுந்தது போலாக!

''ஏண்டா இப்படி தொடை நடுங்கியா இருக்கே...? எவனோ ஒருத்தன் தாதாவாம்...மிரட்டுவானாம். நீ பணிவியாம்...வெட்கமா இல்லை உனக்கு!''

பிரபாகர் அந்த அறையே நடுங்கிற்று.

''சத்தம் போடாதடா.. உனக்குப் பிரச்சினையோட ஆழம் தெரியாது ''

''மண்ணாங்கட்டி. நான்தான் கூட இருக்கேன்ல...'' – பிரபாகர் சப்தமிட்டபடி செல்லைப் பிடுங்கி, ஆளுங் கட்சியின் தலைவரைப் பிடிக்க எண்களைத்தட்டினான். பி.ஏ. லைனில் வந்தார்.

''சார்... நான் பிரவீண் பி. ஏ. பிரபாகர் பேசறேன். நம்ம பிரவீண் அடுத்த மாசம் கடைசில ஊர் அறிய நம்ம கட்சில சேரப் போறார். இப்ப உடல்நிலை சரியில்லாத தாலதான் அடுத்த மாசம். இல்லேன்னா இன்னிக்கே வந்துடுவாரு...!''

''ரொம்ப சந்தோஷம்... இப்பவே சி.எம். வரை மேட்டர் கொண்டு போயிடறேன்...!''

''அப்படியே ஒரு உதவியும் வேணும்...''

''சொல்லுங்க தம்பி... பிரவீண் தம்பி இனி நம்ம கட்சியோட சொத்தாச்சே...! அவருக்கில்லாத உதவியா?''

''இந்த ஜஹாங்கீர் பாபான்னு கேள்விப்பட்டிருக்கீங்களா?''

''ஆமா... ஐய்யோ அந்த ஆள் பேரை ஏன் இங்க சொல்றீங்க?''–பி.ஏ. குரல் பயத் தந்தியடித்தது.

22

பி. ஏ. வே பயப்படுவது பிரபாகருக்கு ஆச்சரிய மளித்தது. 'ஜஹாங்கீர் பாபாவுக்கு அத்தனை வலிமையா?'

– மனதில் க்ஷணத்தில் கேள்வி முளைவிட்டுவிட்டது. மறுமுனையில் பி.ஏ. தன் பயத்தை விரிவுபடுத்தத் தொடங்கினார்.

''என்ன மிஸ்டர் பிரபாகர்... பாபா பத்தி ஏதோ சொல்ல வந்தீங்களே... என்ன விஷயம்?''

''ஒண்ணுமில்லை... அவர் நம்ம பிரவீணுக்கு எதிரா சில வேலைகளைப் பாக்கறதுன்னு முடிவு செய்துட்ட மாதிரி கேள்விப்பட்டோம்...!''

''ஐய்யய்யோ...''

''நீங்களே இவ்வளவு தூரத்துக்குப் பயப்பட்றது தான் பெரிய ஆச்சரியம்...!''

''பயப்படாம... மனுஷன் குற்றங்களுக்கெல்லாம் ராஜாவாச்சே...?''

"அந்த ராஜாவை உங்களால தடுக்க முடியாதா...?"

"தடுக்கலாம்... ஆனா எங்களுக்கே சமயத்துல அவன் மூலமா உதவி தேவைப்படுதே...!"

"எப்படியோ... நீங்க சொன்னா கேப்பார் இல்லையா?"

"நான் சொல்ல ஒண்ணுமில்ல... இது விஷயமா பிரவீண் சாரையே கொஞ்சம் சி.எம். கிட்ட பேசச்சொல்லுங்க. இது ரொம்ப ரொம்ப மேல்மட்ட விஷயம்! இதுல நாம... சாரி... நான் எந்தக் கருத்தையும் கூற விரும்பல...!"

"சரி... நான் பிரவீண்கிட்ட சொல்லி பேசச் சொல்றேன்..."–பிரபாகர் செல்போனை முடக்கிவிட்டு நிமிர்ந்தான்.

பிரவீண் செம்பழுப்புக் கொப்புளங்களோடு பிரபாகரைக் குத்துப் பார்வை பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன பாக்கறே...? நல்ல நண்பனுக்கு அழகு எல்லாத்தையும் மனசு விட்டுப் பேசறதுதான். மனசுக்குள்ள வெச்சுப் புழுங்கறது கிடையாது. நீ ஒரு மோசமான நடிகன்டா பிரவீண்...!"

– பிரபாகரின் பேச்சு பிரவீணைப் பிசைந்தது.

"அப்படி இல்லடா பிரபா... உனக்கு என்ன நடந்ததுன்னு முழுசா தெரியாது. தெரியாம அப்படிப் பேசாதே...!"

– பிரவீண் வருந்தத் தொடங்கும்போதே வளைத்துக் கட்டி வரிசையாக நிற்கத் தொடங்கினார்கள் வாசுகியின் குடும்பத்தினர்.

"என்ன தம்பி பிரச்சினை...?" – வாசுகியின் அப்பா வாயைத் திறந்தார்.

"ஒண்ணுமில்ல மாமா. உங்க மாப்ளைக்கு ஒரு சர்வதேச ரவுடி மிரட்டல் விட்ருக்கான். அதான் 'நடிக்கப் போறதில்லை; விலகிடப் போறேன்'னு ஐயா உளறிக் கொட்டியிருக்காரு...!"

"யாருப்பா அந்த ரவுடி?"

"ஜஹாங்கீர் பாபாங்கறது அவன் பேர். கூலிக்கு மாரடிக்கற ஆள்..."

"என்ன தம்பி இதெல்லாம்...? பிரபாகர் சொல்றது உண்மையா?"

–சகுந்தலா பிரவீணைப் பார்த்துக் கேட்டாள்.

பிரவீணிடம் கொத்தான மௌனம். நிறைய வியர்த்திருந்ததில் கழுத்துப் பாகத்தில் நீர்ப் பாம்புகளின் ஓட்டம். வாசுகி பார்த்துவிட்டு, ஒரு துண்டினால் வாஞ்சையாக அதைத் துவட்டத் தொடங்கினாள்.

பிரவீண் அவளைக் கவனித்தான். பின் கண்கள் கலங்கினான்.

"ஏன் அழறீங்க?" – சகுந்தலா பதறினாள்.

"அழக்கூடாதுன்னுதான் பாக்கறேன். ஆனா முடியல..."

"சேச்சே... என்ன இது சின்னக் குழந்தையாட்டம்...!"

'சின்னக்குழந்தையாவே நான் இருந்துருக்கலாம்... ஏன் வளர்ந்தேன்...? எதனால நடிகனானேன்...? ச்சே!"

"பிரவீண்... என்ன இது? இப்படி அழறவங்கள யாருக்குமே பிடிக்காது. முன்னையாவது நீ தனி மனுஷன். ஆனா–இப்ப நாங்க எவ்வளவு பேர் இருக்கோம்! தைரியமா இரு..."

"ஆமா .. பாபான்னு யாரைப் பத்தியோ சொன்னீங்களே... அவர் என்ன சொல்லி மிரட்டினார்...?"

"உயிரை வாங்கிடுவேன்னான்... என் உயிர் போறதுக்காக நான் கவலைப்படலை. ஆசையா என்னை நம்பி வந்து–உங்களை எல்லாம் எதிர்த்துக் கல்யாணம் செய்துகிட்ட வாசுகியை நினைச்சுப் பார்த்தேன். அவளோட ஆசைக்காகவும், காதலுக்கவும் நான் எந்த விலையும் கொடுக்கலாம்னு மனசுக்குப் பட்டுச்சு... அதனாலதான் சினிமாவை விட்டு விலக முடிவு செய்தேன்.

நடந்துகிட்டு இருக்கறது ஒரு அழுக்கு விளையாட்டு.

இதுல எனக்கு எது நடந்தாலும் கவலையில்லை. ஆனா வாசுகியை யோசிச்சுப் பாருங்க...!"

– பிரவீண் கேள்வியில் நியாயம் பலமாக மின்னியது. எல்லோரிடமும் மௌனம் பந்தல் போட்டது. வாசுகி முகத்தில் சோகம்உறைந்து போய், கண்களில் வெறுமை பளிச்சென்று தெரிந்தது.

அற்புதமாகப் பேர், புகழுடன் வாழப்போகிறோம் என்று ஆசைப்பட்டு வந்தவள்... திசை தெரியாத ஒரு உடைந்த கப்பல் போல் ஆகிவிட்டாள்.

பிரபாகர் அவளை வெறித்து விட்டு மௌனத்தை உடைத்தான்.

"சரி...வாசுகிக்காகவாவது வாழணும்கற உன் ஆசையையும் நல்ல எண்ணத்தையும் நினைச்சு நான்ரொம்பப் பெருமைப்பட்றேன் பிரவீண்...

ஆனா இப்படி ஒத்துக்கறதன் மூலம், ஒரு ரவுடி ஜெயிக்கக் காரணமா இருக்கியே... அதை யோசிச்சுப் பார்த்தியா?"

"என்ன பண்ணச்சொல்றே? இப்ப அவன் மட்டுமா எனக்குப் பிரச்சினை...? என்னை ஒரேயடியா படுக்க வெச்சுட்ட இந்த அம்மையும்தானே...? சினிமாவா இருந்தா எந்த நிலையிலையும் கதாநாயகன் தனி நபரா செயல்படுவான். தனி ஆளா போய் நூறு பேரை அடிப்பான். அவனை நோக்கி எத்தனை பேர் சுட்டாலும் ஒரு குண்டுகூட அவன் மேல் படாது. அது கற்பனை!

ஆனா வாழ்க்கை அப்படி இல்லையே? இங்க விவேகம்தானே முக்கியம்?"

"அந்த விவேகத்தோட இப்ப ஒரு முடிவு எடு. இதனால் என்ன நடந்தாலும் சரி... இரண்டுல ஒண்ணு பார்த்துடுவோம்!"

"என்ன...என்னைப் பலப்படுத்திக்க அரசியல்ல குதிக்கச் சொல்றியா?"

"ஆமா...வாழ்க்கைல இனி நீ உன் சுய விருப்பங்களுக்கு ஏற்பவெல்லாம் நடந்துக்க முடியாது. நீ ஒரு பொதுவான - ஒட்டுமொத்தப் புகழோட பிரதிநிதி. அப்படிப்பட்ட புகழை அரசியல்வாதிகளும் தங்களுக்கும் – தங்கள் வளர்ச்சிக்கும் தேவையா நினைக்கறாங்க...ஆகையால் அதை நீ பயன்படுத்தி ஜெயிக்கப் பார்..."

"நிஜமா சொல்றேன். எந்த அரசியல் கட்சி மேலேயும் எனக்கு நம்பிக்கை இல்லை. போலியா என்னைக் காப்பாத்திக்க அதுல சேர்ந்து, ஒரு போலி வாழ்க்கை வாழறதுக்கு–விலகிட்றது பல மடங்கு மேல் இல்லியா?"

"திரும்பவும் சொல்றேன் . ஒரு ரவுடியோட மிரட்டலுக்கெல்லாம் பயந்து இது நடக்கக்கூடாது! அவனை முதல்ல ஜெயிக்கப் பார். அப்புறமா இந்த முடிவுக்கு வா...எனக்கு ஆட்சேபணையில்லை..."

"என்ன பண்ணச் சொல்றே...? ஆளுங்கட்சி உதவியக் கேட்கச் சொல்றியா?"

"வேற வழி...இப்பவே முதல்வரோட பேசு. இன்னொரு முக்கியமான விஷயம்..."

– பிரபாகர் இடைவெளிவிட, எல்லோர் பார்வையும் அவனை ஊடுருவியது.

"அந்தக் கலாவோட பிரச்சினை தீர்ந்துடுச்சு. அவ இப்ப நம்ம பக்கம். இப்ப இருக்கற ஒரே சிக்கல் அந்த பாபாதான்..."

"போதுமே... அவன் எவ்வளவு கொடுமையானவன் தெரியுமா? தன் விருப்பத்தை நிறைவேற்றிக்க எந்த எல்லைக்கும் போகக் கூடியவன். ஐம்பத்தைந்து பிஞ்சுக் குழந்தைகளோட உயிரை –அவங்க ஸ்கூல் பஸ்ல வீடு திரும்பும்போது பாம்போட்டு எடுத்தவன்...!"

"பயப்படாதே...! இவ்வளவுக்கும் காரணம் அந்த ஜோதிநாத். அவனைப் பிடிச்சா எல்லாம் சரியாயிடும்...!"

"இதுக்கெல்லாம் ஆதாரமில்லையே பிரபா...?"

"இங்கேயே – இந்த அறைக்குள்ளேயே உக்காந்து பேசிக்கிட்டிருந்தா ஆதாரம் கிடைச்சுடுமாக்கும்? அந்த ஆதாரத்தைத் திரட்ட வேண்டியது என் வேலை.

நீ இப்பவே சி.எம். கூட பேசறே... அவர் உதவியை ரகசியமா கேக்கறே...!

அந்த பாபாக்குப் பதிலடி தரும்படியா புதுசா நாலு படம் ஒத்துக்கறே . !

நாம எல்லாரும் எதுவுமே நடக்காதபடி மனசைத் திடப்படுத்திக்கிட்டு சந்தோஷமா இருப்போம்.

இந்த மாதிரி நேரத்துலதான் தெய்வத்தை நம்பணும். எனக்கு நம்பிக்கை இருக்கு... நீ முதல்ல போன், போடு. அந்தக் கலா இப்ப ஆபத்துல இருக்கா...அவளையும் முதல்ல மீட்கற வழியைப் பார்க்கணும்..."

– மளமளவென்று பேசியபடி செல்லை எடுத்து நீட்டினான் பிரபாகர்.

பிரவீணும் எல்லோரையும் ஒரு பார்வை பார்க்க, அனைவரும் ஒரு சேர 'உம்...' என்றனர்.

அவன் சற்றே நடுங்கும் குரலால் முதல்வரைப் பிடித்து வணக்கம் கூறினான்.

பதில் வணக்கம் கூறினார் அவர். விருப்பத்தைக் கூறினான். அவர் தரப்பில் மகிழ்ச்சி பல மடங்கு தெரிந்தது. நன்றி கூறிவிட்டு போனை முடக்கினான்.

பிரபாகர் அடுத்த நொடி உதவியாளரைப் பிடித்தான்.

கலா விஷயத்தைச் சொல்லவும் அவர் சிரித்தார்.

"இந்த நிமிஷம் அந்த ரவுடிங்க கலாவை விட்டு விலகியிருப்பாங்க பிரபாகர்...இதுக்குப் பின்னால ஜோதிதான் இருக்கணும்னு தலைவரே யூகம் செய்துட்டார். உங்ககிட்ட இருந்து போன் வரத்துக்கு முந்தியே ஜோதிக்குப் போன் பண்ணி நல்லா டோஸ் விட்டார்.

'போட்டி - பொறாமை எல்லாம் வேண்டாம். அது நல்லதில்லை' ன்னு அட்வைசும் பண்ணினார்..."

– பி.ஏ. பெரிய வியப்பளித்தார். எப்படி சமாளிக்கப் போகிறோமோ என்று கருதியது இப்படிக் கூடவா சுலபமாக முடியும்?

பிரபாகருக்கு மலையளவு பாரம் நீங்கின மாதிரி இருந்தது.

எல்லோருமே லேசானார்கள்.

கலாவிடமிருந்தும் போன் வந்தது...

அவள் பிரவீணிடமே போனில் பேசினாள்.

"பிரவீண்... என்னை மன்னிச்சிடுங்க... எனக்கு இதுக்கு மேல பேச வார்த்தையே வரலை..."

– அவள் குரல் உடைந்து போனது. ஆனால் பிரவீண் உள்ளுக்குள் நொறுங்கிப் போனான்.

"எதைச் செய்யக்கூடாது என்று நினைத்தோமோ அதைச் செய்து விட்டோமே.. ஒரு பக்கமாகச் சாய்ந்து விட்டதால் இனி மற்ற பக்கங்கள் எதிரியாகப் பார்க்குமோ?

நெருக்கடிகளைப் பலமாக உருவாக்கி அந்த ஜோதி அவனைப் போலவே தன்னையும் ஆக்கி விட்டானே...?"

பிரவீண் உடைந்து போய் உள்ளுக்குள் குமுறிய போது, சட்டென்று மனதுக்குள் ஒரு புதிய முடிவு.

அதுதான் 'சரி என்று உள்மனது வேறு அடித்துச் சொன்னது...

அது...?

23

பிரவீண் முகத்தில் புதிய முடிவின் ரேகைகள். பிரபாகர் கச்சிதமாக ஊகித்தான்.

"என்ன பிரவீண்... ஏதோ ஒரு முடிவெடுத்துட்ட மாதிரி தெரியுதே...?"

"ஆமாம் பிரபாகர்.... நான் இனி சினிமால மட்டும் ஹீரோ இல்ல... நிஜ வாழ்க்கைலையும் ஹீரோவா சில

விஷயங்களைப் பண்ணப் போறேன்"

"என்ன பண்ணப் போறே?"

"எனக்கு இப்படி நெருக்கடிகளை உருவாக்கின ஜோதியை, அவனோட ஆயுதமா பயன்பட்ட ஜஹாங்கீர் பாபாவை.."

பிரவீண் எதையோ சொல்ல வந்தான். பாதியிலேயே முடித்துக் கொண்டு, சுற்றி அனைவரையும் ஏறிட்டான்.

"என்னடா...? அவங்கள என்ன பண்ணப் போறே?"

"ஒண்ணுமில்ல... இவங்கள மாதிரி நபர்கள் உயிரோட இருக்கறதே தப்பு"

"என்ன சொல்றீங்க தம்பி.?" பதறிப் போனாள் சகுந்தலா.

"பயப்படாதீங்க அத்தை இவங்க கொட்டத்தை அடக்கறதுக்காகவாவது நான் கொஞ்சம் அரசியல் அதிகாரம் உள்ளவனா மாறத்தான் வேணும். அப்பதான் நாளைக்கு என் நிலை மற்றவர்களுக்கு வராது.."

"அதுக்காக உணர்ச்சி வசப்பட்டு எதையாவது செய்துடாதீங்க தம்பி அப்புறம் வாசுகியோட வாழ்க்கையே வீணாப் போயிடப் போகுது" சகுந்தலா அணை கட்டினாள்.

அதில் அவனது சுயமரியாதையை விடவும், தன் மகளின் வாழ்க்கைதான் பிரதானம் என்பது பளிச் சென்று தெரிந்தது. அந்த நிலையிலும் அது அவன் உதட்டில் சிரிப்பைப் பரப்பியது.

"சரி சரி... இந்த நிலைல என்னால என்ன பண்ணிட முடியும்? அதான் பிரச்சினை தீர்ந்துடிச்சே ஆனா ஒண்ணு... நான் எதையும் செய்யாமலே அவங்க அழிஞ்சு போவாங்க.. அதை இந்த உலகம் பார்க்கும்.."

பிரவீண் சொல்லி முடிக்கும் முன், அந்த அறைக்குள் வேலைக்காரன் ஒருவன் முகம் எட்டிப் பார்த்தது.

"என்ன ராமசாமி...?"

"டி.வி. நியூஸ்ல நம்மளப் பத்தி செய்தி வந்துகிட்டிருக்குங்க..."

அடுத்த நொடி, எல்லோரும் ஓடிப்போய் டி.வி. முன் குவிந்தார்கள்.

டி.வி. செய்தியில் பிரவீணின் ஆதிக்கம்.

"பிரபல நடிகர் பிரவீண் குமார், இன்று தன் மாநில மக்கள் கட்சியில் சேருவதாக அறிவித்தார். இதை மக்கள் கட்சிப் பிரமுகர்கள் ஆரவாரத்துடன் வரவேற்றுள்ளனர்.

திரு. பிரவீண்குமார், நடிகை கலாவைக் கற்பழித்துக் கருவுறச் செய்ததாக எழும்பிய குற்றச்சாட்டும் இன்று பொய் என நிரூபிக்கப்பட்டது. அவர் மேல் குற்றம் சாட்டிய நடிகை கலாவே இன்று அந்தக் குற்றச்சாட்டை மறுத்து நமது நிருபருக்குப் பேட்டியளித்தார்."

செய்திப் போக்கில் மாற்றம் ஏற்பட, கலா காட்சிப் படத் தொடங்குகிறாள். அவள் முன் நிருபர் அமர்ந்திருக்க, கலாவின் வாயாலேயே விளக்கம் வெளிவரத் தொடங்குகிறது.

"நான் பிரவீண்குமாரை விரும்பினேன். ஆனா அவர் வாசுகிங்கற ஒரு குடும்பப் பெண்ணைத் திடீர்னு திருமணம் செய்துகிட்டு எனக்கு அதிர்ச்சியளித்தார். இதை என்னால தாங்கிக்க முடியல... அதனாலதான் ஒருவித ஆத்திரத்துல நான் அப்படிப் பேட்டி கொடுத்தேன்.

ஆனா அது எவ்வளவு பெரிய தப்புன்னு இப்ப நான் உணர்றேன்..!"

"அது எப்படி இவ்வளவு சீக்கிரம் உங்க மனசு மாறிச்சு...?"

"வேண்டாங்க... இதுக்குமேல எந்தக் கேள்வியையும் கேட்காதீங்க. பிரவீண் தங்கமான மனுஷர். அதை ஒரு தடவைக்கு நூறு தடவை சொல்லத் தயாரா இருக்கேன். அவர் ரசிகர்கள்கிட்டேயும் நான் மன்னிப்புக் கேட்டுக்கறேன்..."

சொல்லும்போதே கலாவின் கண்கள் பனித்துப் போயின.

அடுத்த நொடியே காட்சியும் மாறியது. செய்தி வாசிப்பவர் செய்தியைத் தொடர ஆரம்பித்தார்.

"நடிகர் பிரவீண் குமார் மக்கள் கட்சியில் நேரடியாக இணையும் நாள் விரைவில் அறிவிக்கப்படும் என்று அக்கட்சிப் பிரமுகர்கள் கூறினார்கள்.

தற்போது நடிகர் பிரவீண் குமார் தட்டம்மையால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் என்பது தெரிந்ததே!"

செய்தி, பிரவீணின் அரசியல் பிரவேசத்தைப் பகிரங்கமாகப் போட்டு உடைத்தது. வாசுகி நெகிழ்ச்சியோடு, போய், அவன் தோளருகே அமர்ந்து, அப்படியே அவனைக் கட்டிக் கொண்டாள்.

சகுந்தலாவும் அவள் கணவரும் பிரகாசமான முகத்தோடு பிரவீணைப் பார்த்தனர்.

பிரபாகரும் சற்று நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

ஆனால் பிரவீண் மனது மட்டும் நடந்த அவ்வளவையும் தனக்கு நேர்ந்த ஒரு பெரிய தோல்வியாகக் கருதி மருகிக் கொண்டேயிருந்தது. ஜோதிநாத் ஒரு முள்ளாக உறுத்திக்கொண்டே இருந்தான்.

கழுதை கெட்டால் குட்டிச்சுவர்!

மனிதர்களுக்குப் பிரச்சினை வந்தால் மது பாட்டில்

அதுவும் ஜோதி போன்ற நடிகனுக்குப் பிரச்சினை வந்தால் கேட்கவா வேண்டும்? நிறைய மது பாட்டில்கள். சுற்றிலும் ஜால்ரா கும்பல். குறிப்பாகக் கொண்டையய்யா.

"என்ன தலைவா... வேலியில கிடந்த ஒணானை எடுத்து வேட்டில விட்டுக்கிட்ட மாதிரி ஆயிடிச்சே? போட்டிச் சதுரங்கத்துல நீங்க எப்படி காய் நகர்த்தினாலும் அந்தப் பிரவீண் பதிலுக்கு ஒரு காயை நகர்த்தி உங்களுக்கே செக் வைக்கிறானே?"

போதையோடும், அதேசமயம் அர்த்தத்தோடும் பேசினான் கொண்டையய்யா.

ஜோதிக்குப் போதை தலைக் கேறியிருந்தது. கத்தினான்.

"அந்தப் பிரவீண் உசுரு போனாலும் அரசியலுக்கு வரமாட்டான்னு நினைச்சேன். எல்லாம் தப்பாப் போச்சேடா... எங்கடா அந்த ஜோசியக்காரன்...?"

-அடுத்த நொடி, ஒருவன் அந்த அறையை விட்டு வெளியே போய்-ஒரு ஜிப்பா வேட்டியும், ருத்ராட்சக் கொட்டையுமான ஒருவனைப் பிடித்து இழுத்து வந்தான்.

"ஏய்யா... நீயெல்லாம் ஒரு பிரபலமான ஜோசியக்காரன்... அப்படித்தானே? நீ சொல்ற மாதிரிதான் எல்லாமே நடக்கும். அப்படித்தானே?"

-அந்த ஜோதிடர், ஜோதியை பதிலுக்கு உற்றுப் பார்த்தபடியே சொன்னார்.

"இப்பவும் சொல்றேன்... என் ஜோசியம் என்னைக்குமே பொய்யானதில்லை. ஆகவும் ஆகாது..."

"என்ன ஆகாது...? நீ தானே சொன்னே.. அந்தப் பிரவீணை ஒழிச்சுக் கட்டிட்டா நான்தான் நம்பர் ஒண்ணுன்னு..."

"இப்பவும் நான் அதையேதான் சொல்றேன்.."

"எங்கையய்யா... அவன்ல நம்பர் ஒண்ணா ஆயிட்டான். அவனை டச் பண்ணவே முடியலியே..?"

"அதுக்கு நான் என்ன பண்ணட்டும்? அவரோட ஜாதக பலம் அப்படி... '

"என்ன... சமாளிச்சுப் பாக்கறியா? உன்னைக் கேட்காம நான் அரிப்பெடுத்த இடத்தைக் கூட சொறிஞ்சு விட்டதில்லையே? என் கிட்டையே டபாய்க்கிறியா?"

"டபாய்க்கலை... உள்ளதைச் சொல்றேன். அவர் இருக்கறவரை நீங்க மின்ன முடியாது. அவர் சூரியன். நீங்க சந்திரன். அவர் நித்ய ஜோதி. நீங்க அப்படி இல்ல. உங்களுக்குத் தேய்பிறை வளர்பிறைன்னு நிலைகள் உண்டு..."

"என் எதுக்கையே அவனை சூரியன்னு சொல்றியா?"

ஜோதியிடம் போதையில் வார்த்தைகள் தடம் புரண்டன. உடம்பிலும் பலத்த தடுமாற்றம்.

கொண்டையய்யா குறுக்கிட்டான்.

"யோவ் ஜோசியரே... போய்யா நீ நான் பாத்துக்கறேன்..."

"ஆமா கிழிச்சே... பாத்துக்கறேன் பாத்துக்கறேன்னு நான் முதல்வரே கூப்பட்டு என்னைக் காரித் துப்பற அளவுக்குப் போயிடிச்சு... குறைந்த பட்சம் அந்தக் கலாவைக்கூடப் பிடிச்சு வைக்க முடியல உன்னால...!"

ஜோதிடர் விலகிக்கொள்ள, கொண்டையா சற்று கோபத்துடன் ஜோதியை ஏறிட்டான்.

"அவசரப்பட்டு வார்த்தைங்கள விடாதீங்க தலை வரே...யார் கை விட்டாலும் பாபா நம்மளைக் கைவிட மாட்டார்..."

–கொண்டையாவின் பதிலைத் தொடர்ந்து, ஜோதியின் போதை ஜிவ்வென்று இறங்கியது.

கண்களில் உன்னிப்பும் எதிர்பார்ப்பும் கூடிப் போனது. அது கொண்டையா மேல் நிலை கொண்டது.

"என்ன சொல்றே கொண்டையா...பாபா நமக்கு உதவி செய்வாரா...?"

"கை நீட்டிப் பணம் வாங்கினா வேலையை முடிச்சுக் கொடுக்கறதுதான் பாபாவோட வழக்கம்..."

"இல்ல...இந்தக் கலா விஷயத்துல முதல்வர் நடவடிக்கை எடுத்த மாதிரி பாபா விஷயத்துலையும்..."

"பாபா சர்வதேச கிரிமினல். முதல்வர் இல்ல– பிரதமர்க்குக் கூட அடங்காத நபர். வேலைதான் கணக்கு..."

"அப்ப முதல்ல அந்தத் திருட்டு முண்ட கலாவைப் போட்டுத் தள்ளச் சொல்லு..."

"அதெல்லாம் தானா நடக்கும்அதேசமயம் நீங்க உங்க கட்சிக்கு வந்துருக்கற பிரவீணை வரவேற்க வேண்டாமா?"

"பாலிடிக்ஸ் பண்ணச் சொல்றியா நீ?"

"இல்லேன்னா பாபா நாளைக்கு அவன் மேல கை வைக்கும்போது, போலீஸ் முதல் ஆளா உங்களத்தான் பிடிக்கும்..."

"ஐய்யோடா...அது சரி; இந்த முறை எதையும் சொதப்பிட மாட்டியே...?"

"நான் எப்பவும் சொதப்பினதில்ல. டயம்தான் உங்கள சொதப்புது. பேசாம நல்ல பிள்ளையா லட்சணமா போய் பிரவீணைப் பார்த்து ஒரு மலர்க் கொத்து கொடுங்க...கட்டிப்பிடிச்சு போசும் கொடுங்க. அதுதான் இப்ப ரொம்ப முக்கியம்!"

–கொண்டையா அமைச்சன் போல ஆலோசனை சொல்ல, ஜோதியின் முகத்தில் நம்பிக்கை வெளிச்சம் பரவ ஆரம்பித்தது.

இந்த முகரைக்கும் ஐம்பது படம் நூறு நாட்கள் ஓடியிருப்பதுதான் ஆச்சரியம்!

24

தொலைபேசி நச்சரித்தது. போய் எடுத்தாள் வாசுகி. ஜோதியே பேசினான்.

"யாரு... மிஸஸ் பிரவீண்குமாரா?"

"ஆமாம்... நீங்க...?"

"நான் ஜோதி பேசறேம்மா... ஒரு வழியா பிரவீண் அரசியல்ல ஈடுபட முடிவு செய்துட்ட மாதிரி தெரியுதே...?"

"அதான் டி.வி.யிலேயே வந்துடுச்சே...!"

"ரொம்ப மகிழ்ச்சி. வாழ்த்துச் சொல்லத்தான் போன் பண்ணேன். இப்ப எப்படி இருக்கு அவர் உடம்பு...?"

"இட்ஸ் ஆல்ரைட்...!"

"எதுக்கும் நான் வரேன். என் கட்சிக்கு வர்றவரை நான் பாராட்டாம யார் பாராட்டுவா?"

– கேள்வியோடு போனை முடக்கினான்.

வாசுகி சற்றுக் கிறுகிறுத்துப் போனாள். திரும்பினாள். எல்லோரும் அவளைப் புருவத்தில் கேள்வியோடு பார்த்தார்கள்.

"அந்தஜோதிதான் போன் பண்ணினான். அவரைப் பாராட்டணுமாம். வாழ்த்தணுமாம்...!"

"வேஷம் போட ஆரம்பிச்சுட்டானா?" – பிரபாகருக்குப் பல்லில் நெறிப்பு கட்டியது.

"அரசியல்வாதிங்கன்னாலே அப்படித்தானே? அதுலேயும் இவன் பேர் வாங்கின நடிகன்...!"

– எல்லோரும் கருத்து பரிமாறிக் கொண்டார்கள். ஆனால் பிரவீண் அதை எல்லாம் கேட்கும் நிலையிலேயே இல்லை. நல்ல தூக்கத்தில் இருந்தான்.

அம்மையின் தீவிரமும் குறைந்து, கொப்புளங்கள் உதிரத் தொடங்கியிருந்தன.

கதை விவாதம் சூடு பறந்து கொண்டிருந்தது. அந்த லாட்ஜின் விஸ்தாரமான அறையில் மெத்தை விரிப்பில் மூலைக்கு ஒருவர் இருவர் என்று பெரிய கூட்டம்.

"இந்தக் கதையைப் பொருத்தமட்டில் தனியா கதாநாயகன்னு ஒருத்தன் கிடையாது. கதைதான் இதுல ஹீரோ..! மத்தபடி இதுல வர்ற நண்பர்கள் இரண்டு பேரையுமே ஹீரோன்னு சொல்றதுன்னா சொல்லலாம்..."

– ஒருவர் டீயைச் சூப்பியபடி கூறும்போது இன்னொருவர், "யெஸ்... நானும் அதைத்தான் சொல்ல வந்தேன்..." என்று அதற்கொரு ஜால்ரா தட்டினார்.

"டபுள் ஹீரோ சப்ஜெக்ட்னாலே சிக்கலாச்சே..? யாரும் பண்ண மாட்டாங்களே ?"

"நாம ட்ரை பண்ணுவோம்... ஏன் விடணும்?"

"இது என்ன மலையாள ஃபீல்டா–ஹீரோக்கள் சப்ஜெக்ட்தான் பெரிசுன்னு நினைச்சு நடிக்கறதுக்கு ..?"

"அப்படி இல்ல... இதோட சப்ஜெக்டைக் கேட்டா நம்ம ஹீரோக்களும் நிச்சயம் ஒத்துக்குவாங்க... குறிப்பா... பிரவீணும் ஜோதிநாத்தும் இதுல நடிச்சா ரொம்பப் பொருத்தமா இருக்கும்..."

"இரண்டு பேரும் தொழில் ரீதியா பெரிய போட்டியாளர்கள் ஆச்சே... சம்மதிப்பாங்களா?"

"அதுல்லாம் முந்தி – இப்பத்தான் இரண்டு பேரும் ஒரே கட்சிக்குள்ள வந்துட்டாங்களே – அதனாலே மறுக்கமாட்டாங்க..."

"அது சரி... பிரவீணுக்கு அம்ம போட்டு மூஞ்சி எல்லாம் கொப்புளமா இருக்காமே..? ஓர்க் அவுட் டாகுமா?"

"யோவ் – எந்தக் காலத்துலய்யா இருக்கே நீ...? முகத்தையே பிளாஸ்டிக் சர்ஜரில மாத்திக்கற காலத்துல நாம இருக்கோம்! இதெல்லாம் ஒரு விஷயமா?"

– அறை விவாதம் அப்படி இப்படி என்று சுற்றி அலைந்துவிட்டு – இறுதியில் பிரவீணையும், ஜோதியையும் நடிக்க வைப்பது என்று முடிவானது.

ஊடே ஒண்ணரை அவுன்ஸ் டீ கொண்ட சினிமா கம்பெனி தம்ளர்கள் பலமுறை சுற்றி வந்தன. பத்துப் பதினைந்து பான்பராக் பொட்டலம், சில பாக்கெட் கோல்ட் ஃப்ளாக் சிகரெட்டுகள் கருகிச் சாம்பலாயின.

எல்லா எழுத்தாளர்களின் மாத நாவல்களும் அந்த அறைக்குள் கிடந்தன. எல்லாவற்றின் கலவையாக காட்சிகளைப் பேசிப் பேசி உருவாக்கிக் களைத்துப் போய் அவர்கள் வெளியேற ஆரம்பித்தார்கள்.

செட்டில் ஷூட்டிங் பரபரப்பாக நடந்து கொண்டிருந்தது. பிரேக் டைமில் சீட்டில் வந்து அமர்ந்த ஜோதியைச் சுற்றி அவ்வளவாக யாருமே இல்லை.

சிலமாதம் முன்பு வரை ஜால்ரா கூட்டம் ஒன்று ஜோதி முதுகு சொறிந்தால்கூட அதைக் கலாரசனை மிக்கதாக வர்ணிக்கும்.

போனவன் வந்தவன் எல்லாம் ஒரு ரசிகர் மன்றம் ஆரம்பித்துவிட்டு, தலைவர்–செயலாளர் என்று தங்களுக்குத் தாங்களே பதவிகளையும் கொடுத்துக் கொண்டு விட்டு ஜோதியை பார்க்க வருவார்கள்

ஷூட்டிங் ஸ்பாட்டில, 'வருங்கால முதல்வர் அண்ணன் ஜோதி' என்று ஆகாசம் கிழிபடும்படி கத்தி கூச்சல் போடுவார்கள்.

"நோநோ...இது ரொம்பத் தப்பு. எனக்கு அந்த ஆசையெல்லாம் கிடையாது" என்று ஜோதியும் கும்பிட்டபடி போலியாகக் கண்டிப்பான்.

எல்லோரும் வேடிக்கை பார்ப்பார்கள். போட்டோ பிடித்துக் கொள்வது, கட்டி அணைத்துக் கொள்வது என்று திரைக்கதையில் கூடச் சித்தரித்துப் பார்க்க முடியாத கூத்துக்கள் நடந்து முடியும்.

இன்று எல்லாமே கோடைக்கால ஏரியாட்டம் திடும்மென்று வறண்டு போனதுபோல ஒரு நிலை. பிரவீண் விஷயத்தில் அவன் பெயரைக் கெடுக்க ஜோதிதான் முயற்சி செய்தான் என்பது எப்படியோ ஃபீல்டு முழுக்கப் பரவியதன் எதிரொலி...

சிலர் நேரிலேயே ஜாடை மாடையாகக் கேட்டு நன்றாக வாங்கியும் கட்டிக் கொண்டார்கள்.

ஒப்புக்கொண்ட படங்களில் பாதி ஷூட்டிங்கைக் கடந்துவிட்ட படங்களுக்கு மட்டும் ஷூட்டிங் நடந்து கொண்டிருக்கிறது. அங்கேயும் இப்படி பாலைவன மாட்டம் புழுக்கம். ஒருவித வெறுமை.

ஜோதி வெறுத்துப் போனான். தொழில் போட்டியை–கொண்டையய்யா போன்ற நண்பர்கள் பேச்சினைக் கேட்டுச் சமாளிக்கத் தெரியாமல் சமாளித்ததன் எதிரொலியோ?

பத்திரிகைக்காரர்கள் கூட அரைச் சிரிப்பு சிரித்தபடி தாண்டிப் போனார்கள். நின்று பேசவில்லை. மனக் குமைச்சலுக்கு சிகரெட்தான் கைகொடுத்தது.

அப்பொழுது பார்த்து கொண்டையய்யா வந்தான்.

அவனைப் பார்க்கவும் கோபம் சீறிக்கொண்டு வந்தது.

'வாய்யா...உனக்காச்சும் என்னைப் பாக்கணும்னு தோணிச்சே..!"

"அட என்னங்க... நான் என்னிக்கும் உங்க ஆளுங்க–"

'மண்ணாங்கட்டி– அதனாலதான் நான் இப்ப அனுபவிக்கறேன். பாத்தியா பிரேக் டைமை...! இப்படியா உக்காந்திருப்பேன்?"

–கொண்டையய்யா புரிந்ததுபோல சிரித்தான்.

"இதுக்கெல்லாம் அசரக்கூடாதுங்க...இப்படி ஏத்த இறக்கமானதுதானே சினிமா உலகம்..,"

"அது சரி...; கூட இருந்து தப்புத்தப்பா வழியைக் காட்டி குட்டையைக் குழப்பினது நீ...! பழியை சினிமா உலகம் மேல போட்றியோ?"

"அத விடுங்க பிரவீணைப் போய் பார்த்துட்டு வந்தீங்களே...? எப்படி இருந்துச்சு ரீ ஆக்ஷன்..."

"தப்பு பண்ணிட்டு தடுமாறிக் கிட்டிருக்கிறதா பத்திரிகைல விமர்சனம் வந்துருக்குது படிச்சதானே?"

"எல்லாம் நாலு நாளைக்கு...! பாபா இருக்கும்போது எதுக்குக் கவலைப்பட்றீங்க...?"

"வேண்டாம் சாமி...போதும் உன் பேச்சுக் கேட்டு நான் பட்டது! உன் பாபாகிட்ட சொல்லி இந்த விவகாரத்தை மறந்துடச் சொல்லு..."

"அந்த ஆளுக்கென்ன...பணத்தைக் கொடுத்துட்டா -செய்யச் சொன்னா செய்வான். வேண்டாம்னா விட்றுவான். ஆனா பேசின பணத்தைக் கொடுத் துடணும்..."

"கூடவே தரேன்...அந்தாள் எதாவது பண்ணி என்னைப் பிடிச்சு உள்ள தள்ளிடப் போறாங்க...! நீயும் இனி என்னை வந்து பாக்காதே..."

"ரொம்ப வெறுத்துப் போய் விரக்தியில பேச றீங்க...!"

"எப்படி வேணா வெச்சுக்கோ... எனக்கு இப்ப உடனடியா நல்ல பெயர் வந்தாகணும். இப்போதைக்கு இப்ப இருக்கற இரண்டாவது இடம நிலைச்சா போதும்..."

ஜோதி சுற்றிச் சுற்றிப் பார்த்தபடி பேசப்பேச, கொண்டையாவுக்குள் கோபம் கொப்பளித்தது.

"ஒண்ணு மட்டும் உறுதி...உங்களால அந்தப் பிரவீணை எந்தக் காலத்துலையும் ஓவர்டேக் பண்ண முடியாது. இரண்டாவது இடம், மூணாவது இடம்னு நீங்க சொல்றதெல்லாம்கூட உங்க சமாதானத்துக்குச் சொல்லிக்கறதுதான்.

அங்க பிரவீணுக்கு மூளையா பிரபாகர்னு ஒருத்தன் இருக்கான். அவன் ஒழிஞ்சு, பிரவீணும் ஒழிஞ்சாதான் உங்களுக்குக் காலம். இல்லாட்டி உங்களை அழிக்கத் தனியா யாரும் வரவேண்டாம்.

தனியா உக்காந்துருக்கும்போது தானாவே ஹார்ட் அட்டாக் வந்துடும். நான் வரேன்..."

– கொண்டையா குழறிவிட்டுப்போனான். அவன் சொல்வதும் சரிதான் என்கிற நினைப்பு நெளியும் போது, லாட்ஜில் திரைக்கதை அமைத்த கோஷ்டி அங்கே வந்து ஜோதியைச் சுற்றி அமர்ந்தது.

"என்ன விஷயம்?"

"ஒண்ணுமில்ல.. ஒரு டபுள் ஹீரோ சப்ஜெக்ட். நீங்களும் பிரவீணும் பண்ணா நல்லா இருக்கும்னு நினைக்கறோம்...!"

– அவர்கள் சொல்லத் தொடங்க, நிமிர்ந்து உட் கார்ந்தான்.

"ஆமா... பிரவீணைப் பார்த்துப் பேசிட்டீங்களா?"- உற்சாகமாகக் கேட்டான்.

"அவர் சம்மதம் சொல்லிட்டாரு... நீங்கதான் சம்மதிக்கணும்..."

"அதுக்கென்ன... ஆமா-என்ன சப்ஜெக்ட்?"

"இரண்டு நண்பர்கள் சந்தர்ப்ப சூழ்நிலையால பிரியறாங்க... திரும்ப அவங்கள ஒண்ணு சேர்க்க முயற்சி நடக்குது. அவங்க சேர்ந்தா தனக்கு ஆபத் துன்னு நினைக்கற வில்லன், அவங்களச் சேர விடாமத் தடுத்து நிறுத்த முயற்சி செய்யறான். அதோட எதிரொ லியா-இரண்டு நண்பர்களுமே ஒருத்தரை ஒருத்தர் அடிச்சுகிட்டுச் செத்துப்போற மாதிரி பிளான்

பண்றான். ஆனா அவங்க என்ன செய்யறாங்கங்கறது தான் க்ளைமாக்ஸ்...''

''அவங்க என்ன செய்யறாங்க...?''

''இரண்டு பேருமே வில்லனைச் சண்டை போட்டு, செத்துப் போற மாதிரி நடிச்சு ஏமாத்தறாங்க... வில்லன் கிட்ட வரும்போது எழுந்து அவனைக் கொல்றாங்க...''

''ப்யூட்டிஃபுல்... அந்த க்ளைமாக்ஸ்ல இன்னொரு சின்ன மாற்றம் பண்ண முடியுமா?''

''என்ன . ?''

ஜோதி சொன்னான். அவர்கள் முகம் பிரகாசமாக மாறியது. உடனடியாகச் சம்மதித்தார்கள்.

25

ஜோதிநாத் சொன்னதைக் கேட்ட அவர்கள் முகத்தில் சொல்ல முடியாத ஆச்சரியம்!

''என்ன சார்! இது... எதுக்காகக் கதையில இப்படி ஒரு மாற்றத்தைப் பண்ணச் சொல்றீங்க?'' அவர்களில் ஒருவன் தயங்கியபடி கேட்டான்.

''ஏன் பண்ணக்கூடாது ? இந்த மாதிரி ஒரு மாற்றம் இன்னும் இன்ட்ரஸ்ட்டா இருக்கும் இல்லியா?''

''இன்ட்ரஸ்ட்டா இருக்கு... ஆனா கதாசிரியர் என்ன சொல்வாரோ?''

''நோ பிராப்ளம்... இப்படி ஒரு காட்சி எனக்கு ரொம்ப அவசியம். பிரவீண் என்னை உதைக்கிற மாதிரி காட்சி வரணும்... பதிலுக்கு நான் மன்னிக்கிற மாதிரி

அது மாறணும்! அப்புறம் நாங்க சேரணும். அது இப்ப எங்க இரண்டு பேர் நிலைப்பாட்டையும் அப்படியே மாற்றி செட் செய்யும்னு நான் நம்பறேன்...!''

ஜோதி சொன்னதைப் பரிசீலனை செய்வதாகச் சொல்லிவிட்டு அவர்கள் புறப்பட்டனர்.

''நோ பரிசீலிக்கறேன்–அப்படி இப்படின்னு டயத்தை வேஸ்ட் பண்ணிடாதீங்க... கட்டாயம் பண்ணீங்க!'' என்று அவர்கள் புறப்படும் போதும் சொல்லி அனுப்பி வைத்தான் ஜோதி.

அனுப்பிவிட்டு மோவாயை வருடிவிட்டுக் கொண்டான்.

எல்லாமே முடிந்துபோய் விட்டதாக நினைத்த வேளையில் இப்படியும் ஒரு மறுமலர்ச்சி...! ஜோதிக்குள் தன் இமேஜைக் காப்பாற்றி விடும் நம்பிக்கை துளிர் விட்டிருந்தது.

தலைக்குத் தண்ணீர் விட்டுக் குளித்துவிட்டு, பழைய பிரவீணாக மிடுக்காக வெளியே வந்த பிரவீணைப் பார்த்தபோது, வாசுகிக்கு நெஞ்சில் பால் சுரந்தது.

நெருங்கி வந்து அவனை ஊன்றிப் பார்த்தாள்.

''என்ன வாசுகி... எதுக்கு அப்படிப் பாக்கறே?''

''இல்ல... உங்கள இப்படிப் பாக்கத்தானே காத்திருந்தேன்...'' – கண்ணோரம் தேங்கிய கண்ணீரைச் சுண்டிவிட்டுக் கொண்டாள்.

அதை மனோரஞ்சிதமும், சகுந்தலாவும்கூடப் பார்த்தபடி வந்தனர். அவர்கள் முகத்திலும் நிறைவு தெரிந்தது.

பிரபாகரும் பார்த்தபடி வந்தான்.

பிரவீண் முகத்தை ஊன்றிப் பார்த்தான். அம்மை போட்ட தழும்புகள் அப்படி ஒன்றும் பெரிதாகப் பாதித்திருக்கவில்லை.

கன்னத்தை வருடிக் கொடுத்தான். பின் சற்று உணர்ச்சிவயப்பட்டான்.

"எதுக்குடா கலங்கறே...? அதான் நல்லா ஆயிட்டேன்ல...!"

"இங்க ஓ.கே.! ஆனா இண்டஸ்ட்ரியிலதான் தப்பா போயிடுவே போலருக்கு !"–பிரபாகரின் வருத்தத்திற்குத் தோதாக–பக்கமாக டீப்பாய் மேல் தினசரிப் பேப்பரும்–அதில் 'பிரவீண், ஜோதி இணைந்து மிரட்டும் புதிய படம்' என்கிற விளம்பரமும் ஜொலித்துக் கொண்டிருந்தது.

"நீ அந்த சினிமாவைச் சொல்றியா?"

"பின்ன... சொல்லச் சொல்லக்கேட்காம அவன்கூட நடிக்க ஒத்துக்கிட்டு அட்வான்ஸ் வாங்கிட்டே! அவன் உன்னை இந்த ஃபீல்டை விட்டே விரட்ட நினைச்சவன்... அடுக்கடுக்கா உன்னை நிலைகுலைய வைச்சவன்! அதை எப்படியோ சமாளிச்சோம். அப்படிப்பட்டவனை ஃபீல்டும் ஒதுக்கி வைக்க ஆரம்பிச்சது. இப்பப் போய் கை கொடுத்துத் தூக்கி விட்ற மாதிரி இப்படி பண்ணிட்டியேடா?"

"சரியாதான் சொன்னே... 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்து விடல்'னு வள்ளுவர் சொல்லலையா?"

"போடா ஃபூல்! நீயெல்லாம் இப்படிப் பயன்படுத்துவேன்னு தெரிஞ்சிருந்தா–அவர் அதை எழுதியே இருக்க மாட்டார் தெரியுமா?"

"சரி சரி...! என் திட்டம் என்னன்னு உனக்குத் தெரியாது... பேசாம வா... இப்ப இன்னிக்கு என்ன புரோகிராம்?"

"உடல்நலம் சரியான நிலைல முதல் விசிட் முத்து மாரியம்மன் கோயில். அடுத்து சி.எம். ஆபீஸுக்குப் போய் ஒரு நேரடி சந்திப்பு. அதன் பின்பு ஒரு பட பூஜைல பங்கெடுத்துக்கறே...!"

"அப்புறமா...?"

"முதல்ல இதை முடி.... அப்புறமா உள்ளதை நான் அப்புறமா சொல்றேன்...!"

"ஓ.கே... என்கூட நான் வாசுகியையும் கூட்டிக் கலாமில்லியா?"

"உன் பொண்டாட்டிடா அவ.! அவளக் கூட்டிக்க என்கிட்ட எதுக்கு அனுமதி கேட்கறே?"

பிரபாகர் சொன்ன விதம், அதைக் கேட்டு வாசுகி சிரித்த விதம், பிரவீண் அதை ரசித்த விதம்–எல்லாவற்றிலுமே நல்ல கலை நேர்த்தி...!

மூவரும் வெளிக் கிளம்பத் தொடங்கினார்கள்.

தோதாகப் பட்டுவேட்டி கட்டிக்கொண்டு வந்தான். சகுந்தலாவும் கணவரும் முதன் முறையாக நெஞ்சு குளிர்ந்து போனார்கள்.

மனோரஞ்சிதம் பிரபாகரைப் பார்த்து, "டேய்... உன்னையும் இதேபோல ஜோடியா பார்த்துட்டா போதும்டா பிரபா...!" என்று தாய்மை பீறிட்டாள்.

"கவலைப்படாதீங்கம்மா... சீக்கிரமாவே அது நடக்கும்!" என்றபடி பிரவீண்–பிரபாகரை ஒருபுறமும், வாசுகியை ஒருபுறமும் அணைத்தபடி நடந்து சென்றான்.

கேட்டுக்கு வெளியில் நிறைய ரசிகர்கள் காத்திருந்தனர். இதில் பலர் பிரசாதமும் கையுமாக நின்று கொண்டிருந்தனர்.

காரை நிறுத்தி இறங்கிச் சென்று, அவர்களிடம் இருந்து பிரசாதத்தை வாங்கிக் கொண்டான்.

அப்போது அதில் வயதான ஒருவரும் இருந்தார். அவர் தடுமாறும் நிலையிலும் பொட்டில் அடித்த மாதிரி ஒரு கேள்வி கேட்டார்:

''ஏந்தம்பி... நல்ல கலைஞனா - பொதுவான மனஷனா இருந்தீங்களே ..? இப்படி ஒரு அரசியல் கட்சியில் சேர்ந்து நீங்களும் பத்தோடு பதினொண்ணு தான்னு காட்டிட்டீங்களே...! நியாயமா?''

அந்தக் கேள்வி அவனை நன்றாகவே குத்தியது.

அவரை ஒரு க்ஷணம் வெறித்துப் பார்த்தான். பிரபாகர் புரிந்ததுபோல அவனைப் பற்றி இழுத்துச் செல்லத் தொடங்கினான்.

காதில் 'வாழ்க' கோஷம் நெடுந்தூரம் வரை கேட்டது. பிரவீணின் கண்களும் பனித்துப் போய் விட்டிருந்தன.

''என்னடா... அந்தப் பெரியவர் சொன்னது குத்துதோ?''-பிரபாகர் புரிந்தது போலக் கேட்டார்.

''குத்தாம...? இவரைப்போல எத்தனை லட்சம் பேர் நினைச்சுகிட்டு இருக்காங்களோ...?''

''அதை எல்லாம் பாத்தா ஆகுமா...? நீ இப்படி ஒரு ஆக்கப் பூர்வமான முடிவு எடுத்ததுக்காக சந்தோஷப் பட்றவங்களும் இருப்பாங்க இல்லியா?''

''இது ஆக்கப்பூர்வமான முடிவாடா? பைத்தியக்காரா...!''

''போதும்... திரும்பவும் உங்க கொள்கைச் சண்டையைப் போட ஆரம்பிச்சுடாதீங்க...! இப்பதான் குழப்ப மேகம் லேசா விலக ஆரம்பிச்சிருக்கு!''

இடையில் புகுந்து, வாசுகி சற்று உரிமையோடு சீறினாள்.

''ஆமா... அந்த ஜோதியோட ஒரு படம் ஒத்துகிட்டிருக்கியே .. அதுக்கு எப்படா ஷூட்டிங்?''-பிரபாகர் கேட்கவும், பிரவீணிடம் பட்டென்று பதில் வந்தது.

''அடுத்த வாரமே ஆரம்பம் பிரபா! இன்ஃபாக்ட் எப்ப வரும்னு ஆவலா இருக்கேன்!''-பிரவீண் சொல்லும் விதத்தில் ஒரு வித குரூரம் ஒளிந்து வெளிப்படுவது போலத் தோன்றியது வாசுகிக்கு. அது மெலிதான அச்சத்தையும் மூட்டியது.

26

அந்த அச்சம் கலையாதபடிக்கு காருக்குள் பிரவீணைப் பார்த்தாள் வாசுகி.

பிரவீண் அவள் பார்ப்பதை உணர்ந்து சட்டென்று முகத்தில் பாவங்களை மாற்றிக்கொண்டு வேறுமாதிரி பேச ஆரம்பித்தான்.

''வாசுகி... கல்யாணத்துக்குப் பிறகு இப்பதான் நாம இரண்டு பேரும் வெளியே போறோம். உனக்கு ஏதாவது வாங்கித் தர விரும்பறேன் - என்ன வேணும்?''

- அந்தக் கேள்வி அவளைச் சற்று குழப்பியது.

பிரவீண் பேச்சை மாற்றுவது புரிந்து போனது. ஆனால் முன் சீட்டில் அமர்ந்துகொண்டு, நழுவும் சென்

னையைப் பார்த்துக் கொண்டு வரும் பிரபாகர் அ ரசித்தான்.

வாசுகி மௌனத்தைத் தொடர்ந்தாள்.

''என்ன வாசுகி... என்ன வேணும்?''

''உம்... ஒண்ணும் வேண்டாங்க... நீங்க நல்லா ஆனது–அப்றமா இப்படி கலகலப்பாப் பேசறது... இதுவே போதும் எனக்கு...''

''நோ நோ... உனக்குக் கட்டாயமா ஏதாவது பிரசன்ட் பண்ணியே தீரணும்...''

''பிரவீண்... அவகிட்ட என்ன கேள்வி... நீயா டிசைட் பண்ணி எதாவது வாங்கித் தந்துரு...''

''சரிடா பிரபா... நீயே சொல்லு .. என்ன வாங்கித் தரலாம்...''

''சாதாரணமா பெண்களுக்குப் புடவை நகைன்னா தான் ரொம்பப் பிடிக்கும். ஒரு நல்ல பட்டுப் புடவை – கூடவே ஒரு நெக்லஸ், என்னோட சாய்ஸ், என்ன சொல்றே?''

– பிரபாகர் குஷியாக எடுத்துக் கொடுத்தான்.

''அப்ப கோவிலுக்குப் போய்ட்டு சி. எம். மை மீட் பண்ணிட்டுத் திரும்பும் போது, நேரா நல்லிக்கோ குமரனுக்கோ காரை விடு... இம்மீடியட்டா முடிச்சுடு வோம்...''

– பிரவீணிடம் உணர்ச்சி கொப்பளித்தது.

பின் என்ன நினைத்தானோ–சட்டென்று பேச்சை மாற்றிடும் விதமாக, ''வேண்டாம் பிரபா... என்ன பெரிய தங்கம் பட்டு .. நான் வாசுகிக்கு விலை மதிக்க முடியாத ஒரு பரிசையே தரப்போறேன்...'' என்றான்.

''என்னடா அது?''

''சஸ்பென்ஸ்...''

''என்ன பெரிய சஸ்பென்ஸ். சொல்லுடா...''

''சொல்றதுக்குப் பேர் சஸ்பென்ஸ் இல்லையே... பொறுத்திருந்து பார் மகனே...''

– கார் ஓடிக் கொண்டிருந்தது. கோவிலையும் நெருங்கிவிட்டது. இறங்கி உள்ளே நுழையும்போது, எதிர்பாராத அதிர்ச்சியோடு பலரும் பார்த்தார்கள். திபுதிபுவென்று ஓடி வந்தார்கள்.

பிரபாகர் அவர்களுக்கு நடுவில் பிரவீணையும் வாசுகி யையும் கஷ்டப்பட்டு சந்நிதி வரை கூட்டிக் கொண்டு போனான்.

மாரியம்மன் கோவில் பூசாரி வாரிச் சுருட்டிக் கொண்டு ஓடிவந்தார். இருவருக்கும் பரிவட்டமெல்லாம் கட்டி பிரசாதம் தந்தார். முகத்தில் எல்லையில்லாத பரவசத்தைக் காட்டினார்.

''நீங்க வருவீங்கன்னு எதிர்பார்க்கவேயில்லை...'' என்றார்.

கிளம்பும்போது மறக்காமல் அந்தக் கேள்வியைக் கேட்டார்–தயங்கித் தயங்கித்தான்.

''தம்பி...''

''என்னங்க?''

''நீங்ககூட அரசியல் கட்சில சேர்ந்துட்ட மாதிரி தெரியுதே?''

– பிரவீண் அவரை சிந்தனையோடு ஊன்றிப் பார்த்தான்.

''அதுல ஒண்ணும் தப்பில்ல தம்பி. அது நல்ல விஷயங்களுக்குப் பயன்படணும்!'' – அவர் எதையோ சொல்ல வந்து தயங்கித் திசை திரும்புவது, பேசும் தன்மையிலேயே புரிந்து போனது.

எதுவும் பேசாமல் கேட்டுக்கொண்டு புறப்பட்டான்.

சிலர் அவன் காலில் எல்லாம் விழுந்தார்கள்.

"ஐய்யோ... இது கோவில்... இங்க போய் என் கால்ல விழுந்துக்கிட்டு..."

"எங்களுக்கு அந்த ஆத்தாளும் நீங்களும் ஒண்ணு தாங்க..." – அவர்களில் ஒருவர் சிலிர்ப்புடன் சொன்னார்.

பிரவீணுக்கு நிஜமாலுமே கோபம் வந்தது. இருந்தும் அடக்கிக் கொண்டான்.

காரை நெருங்கினான். கூட்டம் நெருக்கித் தள்ளிற்று. ஊடே ஒரு பெண் அவனை, "மகராசா..."– என்று கேவும் குரலில் கூப்பிட்டாள். அவன் பார்வை திரும்பிற்று.

"தம்பி... ராசா... ஒரு உபகாரம் பண்ணணும்யா... பண்ணுவியா...?" - கூட்டத்தில் நசுங்கலுக்கு நடுவில் அவள் பேசினாள்.

அவன் அவளை அருகில் அழைத்தான்.

"என்ன விஷயம்?"

"எனக்கு ஒரு பொண்ணு. அவளை ஒரு குடிகாரனுக்குத் தெரியாமக் கட்டிக் கொடுத்துட்டேன். அவன் அவளைத் தினமும் பாடாய்ப்படுத்தறான்..."

"அதுக்கு நான் என்ன செய்யணும்..."

"நீ சொன்னா அவன் கேப்பான் தம்பி... ஏன்னா உன் படம்னா அவனுக்கு உசுரு நான் இந்தக் கோவிலாண்ட கற்பூரம் விக்கறவ... உன்னை அந்த ஆத்தா தான் அனுப்பி வெச்சிருக்கான்னு நினைச்சுச் சொல்றேன்..."

"அப்படியா...?"–கேள்வியோடு பிரபாகரைப் பார்த்தான். பிரபாகர் சூழ்நிலை புரிந்து காரில் அவனை ஏற்ற முயன்றான்.

இன்னொருவர்–இதுதான் சாக்கு என்று அடுத்த கோரிக்கையை வைத்தார்.

"தம்பி... ஆளும் கட்சியிலேயே சேர்ந்துட்டீங்க. இந்த ஏரியா ரேஷன் கடைல ஆனாலும் அநியாயம் பண்றாங்க... கொஞ்சம் முதல்வர்கிட்ட சொல்லி எல்லாத்தையும் சரி பண்ணுங்க தம்பி..."

அந்தக் கோரிக்கையும் அதன் கருத்தும் அவனை நிஜமாலுமே பிசைந்தது.

"நிச்சயமா சொல்றேன்..."–என்றபடி காரில் ஏறினான். கார் அந்த சந்தடியில் இருந்து புறப்படுவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது.

பெருமூச்சுவிட்ட பிரபாகர், "இனிமே இப்படிபப்ளிக் ப்ளேசுக்கெல்லாம் பிளான் பண்ணாம வரக்கூடாது!" என்றான்.

"உண்மைதான்..." என்றான் பிரவீண் ஒரு வரியில் கூடவே முகத்தில் உறைகட்டிக்கொண்ட சலனம்.

"என்னடா–திரும்ப இறுக்கமாயிட்டே...?"

"இல்ல...பப்ளிக்குக்கு எவ்வளவு எக்ஸ்பெக்டேஷன் பார்த்தியா?"

"சந்தோஷப்படுடா...சி.எம். கிட்டயும் சொல்லி ஆக்ஷன் எடு..."

"எடுக்க முடியும்னு நம்பறியா?"

"ஏன் முடியாது...? இதுதான் உனக்கு ஆரம்பம். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஏற்கெனவே இந்த மாதிரி விஷயங்கள்ல ஈடுபாட்டோட இருந்து, பப்ளிக்குக்காக வாழறதுதான் வாழ்க்கைன்னு தன் கேரியரையே மாத்திக்கிட்டவர். அவரை முன் உதாரணமா எடுத்துக்கோ !"

"அப்படி வாழ்ந்துட்டுப் போனவரோட நாட்டுலையும் பிரச்சினைகள் தீரலையே...?"

"எப்பவும் பிரச்சினைகள் தீராது. கட்டுப்படுத்தத் தான் முடியும்..."

"இந்த எண்ணமே தப்புடா...ஒண்ணு தீர்க்கணும்... இல்லே. அந்தப் பக்கமே தலை வெச்சுப் படுக்கக் கூடாது..."

"தீர்க்க முடியாது. தீர்க்கறதுக்கு பப்ளிக் கோ-ஆபரேஷனும் ரொம்ப முக்கியம்..."

"என்னடா சொல்றே?"

"தமிழ்லதானே சொல்றேன். நம்ம நாட்டுல எதாவது பிரச்சினை இருக்குன்னா அதுக்கு அரசியல் வாதிகள் மட்டுமில்ல; பப்ளிக்கும் ஒரு பெரிய காரணம்..."

"புரியும்படி சொல்லு..."

"லஞ்சம் கேக்கறது குத்தம்னா-கொடுக்கறதும் குத்தம்தானே?"

"ஆமாம்..."

"இதே மாதிரி குற்றங்களைப் பார்த்து எனக்கென்னன்னு சுயநலத்தோட ஒதுங்கறது... தனக்கொரு நியாயம், பிறருக்கொரு நியாயம்னு நடந்துக்கறது— சிங்கப்பூர் மாதிரி நம்ம நாடு சுத்தமா இல்லையேன்னு கவலைப்பட்டுக்கிட்டே காகிதத்தைக் கசக்கி வீதியில போட்றதுன்னு பப்ளிக்கோட பங்கும் நிறைய இருக்குடா...! பேசிக்கிட்டே போகலாம்..."

"நீ முடிவா என்ன சொல்றே?"

"இவங்களுக்காகக் கவலைப்பட்றது முட்டாள்தனம்"

—பிரபாகர் பொட்டில் அடித்த மாதிரி பதில் சொன்னான்.

"பிரபா...'நீயா இப்படி சொல்றே?"

"நானேதான். இந்த நாடு மாறணும்னா கலாசாரப் பூர்வமா மாறணும் பிரவீண். அது உன் கைலையோ—என் கைலையோ இல்ல...இன்னிக்குப் பள்ளிக்கூடத்துல படிக்கற மாணவ—மாணவிகள் கைலதான் அது இருக்கு.

நாமெல்லாம் செக்கு மாடுகள். நமக்கு மேல இருக்கற வயசானவங்க அதுக்கும் மேல...! நம்மால இப்ப இருக்கற பழக்க வழக்கங்கள்ல இருந்துல்லாம் விடுபட்டு வெளியே வரவே முடியாது. எந்தக் கலாசார மாற்றத்தையும் நாம ஏத்துக்க மாட்டோம்.

கடவுளுக்கு அர்ச்சனை பண்றது எந்த மொழியிலங்கற பிரச்சினை உள்ள தேசம்டா இது..."

—பிரபாகர் எங்கே வருகிறான் என்றே தெரியவில்லை; பிரவீணுக்குக் கொஞ்சம் குழம்பிற்று.

"என்னடா இப்படி சொல்றேனேன்னு நினைக்காதே...! தயவுசெய்து பப்ளிக்கை நீ பெரிசா நினைக்காம, உன் கேரியரைப் பெரிசா நினை. நீ மனசு வெச்சா—இப்ப இருக்கற சி.எம்.முக்குப் பிறகு நீயே அடுத்த சி.எம்.மா வரலாம்..."

பிரபாகர் வந்து நின்ற இடம் பிரவீணை உசுப்பி விட்டு தூக்கிற்று.

"பிரபா...உன் பேச்சே ரொம்ப வித்தியாசமா இருக்கேடா... பப்ளிக்குக்கு ஏதாவது பண்ணணும். பிறருக்கு உதவி பண்றதுதான் லைஃப்னு சொல்றவன் நீ. நீயா இப்படிப் பேசறே?"

"இதோ பார் பிரவீண்...எதுக்கு அநாவசியமா போட்டுக் குழப்பிக்கறே...நீ இப்ப சரியான திசைல

சரியான முறைல போகத் தொடங்கியிருக்கே... இனிமே உனக்குப் பொற்காலம்தான்.

நான் சொன்னதெல்லாம் என் பொதுவான கருத்து. இதை நீ மறுக்கறியா?''

''நிச்சயமா...''

''அப்ப பப்ளிக்கு சர்வீஸ் பண்ணி அவங்களத் திருப்திப்படுத்த முடியும்னு நம்பறியா?''

''இல்ல...அது.. அது...ரொம்ப கஷ்டம்–நீ சொன்ன மாதிரி கலாசார மாற்றம் வரணும்...''

''அதைக் கொண்டுவர – நீ ஏன் முயற்சி செய்யக் கூடாது?''

''நான்...நான்...நான்...''

''நீயேதான். அதுக்குக் காலம் உனக்கு ஒரு அபூர்வ சந்தர்ப்பம் தந்திருக்கு. சி.எம்.மைப் பார்த்துட்டுத் திரும்பும்போது உன்னைப் பேட்டி எடுப்பாங்க...அதுல சொல்லு...நடிப்பு ஒரு கண்ணுன்னா எனக்கு அரசியல் இன்னொரு கண்ணுன்னு...!''

''பிரபா...''

''சொல்லித்தான் ஆகணும் நீ...ஒரு பக்கம் அது உனக்கு இப்ப கட்டாயம். மறுபக்கம்-அது ஒரு அற்புதமான வாய்ப்பு...''

''எனக்குச் சுத்தமா பிடிக்காத விஷயத்துல என்னை ஏன் காலம் இப்படி இழுத்து விடுது...''?

''அதுக்குப் பேர்தான் தலைவிதி...'' பிரபாகர் சொல்ல, சி.எம். ஆபீஸ் வர–சரியாக இருந்தது.

இறங்கி உள்ளே செல்லத் தொடங்கினார்கள். தடபுடலான வரவேற்பு.

அந்தக் கூட்டத்தில் ஒருவர் பெருமிதத்தோடு பிரபாகரைப் பார்த்தார். பின் நெருங்கி வந்தார்.

''எப்படியோ...தம்பியை இழுத்துகிட்டு வந்துட்டீங்களே...? பெரிய ஆள்தான் நீங்க...''-என்றார்.

பிரபாகர் அவர் காதோரமாகச் சொன்னான்.

''தலைவர் சொல்லியும் கேக்கலைன்னா எப்படி?''

''இருந்தாலும் இது பெரிய அசைன்மென்ட்தான்...''

''பெருசா...ஐய்யோ...இதுக்காக நான் பட்ட பாடு... போட்ட பிளான்லாம் இருக்கே...!''

பிரபாகர் சொல்லும்போது, அவன் முகத்தில் புளகாங்கிதம் பொங்கி வழிந்தது.

27

ஒரு பக்கம் பிரபாகர் யாரும் எதிர் பார்த்திராத முகத்தைக் காட்டியபடி இருக்க, மறுபக்கம் சி.எம்.மும் பிரவீணுக்கு முகத்தைக் காட்டியிருந்தார்.

மாலை, சால்வை என்று அணிவித்து மார்போடு கட்டி அணைத்து தன் அன்பை வெளிக் காட்டிக் கொண்டிருந்தார்.

ஒரு கூட்டம் சுற்றி நின்று கைதட்டிபரவசப்பட்டுப் போனது. போட்டோகிராபர்கள் ஃப்ளாஷ் வெளிச்சத்தோடு வாரிச் சுருட்டினார்கள். வாசுகி கூட, கொஞ்சம் அன்னியப்பட்டுப் போனாள்.

'வாழ்க' கோஷம் வேறு வானத்தைக் கிழிக்க ஆரம்பித்தது. அத்தனையையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒருவர், பிரபாகரோடு தனியே ஒதுங்கினார். அங்கே இருக்கும் ஒரு ஏ.சி. அறை அவர்களை அள்ளிப் போட்டுக்கொண்டது.

ஆச்சரியப்படும்படி உள்ளே கலா இருந்தாள்.

புடவை உடுத்தி குங்குமம் எல்லாம் இட்டுக்கொண்டு பார்க்க குடும்பப் பெண்ணாகக் காட்சி தந்தாள்.

பிரபாகர் வரவும் அவனைப் பார்த்து அர்த்தத்தோடு சிரித்தாள். அவர் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டே பேச ஆரம்பித்தார்.

"என்ன பிராபகர் பாக்கறே...? கலாவை நான் கல்யாணம் பண்ணிகிட்டேன்!" என்று சாதாரணமாகச் சொன்னார்.பிரபாகர் கொஞ்சம் அசரத்தான் செய்தான்.

"உனக்கு நான் இருக்கேன்; தைரியமா பொய் சொல்லுன்னு சொன்னேன். 'பிரவீண் என்னைக் கர்ப்பமாக்கிட்டான்'னு இவ எனக்காக சொல்லவும் செய்தா...

ஆனா வெளிய பாக்கறவங்களுக்கு அது அந்த ஜோதிக்காக இவ செய்த மாதிரி ஒரு ஃபீலைக் கொடுத் துச்சு .. இன்ஃபாக்ட் – ஜோதிக்கு இப்படி ஒரு ஐடியா கொடுத்ததே நான்தான்!" சொல்லிவிட்டு ஒரு இழு இழுத்தார்.

அவர் எத்தனை பெரிய ஜித்தர் என்பது அந்த நொடியில் பிரபாகருக்கு அர்த்தமாகத் தொடங்கியது.

ஒரு பக்கம்– வெளியே இருந்து அடுக்கடுக்காக பிரச்சினை; இன்னொரு பக்கம்–உள்ளே இருந்து கொண்டே அந்தப் பிரச்சினைகளுக்கு ஏற்ப பிரவீணை அரசியலில் தள்ளும் பணி.

அந்த வேலைக்கு ஜோதி, கலா– உள் வேலைக்குப் பிரபாகர்...அவர் சட்டசபையில் பல சமயங்களில் பட்ஜெட் தாக்கல் செய்திருந்த புத்திக் கூர்மையை அந்த க்ஷணம் அங்கே காட்டுவதாகவே பிரபாகருக்குத் தோன்றியது.

"ஆமா...பிரவீண் இனி மாறமாட்டான்ல?"

ஏனோ ஒரு சந்தேகம் ததும்பும் கேள்வி சட்டென்று அவரிடம்...

"என்ன இது...குணமானவனை முதல்ல இங்கதான் கூட்டிகிட்டு வந்துருக்கேன்..."

"அதெல்லாம் சரி...இது ஒரு நெருக்கடியால நடக்கற ஏண்ணா இருக்கலாம் இல்லியா?"

"இருக்கலாம். ஆனா நான்தான் கூடவே இருக் கேனே...விட்றுவேனா..."

"இருந்தாலும் எனக்கு அரசியலும் வேண்டாம்; சினிமாவும் வேண்டாம்னு சொல்லி ஒரு சில நாள் புளி யைக் கரைச்ச பிரவீணை நான் இன்னும் மறக்கல..."

"அவன் சொல்லிட்டா ஆச்சா...? இரண்டுமே அவனை இனி எந்தக் காலத்துலேயும் விடப் போற தில்லையே..."

"அப்படி எல்லாம் ஏமாந்துடாதீங்க...நான றிஞ்ச வரை பிரவீண் எப்பவுமே சுயமா சிந்திச்சு முடிவு எடுக்கற டைப். இந்த மாதிரி கேரக்டர்ஸை நம்பவே முடியாது. எப்ப வேணும்னாலும் என்ன வேணும்னாலும் செய் வாங்க..."

"சரி...நான் கிளம்பறேன். பிரவீண் என்னைத் தேடலாம்..."

"கவலைப்படாதே...தலைவர் அவனைச் சாப்பிடாம அனுப்பப் போறதில்ல...எப்படியோ–உன் கட்சி விசுவாசம்...அதை வெளிக் காட்டிக்காம பிரவீணை சாமர்த்தியமா உள்ள தள்ளிவிட்டது. எல்லாத்துக்குமே என் பாராட்டுக்கள்..."

"வெறும் பாராட்டு மட்டும்தானா?"–பிரபாகர் அவரை ஊடுருவினான். அவரும் ஊடுருவினார்.

அப்படியே புகை பிரியும் உதட்டுடன் சொன்னார்:

"ஞாபகம் இருக்கு பிரபாகர்...பிரவீண் இப்பதான் இங்க கால் எடுத்து வெச்சிருக்கான். மன்னிக்கணும்... இனி அவர் இந்தக் கட்சியோட நம்பிக்கை நட்சத்திரம்ல...கால் வெச்சிருக்கார்னு சொல்றதுதான் சரி. கடந்த 15 வருத்துல வோட் பேங்க்குக்குள்ள நுழைஞ் சவங்கள கட்சி பக்கம் இழுக்கணும்.

கட்சியைப் பலப்படுத்தணும்னு எவ்வளவு வேலை இருக்கு.

குறிப்பா–வரப்போற எலெக்ஷன்ல பிரவீண் இந்த தமிழ் நாட்டையே ஒரு கலக்கு கலக்கி, தனி மெஜாரிட்டி வரும்படி பண்ணிட்டா அது போதும். அதுவரை நீ பொறுத்திரு. அப்புறம் பார்–உன்னை நான் எங்க தூக்கிட்டுப் போறேன்னு..."

"அதை எல்லாமும் நம்பித்தான் பேங்க் வேலையை நான் விட்டடிச்சேன்–அதை நீங்க மறந்துடாதீங்க..."

"ஒரு பேங்க்ல இருக்கற அளவு பணத்தையே சம்பாதிக்கப் போறே...! வேலைய விட்டதுக்காக இவ்வளவு கவலைப்பட்றியே..."

அவர் தட்டிக் கொடுத்தார். எதுவும் பேசாமல் கலா வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

மெல்ல அவன் பார்க்கையில் புன்னகைத்தவள், "நான் செட்டிலாயிட்டேன். இவரோட பிராப்பரீடீஸ்ல கொஞ்சம் ஸ்டேட்ஸ்ல இருக்கு. அதப் பாத்துகிட்டு இவர் அங்க வரும்போது சந்தோஷமாவும் இருந்தே என் காலத்தைக் கழிச்சுடுவேன்..."

–உதட்டைச் சுழித்துக் கொண்டு சிரித்தாள்.

ஒரு அப்பட்டமான வேசி-அமெரிக்கவாசியாகப் போகிறாள்! புழுவைக்கூட மீனாக மாற்றி தங்கள் கண்ணாடித் தொட்டியில் விட்டு நீந்த விட்டுப் பார்க்க, அரசியல்வாதிகளால்தான் முடியுமோ?

பிரபாகர் வெளியே வந்தான். வாசுகி அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள். அவளோடு நிறைய மகளிர் அணி பிரபலங்கள் குசலத்தில் இருந்தார்கள்.

"இனிமேட்டு பாருங்க...உங்க வீட்டுக்காரர் படங்க பாகவதர் படம் மாதிரி முன்னூறு நானூறு நாள்லாம் போகப் போகுது...!"

எவளோ வழிவது காதில் விழுந்தது. அவர்களை விலக்கிக் கொண்டு வாசுகி பிரபாகரை நோக்கி வந்தாள்.

"எங்க பிரபா போய்ட்டே?"

"அது...அது...இங்க ஒரு தெரிஞ்சவர்– அதான் பேசிகிட்டிருந்தேன்"

வாசுகி பார்வை அவனை ஒருமுறை என்னவோ போல் பார்த்தது.

பின், "உள்ள போன அவரை இன்னும் காணலை..." என்றாள்.

"வா...போய்ப் பார்ப்போம்..."

–அவன் அவள் தோளைத் தொட்டு அழைத்தான்.

சி.எம்.மின் அறைக்கு வெளியே அவர் பி.ஏ.வும் செக்யூரிடி கார்டுகளும் இருந்து வழிவிட்டனர்.

உள்ளே நுழைந்தவனை சி.எம்.மும் கும்பிட்டபடி வரவேற்றார்.

"இவன் என் நண்பன் பிரபாகர். எனக்கு எல்லாமே இவன்தான்!" பிரவீண், பிரபாகர் பற்றி அவருக்குத் தெரிந்திருந்தும் கூறினான்.

"நண்பர்னா இவர் மாதிரிதான் இருக்கணும்னும் சொல்லலாம். இல்லியா?"–சி.எம். பாராட்டினார்.

பின் சிரித்துப் பேசிவிட்டு வெளியே வந்தார்கள்.

கார் வரை வந்து எல்லோரும் வழியனுப்ப, காரும் புறப்பட்டது.

உள்ளே நெற்றியைத் தேய்த்துக் கொண்டே வெளியில் பார்க்க ஆரம்பித்தான் பிரவீண்.

"என்ன பிரவீண்...தலைவர் என்ன சொன்னார்?"

"எங்க நான் தீவிர அரசியல்ல ஈடுபடாமப் போய்டு வேனோன்னு நினைச்சாரோ என்னவோ- எம்.பி. ஆக்கிட்றேன்னாரு ..அதெல்லாம் வேண்டாம்னேன்..."

"ஆமாங்க...அது மட்டுமில்லீங்க, சினிமாகூட போதுங்க. நாம நீங்க சொன்ன மாதிரியே அந்தமான் பக்கமோ, இல்லை அதுக்கும் அந்தப் பக்கமோ போய்டு வோங்க..."

-வாசுகி திடீரென்று இப்படிப் பேசியது அதிர்ச்சி யாக இருந்தது பிரவீணுக்கே.

அவளை ஆச்சரியத்தோடு பார்த்தான்.

"என்ன வாசுகி இது...நீயா பேசறே?"

"நானேதான்..."-அழுத்தமாகச் சொன்னவிதம் பிரபாகருக்கே அதிர்ச்சியாக இருந்தது.

கார் அவன் ஆசைப்பட்டது போல நகைக் கடை ஒன்றை நோக்கித்தான் போய்க் கொண்டிருந்தது.

"ஆமா...இப்ப எங்க போறோம்?"

"நகைக் கடைக்கு..!"

"எதுக்கு?"

"எதுக்கா...? என்னாச்சு உனக்கு? அதான் பிரசன்ட் பண்றதுக்கு எதாவது வாங்கன்னு சொன் னானே பிரவீண்..."

வாசுகி பிரபாகரை மீண்டும் கூர்மையாகப் பார்த் தான். பார்வை நிஜமாலுமே அவனைத் துளையிட்டது.

"எதுக்கு வாசுகி அப்படிப் பாக்கறே?"

மெலிதான குரலில் கேட்டான் பிரபாகர்.

"இந்தப் பார்வைக்கு அர்த்தம் உனக்குத் தெரியும் பிரபாகர்..."-அவள் குரலில் கடுமை தொனிக்கத் தொடங்கியது. அப்படியே பிரவீண் பக்கம் திரும்பிக் கேட்டாள்.

"எனக்கு நான் கேட்டதைத் தருவீங்களா?"

"என்ன வேணும் வாசுகி?"

"உங்களுக்குப் பிடிச்சதைத்தான் கேட்கப் போறேன்..."

"அதான் என்ன?"

"கடைக்கெல்லாம் இப்பப் போக வேண்டாம். வீட் டுக்குப் போவோம். அங்க உங்ககிட்ட மட்டும் ரகசியமா கேட்கறேன்..."

"ஏன் இங்க கேட்டா என்ன?"

"பிரபாகர் இருக்காரில்லியா?"

"அவன் என் இன்னொரு கண்... சும்மா சொல்..."

"இன்னொரு கண்ணா இல்ல புண்ணா?"

வாசுகி கேட்ட விதத்தில், பிரபாகருக்குள் ஒரு ரசாயன மாற்றமே நிகழ்ந்ததுபோல் ஒரு வேதனை!

28

அந்த வேதனை விலகாதபடி பிரபாகர் வாசுகியைப் பார்த்தான். பிரவீண் பதறிப் போனான்.

"வாசுகி என்ன பேசறே...? கண்ணு புண்ணுன்னு! புரிஞ்சுதான் பேசறியா?"-அவன் பதற்றம் வாசுகியை இடித்தது.

அவள் எதுவும் பேசாமல் வெளியில் பார்த்தாள்.

பதில் கூறப் பிரியமில்லாத பாவங்களை முகத்தில் காட்டினாள்.

'சினிமாவில் நடிப்பவர்களை விட நிஜவாழ்க்கையில் நடிப்பவர்கள்தான் கொடுமையானவர்கள்' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்.

கார் விரைந்து கொண்டிருந்தது.

"வாசுகி... நான் கேட்ட கேள்விக்கு நீ இன்னும் பதில் சொல்லலை..."-பிரவீண் அவளைத் தூண்டி னான். தூண்டலில் கோபம் இருப்பதும் தெரிந்தது.

பதில் சொல்லப் பிரியப்படாத மாதிரி தொடர்ந்து வெளியே பார்த்தபடி வந்தாள் வாசுகி.

பிரபாகருக்கு இடறியது.

'ஒருவேளை–நான் கட்சிப் பிரமுகருடன் பேசிக் கொண்டிருந்ததை வாசுகி பார்த்துவிட்டாளா?'

கேள்வி உள் ஓடிற்று...

"பிரபா... என்னடா... எதுக்காக வாசுகி இப்படிப் பேசறா ? கொஞ்சம் முந்திக்கூட நல்லாதானே இருந்தா?"–பிரவீணின் கேள்வி, பிரபாகர் பக்கம் திரும்பியது. அவன் எதைச் சொல்லுவான்?

மென்று விழுங்கினான்.

"ஐ திங்க்... அவ மூட் அவுட்டுன்னு நினைக்கிறேன்!" என்றான்.

விருட்டென்று திரும்பிப் பார்த்தாள் வாசுகி.

அந்தப் பார்வை ஆமோதிப்பது போலவும் இருந்தது; இல்லை என்கிற மாதிரியும் இருந்தது.

"சரி; இப்ப நாம நகைக்கடைக்குப் போறோமா... இல்ல-புடவைக் கடைக்குப் போறோமா?"

பிரவீண் கேட்க, "வீட்டுக்கு..." என்று ஒரு வார்த்தையில் பதில் அவளிடம்...!

வீடு!

உள்ளே நுழையும்போதே பத்திரிகையாளர்கள் கூட்டம் வந்திருந்தது. எனவே, ஹாலிலேயே தங்கி விட்டான் பிரவீண்.

வாசுகி அங்கு நிற்கப் பிடிக்காமல் உள்ளே செல்ல, பிரபாகர் பின் தொடர்ந்தான்.

தன் சந்தேகத்தைக் கேள்விப் படுத்திக் கொள்ளத் தயாரானாள்.

"வாசுகி..."

– அவள் திரும்பினாள்.

"ஏன் என்னமோ மாதிரி பேசறே..?"

"உனக்குக் காரணம் தெரியாதா?"

"நான் பேசிகிட்டிருந்ததைக் கேட்டியா...?"

"... ..."

"புரிஞ்சுபோச்சு... நீ கேட்டுட்டே இட்ஸ் ஓ.கோ! அதுல ஒரு தப்பும் இருக்கறதா நான் நினைக்கல!"

"இல்ல... இது துரோகம்...!"

"எது துரோகம்? ஒரு நடிகனை அரசியலுக்குத் திசைதிருப்பி, அவன் சக்தியைச் சமூகத்துக்குப் பயன் படுத்திக்கறதா..?"

"அது இயல்பா நடந்தா சரி..! அப்படி இல்லாத நிலைல அந்த நடிகனை மிரட்டி, வளைச்சு திசை திருப்பி வலைல விழவைக்கறதெல்லாம் பச்சைத் துரோகம்..!"

"சரி... பேசினா பேசிக்கிட்டே போகலாம். இப்ப தான் எல்லாம் முடிஞ்சு போச்சே...விட்ரு இதை நான் அவனுக்கு நல்லது பண்ணுயிருக்கறதாத்தான் நினைக்கிறேன்!"

"இது சமாதானம். அவரைக் கவர நீ அடுக்கடுக்கா வேலை பாத்துருக்கே.. என் ஆசை தெரிஞ்சு என்னை விட்டுக்கொடுத்தே! அவரோட வலது கையா மாறினே... கலா துரோகம் செய்யப் போறது தெரிஞ்சும் தெரியாத மாதிரி இருந்தே... எங்க ஒரு வேளை–அந்த அஸ்திரமும் பலன் தராமப் போயிடுமோன்னு பாபாங்கற ஒருத்தர் மூலமா த்ரெட் க்ரியேட் பண்ணினே...

எல்லாமே துரோகம்.

அவருக்கு மட்டும் துரோகம் செய்யலை நீ...அவரை நம்பியிருக்கற ரசிகர்களுக்கும் சேர்த்துப் பண்ணியிருக்கே.

இதுக்கு என்ன விலை பிரபா உனக்கு?"

– பொறிந்து தள்ளினாள் வாசுகி. வெளியில் பேட்டியில் பிரவீணும் அரசியல் வலையில் விழுந்து விட்ட தற்கேற்ப பேசிக் கொண்டிருந்தான்.

"நீங்க வரப்போகிற எலெக்ஷன்ல பிரச்சாரம் செய்வீங்களா..?"

"அது அப்போ முடிவு செய்ய வேண்டிய விஷயம்!"

"மந்திரியாவீங்களா...?"

"இதுவும் அப்போ முடிவு செய்ய வேண்டிய விஷயம்!"

''தொடர்ந்து நடிப்பீங்களா...?''

''நிச்சயமா..''

''தேன் நிலவுக்கு எங்க போகப் போறீங்க...?''

''எங்கேயும் இல்ல...சென்னைதான்!''

''உங்க வாழ்க்கைல மறக்க முடியாத மனிதர் யார்?''

''என் நண்பன் பிரபாகர்தான்...''

''தொடர்ந்து ஜோதி நாத்தோட நடிப்பீங்களா?''

''நிச்சயமா...ஜோதி என் நல்ல நண்பர்கள்ல ஒருத்தர்!''

–பிரவீண் பேட்டியைத் தொடரும்போது பிரபாகர் வெளியில் வந்தான். அவனைப் பார்க்கவும் எல்லோரும் அவன் பக்கம் திரும்பினார்கள்.

ஃப்ளாஷ்கள் அவன் மேலும் பட்டுத் தெறித்தன.

''போதும்...போதும்...எனக்குக் கொஞ்சம் ஓய்வு தேவை...''

–சொன்னபடி எழுந்து நின்றான் பிரவீண்.

அவர்களும் இதுவரை பேட்டி கண்டதே பெரிய விஷயம் என்கிற மாதிரி விலகத் தொடங்கினார்கள்.

பிரவீண் பார்வை பிரபாகர் பக்கம் திரும்பியது. அவன் முகத்தில் பிரளய ரேகைகள்.

''என்னடா...வாசுகி எதாவது சொன்னாளா?''

–கேட்டபடி தோளில் கை போட்டான். பிரபாகரின் மௌனம் ஆமோதித்தது.

அதைத் தொடர்ந்து வாசுகியைத் தேடி உள்ளே போனான். அத்தை, பிரபாகரின் அம்மா–எல்லோரும் ஒரு அறையில் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

வாசுகி உம்மென்று பெட் மேல் உட்கார்ந்திருந்தாள். நெருங்கினான்.

''என்னாச்சு வாசுகி..ஏன் பிரபாகரைத் தொடர்ந்து வருத்தப்பட வைக்கறே...?''

அவள் பதில் கூறாமல் அவனை ஏறிட்டாள். ஏறிட்ட விழிகளில் கண்ணீரின் சேர்க்கை.

''என்ன வாசுகி...என்ன நடந்துச்சு ?''

''அதை எப்படிங்க சொல்வேன்.. பிரபாகரை அத்தை பையன்னு பார்ப்பேனா–இல்ல...''

–அவள் முடிக்க முடியாமல் விக்கியழுதாள். பிரவீண் விரல்களால் அவளது கூந்தலை வருடியபடியே அவளை ஏறிட்டான்.

நிதானமான குரலில் சொல்லத் தொடங்கினான்.

''நீ என்ன சொல்லப் போறேன்னு எனக்குத் தெரியும் வாசுகி...''

–அவள் திடுக்கிட்டாள்.

''தெரியுமா?''

''ஆமாம் பிரபாகர் உண்மைல யார்...என்னை அரசியல்ல இழுக்க அவனைக் கட்சிக்காரங்க எப்படி பயன்படுத்திகிட்டாங்கன்னு எல்லாமே எனக்குத் தெரியும்...''

பிரவீண் சாதாரணமாகச் சொன்னது கேட்டு, வாசுகிக்கு இதயத்தை யாரோ பிசைந்தது போலிருந்தது.

''நானே ஒரு நடிகன். என்கிட்ட நடிக்கற ஒருத்தனை என்னால கண்டுபிடிக்க முடியாதா என்ன...? இருந்தாலும் நான் எதுவும் தெரியாத மாதிரி ஏன் இருக்கேன் தெரியுமா?''

இடைவெளி விட்டான்.

அவள் கண்ணீர் பிரள அவனைப் பார்த்தாள்.

''அவனுக்கு என்னைப் போல பிரபலமாகணும்; நிறைய சம்பாதிக்கணும்னு ஆசை...ஆனா அதுக்கு அவனுக்குக் காலம் உதவி செய்யல.. அதனாலதான் இப்படி ஒரு குறுக்கு வழியில் அவன் போனான். எல்லாம் பணம்-பதவிக்காக..''

''அப்படின்னா தெரிஞ்சும் ஏன் சும்மா இருக்கீங்க?''

''என்ன பண்ணச் சொல்றே? உண்மை தெரிய வந்தப்போ எனக்குப் பாதி மானம் போயிடிச்சு... அவனுக்கு வந்த ஒரு டெலிபோன் காலை தற்செயலாய்

கேட்க நேர்ந்தது. கோபமும் வந்தது. ஆனா கொஞ்ச நேரம்தான்.

எனக்கு உன்னையே தந்தவன் அவன். அதுக்கு நான் பதிலுக்கு நன்றி காட்ட வேண்டாமா...அதனால மனசுக்குள்ள வெச்சு ஜீரணிச்சேன்!''

''எப்படிங்க முடியும்...? இல்ல எப்படி முடியும்? எனக்கே ஜீரணிக்க முடியலையே ?''

''ஜீரணிக்கணும் வாசுகி. அதுக்குப் பேர்தான் வாழ்க்கை. இப்பகூட உன்கிட்ட ஒரு வரம் கேட்கறேன். நீ என்கிட்ட சொன்னது அவனுக்குத் தெரிய வேண்டாம். எனக்கு எதுவும் தெரியாதுன்னு அவன் நினைச்சுகிட்டு இருக்கறது தொடரட்டும்.

இவனுக்கு–அந்த ஜோதி நாத்துக்கெல்லாம் பணம், பதவி, அந்தஸ்த்து, பொசிஷன் இதெல்லாம்தான் பெரிசு.

எனக்கு அது பெரிசு இல்லைன்னா–அதை நான் இவங்களுக்காக-இவங்களுக்கே தெரியாம இழக்கணும். அதுல மூழ்கி இவங்க என்ன ஆகறாங்கன்னு பார்க்கணும்.

ஒதுங்கி ஓடிப்போய், யாருக்குமே பிரயோஜனமில்லாம வாழ்ந்து சாகறதைவிட, இப்படி சுறா மீன்களுக்கும், புலிகளுக்கும் நடுவுல அவங்களைப் பற்றித் தெரிஞ்ச நிலையிலையும் தெரியாத மாதிரி நடந்துக்கறதுல ஒரு அர்த்தம் இருக்கறதா நான் நினைக்கறேன் ''

''இல்லை. இது பேத்தல். இப்படி நீங்க ஒரு நல்லவன்கிட்ட நடந்துகிட்டா அதை நான் பாராட்டுவேன். துரோகிகள்கிட்ட நடந்துக்கும்போது அவங்களுக்கு இன்னமும் தைரியம் வரும். மேலும் ஏமாத்தத்தான் முயற்சி செய்வாங்க!''

''செய்யட்டுமே ! எனக்கு இந்த நிமிடம் யாருமே இல்லை. அப்பா இருந்தும் இல்லாதவர். நீ இப்ப வந்தவ அதுக்கு முந்தியில இருந்து இந்த க்ஷணம் வரை என் வாழ்க்கைல நான் ரொம்ப நம்புனது பிரபாகரை ! அவனே என்னை ஏமாத்தும்போது நான் யாரை நம்ப முடியும்?''

–பிரவீண் குணத்தில்தான் ஒரு குன்று என்கிற தொனியில் பேசும்போது, காலடியில் யாரோ காலைப்

பற்றுகிற மாதிரி தோன்றியது. குனிந்தபோது ஒருபுறம் பிரபாகரும், மறுபுறத்தில் ஜோதி நாத்தும் கிடந்தனர்.

''ஏய்...என்ன இது...? எழுந்திருங்க...''

–பதறினான்.

இருவரும் எழுந்தனர். ஜோதியின் பாக்கெட்டில் ஒரு ரிவால்வர் இருந்தது. அதை எடுத்து முதல் காரியமாக பிரவீணின் கையில் வைத்து, ''பிரவீண்...இது ஷூட்டிங்ல நீங்க என்னைப் பார்த்துச் சுடவேண்டிய டம்மித் துப்பாக்கி...ஆனா இதுல நான் நிஜரவைகளைப் போட்டு வெச்சிருந்தேன். நீங்க என் கால்ல சுட்ட பிறகு, காயம் பட்ட நிலைல உங்களை மன்னிக்கணும் அதனால தேஞ்சு போன என் இமேஜை மேல தூக்கி நிறுத்திக்கணும்னுல்லாம் பிளான் போட்டிருந்தேன்.

ஆனா உங்களை எந்தக் கட்டத்துலையும் ஜெயிக்க முடியாதுங்கறதைப் புரிஞ்சுகிட்டேன். என்னை மன்னிச்சுடுங்க...இனி என்மேல இருக்கற ஒரு தூசு கூட உங்களுக்கு எதிரா அசையாது...!''

ஜோதி தீர்க்கமாகச் சொல்லி விட்டுக் கட்டிக் கொண்டான்.

பிரபாகர் குனிந்த தலையை நிமிர்த்தவில்லை. நிமிர்த்தவும் முடியவில்லை. நெருங்கும் பிரவீண், அவனை இழுத்து அணைத்துக் கொண்டான்.

''பிரபா ... வருத்தப்படாதே... வாழ்க்கைல புத்தி இப்படிப் போறது ரொம்ப சகஜம். நானே இந்த மாதிரி எத்தனை கேரக்டர்ஸ் பண்ணியிருப்பேன் தெரியுமா?

என்ன...திரைப்படங்கள்ல எல்லாம் இந்த மாதிரி நடந்துகிட்ட வில்லனோட ஒரே அடிதடி சண்டையோடதான் காட்சி முடியும். வில்லனையும் போலீஸ் அரெஸ்ட் பண்ணிட்டுப் போகும்.

அப்படி இல்லாத ஒரு முடிவை நான் விரும்பினேன். அதை உங்க விஷயத்துல செயல்படுத்தி இருக்கேன். அவ்வளவுதான்!''

அவன் இறுக்கி அணைக்கும் போது–அவன் அம்மா வாசுகியின் அம்மா–அப்பா என்று எல்லோரும் வந்தனர்.

பிரபாகர் அழுவதைப் பார்த்து, 'என்ன விஷயம். என்று பதறிப் போனார்கள்.

பிரவீண் அதை அழகாக சமாளிக்கத் தொடங்கனான்.

"ஒண்ணுமில்லம்மா...பிரபாகர் எனக்கு ஒரு விஷயத்த நடிச்சுக் காட்டிகிட்டு இருக்கான்...அதான் ரிகர்சல் பார்க்க ஜோதியும் வந்துட்டாரு"

இருவருமே மீண்டுமொரு முறை அவன் பெருந் தன்மையில் கூசிப் போகத் தொடங்கினார்கள்.

பிரபாகர் கண்களைத் துடைத்துக்கொண்டு நெருங்கி வந்து, பிரவீணிடம் சொன்னான்.

"பிரவீண்...உன்னை அரசியலுக்கு இழுத்து விட்டதுக்காக நான் இப்ப ரொம்ப பெருமைதாண்டா பட்றேன். நீ அதுல நீடிக்கணும். நிறைய சாதிக்கணும். சாதிக்கவும் உன்னால முடியும்!"-அவன் அழுத்தமாகச் சொல்ல, அசைந்து ஆமோதித்தது ஜோதிநாத்தின் சிரமும்.

"ஆமாம் பிரவீண்...! நாங்க அழகா செஞ்ச இந்தத் தப்புக்காக சந்தோஷப்பட்றோம். தொடர்ந்து-அதுக்காக உங்களுக்கு உயிரையும் தருவோம்..." என்றபடி அவன் கரத்தைப் பற்றின ஜோதிநாத்தின் கரங்கள்.

பிரவீண் வாசுகியை ஏறிட்டான்.

அவள் கட்டை விரலை உயர்த்திக்காட்டி, தன் சம்மதத்தைத் தெரிவித்தாள்.

"ஏம்ப்பா ... ஏதேதோ பேசிகிட்டிருக்கீங்களே... அவங்களுக்கு இன்னிக்கு சாந்தி முகூர்த்தம். அதுக்கு என்ன பண்ணப் போறீங்க?"

-சகுந்தலா கேட்க வேண்டிய கேள்வியைத்தான் கேட்டாள்.

அடுத்த நொடி பிரபாகரும், ஜோதிநாத்தும் ஒருவரை ஒருவர் பார்த்தனர்.

"சாரிம்மா...இப்பவே புறப்பட்றோம்... அவன் பெட்ரூமை பூவாலேயே மூடிட்றோம் பாருங்க...!"என்றபடி புறப்பட்டனர்.

வாசுகியும் வெட்கத்தோடு பிரவீணைப் பார்த்தாள்.

'எண்ணம் போலத்தான் வாழ்க்கை' என்று அவன் சொல்லாமல் சொன்னபடி சிரித்தான். மற்றவர்களும் சேர்ந்து கொண்டார்கள்.

(முற்றும்)